

# வடவேங்கட

31


# திருவேங்கடமும்



பேராசிரியர்:
டாக்டர் ந. சுப்புரெட்டியார்



வேங்கடம் வெளியீடுகள்
AD-13 (PLOT "3354)
அண்ணா நகர் - சென்னை-600 040





**VENKATAM PUBLICATIONS**

AD-13 (PLOT. 3354)

ANNA NAGAR - MADRAS-600 040.

# வடவேங்கடமும் திருவேங்கடமும்




பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்

# எம்பெருமானார்

*பிடிக்கும் பரசமயக் குலவேழம்*
*பிளிற வெகுண்டு*
*இடிக்கும் குரல்சிங்க ஏறனையான்*
*எழுபாரும் உய்யப்*
*படிக்கும் புகழெம் மிராமா*
*நுசமுனி பல்குணமும்*
*வடிக்கும் கருத்தி னர்க்கேதிரு*
*மாமணி மண்டபமே!*[1]

—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

---

1. திருவரங். கலம்ப. எம்பெருமானார் துதி.

# வடவேங்கடமும் திருவேங்கடமும்

(ஆசிரியரின் 76-வது அகவை வெளியீடு)

'அருக்கலைக்கோன்' ஸ்ரீசடகோபன் பொன்னடி'
'தமிழ்ப் பேரவைச் செம்மல்'

**பேராசிரியர்**

**டாக்டர் ந. சுப்புரெட்டியார்**

எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி.,

முன்னாள் : தமிழ்ப்பேராசிரியர் துறைத்தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்,
திருப்பதி - 517 502

இந்நாள் : தகுநிலைப் பேராசிரியர் (கண்ணியப் பொறுப்பு) தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 005.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
184. பிராட்வே - சென்னை - 600108

First Edition : May-1992

© Dr. S. RAMALINGAM, M.Sc., D. Litt.,
Author's First Son
AD - 13 (Plot No. 3354)
Anna Nagar, Madras - 600 040
Phone : 62 11 583

பக்கங்கள் : xxviii + 296 = 324

விலை : ரூ. 35-00

VATAVENKATAMUM THIRUVENKATAMUM

VENKATAM PUBLICATIONS
AD - 13 (Plot No. 3354)
Anna Nagar, Madras - 600 040
Phone : 62 11 583

---

அச்சிட்டோர் :
ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்,
7/40, கிழக்கு செட்டி தெரு,
பரங்கிமலை, சென்னை-16.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே

— தாயுமானவர்பராபரம் 155



அமராவதிப் புதூர் (காரைக்குடி)

சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பனார்

தோற்றம் : 28—1—1893 சிவப்பேறு : 20 -6—1956

அமராவதிப் புதூர் சீர்திருத்தச் செம்மல்
அமரர்
திரு. சொ. முருகப்பனார் அவர்கட்கு

# அன்புப் படையல்

செட்டிநன் னாட்டுக் கொளியினைக் கொணர்ந்த
சீரியர்; நகைச்சுவை வள்ளல்;
பட்டது பேசும் தெள்ளிய வாய்மைப்
பண்பினர்; சைவசித் தாந்தக்
கட்டளை யோடு காந்தியம் சேர்த்த
கண்ணியர்; திண்ணிய சொல்லர்;
மட்டறு செல்வர் முருகப்பர் பாத
மலரினில் ஒளிர்கஇந் நூலே.

சிவமயம்

# சிறப்புப் பாயிரமாலை

## டாக்டர் அர. சிங்காரவடிவேலன்

எம். ஏ., பிஎச். டி., சி. ஜி. டி.,
தமிழ்ப் பேராசிரியர் - துறைத்தலைவர் துணை முதல்வர் - சேவுகன் அண்ணாமலை கல்லூரி,
தேவகோட்டை - 623 302

**மானுடத்தின் வெற்றியென்றும் வாழ்க! வாழ்க!**

1. எப்போதும் ஏதேனும் எழுதிக் கொண்டும்
எழுபத்தா றகவையிலும் படித்துக் கொண்டும்
ஒப்பாய்வும் உறழாய்வும் செய்து கொண்டும்
ஒருநூறு அடையும்வரை உழைத்துக் கொண்டும்
மப்புடைய கார்முகில்போல் கருத்தைக் கொட்ட
மடிதற்று முந்துகின்ற என்றன் ஆசான்
**சுப்புரெட்டி** யாரென்று பெயர்சொன் னாலே
சுறுசுறுப்பும் பேருழைப்பும் துள்ளு மாமே.

2. அம்பதுக்கும் அறுபதுக்கும் இடைப்பட்டாண்டில்
அழகப்பர் பண்ணையிலே தமிழை நட்டார்;
நெம்புகோல் விஞ்ஞானம் கற்ற ஆசான்
நெடுமாலின் திருவருளால் தமிழைச் சேர்த்தார்;
அம்பலத்தில் ஆடாமல் அறைக்குள் ஆய்ந்தே
அறிவுலகப் பல்துறையில் நூல்கள் யாத்தார்;
சம்பளத்தை நம்பாமல் ரெட்டி யாரும்
தம்பலத்தை நம்பியுயர் செட்டி யாரே.

3. கட்டையுடல் கறுத்திருக்கும்; நூல்கள் மேய்ந்தே
கண்ணிரண்டும் சிவந்திருக்கும்; ஆய்வு செய்தே
பட்டையிட்ட திருநீறாய்ப் பழுத்த ஞானப்
பழமான தலையில்முடி வெளுத்திருக்கும்;
ஒட்டி வைத்தல் போலிருக்கும் உதட்டு மீசை
உரைகாரர் தேன்மூழ்கி நரைத்திருக்கும்
ரெட்டியார் தமிழ்ப்பரிசாய்க் கிடைத்ததற்கு
ரெட்டிப்பாய் வேங்கடத்தை வணங்கு வோமே.

4. அன்னைமொழி அவருக்குத் தெலுங்கென்றாலும்
ஆதிமொழி தமிழ்தன்னில் மேதை யானார்;
தின்னைமொழி தேசமொழி உலகம் எங்கும்
திகழுமொழி அனைத்தினிலும் தேர்ச்சி மிக்கார்;
எண்ணம்மொழி செயல்யாவும் பெருமாள் என்றே
இலக்கியத்தில் 'ஆழங்கால்' படுவதாலே
கன்னல்மொழி இனிப்பது போல் ரெட்டி யாரின்
கையசையும் நூலாகி இனிக்கு தம்மா!

5. வெறுந்தரையில் குப்புறத்தால் படுத்துக் கொள்வார்;
விரித்தபடி பலநூல்கள் உடனிருக்கும்;
குறுந்தொகையும் நெடுந்தொகையும் அணியும்
யாப்பும்
கோள்நிலையும் வான்நிலையும் கூறும் நூலும்
மருந்தியலும் உளவியலும் காதற் பாங்கும்
மடைதிறந்த வெள்ளமெனத் தலையில் நின்று
அருந்துகிற பாலாகிக் கையில் பாயும்;
அத்தனையும் தேனாகி நூலாய் மாறும்.

6. ஆழ்வார்கள் பாசுரத்தில் மூழ்கி மூழ்கி
ஆழங்கால் படுவதவர் பிறவிப் பேறு;
வாழ்விக்கும் கருவிதரு விஞ்ஞானத்தில்
வாய்த்திருக்கும் பேரறிவு கல்விப்பேறு;

ஆழ்வாரில் தலைமணியாம் நம்மாழ் வாரை
அருகணைய வாய்த்ததுவோ ஆய்வுப் பேறு;
பால்வார்க்கும் தாய்போலந் துறைகள் தோறும்
பலநூல்கள் அவர்யாத்தல் தமிழர் பேறே!

7. வேங்கடத்தை நடுவாக வைத்துக் கொண்டு
வெகுகாலப் பட்டறிவை வழங்கு கின்றார்;
வேங்கடத்தான் எம்பெருமான் வாழும் வீடு
வேங்கடமே எனநினைக்கும் வாய்க்கும் வீடு;
வேங்கடத்தான் இலக்கியத்தில் காலம் தோறும்
விளங்குவதை அழகாக விரித்துப் பேசி
வேங்கடத்தான் திருவடியில் சார்த்தும் மாலை
வெகுநேர்த்தி யாய்விளக்கும் இந்த நூலே.

8. இவ்வொருநூல் படித்தாலே என்ன என்ன
எய்திடலாம் என்பதனைச் சுருங்கச் சொல்வேன்:
செவ்வையுறு வாழ்வுவரும்; வைண வத்தில்
தெளிவுவரும்; ஈட்டுரையில் தேன்கிடைக்கும்;
திவ்வியமாம் பிரபந்தத் திரட்டும் பாலும்
திருமாலின் அருளோடு சேர்ந்து கிட்டும்;
ஒவ்வொருசொல் பிழையாக அச்சா னாலும்
உயர்திருமால் சௌலப்பியம் இந்த நூலே!

9. வாங்கியகை பூமணக்கும்; இந்த நூலை
வைத்தஇடம் தேன்மணக்கும்; படித்து விட்டுத்
தூங்குகையில் திருமலையான் தென்றல் காற்று
துளபத்தின் நறுமணத்தைக் நெஞ்சில் தேக்கும்;
ஆங்காங்கே அருள்மணக்கும்; திவ்ய தேசம்
அடைந்தபயன் அத்தனையும் நொடியில் கிட்டும்;
பூங்குயிலாய் ஆசானின் புகழைப் பாடும்
பொற்பேறு மாணவன்என் பிறவிப் பேறே.

10. சொக்கலிங்கர் முருகப்பர் செட்டி நாட்டார்
சுடர்விட்ட புரட்சித்தீ கம்பன் தாசர்
தக்கவரின் திருநினைவால் மலரும் இந்நூல்
தகைசான்ற அவர்துணைவி புரட்சி அவ்வை
மிக்கவுயர் பாசவல்லி மரக தம்மா
மேலான திருக்கையில் கொண்டாய்ச் சேரும்;
தக்கபடி நன்றியினைச் செலுத்தும் எங்கள்
தமிழாசான் உயர்பண்பு தொடர்க! வாழ்க!

11. எண்பதினை நெருங்குகிற என்றன் ஆசான்
இருபதுபோல் உடல்பெறுக! நூறும் காண்க!
கண்படைத்த பேரதனைத் தமிழர் நாட்டார்
களிபடைத்த அவர்நூலின் படிப்பால் காண்க!
விண்துடைத்த வேங்கடமும் அதன்மேல் தோன்றும்
விரிசுடரும் ஆசானைப் படிப்போர் கேட்போர்
மண்படைத்த உயிர்களினை அருளிக் காக்க
மானுடத்தின் வெற்றி யென்றும் வாழ்க! வாழ்க!

'தமிழகம்'
வ. உ. சி. தெரு
கண்டனூர்-623 104
பசும்பொன் தேவர் மாவட்டம்
15-05-1992

அர. சிங்காரவடிவேலன்

திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்!
ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே சரணம்!

# அணிந்துரை

**திரு. தி. அ. கிருஷ்ணமாசாரிய சுவாமிகள்,**
**76, சந்நிதி தெரு, காஞ்சி-3**

அறிவும் அநுபவமும் ஆன்மகுணங்களும் பரமாத்ம பக்தியும் நிறைந்து அகவையாலும் முதிர்ந்த பேராசிரியர் டாக்டர் திரு ந. சுப்புரெட்டியாரவர்கள் இப்போது **'வடவேங்கடமும் திருவேங்கடமும்'** என்பதோர் நூலை எழுதி வெளியிடுகிறார். இவர் இதற்கு முன்பெழுதி வெளியிட்ட சில நூல்களைப் போலவே இதன்கண்ணும் பதினெட்டுக் கட்டுரைகளை அமைத்துள்ளார். 18 என்ற எண் 'ஜய' என்ற சொல்லைக் குறிப்பதாகப் பெரியோர்கள் பணிப்பதற்கேற்ப, பதினெட்டுக் கட்டுரைகள் அடங்கிய இவருடைய நூல்களும் உலகில் வெற்றிக்கொடியை நாட்டி வருகின்றன என்றால் அது மிகையாகாது. பதினெட்டுப் பருவங்களைத் தன்னகத்தே கொண்ட வியாச மகாபாரதம் 'ஜய' என்னும்—பொருள்பெற்ற பெயரைப் பெற்று இவ்வுலகில் ஒரே சீராக விளங்கி வருகின்றமையை இங்கு நினைத்தல் தகும்.

இந்நூலில் 1 முதல் 4, 6—ஆகிய ஐந்து கட்டுரைகள் ஆராய்ச்சியாக அமைந்துள்ளன. அவற்றில் —'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்' என்றுள்ள—பரம்பாரனார் இயற்றிய தொல்காப்பியப் பாயிரத்தில் குறிக்கப்பெற்ற 'வடவேங்கட'மென்பது, இப்போது பிரசித்தமாக உள்ள திருவேங்கடமென்ற திருப்பதிமலையன்று. இது ஒன்றோடொன்று ஒழுங்கற்ற

நிலையில் உள்ள சில குன்றுகளாய், தமிழ் நாட்டுக்கு வடபுறத்தில் நடுவில் மட்டும் நிலைத்து, ஓரளவு நீரும் நிழலும் பெற்றுத் திகழ்கின்றது. மிகப் பழைய நூலான தொல்காப்பியத்திற்கு, தொல்காப்பியரோடு சேர்ந்து ஒரு சாலை மாணாக்கராய்ப் படித்த பனம்பாரனார் இயற்றிய மிகப் பழையதான சிறப்புப் பாயிரத்திலுள்ள 'வடவேங் கடம்' என்ற சொல்லின் பொருளை, மிகப்பழையவை யான சங்க நூல்களைக் கொண்டே அறுதியிடவேண்டிய கடமை உள்ளது. அங்ஙனம் சங்க நூல்களைக் காணும் போது, 'வேங்கட நெடுவரை' என்றும், 'நெடுவரை பிறங்கிய வேங்கட வைப்பு' என்றும், 'நெடுவரை வேங் கடத் தும்பர்' என்றும் மிகவும் நீண்ட வரிசையாகச் சேர்ந்த மலைத்தொடர்களே வேங்கடமென்று அந்நூல் களில் குறிக்கப்பட்டுள்ளதனாலும், புல்லி ஆண்ட இவ் வேங்கடப்பகுதி 'நிலநீரற்று நீள்சுனை வறப்பக் குன்று கோடு அகைய (=எரிய)க் கடுங்கதிர் தெறுதலின்' என்றும், 'நிழற்கவின் இழந்த நீரில் நீளிடை அழலவிர் அருஞ்சுரம்' என்றும், 'பயம் (=நீர்) தலைபெயர்ந்து (=நீங்கி) மாதிரம் வெம்ப' என்றும்— வெயில் மிகக் காய்வதனால் நிலத்திலும் சுனைகளிலும் நீர் பசையற வற்றப்பெற்று புகுதற்கரிய பாலைவனமாகக் கூறப்பட்ட படியாலும், திருப்பதியும் அதன் கிழக்கே நெல்லூர் முதலிய ஊர்களும் மேற்கே எருமைநாடு மகிஷாசுரனூர் எனப்படும் மைசூரும் பழையகாலத்தில் தமிழ் கூறும் நல்லு லகமாக இருந்ததனால் இவையனைத்துக்கும் வடபுறத்தில் கிழக்குக் கடற்கரையில் தொடங்கிச் சற்றேறக்குறைய மேற்குக் கடற்கரைவரையில் நீண்டு சென்று, தமிழ் கூறும் நல்லுலகை வியாபித்து நிற்கிற சங்ககால வேங் கடமே வடவெல்லையாக இருக்கத் தகுதி பெற்றுள்ள படியாலும், இங்ஙனம் நீண்ட மலைத்தொடர்களாகிய சங்ககாலவேங்கடத்தை, புல்லி, திரையன், ஆதனுங்கன் என்று பெயர் படைத்த அரசர்கள் மூவரும் வெவ்வேறு பகுதிகளில் இருந்து ஆண்டமை சங்கநூல்களால் அறியக்

கிடக்கின்றமையாலும், இம்மூவரின் ஆட்சிக்குட்பட்டு நீரும் நிழலுமின்றி மிகவும் வறட்சியான நிலையை யடைந்துள்ள சங்ககால வேங்கடமே மேற்கூறிய பாயிரத்தில் தமிழ்நாட்டுக்கு வடவெல்லையாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கு நேர் முரணான திருப்பதி மலையன்று. நீரும் நிழலும் பொழிலுமுள்ள இத்திருப்பதிமலை வெம்மை மிக்க பாலையைக் குறிக்கும் வேங்கடமென்றும் பெயரால் முதலாழ்வார்களால் குறிக்கப்படுவது—முற்கூறிய வேங்கடத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது அப்பகுதியின் ஓரத்திலோ இம்மலை இருந்ததனாலென்று கொள்ளவேணும். பிற்காலத்தில் நம்மாழ்வார் 'வேங்கடம்' என்ற சொல்லால், கடம்—பாவமாய், பாவங்களை வேவச் செய்யும் மலை என்ற பொருளைக் கருதியும், புராணகாரர்கள் வேம் என்பது பாவமாய் அல்லது அழியாமையாய், கடம் என்பது எரித்தலாய் அல்லது அழியாத செல்வமாய், பாபத்தை எரிக்கும் மலை அல்லது அழியாத செல்வத்தை அளிக்கும் மலை என்னும் பொருள்களைச் சுட்டியும் இம்மலையைக் குறிப்பிட்டிருக்கின்றனர். இம்மலை புறப்பொருள் வெண்பாமாலையிலும் சிலப்பதிகாரத்திலும் திருமால்திருப்பதியாகவே கூறப்பட்டுள்ளது. சைவப் பற்றுள்ள இராவ்சாகிப் கோதண்டபாணிப் பிள்ளையவர்கள் சிலப்பதிகாரத்தில் மாலவன் குன்றமாக வேங்கடமலையைக் குறித்துள்ள பகுதியை இடைச்செருகலென்று கூறுவது, ஆழ்வார்கள் அனைவரும், பழைய குருபரம்பரை முதலிய வரலாற்று நூலை இயற்றியவர்களும் ஆழ்வாருளிச் செயலுக்கு உரை செய்தவர்களுமாகிய ஆசாரியர்களும் இத்திருவேங்கடமலையைத் திருமாலின் குன்றமாகவே கொண்டிருப்பதனாலும், தேவாரம் முதலிய திருமுறைகளையியற்றிய சிவனடியார்களும், முருகவேளின் படைவீடுகளைப் பாடிய நக்கீரர் முதலிய சங்கப்புலவர்களும் இவ்வேங்கடமலையைச் சிவபெருமானுக்கோ முருகக்கடவுளுக்கோ உரியதாகப் பாடாமையினாலும் பொருந்தாது. சோழ

வரசர்களின் காலத்தில் திருமலையில் ஏற்பட்ட கல்வெட்டுகளில் 'ஸ்ரீ வைஷ்ணவர்கள் இரட்சை', 'இந்நிபந்தம் செய்தது ஸ்ரீவைஷ்ணவர்களோம்' என்றிங்ஙனம் காணப்படுவதனாலும் சிலப்பதிகாரத்தில் உள்ள முற்கூறிய பகுதி இடைச் செருகலன்றென்று தெளியலாகும்—என்று பேராசிரியர் ரெட்டியாரவர்கள் அசைக்க முடியாத அத்தாட்சிகளைக் காட்டி அறுதியிட்டிருக்கிறார்.

ஐந்தாவது கட்டுரையில்—நாலாயிரம் எனப்படும் ஆழ்வாரருளிச் செயல்களின் நான்கு பகுதிகள், இருபத்து நான்கு பிரபந்தங்கள், அவற்றின்கள் உள்ள பாசுரங்களின் எண்கள். அப்பாசுரங்களில் தொண்டரடிப் பொடிகளும் மதுரகவிகளும் தவிர மற்றுள்ள ஆழ்வார்களும் ஆண்டாளுமாகிய இப்பதின்மார் பாடிய திருவேங்கடப் பாசுரங்களின் எண்ணிக்கை இவற்றைக் குறிப்பிட்டு, ஏழாவது தொடங்கிப் பன்னிரண்டாம் கட்டுரை வரையில்—முறையே முதலாழ்வார்கள் மூவர், திருமழிசைப் பிரான், குலசேகரப்பெருமாள், ஆண்டாள், திருமங்கை மன்னன், சடகோபர் ஆகியவர்கள் திருவேங்கடமுடையானை அநுபவித்தருளிய பாசுரங்களை எடுத்து அவற்றுக்கு, எழுநூறாண்டுகளுக்கும் முன்பே நம்பிள்ளை பெரியவாச்சான் பிள்ளை முதலிய ஸர்வஜ்ஞர்களான ஆசாரியசிகாமணிகள் தேனும் பாலும் கன்னலும் அமுதுமாக அருளிச்செய்த உரைகளையே நயம்பட எடுத்துக் காட்டி, தாமும் மிக மிக அவற்றில் ஈடுபட்டுத் தமக்குள்ள 'சடகோபன் பொன்னடி' என்ற உண்மையான விருதுக்குச் சேரும்படி, தமக்குத் திருவேங்கடமுடையான் பக்கலில் உண்டான பக்தியை வாசகர்களுக்கும் மிகமிக உண்டாக்கியிருக்கிறார் பேராசிரியர் ரெட்டியாரவர்கள்.

பதின்மூன்றாவது தொடங்கிப் பதினெட்டாவது கட்டுரை வரையில்—திவ்வியகவி பிள்ளைபெருமாளையங்கார் காட்டியருளும் திருமலைக்காட்சிகள், வேங்கட

வாணன், முத்தமிழ்க்கவி சிந்தித்த திருவேங்கடம், கம்பன் கருதிய திருவேங்கடம், கம்பராமன் கருத்திலுள்ள திருவேங்கடம், (மணவாளமாமுனிகளின் சீடர்கள் எண்மரில் ஒருவராகப் பிரசித்தி பெற்ற பிரதிவாதிபயங்கரம் அண்ணன் பணித்தருளிய) வேங்கடேச சுப்ரபாதம் முதலிய நான்கு வடமொழித் துதி நூல்களுக்கு மொழிபெயர்ப்பாக, திரு இரா. பதுமநாபனவர்கள் எழுதிய திருவேங்கடமாலை என்ற பக்திச்சுவை ததும்பும் பாடல்கள் என்னும் இவ்விஷங்களை ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களோடு ஒப்பிட்டுக் காட்டி விளங்க வைத்திருக்கிறார் பேராசிரியர் ரெட்டியாரவர்கள்.

இவற்றில் பல இடங்களில் ஸ்ரீகாஞ்சிபுரம் மகாவித்வான். P. B. அண்ணங்கராசார்யஸ்வாமிகளின் நாலாயிர திவ்யார்த்த தீபிகையுரைப் பகுதிகளை எடுத்தாண்டு சுவைப்பட விளக்கி அவ்வாசிரியர் திறத்தில் தமக்குள்ள பெருமதிப்பை உலகறிய வெளியிட்டிருக்கிறார் இப்பெரியவர்.

''பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான் பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாளயோகி திருவாய் மொழியைக் காத்த, குணவாளரென்று நெஞ்சே கூறு'' என்றும், ''முந்துறவே பிள்ளான் முதலானோர் செய்தருளும், அந்த வியாக்கியைகளன்றாகில்—அந்தோ திருவாய்மொழிப் பொருளைத் தேர்ந்துரைக்கவல்ல, குரு ஆர்? இக்காலம் நெஞ்சே கூறு'' (உபதேசரத்தின மாலை 39, 40) என்றும் மணவாள மாமுனிகள் அருளியதை யொட்டி, பேராசிரியர் ரெட்டியாரவர்கள் இந்நூல் முழுவதையும் முற்காட்டிய ஆசாயர்களின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளாலே நிரப்பி அவர்கள் திறத்தில் தமக்குள்ள பக்திப்பெருக்கை வெளிப்படுத்திய பாங்கு சொற்களில் அடங்காது—''வாசாம் அகோசரம்.''

வடமொழிவேதங்களில் பரம்பொருள் — பயன் அதனையடையும் வழி ஆகிய இம்மூன்றும் எளிதில் விளக்கமாக அறிய முடியாது. தென்மொழிவேதங்களான ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலோ வெனில் அவற்றை எளிதில் மிக மிக விளக்கமாகத் தெளியமுடியும்—என்று வைணவப் பெருமக்கள் கருதும் உண்மையை 'செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்று வேதாந்ததேசிகர் அருளிய பாசுரப்பகுதியை மேற்கோளாகக் காட்டி உணர்த்தியமை (74 பக் ) கருதத்தக்கது.

மேலும் இந்நூலில்—சித்தும் அசித்தும் ஈசுவரனுமாகிய மூன்றில் ஈசுவரனாகிய திருமாலுக்கு சீவனும் சடப்பொருளுமாகிய சித்தும் அசித்தும் உடலாக அமைந்துள்ளன (பக்கம் 92) என்பதும், இருடிகளைவிட ஆழ்வார்களும், அவர்களில் பெரியாழ்வாரும், அவரைவிட ஆண்டாளும் உயர்த்தவர்கள் (பக் 130, 131) என்பதும், வழுவிலாவடிமை இன்னது (பக் 172, 173) என்பதும், வானார்சோதி— நீலாழிச்சோதிகளைவிட வேங்கடத்தெழில்கொள்சோதி உயர்ந்தது (பக் 173, 174) என்பதும், திருமந்திரத்தின் பொருள் இன்னது (பக் 174, 175) என்பதும், நம்மாழ்வார் செய்த சரணாகதி இத்தகையது (பக் 196—200) என்பதும், குழந்தைக்குத் தாயின் முலைகள்போல் அடியவனுக்கு எம்பெருமானுடைய திருவடிகள் (பக் 215, 216) என்பதும், திருவாராதனத்தில் எம்பெருமானுக்கு அமுது செய்தருளப்பண்ணும்போது விண்ணப்பிக்க வேண்டிய பாசுரங்கள் இன்னின்னவை (பக் 193)என்பதும், மற்றும் பிறவும் கட்டாயமாகக் கண்டு தெரிந்துகொள்ளத் தக்கனவாம். தெவிட்டாத அமுதமயமான இந்நூலில் காணப்படுபவை எல்லாம் ஸாரதமங்களேயென்று உறுதியாகக் கூறலாம்.

*புராணகாரர்கள் கூறியபடியே 'அழியாத செல்வத்தை அளிக்கவல்லது' என்று பொருள் படுகின்ற வேங்கடம்' என்று பெயர் பெற்ற இத்திருவாளரின் திருமாளிகை இவர்வாயிலாக இன்னும் பல நூல்களாகிய அழியாத செல்வங்களை இவ்வுலகிற்கு அளித்தருள வேணுமென்றும் 'சடகோபன் பொன்னடி' யான இப்பெரியவர் இங்ஙனமே தொண்டு புரிந்து கொண்டு பல்லாண்டு இனிதே— 'கொண்ட பெண்டிர் மக்களோடு நல்ல பதத்தால் மனை வாழ்வு' வாழவேண்டு மென்றும், 'திருவேங்கடத்தானே குலதொல்லடியேன்' (திருவாய் 6-10-1) 'எந்தை தந்தை தந்தை தந்தைக்கும் முந்தை— திருவேங்கடத்து...... அண்ணல், (திருவாய் 3-3-2) என்றருளிய நம்மாழ் வார்க்கும், 'சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய் எம்மனா என்குலதெய்வமே' (பெரியாழ் 5-4-1, 3) என்று பணித்த பெரியாழ்வார்க்கும் போன்று திருமலையனந் தாழ்வான் குலத்தில் தோன்றிய அடியேனுக்கும் குல தெய்வமாகிய குளிரருவிவேங்கடத்தென் கோவிந்த னுடைய பூவார்கழல்களில் மனமார மகிழ்ந்து வேண்டிக் கொள்கிறேன்.*

*சாதாரண மனிதனாகிய அடியேனை பெரும் புலவராகிய தாம் எழுதிய நூலுக்கு அணிந்துரை யெழுதும் பெரும்பணியில் இழியச் செய்த—கள்ளங் கபடமற்ற உள்ளங்கொண்ட திருவாளர் ந. சுப்புரெட்டி யாரவர்கள் திறத்தில் பணிவுடன் நன்றியைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.*

*76, சந்நிதி தெரு,*
*ஸ்ரீகாஞ்சி-3*
*21-04-92*

**தி. அ. கிருஷ்ணமாசாரியன்**

# நூல் முகம்

துன்பமும் இன்பமு மாகிய
    செய்வினை யாய்உல கங்களுமாய்
இன்பமில் வெந்நர காகி
    இனிய நல் வான்சுவர்க் கங்களுமாய்
மன்பல் உயிர்களு மாகிப்
    பலபல மாய மயக்குகளால்
இன்புறும் இவ்விளை யாட்டுடை
    யானைப்பெற் றேதும்அல் லல்இலனே[2]

—நம்மாழ்வார்

1978 சனவரி 14ல் சென்னையில் குடியேறிய பின்னர்,

வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது[3]

என்று பக்திசாரர் கூறியாங்கு என் காலம் கழிகின்றது. இந்தக் காலத்தில் என் சிந்தை - சிந்தனை - திருவேங்கடம் பாலும் திருவேங்கடவன்மீதும் சுழன்று சுழன்று வட்ட மிட்டு வருகின்றன. இக்காலத்தில் என் சிந்தையில் முகிழ்த்த கருத்துகளைக் கட்டுரைகளாக வடித்து **'சப்தகிரியில்'**[4] அவ்வப்போது வெளியிட்டு வந்தேன்; சில வெளியிடாமலும் இருந்தன. அவை தொகுக்கப் பெற்று **'வடவேங்கடமும் திருவேங்கடமும்'** என்ற தலைப்பில் நூல் வடிவமாக இப்போது வெளிவருகின்றன.

---

2. திருவாய். 3.10:7
3. நான். திருவந். 63
4. திருமலை - திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டு வரும் திங்கள் இதழ்.

கண்ணன் தேர்த்தட்டிலிருந்துகொண்டு காண்டீப னுக்கு அருளிய அமுதவாக்கை வியாசபகவான் **பதினெட்டு** இயல்களில் அமைத்து வெளியிட்டார். அதுபோல் சிறி யேனின் நூலும் **பதினெட்டு** கட்டுரைகளாக அமைந்தது ஒரு பொருத்தம். இவற்றுள் முதல் நான்கு கட்டுரைகள் **'வடவேங்கடம்'** பற்றியவை. இவற்றில் 'வடவேங்கடம்' வேறு, 'திருவேங்கடம்' வேறு என்று இலக்கியச் சான்று களுடன் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. ஏனைய பதினான்கு கட்டுரைகளும் திருவேங்கடத்தையும் அங்கு நின்ற கோலத்தில் சேவை சாதிக்கும் வேங்கடவாணனை யும் பற்றியவை. இவற்றைத் தொகுத்து வெளியிட்டால் வாசகர்களின் சிந்தைக்கு விருந்தாக அமைவதுடன் பக்தி உணர்வையும் தூண்டுவனவாக அமையும் என்று கருதியே வெளியிட்டேன். இதன் பயனைப் படிப்போர்தாம் மதிப்பீடு செய்ய வேண்டும்.

இந்த நூலைச் செவ்விய முறையில் அழகுற அச்சிட்டு உதவிய **திரு. வெள்ளையப்பன்** (அதிபர் ஸ்ரீ வெங்கடே சுவரா அச்சகம்) அட்டை ஓவியம் வரைந்தும் அச்சுக் கட்டைகள் தயாரித்தும், அட்டையை மூவண்ணங்களில் அச்சிட்டும் அதற்குக் காப்புறை (Lamination) அமைத்தும் உதவிய ஓவிய மன்னர் கலையரசர் **P. N. ஆனந்தன்** அவர்கட்கும் இதற்கு நன்முறையில் கட்டமைத்து கற்போர் கரங்களில் கவினுறத் தவழச் செய்த **திரு. V. திருநாவுக்கரசுக்கும்** என் உளங்கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்த நூலுக்குச் **'சிறப்புப் பாயிர மாலை'** வழங்கிய பேராசிரியர் **டாக்டர் அர. சிங்கரரவடிவேலன்** என் தலை மாணாக்கர்களுள் ஒருவர். எல்லோருமே சாந்திபினி முனிவருக்குக் கண்ணன் மாணவனாக வாய்த்தது போல் எனக்கு வாய்த்தனர் எனக் கொள்வேன். டாக்டர் சிங்கார வேலன் 1960-61 இல் அழகப்பா ஆசிரியர் பயிற்சிக்

கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார்; சற்றேறக்குறைய ஒன்றரைத் திங்கள்தான் என்னிடம் பயின்றார். அந்தக் குறுகிய காலத்திலேயே அவர் கருவிலே திருவுடையவர் என்பது தெளிவாயிற்று. விரைந்து கவிபாடும் வேந்து. இரண்டே நாளில் அருமையான பாடல்கள் இயற்றி அச்சிட்டு முதல்வர் தலைமையில் 'வழியனுப்பு விழா' அமைத்துப் (29—7—1950) பெருமைப் படுத்தியவர்.

அதன் பிறகு சுமார் 32 ஆண்டுகளாக அவரை கண்டு மகிழும் வாய்ப்பு ஏற்படவில்லை. ஆனால் அவர் வளர்ச்சியை யான் அறிந்து கொண்டுதான் இருந்தேன். திருப்பதியில் யான் ஆற்றிய பணி, தமிழ்ப்பணி முதலிய வற்றை அவர் அறிந்திருத்தல் கூடும். ஆயினும் இந்த நூலுக்குச் **'சிறப்புப் பாயிர மாலை'** வழங்கும் வாய்ப்பால் ஆன்மத் தொடர்பு புதுப்பிக்கப் பெறுகின்றது. என் மாணவர்கள் அணிந்துரை முதலியவை வழங்கும் வாய்ப் பால் என் நூல்களில் வாழவேண்டும் என்ற கொள்கை ஆசையால் இவர் **ஐந்தாவதாக** இடம் பெறுகின்றார்.[5]

பி டி. தேர்வு பெற்றவுடன் (1961) இவர் நான் வகித்த பதவிலேயே அழகப்பர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியி லேயே விரிவுரையாளராக அமர்த்தப்பட்டு நற்பணி யாற்றியவர் (1961-64). பின்னர் அழகப்பர் கலைக் கல்லூரியில் தம் பணியை மாற்றிக் கொண்டு 1964-72 வரை பணியாற்றியவர். பின்னர் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் தமிழ்ப் பேராசிரிய ராகி இன்றுவரை (1972-1992) சிறப்பாகப் பணியாற்றி வருபவர். பணிக் காலத்தில் நன்கு உழைத்து டாக்டர்

---

5. இதற்கு முன் வழங்கியவர்கள்: டாக்டர் 'சிலம்பொலி' (இருமுறை), டாக்டர் பொன். சௌரிராசன், டாக்டர் தேவசங்கீதம் டாக்டர் என். கடிகாசலம் என்பவர்கள்; நன்னூல் 51 ('தன் மாணாக்கன்')

பட்டமும் (பிஎச். டி.) (1978) பெற்று உலகியலை யொட்டித் தொழிலுக்குத் தேவையான தகுதியை ஆக்கிக் கொண்டவா 'குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை, கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை' பெற்றவர் என்பதற்காகவே இப்பட்டங்கள். நல்லாசிரியர் விருதும் தானாக இவரை வந்தடைந்தது.

செட்டிநாட்டு தனவைசிய இளைஞர்களிடம் தனித் தன்மை உண்டு. பொதுவாக அடக்கம், இறைபக்தி, உழைக்க வேண்டும் என்ற அவா ஆகியவை மீதூர்ந்து நிற்கும். எல்லோரிடமுமே 'செய்வன திருந்தச் செய்' என்ற நற்பண்பு காணப்படும். 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்பதை இவர்களிடம் தெளிவாகக் காணலாம். இவற்றை இயல்பாகக் கொண்ட என் அருமை மாணாக்கர் பதிநான்கு (கவிதை, கட்டுரை) நூல்களின் ஆசிரியர். எழுதினால்தான் அறிவுத்திறன் பெட்டி போட்ட ஆடைகள்போல் சீர்பட்டுப் பொலிவு பெறும் என்பது ஆங்கில அறிஞர் பேக்கனின் கூற்று. இதழாசிரியப் பயிற்சியும் இவருக்கு உண்டு. கவிபாடும் பண்பு கருவிலே திருவாக அமைந்தவராதலால் தமிழ் நாட்டிலும் பம்பாய், டில்லி முதலிய பிற இடங்களிலும் ஏறத்தாழ 500 கவியரங்குகளில் பங்கு கொண்டு தமிழ்ப் பணியாற்றி யவர்.

இத்தகைய சிறப்புகளையெல்லாம் கொண்ட டாக்டர் சிங்கார வடிவேலனின் 'சிறப்புப் பாயிர மாலை' —நன்னூ லார் கூறும் சிறப்புப் பாயிர இலக்கணப்படி (நூற்பா-47) 'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்' போல் அமைந்து இந்நூலிற்குப் பொலிவு தருவது இந்நூலின் பேறு; என்பேறுமாகும். இந்தப் பாமாலை வழங்கிய என் மாணாக்கர் நீடு புகழும் நீங்காத செல்வமும் நிறைந்த ஆயுளும் பெற்றுத் திகழ வேண்டும் எனபது என் நன்றி கலந்த ஆசி.

1960-ஆகஸ்டு முதல் திருப்பதி வாழ்வை நல்கினான் ஏழுமலையப்பன். திருப்பதி வாழ்வில் எனக்கு அறிமுக மாகிய நான்கு முக்கிய வைணவச்சீலர்களில் ஒருவர் திரு **T.A. கிருஷ்ணமாச்சாரிய சுவாமிகள்.** தமிழர்கட்கு இரு கண்களாகத் திகழும் தமிழிலும் வடமொழியிலும் முறையே வித்துவான், சிரோமணி பட்டங்கள் பெற்றவர். திருவேங்கடவன் கீழ்த்திசை மொழிக் கல்லூரியில் 1945 முதல் பல்லாண்டுகள் வடமொழிப் பேராசிரியராகப் (நியாயப்பிரிவு) பணியாற்றி ஓய்வு பெற்றவர். கோவிந்த ராஜ சுவாமி சந்நிதி வீதியில் சொந்த இல்லத்தில் வாழ்ந் திருந்தவர். 1976 ஆகஸ்டில் (அடியேன் ஓய்வு பெற்ற தற்கு ஓராண்டிற்கு முன்னதாக) ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்றபின் சில ஆண்டுகள் திருவரங்கத்தில் வாழ்ந்து பெரிய பெருமாளைச் சேவித்துக் கொண்டும் சில ஆண்டுகள் திருப்பதியில் வாழ்ந்து சீநிவாசனையும் கோவிந்தராசனையும் சேவித்துக் கொண்டும் இருந்து தற்சமயம் காஞ்சிவரதசாசர் சந்நிதிற் தெருவில் (76. எண் இல்லம்) வாழ்ந்து கொண்டு வரதனைச் சேவித்துக் கொண்டும் இருப்பவர். பகவத் விஷயத்தைச் சிலருக்குப் பாடம் சொல்லி ஈட்டுரையில் திளைப்பவர்.

எழுபது அகவை நிறைந்த (1992 இல்) இந்தச் சான்றோரின் தொடர்பு அடியேனுக்கு ஏற்பட்டது ஏழுமலையானின் திருவருளாலேயே என்பது அடியேனின் நம்பிக்கை. புலமை மிக்க பலர் தொடர்பு ஏற்பட்டிருந் தாலும் சிலர்தாம் **சான்றோராக** அமைந்திருக்கின்றனர். திரு. கிருஷ்ணமாசாரிய சுவாமிகளிடம் அடியேன் ஈர்க்கப் பட்டதற்கு அவர்தம் பக்தி நிறைந்த இலக்கியப் புலமை, புரையறக் கலக்கும் பாங்கு, எளிமையுடன் அன்பர்களை அணைக்கும் அருமை ஆகியவையே காரணங்களாகும். இவரிடம் பழகும்போது 'சத்விஷயங்களைத்' தவிர, பிற வற்றில் உள்ளம் தோய்வதில்லை என்ற உயர் பண்பைக் காணலாம். 'மறந்து புறந்தொழா மாந்தராக' இருந்

தாலும் பிறசமயங்களின்மீது காழ்ப்பு இல்லாதவர். ஆழ்வார்களின் அருளிச் செயல்கள்மீதும் உடையவர் மீதும் மணவாள மாமுனிகள்மீதும் ஈடற்ற பக்தி மிக்கவர். இவருடைய பல நற்குணங்களின் சாயை அடியேன் மீதும் சிறிதாவது படர்வதற்கு கோவிந்தனின் திருவருளே துணை நின்றது என்பதை நினைவுகூர்கின் றேன். பரமபதவாசி காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் என் உள்ளத்தில் நிரந்தர இடம் பெற்றிருப்பது போலவே இந்தச் சுவாமிகளும் நிரந்தர இடம் பெற்றிருப்பவர்கள். இத்தகைய பெரியா ரின் அணிந்துரை பெற்றது இந்நூலின் பெருமையை மிகுவிக்கிறது; அடியேனது பேற்றையும் நினைக்கச் செய்கின்றது. இத்தகைய 'ஆர்த்தருக்கு' அடியேனின் நன்றி கலந்த வணக்கம் என்றும் உரியது.

1950-ஜுலை முதல் காரைக்குடி வாழ்வு கிட்டியது கற்பக விநாயகர் அருளால். அதற்கு முதல் ஆண்டு ஏப்ரல் மே திங்களில் இதற்கு ஒளி காட்டும் அருணோதயம்போல் காரைக்குடி கம்பன் விழா என் காட்சிக்கு இலக்காகியது. அதற்குச் சென்றிருந்த எனக்கு மகளிர் இல்ல ஆண்டு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. இந்த இரண்டும் முறையே கணபதியுடனும் கந்தனுட னும் உறவு ஏற்பட்டதுபோல் சா. க. உடனும் சொ. முரு. வுடனும் உறவு ஏற்பட்டது. இருவருமே அவரவர் குறிக்கோள்களில் **'தொண்டின் வடிவுகள்'**. இருவரும் கழகங்கள் கண்டு தொண்டாற்றிய உயர்குணச் செம்மல்கள்.

சொ. முரு. ஓர் அருமையான **மனிதர்**; ஒப்பற்ற சான்றோர்; நாட்டுப் பற்றாளர்; சைவசமயத்தில் ஆழங் கால்பட்டவர். அடியேனுடன் பழகும்போது நீறு பூசாத நெற்றியுடன் திகழ்ந்தாலும் ஒரு காலத்திடல் திருநீற்றை மூட்டை மூட்டையாகப் பூசிக்கொண்டு, அக்கமணிகளைச்

இலோ அளவுக்குமேல் தரித்துக் கொண்டு சைவத்தைப் பரப்பிக் கொண்டிருந்ததை அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழ்வார்.

தந்தை பெரியாரின் தொடர்வு ஏற்பட்ட பிறகு அவரது சீர்திருத்தக் கொள்கைகள் இவரை ஆட்கொண்டன. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் அதிகமாக ஈடுபட்டு கைம்பெண்கட்கு மறுவாழ்வு அளிக்கும் பாங்கில் 'மகளிர் இல்லம்' கண்டார். சில ஆண்டுகளில் சமூகம் அதற்கு ஊக்கம் காட்டாததனால் அதனை மாண்டிச்சோரி பள்ளியாக மாற்றி அற்புதமாகப் பணியாற்றினார். வாழ்நாளின் இறுதியில் சில ஆண்டுகள் இலக்கியப் பணியிலேயே — குறிப்பாக இராம காதையிலேயே — மூழ்கிக்கிடந்தார். இவர் பதிப்பித்த 'இராம காதையே' இதற்கு நினைவுச் சான்று.

இவர் கண்ட சங்கங்கள் : 'தன வைசியர் சங்கம்', 'தன வைசியர் ஊழியர் சங்கம்', 'தன வைசியர் வாலிபர் சங்கம்', 'சிவனடியார் திருக்கூட்டம்' 'மாதர் மறுமண சகாயச் சங்கம்', மகளிர் இல்லம்[6] ஆகியவை. இவர் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ்கள் 'தன வைசிய ஊழியன்', 'குமரன்' ஆகியவை. சங்கங்களும் இதழ்களும் சமூகத் தொண்டிற்கு மிகவும் இன்றியமையாத அமைப்புகள் என்பதை நடை முறையில் நன்கு அறிந்தவர். இவர்தம் இலக்கியப் பணியை இவர் பாடிய பாடல்களே குன்றத்து விளக்காகக் காட்டும்.

வள்ளுவரைக் கற்றேன்;
மணிவா சகம்உணர்ந்தேன்;
கள்ளூறு கம்பன்
கடல்திளைத்தேன்—அள்ளுபுகழ்

---

6. மரகதவல்லி அம்மையாரைக் (கைம்பெண்) கைபிடித்த பின்னரே இந்த அமைப்பைக் கண்டார்.

காந்தி யடிகளைஎன்
கண்ணாரக் கண்டிட்டேன்;
வாழ்ந்தேன் இருந்தேன்
மகிழ்ந்தேன்.

கம்பருக்கு அடிமையென்று
கைச்சாத்து செய்துவிட்டேன்;
இம்பர்வேறு ஒன்றற்கு
இடமுண்டோ?—கம்பரும்
காதைக்கு உகையெழுதக்
காலம் மிகுந்திருந்தால்
ஏதுவொன்று செய்தற்கு
இடம்.

இத்தகைய பெரியாரிடம் ஆறு ஆண்டுகள் நெருங்கி நன்கு பழகினேன். இவர்தம் பல நற்பண்புகள் என்மீது படிந்தன. இவர்தம் அரும்பணிகளை நினைவு கூரும் வண்ணம் அடியேனது இந்த நூலை கைலை' வாசியான இவர்தம் இணையடிகளில் வைத்து வணங்கி பெறுதற் கரிய பேறு பெற்றவனாக மகிழ்கின்றேன். இந்தநூல் அவர் அருமைத் துணைவி திருமதி மரகதவல்லி அம்மை யாரின் திருக் கைகளில் சேர்கின்றது.

இந்த நூலிலுள்ள கட்டுரைகளை எழுதவும், சிலவற்றை 'சப்தகிரியில்' வெளிவரவும், அனைத்தையும் தொகுத்து நூல் வடிவாக வெளி வரவும் அருள் புரிந்து அடியேனின் இதயத்தில் நிரந்தரமாக எழுந்தருளி அடியேனைத் 'தீதில் நன்னெறியில் இயக்கிவரும் வேங்கடம் மேவிய விளக்கினை மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்கி சரண் அடைகின்றேன்.

நோற்றேன் பல்பிறவி
　　நுன்னைக்காண்பதோர் ஆசையினால்
ஏற்றேன் இம்பிறப்பே
　　இடருற்றனன் எம்பெருமான்
கோல்தேன் பாய்ந்தொழுகும்
　　குளிர்சோலைசூழ் வேங்கடவா!
ஆற்றேன் வந்தடைந்தேன்
　　அடியேனைஆட் கொண்டருளே[7]

—திருமங்கையாழ்வார்

'வேங்கடம்'
AD-13 (பிளாட் 3354)
அண்ணாநகர்
சென்னை-6000 40
மே 20. 1992

ந. சுப்பு ரெட்டியார்

தொ. பே : 6211583

---

7. பெரி.திரு. 1.9 : 8

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | சிறப்புப் பாயிரமாலை | vii |
| | அணிந்துரை | xi |
| | நூல் முகம். | xviii |
| 1. | சங்ககால (வட) வேங்கடம்-(1) | 1 |
| 2. | சங்ககால (வட) வேங்கடம்-(2) | 20 |
| 3. | (வட) வேங்கடத்தை ஆண்ட அரசர்கள் | 31 |
| 4. | இன்றைய திருவேங்கடம் | 45 |
| 5. | நாலாயிரமும் திருவேங்கடமும் | 72 |
| 6. | வேங்கடம்—மாலவனுக்கா? வேலவனுக்கா? | 82 |
| 7. | முதலாழ்வார்கள் காட்டும் திருமலைக் காட்சிகள் | 96 |
| 8. | பக்திசாரர் கருத்தில் திருவேங்கடம் | 108 |
| 9. | குலசேகரப் பெருமாள் காட்டும் திருவேங்கடம் | 120 |
| 10. | ஆண்டாளும் திருவேங்கடமுடையானும் | 131 |
| 11. | மங்கை மன்னன் கருத்தில் வேங்கடம் | 143 |
| 12. | சடகோபன் சிந்தையில் திருவேங்கடம் | 165 |

13. திவ்விய கவி காட்டும் திருமலைக் காட்சிகள் 201

14. திவ்வியகவியின் கருத்தில் வேங்கடவாணன் 214

15. முத்தமிழ்க் கவியின் சிந்தனையில்] திருவேங்கடம் 232

16. கம்பன் கருத்தில் திருவேங்கடம் 248

17. கம்பராமன் கருத்தில் திருவேங்கடம் 261

18. திருவேங்கடவன் மாலையில் வேங்கடேசன் 273

பின்னிணைப்புகள் :

1. பயன்பட்ட துணை நூல்கள் 284

2. பொருட்குறிப்பு அடைவு 287

3. பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்கள் 293

# 1. சங்ககால (வட) வேங்கடம் - (1)*

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்

என்பது 'தமிழ் கூறும் நல்லுலகத்தை' இனங்காட்டும் தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் இயற்றிய சிறப்புப் பாயிரப் பகுதி. ஈண்டுத் 'தென் குமரி' என்பது 'குமரி யாறு' கடல்கோள் கொண்டது என்பது நச்சினார்க்கினியரின் விளக்கம். ஆனால் 'வடவேங்கடம்' என்பது என்ன? இதைப்பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம். இதற்குச் சங்க இலக்கியங்களில் வரும் வேங்கடத்தைப்பற்றிய குறிப்புகளை வைத்து ஆராயின் உண்மையொளி தட்டுப்படும்.

**சங்க இலக்கியக் குறிப்புகள்:** சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை இவற்றில் உள்ள வேங்கடத்தைப்பற்றிய குறிப்புகளையும், எட்டுத்தொகையில் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை போன்ற நூல்களில் உள்ள வேங்கடத்தைப் பற்றிய குறிப்புகளையும் வைத்து ஆராய்ந்தால் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் வருணனைகள், இன்று நாம் வேங்கடத்தில் காணும் காட்சிகட்கு முற்றிலும் வேறுபட்டனவாக இருப்பதைக் காணலாம். புறப்பொருள்

*''சப்தகிரியில்'' (அக்டோபர்-1989) வெளி வந்தது.

வெண்பாமாலையிலும் சங்கமருவிய நூலாகிய சிலப்பதிகாரத்திலும் வேங்கடத்தைப்பற்றிய பல குறிப்புகள் காணப்பெறுகின்றன.

கண்ணனார் பாடியுள்ள அகப்பாடலில் 'வேங்கட நெடு வரை' என்ற தொடர் காணப்பெறுகின்றது. இச் சொற்றொடர் 'நீண்டமலைத் தொடர்' என்ற பொருளில் வருகின்றது. தலைமகன் பிரிவினால் வேறு பட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்திக் கூறியதாக அமைந்தது இப்பாடல். இதில் வேங்கடத்தைப்பற்றி வரும் பகுதி இது:

''சாரல்
ஈன்றுநாள் உலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்
வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை
நன்னாட் பூத்த நாகிள வேங்கை
நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தின் நாறுசினை யிருந்து
துணைப்பயிர்ந் தகவும் துனைதரு தண்கார்,
வருதும் யாம்எனத் தேற்றிய
பருவம் காண்;அது பாயின்றால் மழையே''

—அகம் : 85

[உலந்த - கழிந்த; பிடி - பெண்யானை; யானை-களிறு; தருபு - கொணர்ந்து; நாகு இள-மிக இளைய; வீ - பூக்கள்; மஞ்ஞை - மயில்; நனை-தேனையுடைய; நாறு சினை - நறுமணம் வீசும் கிளை; பயிர்ந்து-அழைத்து; அகவும்-கூப்பிடும்; துனைதரு-விரைந்து வரும்; தண் - குளிர்ந்த; பாயின்று-வரா நின்றது.]

ஈன்று அணிமை கழிந்த மெல்லிய நடைவாய்ந்த பெண் யானையும் அதன் கன்றும் பசியால் வாடுகின்றன. இப்பசியைப் போக்குவதற்குப் பசிய கண்ணினையுடைய ஆண் யானை மூங்கிலின் முற்றாத முளையினைக் கொண்டு உண்பிக்கும். இத்தகைய மலைச் சாரலையுடையது திரையனது வேங்கடமலை. அந்த நெடுவரையில் நல்ல நாட்காலையில் மலர்ந்த வேங்கை மரத்தின் நறிய பூக்களின் துகளை அளைந்து தேனையுடைய பசிய குருந்த மரத்தின் நறுமணம் வீசும் கிளையிலிருந்து கொண்டு பொறிவரி மஞ்ஞை தன் துணையை அகவி அழைக்கும். இது நடைபெறுவது குளிர்ந்த கார்ப்பருவத்தில். இதுதான் தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற பருவம். அதற்கேற்றவாறு மழையும் பரவி நிற்கின்றது. இதனைக் காண்பாயாக'' என்று கூறித் தலைவியைத் தேற்றுகின்றாள் தோழி.

நக்கீரர்பெருமான் தம் பாடலில் இந்த மலையை 'நெடுவரைப் பிறங்கிய வேங்கட வைப்பு' என்று குறிப்பிடுவர். இவர் பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்ததாகப் பாடியுள்ளார். பொருள்வயிற் பிரிந்த தலைவன் சென்ற சுரநெறியைக் குறிப்பிடுங்கால் வேங்கடமலைபற்றிய குறிப்பு வருகின்றது

பல்பொறிப்
புலிக்கேழ் உற்ற பூவிடைப் பெருஞ்சினை
நரந்த நறும்பூ நாண்மலர் உதிரக்
கலைப்பாய்ந்து உகளும் கல்சேர் வேங்கைத்
தேங்கமழ் நெடுவரைப் பிறங்கிய
வேங்கட வைப்பிற் சுரன் இறந்தோரே.

—அகம்-141

[பொறி - புள்ளிகள்; புலிக்கேழ்-புலியின் நிறம்; நரந்தம்-நாரத்தை மரம்; நாள்மலர் - புதிய பூக்கள்; கலை-முசுக்கலை; உகளும் - தாவும்; தேம் கமழ் - தேன நாறும்; பிறங்கிய - விளங்கிய; வேங்கடவைப்பு - வேங்கடமலை; சுரன் இறந்தோர்-சுர நெறியைக் கடந்து சென்றோர்.]

என்ற பாடற் பகுதியில் இக்குறிப்பினைக் காணலாம். வேங்கை மரத்தின் பூக்கள் பல புள்ளிகளையுடைய புலியின் நிறத்தையொப்பக் கீழே உதிர்ந்து கிடக்கின்றன. வேங்கை மரங்களின் இடையே நாரத்தை மரங்களும் காணப்பெறுகின்றன. இவற்றினிடையே முசுக்கலைகள் பாய்ந்து தாவுவதால் நாரத்தையின் புதிய மலர்கள் உதிர்கின்றன. இத்தகைய சூழ்நிலையும் தேன் நாறும் இடங்களையும் கொண்டது வேங்கட வைப்பு என்று நமக்குக் காட்டுவார் கவிஞர் பெருமான்.

மாமூலனார் என்ற செந்நாப்புலவர் ''கோடுயர் பிறங்கல் குன்று பல நீந்தி தேன் தூங்கு உயர்வரை நன்னாட்டு உம்பர் வேங்கடம்'' என்று வேங்கடத்தைக் காட்டுவர். இவர் பாடல் 'பொருள் தேடும்பொருட்டு வேற்றுப் புலம் அடைந்த தலைவன் விரைந்து திரும்பி விடுவான் என்று கூறித் தலைவனது பிரிவால் வருந்தும் தலைவியைத் தோழி தேற்றுவதாக' அமைந்துள்ளது.

'கோடுயர் பிறங்கல் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரிய
இதைச்சுவற் கலித்த ஈரிலை நெடுந்தோட்டுக்
கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி
கவட்டடிப் பொருத பல்சினை உதிர்வை
அகன்கட் பாறைச் செவ்வயிற் றெறீஇ
வரியணி பணைத்தோள் வார்செவித் தன்னையர்

பண்ணை வெண்பழத் தரிசி ஏய்ப்பச்
சுழல்மரஞ் சொலித்த சுழகலை வெண்காழ்
தொடிமாண் உலக்கை ஊழிற் போக்கி
உரல்முகம் காட்டிய சுரைநிறை கொள்ளை
ஆங்கண் இருஞ்சுனை நீரொடு முகவாக்
கழிபடு குழிசிக் கல்லடுப் பேற்றி
இணர்ததை கடுக்கை ஈண்டிய தாதிற்
குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீஇங் நெடுமொழிப் புல்லி
தேன்தூங்கு உயிர்வரை நன்னாட்டு உம்பர்
வேங்கடம் இறந்தனர் ஆயினும் ஆண்டவர்
நீடலர்'

—அகம்-393

[கோடு-சிகரம்; பிறங்கல்-பாறை; புலம்-நாடு; ஆறு-வழி; வம்பலர் - புதியர்; காய்பசி - மிக்க பசி; இதை சுவல்-புதுக் கொல்லை; கலித்த-தழைத்த; கவர்த்த அடி-பிளவுபட்ட குளம்பு; தெறீஇ-குவித்து; வார் செவி - நீண்ட செவி; தன்னையர்-தாய்மார்; பண்ணை-ஒருவகைக் கீரை; வெண்காழ்-வெள்ளிய அரிசி; ஊழில் போக்கி-முறையாகச் செலுத்தி; சுரை - உரலின்குழி; களிபடு - மண்ணால் செய்த; குழிசி - பானை; இணர்-கொத்து; கடுக்கை-கொன்றை; குடவர்-இடையர்; புன்கம்-சோறு; பகுக்கும்-அளிக்கும்; நெடுமொழி-மிக்க புகழையுடைய; தேன் தூங்கு-தேன் இறால் தொங்கும்; உம்பர்-அப்பாற்பட்ட; இறந்தனர் - கடந்து சென்றனர்; ஆண்டு-ஆங்கண்; நீண்டலர்-தாழ்ந்திருப்பார் அல்லர்]

இதில் பொருள்தேடும் பொருட்டுச் சென்ற தலைவன் புல்லி என்பானது நாட்டைக் கடந்து சென்றான் என்று குறிப்பிடும் மாமூலனார் புல்லி ஆண்ட நாட்டைப்பற்றிக்

கூறுகின்றார். சிகரம் உயர்ந்த பாறைகளையுடைய மலைகள் பலவற்றைச் கடந்து செல்லுகின்றான் தலைவன். வழியில் காடு திருத்திய மேட்டு நிலமாகிய புதுக்கொல்லையில் வரகின் கதிர்கள் தட்டைகளுடன் கொய்து குவிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒரு பகுதியின்மீது மாடுகளைவிட்டுத் துவைக்கப் பெற்றதால் உதிர்ந்த வரகு மணிகள் அகன்ற பாறையின்மீது செவ்விய இடத்தில் குவிக்கப் பெற்றுள்ளன. அந்த வரகினைத் தாய்மார்கள் உரலில் போட்டுத் தீட்டி அரிசியைச் சுளகினால் புடைத்துப் பிரிக்கின்றனர். அந்த அரிசியை மண் பானையில் பெய்து கற்களை அடுக்கி அமைத்த அடுப்பின்மீது அப்பானையை ஏற்றிச் சோறாக்கி அச்சோற்றை நல்ல பசும்பாலுடன் கூட்டி வழங்குவர். அதற்கேற்றவாறு அந்நாட்டில் கறவைப் பசுக்கள் மலிந்து காணப்பெறுகின்றன. அங்குள்ள மலைகளின் இடுக்குகளில் தேன் கூடுகள் தொங்குகின்றன. இத்தகைய நாட்டைக் கடந்து தலைவன் சென்றனனாயினும் அங்கிருந்து திரும்புவதில் காலம் தாழ்த்த மாட்டான் என்று குறிப்படுகின்றார் புலவர் பெருமான்.

கல்லாடனார் என்ற சங்கப்புலவரும் வேங்கட மலையைக் 'காம்புடை நெடுவரை' என்று குறிப்பிடுவர். இதுவும் 'யாதோ ஒரு நிமித்தத்தின் பொருட்டுத் தலைவன் பிரிவுற்றதனால் வேறுபட்ட தலைமகளைத் தோழி தேற்றுவதாக' அமைந்த பாடலாகும். இப்பாடலில் தலைவன் பிரிந்து சென்ற இடத்தைக் குறிப்பிடும்,

''அவரே
மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்
அறையிறந் தகன்றனர் ஆயினும் நிறையிறந்து
உள்ளா ராதலோ அரிதே.''

—அகம். 209

[அவர்-தலைவர்; மால்-பெரிய; காம்பு-மூங்கில்; நெடுவரை - நீண்ட சாரல்; அறை-குன்றுகள்; இறந்து-கடந்து; உள்ளார்-நினையார்.]

என்ற பகுதியில் 'வேங்கடமலை' குறிப்பிடப் பெற்றுள்ளதைக் காணலாம்.

**ஆய்வு :** இனி, இந்த நான்கு சங்கப் புலவர்களும் கையாண்டுள்ள வேங்கடம்பற்றிய சொற்றொடர்களைச் சிந்தித்து ஆய்வோம். பிற்கால இலக்கியம் போலன்றி சங்க இலக்கியத்தில் அதிகமான கற்பனையின்றிக் கவிஞர்கள் இயற்கையை வருணித்திருப்பர் என்பதை நாம் அறிவோம். வரம்பிகந்து உயர்வு நவிற்சியாகக் கூறப் பெறும் இடங்களைச் சங்கப் பாடல்களில் யாங்கணும் காண்டல் அரிது என்பதும் நாம் அறிந்ததேயாகும். மேலே குறிப்பிட்ட நான்கு பாடல்களிலும், சாதாரணமாகக் கவிஞர்களிடம் காணப்பெறும் கற்பனைகூட இல்லை. மலைகளைக் கடந்து செல்லல் மட்டிலும் **'குன்றுபல நீந்தி'** என்று கற்பனை நயம் தோன்றக் கூறப்பெற்றுள்ளதேயன்றி, பிற செய்திகள் உள்ளது உள்ளவாறே இயம்பப்பெற்றிருத்தலைத் காணலாம். ஈண்டு **'வரை'** என்பது **'கோடு'** அல்லது **'வரம்பு'** என்று பொருள்படும் சொல்லாகும். இச்சொல்லுக்கு **'மலை'** என்ற பொதுப் பொருளும் பொருந்தலாம். ஆயினும் **'வரை', 'நெடுவரை', 'நெடுவரைப் பிறங்கிய வேங்கட வைப்பு'** என்ற சொல், சொற்றொடர்களைக் கூர்ந்து நோக்குங்கால் இவற்றால் குறிக்கப்பெறுவது **'மலை'** என்ற பொதுப் பொருள் மட்டும் அன்று என்பதும், அது குறிப்பிட்ட ஒரு வகையைச் சேர்ந்த மலைத் தொடர்களைக் குறிப்பிடுகின்றது என்பதும் புலனாகும். **'நெடுவரை'** என்பது **'குன்று'** அல்லது **'குன்றம்'** என்பதனின்றும் பெரிதும் வேறுபட்டது. பிற்கால இலக்கியங்கள் இச்சொற்களைக் குழம்பிய நிலையில் தாறுமாறாகக்

கையாண்டமையால் இன்றைய வழக்கில் அவை "ஒரு பொருட் பன்மொழிகளாக' வழங்கி வருகின்றன. எ-டு 'சிங்கவேள் குன்றம் என்று திருமங்கை மன்னன் கையாண்டிருப்பதைக் காண்க. ஒன்றோடொன்று ஒழுங்கற்ற நெருங்கிய நிலையில் இன்று நாம் காணும் திருப்பதி மலையைக் '**குன்றம்**' அல்லது '**குன்று**' என்று கூறலாம். வேண்டுமானால் '**மலை**' என்ற பொதுப் பெயராகவுப் சொல்லி வைக்கலாம். ஆயின், எவ்வாற்றா னும் அதை '**நெடுவரை**' என்று சொல்லுவதற்கில்லை. இதனால்தான் மகாகவி பாரதியார் '**மாலவன் குன்றம்**' என்று கூறினார் போலும்!

மேற்கூறிய வருணனை விவரங்களைக் கைவிட்டா லும், திருப்பதி மலையை '**வடவேங்கடம்**' என்று இனம் கண்டு கொள்வதில் மேலும் ஓர் இடர்ப்பாடு உண்டா கின்றது. தமிழகத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள ஒரு சிறிய இடத்தை அதன் இருகடல்கட்கும் இடையே நீண்டு கிடக்கும் நிலப் பகுதியின் வட எல்லையாகக் கூறுதல் யாங்ஙனம் பொருந்தும்? இதனைப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் இங்ஙனம் கூறுவதன் பொருந்தாமையை முன்னரே நன்கு உணர்ந்து தம்முடைய நூலில் இங்ஙனம் கூறுவர்:"தமிழர் களின் தலைசிறந்த இலக்கணமாகத் திகழ்வது தொல்காப் பியம் ஆகும். இது காலத்தால் மிகவும் முற்பட்ட நூல். இதில் தமிழகத்தின் எல்லை கூறப்பெற்றுள்ளது. இதில் வட எல்லையாக வேங்கடமும் தென் எல்லையாகக் குமரியும் கூறப்பெற்றுள்ளன (இக்கட்டுரையின் தொடக் கத்தில் காட்டப்பெற்றுள்ள நூற்பாப் பகுதி). அக் காலத்தில் மேற்கிலும் கிழக்கிலும் கடல்களே தமிழகத்தின் எல்லைகளாக அமைந்திருந்தன. ஆகவே, '**வடவேங்கடம்**'

1. A History of Tirupati - Part-I

என்று அடிக்கடிக் கூறுவதே ஒரு மரபாகிவிட்டது. இதைத் தெளிவாக உணர வேண்டுமாயின், வேங்கடத்தைப்பற்றி இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் இடங்களைக் கூர்ந்து நோக்கிப் பொருள் காண்டல் வேண்டும். ஒருவர் வடக்கிலுள்ள வேங்கடத்தைக் கடந்து சென்றால் அப்பகுதிகளில் மக்கள் பேசும் மொழி முற்றிலும் வேறுபட்டிருக்கும் என்ற போக்கிலேயே அவ்விடங்கள் குறிப்பிடப்பெற்றிருப்பதை அறியலாம். சங்க இலக்கியங்களில் **''மொழி பெயர் தேஎம்''** *(எ.டு. குறுந். 11; ஐங்குறு-321; அகம்-67 முதலியவை காண்க)* என்ற தொடர் எங்கணும் பெருவழக்காக ஆளப்பெற்றிருப்பதினின்றும் இதனைத் தெளியலாம். ஆகவே, அக்காலத்தில் தமிழர்கட்கு நன்கு பழக்கமுடைய திருப்பதி மலையையே **'வேங்கடம்'** என்ற பெயரால் குறித்தனர் என்று கருதலாம். இது நாளடைவில் கிட்டத்தட்ட ஓர் எல்லைக் குறியாகவே (Land Mark) அமைந்துவிட்டது. இதனைக் கடந்து அப்பாற் சென்றால் அங்கு மக்களிடம் தமிழ் பேச்சு வழக்கில் இல்லாததை அறியலாம்.''[2] பிறிதோர் இடத்தில் அப்பேராசிரியர் தமது இதே நூலில் ''வட எல்லையின் மிக முக்கியமான எல்லைக் குறியாக இருப்பது 'வேங்கடம்' என்பதற்கு ஐயமில்லை'' என்பதாகக் கூறியிருப்பதும் சிந்திக்கத் தக்கது.[3]

**பேராசிரியர் அய்யங்கார் அவர்களின் தவறான ஊகம் :** பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் மேற்குறிப்பிட்ட வேங்கடத்தின் வருணனையைச் சங்க காலத்து வேங்கடத்தைக் குறிப்பதாகவே கொண்டுள்ளார்கள். ஆயினும் அவர்,

2. A History of Tirupati-pp. 4,5 Part-I
3. ஷை-p. 7

"தாழா அது
உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமாண்நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுந்திய அம்பினர் பலர்உடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயருங்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
பழகுவ ராதலோ அரிதே முனாஅது
முழவுறழ் திணிதோள் நெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்னநின்
ஒண்கேழ் வனமுலைப் பொலிந்த
நுண்பூண் ஆகம் பொருந்துதல் மறந்தே"

—அகம்-61

[சிலைக்கும் - ஒலிக்கும்; நோன்ஞாண் - வலிய நாண்; சிலை-வில்; அருநிறம்-அரிய மார்பு; கோடு-கொம்பு; நறவு-கள்; அயரும் - சிறப்புச் செய்யும்; விழவு-திருவிழா; முனா அது - மிகப் பழமை வாய்ந்த; முழவு உறழ் - முழவினை யொத்த; பொதினி-பழநி; ஒண்கேழ்-ஒளி விளங் கும்; ஆகம் - மார்பு; பழகுவராதல் - பயின்று தங்குதல்]

என்ற பகுதியிலுள்ள **'விழவுடை விழுச்சீர் வேங்கடம்'** என்ற சொற்றொடரை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு முழுவதும் சமய சம்பந்தமான விழாக்கள் மலிந்தது வேங்கடம் என்று கூறுவர். இதனால் அங்கு திருக்கோயில் இருந்தமை பெறப்படுகின்றது என்றும், அதனை மையமாகக் கொண்டே விழாக்கள் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்றும் ஊகம் செய்ய வழி அமைகிறதாகச் செப்புவர். ஆனாலும், இதனைக் கொண்டு கோயிலின்

இருப்பைக் கொள்வதற்குச் சிறந்த ஆதாரம் ஆகாது என்பதனையும் ஒப்புக்கொள்வர்''.[4]

**ஊக்கத்திற்கு மறுப்பு:** பேராசிரியர் அய்யங்கார் அவர்களின் ஊகமான முடிவில் சாரம் இருப்பதாகத் தோன்றவில்லை. சங்கப் பாடல்களை ஆழ்ந்து கற்போர் விழவினைக் குறிப்பிடும் பல பாடல்களைக் காண்பர். கிட்டத் தட்ட தமிழகத்திலுள்ள எல்லாச் சிற்றூர்களும் விழவு மலிந்திருந்தனவாகவே கூறப்பெற்றுள்ளன. ஆண்டு தோறும் வரும் விழாக்கள், பருவந்தோறும் வரும் விழாக்கள், சமூக சமய தொழில் அரசியல் பற்றிய பல்வேறு விழாக்கள் ஆண்டுதோறும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதைச் சங்கப் பாடல்களில் கண்டு மகிழலாம்.

''வதுவை விழவிற் புதுவோர்க் கெல்லாம்''

—புறம்-372

என்ற புறப்பாட்டடியால் திருமண விழாக்களும்,

''மூந்நீர் விழவின் நெடியோன்''

—புறம்-9

என்பதனால் கடல் தெய்வத்திற்கெடுக்கப்பட்ட விழாக்களும் கூறப்பெற்றிருப்பதைக் காணலாம். ஆற்றில் வெள்ளம் பெருகி வருங்கால் மக்கள் அதில் நீராடிப் 'புதுப் புனல் விழவு' கொண்டாடல் பரிபாடலில்[5] குறிப்பிடப் பெற்றிருப்பதைக் காணலாம். புறநானூற்றில் அரசியல் அல்லது போர் விழாக்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

---

4. ஷை—p. 4

5. பரிபாடல் — (6, 7, 10, 11, 12, 16), இவை வையைப் பற்றிய பாடல்கள்.

"பேரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே
கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்"

—புற-84

[என்னை - தலைவன்; பேரூர் - பெரிய ஊர்; விழிவு-போர் செய்தற்கெடுத்த விழா.]

என்ற அடிகளில் இத்தகைய விழாக்கள் குறிப்பிடப் பெற்றிருத்தலைக் காணலாம்.

குறுந்தொகையிலும் விழாவினைப்பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன. "விழவு முதலாட்டி" (குறுந்-10) என்ற சொற்றொடரைக் காண்க. இது தலைவி இல்லறம் நிகழ்த்த வந்த பின்பே தலைவனுக்குச் செல்வம் உண்டாயிற்று என்பதைத் தெரிவிக்கின்றது.

'உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயும்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே...
...............................................
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும்இவ் வூரே"

—குறுந்-295

என்ற பாடலாலும் தலைவி வந்த பிறகே விழவு அயர்தற்குரிய செல்வ நிலை தலைவனுக்கு உண்டாயிற்று என்பதனைக் காணலாம்.

"காதலர் உழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொள் ஊரின் புகல்வேன்"

—குறுந்-41

[சாறு-விழா]

இதில் தலைவன் தலைவியுடன் இருத்தலால் விழாக் கொண்ட ஊரினர் மகிழ்வதைப்போல அவள் மகிழ்கின்றாள் என்ற குறிப்பினைக் காணலாம்.

''இலங்குவளை நெகிழச் சாஅ யானே
உளனே வாழி தோழி சாரல்
தழையணி அல்குல் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டவென் நலனே''

—குறுந்-125

மேற்கூறிய கருத்து இப்பாடலிலும் வருதல் காண்க.

இங்ஙனம் ஊர்கள் ஆண்டுதோறும் விழாக்களுடன் பொலிந்தனவாகக் கூறுதல் சங்கப் பாடல்களின் மரபாகத் திகழ்வதைக் காணலாம். அகநானூற்றில் வரும்,

''அழியா விழவின் அஞ்சு வரு மூதூர்''

—அகம்-115

[அழியா விழவு-என்றும் நீங்காத விழா]

என்ற அடியும், புறநானூற்றில் வரும்

''மடியா விழவின் யாணர் நன்னாட்டு''

[மடியா = நீங்காத]

என்ற அடியும் ஆண்டு முழுவதும் விழா நீங்காத ஊர் என்று குறிப்பிடுதலைக் காணலாம். இந்த விழாப்பற்றிய குறிப்பு,

''வேறுவே றுயர்ந்த முதுவாய் ஒக்கல்
சாறுஅயர் மூதூர் சென்றுதொக் காங்கு''

—பட்டின-அடி. 214-215

[சாறு-விழா]

என்று பட்டினப் பாலையிலும்,

நீறுஅடங்கு தெருவின் சாறுஅயர் மூதூர்

—சிறுபாண்-அடி-201

என்று சிறுபாணாற்றுப்படையிலும் வருகின்றது. சிற்றூர்களும் விழாவினால் பொலிந்தனவாகக் குறிப்புகள் உள்ளன.

"விழவும்,
அகலு ளாங்கண் சீறூர்"

—புறம்-65

என்ற புறப்பாட்டுக் குறிப்பினையும் காண்க. ஒவ்வோர் இல்லமும் விழவுடன் பொலிந்ததாகவும் குறிப்பு உள்ளது.

"மாடந் தோறும் மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே"

—புறம்-33

[மைவிடை-செம்மறிக்கிடா]

என்பதனால் இதனை அறியலாம். இங்ஙனம் இல்லந் தோறும், ஊர்தோறும், நாடு முழுவதும் விழாக்கள் மலிந்திருந்த செய்தியைச் சங்கப் பாடல்களில் காணலாம்.

எனவே, விழாபற்றிய குறிப்பு வேங்கடத்திற்கு மட்டிலும் சிறப்பாக அமையவில்லை என்பதனை அறிய வேண்டும். அன்றியும், பேராசிரியர் அய்யங்கார் அவர்கள் காட்டிய பாடலில் (அகம்-61) இவ்விழாக்கள் சமயச் சார்புடையவை என்பதற்கு யாதொரு சான்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, சங்க காலத்தில் சமயத்தின் அடிப்படையாகவோ வேறு காரணம் கருதியோ திருப்பதி

புகழடைந்திருந்தது என்பதற்கு நம்பகமான சான்றுகள் இருப்பனவாகத் தெரியவில்லை.

**வேங்கடம்-பெயர் விளக்கம்:** சங்ககால வேங்கடத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அதாவது வடவேங்கடத்தைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு '**வேங்கடம்**' என்ற சொல்லின் பொருள் துணை செய்கின்றது. '**வேங்கடம்**' என்ற கூட்டுச் சொல் (Compound word) 'வேம்' 'கடம்' என்ற இரண்டு சொற்களாலாயது. வேம்+கடம்=வேங்கடம் என்றாயிற்று. 'கடம்' என்பது பாலை நிலத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

'பெயன் மழை துறந்த புலம்புறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் தூவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம்''

—குறுந்-174

[துறந்த - பொய்யா தொழிந்த; புலம்பு உறு-தனிமை மிக்க; கடம்-பாலை நிலம்; காய்விடு-காய் வெடிக்கும் பொழுது; கடுநொடி-கடிய ஒலி; துதை-நெருங்கிய; புறவு - புறாக்கள்; இரிக்கும்-நீங்கச் செயயும்]

என்ற குறுந்தொகைப் பாடலில் '**கடம்**' என்ற சொல் பாலையைக் குறித்தமை காண்க. சிலப்பதிகாரத்திலும்,

''கடம்பல கிடந்த காடுடன் கழிந்து''

—சிலப். காடுகாண்-அடி 90

[கடம்-காட்டகத்து நெறி]

என்ற அடியிலுள்ள 'கடம்' பாலை நிலத்து வழியினைக் குறிக்கின்றதைக் காண்க. 'கடம்' என்பதற்கு உரையாசி

ரியர் 'அருஞ்சுரம்' என்று பொருள் கூறுவர். பிங்கலந்தை 'கடம்' என்பதனை 'மலைச்சாரல்' என்று கூறும்.

> ''புறவணி கொண்ட பூநாறு கடத்திடை''
>
> —நற்-48

என்ற நற்றிணை அடியில் 'கடம்' என்பது 'புதர்கள் அடர்த்த காடு' என்ற பொருளில் வந்துள்ளது. 'வேம்' என்பது 'எரிதல்' என்ற பொருளையுடையது. எனவே, 'வேங்கடம்' என்பது 'கொதிக்கின்ற நீரற்ற சுரம் அல்லது மலைச்சாரல்' என்று பொருள் பட்டுப் பாலை நிலத்தைக் குறிக்கின்றது. கலித்தொகையிலும்,

> ''வெவ்விடைச் செலன்மாலை
> ஒழுக்கத்தீர்! இவ்விடை
> ..................................
> அன்னார் இருவரைக்
> காணிரோ? பெரும!
> காணோம் அல்லேம்
> கண்டனம் கடத்திடை;
> ஆண் எழில் அண்ணலோடு
> அருஞ்சுரம் முன்னிய''
>
> —கலி-9

என்ற பாடற்பகுதியிலுள்ள 'கடம்' என்றே சொல் 'பாலை நிலம்' என்ற பொருளிலேயே வருகின்றது. இனி, தமிழ் கூறு நல்லுலகத்திற்கு வடக்கேயுள்ள நிலப்பகுதியின் இயல்பினைக் காணோம்.

**பேராசிரியர் அய்யங்கார் குறிப்பு:** இந்த நிலப் பகுதியின் இயல்பினை இவ்வாறு தம் நூலில் குறிப்பிடுவர்: ''கிழக்கு மலைத்தொடர்கள் தமிழகத்தின் வட எல்லையில் கடற்கரை ஓரமாகச் சென்று கிருஷ்ணை நதியைத்

தாண்டியதும் பல இணைத் தொடர்களாகப் பிரிந்து செல்லுகின்றன. அவற்றுள் கிருஷ்ணை நதிக்குத் தென் பாலுள்ள தொடர்களில் தென் திசையை நோக்கி சென்னைக்கு 13 வடகுறுக்கை (North Latitude) நீண்டு செல்லும் மூன்று இணைத் தொடர்கள் எடுப்பாகப் புலனாகின்றன. அவற்றுள் கடற்கரைக்கு அண்மையிலுள்ள தொடர் கிட்டத்தட்ட நேராகச் செல்லும் ஒரே தொடராக அமைந்துள்ளது. இரண்டாவது தொடர் ஒழுங்கற்ற முறையில் அமைந்த குன்றங்களின் தொகுதியாகும். அவையும் கிருஷ்ணை நதியை ஒட்டித் தொடங்கிக் கர்நூலுக்குக்கீழ்ப்பகுதியில் சென்று கடப்பை மாவட்டத்தில் அரைவட்ட வடிவமான பகுதியில் சிதறிக் கிடக்கின்றன. அவற்றுள் ஒரு பகுதி **'சேஷாசல மலைகள்'** என வழங்கப்பெறுகின்றன. ஆயினும் மேற்குறிப்பிட்ட மூன்று தொடர்களில் முக்கியமானத் தொடர், தென் திசையில் மேலும் கடற்கரையை நோக்கிச் சென்று சென்னைக்கு வடக்கில் சில மைல்கள் தொலைவிலுள்ள பொன்னேரி வரையிலும் பரவியுள்ளது. மேலும் ஒழுங்கற்ற நிலையிலும் தாழ்வான உயரத்திலும் உள்ள இன்னொரு தொடர் கர்நாடக பீடபூமியின் அடிப்பகுதியினின்றும் தொடங்கி, வட திசையாகச் சென்று அனந்தபுரம், கர்நூல் மாவட்டங்களில் சிதறிய நிலையில் அமைந்துகிடக்கின்றது. இவற்றுள் நடுப்பகுதியில் அமைந்துள்ள மலைக் கூட்டங்கள் கர்நூல் மாவட்டத்தில் **'நல்ல மலைகள்'** (நலகொண்ட) என வழங்குகின்றன. அவை அங்கிருந்து தென் திசையை நோக்கிச் சென்று ஓர் ஒற்றைத்தொடர் வடிவத்தில் திருப்பதி, காளத்தி இவற்றின் அருகிலுள்ள மலைக்கூட்டங்களைச் சந்திப்பதுபோல் அமைந்துள்ளன. ஆகவே, இந்த மலைகள் சென்னைக்கு அரைப்பாகை (Degree) வடக்கில் ஓர் எல்லைப்புறம் போல் அமைந்துள்ளன. பொன்னேரி அருகிலுள்ள கடற்கரைவரையிலும் கீழ்த்திசையை நோக்கி நீண்டு பரவி

தமிழகத்தின் எடுப்பான வடபுற எல்லைபோல் அமைந்து கிடக்கின்றன''

மிகப் பழங்காலத்தில், இன்று விசாகப்பட்டினத்தருகில் கடல் இருப்பதுபோல், கிழக்குப் பக்கத்தில் மலைகட்கு அருகில் அஃது இருந்தது. இன்று கிழக்குப் பக்கத்தில் கடலுக்கும் மலைகட்கும் இடையிலுள்ள குறுகலான கடற்கரைப்பகுதி தொல்காப்பிய காலத்திற்கு 2,500 அல்லது 3,000 ஆண்டுகட்குப் பிறகு புதிதாக உண்டாகியிருத்தல் வேண்டும்; அல்லது இன்றுள்ள கடற்கரைக்குக் கிழக்கிலிருந்த மலைகளைக் கடல் விழுங்கியிருத்தல் வேண்டும். கிழக்குக் கடற்கரையிலும் மேற்குக் கடற்கரையிலுமுள்ள கற்பாறைகளைக் கடல் அடித்துச் சென்றது என்பது சிறுகாக்கைப் பாடினியாரின் பாடற்பகுதியால் உறுதியாகின்றது. கடலுக்கும் மலைக்கும் நேரிட்ட போரினைக் கற்பனை நயந்தோன்றக் கூறும் பாடற்பகுதி இது:

''வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்திசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொறாது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே''

இதில் வடதிசைக்கண் ஆந்திர நாடு வரம்பாகக் கூறப் பெற்றிருப்பதைக் காணலாம்

வடக்கில் கிருஷ்ணை நதிக்கும் துங்கபத்திரை நதிக்கும் வடபெண்ணை நதிக்கும் சற்றுத் தெற்கில் குன்றுகளும் மலைத்தொடர்களும் சூழ்ந்த நிலப்பகுதி தென்னிந்தியாவில் மிக வெப்பமான பகுதியாகத் திகழ்வதை இன்றும் காணலாம். சுற்றுப்புறத்திலுள்ள கற்பாறைகளிலிருந்து அதிகரிக்கப்பெற்றுப் பரவும் கோடைக்காலக்

கதிரவனின் வெப்பம் 120°லிருந்து 125°F வரையிலும் எட்டுகின்றது. இப்பகுதிகளில் கதிரவனின் வெப்பத் தாக்குதலால் மரிப்பவர்களைப்பற்றியும் நாம் அடிக்கடிக் கேள்விப்படுகின்றோம். கோடைக்காலத்தில் மக்கள் பெரும்பாலும் பகல் நேரத்தில் இல்லத்தைவிட்டு வெளிக் கிளம்புவதில்லை. நம் உடலிலுள்ள ஈரம் வெப்பமான காற்றினால் உறிஞ்சப்பெறுவதால் நண்பகலில் வறட்சி மேலிட்டு உடலில் ஒருவித எரிச்சல் தோன்றுவதை உணர் கின்றோம். ஆகவே, வறண்ட தன்மையுடைய இப்பகுதி சங்க நூல்களில் குறிப்பிடப்பெறும் **'வேங்கடம்'** என்ற நாட்டுப் பகுதியைப் பெரும்பாலும் ஒத்திருப்பதை அறிய லாம். அண்மைக் காலத்தில் ஏற்பட்ட இருப்பூர் திப்பாதை களின் காரணமாக இப்பகுதியிலுள்ள ஒரு சில நகரங் களைத் தவிர, ஏனைய பகுதிகள் யாவும் இன்றும் பிற் போக்குத் தன்மையுடையனவாக இருப்பதையே காண்கி றோம். அண்மைக்காலம் வரையில் இப்பகுதி கிட்டதட்ட ஆண்டு தோறும் வற்கடத்தாலும் கொள்ளை நோய்களா லும் பீடிக்கப் பெற்றிருந்தது. ஏதோ மழைக்காலத்தில் இப் பகுதியிலுள்ள ஆறுகளிலும் ஓடைகளிலும் வெள்ளம் பெருகிவழிந்தாலும் சமவெளிப்பகுதியைவிட அது மிகவும் தாழ்ந்திருப்பதால் ஆறுகள் பாசனத்திற்குப் பெரும்பாலும் பயன்படுவதில்லை. ஆயினும், தற்காலத்தில் சிறு சிறு அணைகளை அமைத்து நீர்த்தேகத்தை உண்டாக்கும் திட்டங்களால் இப்பகுதியைச் சார்ந்த பெரும்பாலான இடங்கள் கணிசமான அளவுக்கு மாற்றங்கள் அடைந்து வருகின்றன. நாடு விடுதலை அடைந்த பிறகு இப்பகுதி யில் நல்ல முன்னேற்றங்களைக் காணலாம்.

# 2. சங்ககால (வட) வேங்கடம் - (2)*

தமிழ் கூறும் நல்லுலகிற்கு வடபால் உள்ள நாட்டுப் பகுதியும் மேலே குறிப்பிட்ட சங்ககாலத்து வேங்கட நாட்டுப் பகுதியும் இயற்கையமைப்பிலுப் தட்பவெப்ப நிலைகளிலும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் காணப்படு கின்றன. அகப்பாட்டில் கூறப்பெற்றுள்ள இப்பகுதியின் இயற்கையமைப்பினைக் காண்போம்.

''நிலநீ ரற்று நீள்சுனை வறப்பக்
குன்றுகோ டகையக் கடுங்கதிர் தெறுதலின்
என்றூழ் நீடிய வேய்படு நனந்தலை
நிலவுநிற மருப்பிற் பெருபகை சேர்த்தி
வேங்கை வென்ற வெருவரு பணைத்தோள்
ஓங்கல் யானை உயங்கிமதம் தேம்பிப்
பன்மர ஒருசிறைப் பிடியொடு வதியும்
கல்லுடை அதர கானம் நீந்திக்
கடல்நீர் உப்பின் கணஞ்சால் உமணர்
உயங்குபக டுயிர்ப்ப அசைஇ முரம்பிடித்து
அகலிடம் குளித்த அகல்வாய்க் கூவல்
ஆறுசெல் வம்பலர் அசைவிட ஊறும்
புடையலங் கழற்கால் புல்லி''

—அகம்-295

---

* சப்தகிரி (திசம்பர்-1989)யில் வெளி வந்தது.

[வறப்ப - வரட்சியையுடைய; அகைய - எரிய; நீடிய-மிக்க; நனந்தலை-அகன்ற இடம்; மருப்பு-கொம்பு; வேங்கை-வேங்கைப்புலி; வெருவரு-அச்சந்தரும்; உயங்கி-வருந்தி; தேம்பி-வாடி; சிறை-பக்கம்; அதர-நெறிகளையுடைய; பகடு-எருது; உயிர்ப்ப-இளைப்பாற; நீந்தி-கடந்து; முரம்பு-வன்னிலம்; குழித்த-தோண்டின; கூவல்-கிணறு; வம்பலர்-புதியர்; அசைவிட - தளர்ச்சி நீங்க; புடையல்-கலிக்கின்ற]

என்ற பாடலில் நாட்டின் இயற்கையமைப்பு கூறப் பெறுகின்றது. எங்கும் நிலம் நீரின்றிக் கிடக்கின்றது. மலைச்சுனைகள் யாவற்றிலும் நீர்வற்றி விட்டது. காய் கதிர்ச் செல்வனிடமிருந்து கனன்று வரும் கதிர்கள் குன்றுகளின் உச்சியில் நெருப்பைக் கக்குகின்றன. அகன்ற பக்க மலைகளில் மூங்கில்கள் காய்ந்து கரிகின்றன. வேங்கைப் புலிகளையும் கொல்லும் திறம் வாய்ந்த மாபெரும் களிறுகள் தம்முடைய பெரிய துதிக்கைகளை நிலவுகிற மருப்புகளில் சுற்றிக் கொண்டு ஆற்றலிழந்து தளர்ந்த நிலையில் தம் பிடிகளுடன் அங்குமிங்கும் இலைகளினிடைக் காணப் பெறும் மரங்களின் நிழல்களில் தங்கிக் கிடக்கின்றன. உப்பு மூட்டைகளை ஏற்றியுள்ள வண்டிகளுடன் செல்லும் உமணர்கள் எருதுகளை வண்டிகளினின்றும் அவிழ்த்து இளைப்பாற விடுகின்றனர். வன்னிலத்தை இடித்து அகன்ற இடத்தில் தோண்டப்பெற்ற கிணறுகளில் வழிப் போக்கர்களின் நீர்விடாயைத் தீர்க்கும் அளவுக்குக்கூட நீர் ஊறுவதில்லை. குன்றுகளையுடைய இத்தகைய புல்லி நாட்டில் மக்கள் செல்லுவதற்கே அஞ்சுகின்றனர்.

இன்றும் அந்நிலையே காணப்பெறுகின்றது. பதினேழு ஆண்டுகட்கு முன்னர் (1974) கூடூருக்கருகிலுள்ள வித்யாநகர்க் கல்லூரிக்குப் பல்கலைக்கழகப் பணியாகச் சென்றிருந்தபொழுது உப்பு விற்கும் உமணர்களைக்

கண்டேன். அவர்கள் குடிசைகளை அமைத்துக் கொண்டு தங்கியிருந்ததையும் பார்த்தேன். இன்று அப்பகுதியில் வேங்கைகளும் யானைகளும் காணப்பெறுவதில்லை. அவற்றிற்குப் பதிலாக காட்டுப் பன்றிகளும், நரிகளும் அப்பகுதியில் அலைந்து திரிகின்றன. நொடியுள்ள காட்டு நெறிகளில் மாட்டு வண்டிகள் வித்தைகள் செய்வதுபோல் எழுந்தும் விழுந்தும் செல்லும் காட்சிகளைக் காணலாம். நாடு விடுதலை பெற்ற பிறகு சில பகுதிகளிலுள்ள நெறிகளில் மண்சாலைகள் அமைக்கப் பெற்றுள்ளன.

தொண்டையர் ஆட்சிக்குக் கீழிருந்த நாட்டுப் பகுதியும் மேற்கூறப்பெற்ற புல்லி ஆண்ட பகுதியை விடச் சிறப்பாகவுள்ளது என்று சொல்லுவதற்கில்லை. இப்பகுதி பற்றிய

''நிழற்கவின் இழந்த நீரில் நீளிடை
அழலவிர் அருஞ்சுரம் நெடிய வென்னாது''

—அகம்-213

[கவின்-அழகிய; நீர்இல்-நீர்இல்லாத; நீள் இடை-நீண்ட இடம்; அழல்-நெருப்பு]

என்ற அகநானூற்று அடிகளால் இது நீரற்ற வரண்ட இடம் என்றும், மரநிழல் இன்றி நெருப்பைக் கக்குவதாக நீண்டு வளைந்த நெறிகளையுடையதாகவும் உள்ளது என்றும் அறிகின்றோம். இன்னொரு அகப்பாடலின்

''பயந்தலை பெயர்த்து மாதிரம் வெம்ப''

—அகம்-311

[பயம்-நீர்; தலைபெயர்த்து-நீங்கி; மாதிரம்-திசை; வெம்பு-கொதிக்க]

என்ற அடியால் அப்பகுதியின் எல்லாப் பக்கங்களிலும் நீர் வரண்டு வெப்பத்தால் கொதிக்கின்றது என்பது தெரிகின்றது.

விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
தண்கதிர் திகிரி உருளிய குறைத்த
அறைஇறந் தவரோ சென்றனர்

—அகம்-281

[உருளிய - தடையின்றிச் செல்ல; குறைத்த- போழ்த்து வழியாக்கின; அறை-பாறை]

என்ற அகப்பாட்டடிகள் கவிதை நயந்தோன்ற இப்பகுதியினை வருணிக்கின்றன. காய்கதிர்ச் செல்வனாகிய திகிரி தான் செல்வதற்கு வழி அமைக்கும்பொருட்டு பனியையுடைய சிகரங்களின் தலை துணித்து விட்டதாகக் கூறப்பெறுகின்றது. இன்னும் இரண்டு பாடல்கள் இப்பகுதியை, ''கோடுகொள் அருஞ்சுரம்'' (அகம்-263) என்றும் ''அருஞ்சுரக்கவலை'' (அகம்-359) என்றும் குறிப்பிடுகின்றன. இப்பகுதியினைப் பற்றிக் கூறும் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகைப் பாடல்கள் யாவும் பாலைத்திணை பற்றியனவாகவே இருத்தல் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. இவை ஏதோ ஒரு முறையில் பாலைக்கூறுகளில் ஒன்றினைக் குறிப்பிடுவனாகவே அமைந்து உள்ளன.

இந்த வேங்கடப் பகுதியில் செழிப்பான இடங்களே இல்லை என்று கூற முடியாது. புறநானூற்றுப் பாடலொன்றில் கல்லாடனார் என்ற புலவர்,

''தண்துளி பலபொழிந்து எழிலி இசைக்கும்
விண்டு வனைய விண்தோய் பிறங்கல்
முகடுற உயர்ந்த நெல்லின்...
.......... ........... ..........
வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென

—புறம்-391

என்ற புறப்பாட்டடிகளால் வானம் பொய்க்காது மழை பொழிதலால் மலை போன்ற நெற்குவியலை விளைத்த வேங்கடத்தின் வடபுறப்பகுதி வற்கடத்தால் தாக்குண்டு கிடக்கின்றது என்று கூறுவதினின்றும் இதனை அறியலாம். ஒருகால் இப்பகுதி மேற்குத் தொடர்ச்சி மலையை யொட்டிய ஒன்றோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. கர்நாடகப்பகுதியை யொட்டியுள்ள வளமான இந்துப்பூர், இலேபாக்சி என்ற பகுதிகளை இது குறிப்பதாகவும் கொள்ளலாம். செழிப்புள்ளவைகளாக இருப்பினும் இப்பகுதிகளில் சில சமயம் வற்கடமும் தோன்றுகின்றது.

**வடவேங்கடம் இன்னதென்பது:** இதுகாறும் கூறியவற்றால் 'வடவேங்கடம்' இன்னதென ஓரளவு வரையறை செய்ய முடிகின்றது. தமிழ்கூறு நல்லுலகத்திற்கு வடதிசையில் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரை வரையிலுமுள்ள நீண்டமலைத் தொடர்கள், பொறுக்க முடியாத வெப்பத்துடன் கூடிய காடுகள், சுவடுகள் இவற்றுடன் கூடிய குன்றுகள், சிறு குன்றுகள் அடங்கிய பகுதியே சங்க நூல்களில் குறிப்பிடப் பெறும் '**வடவேங்கடம்**' என்பது தெளிவாகின்றது. இப் பகுதி மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரை வரை தொடர்பு அறாத வட எல்லையாக அமைந்திருப்பதால் அது '**வடவேங்கடம்**' என்ற பெயருடன் வழங்கிற்று. தொல்காப்பியப் பாயிரமாக அமைந்த பனம்பாரனார் நூற்பாவில் 'வடவேங்கடமும் தென் குமரி' என்ற தொடரிலுள்ள 'வடவேங்கடமும்' ஏனைய சங்க நூல்களில் குறிப்பிடப் பெற்றுள்ள 'வேங்கடமும்' இப்பகுதியையே குறிக்கின்றது என்பதை உறுதியாக அறுதியிடலாம்.

இந்த வேங்கடத்தின் சரியான எல்லைகளை வரையறை செய்து காட்டுவதற்கேற்ற போதுமான சான்றுகள் இல்லை என்பது உண்மையே. ஆயினும் கிடைத்த அள

வுள்ள சான்றுகளைக்கொண்டு கிட்டத்தட்ட அதன் எல்லைகளை ஓரளவு அறிந்து கொள்ளலாம். ஓங்கோல் வட்டத்தில் (இப்போது அது பிரகாசம் வட்டமாயிற்று)[1] கிருஷ்ணை நதிக்கருகிலுள்ள நாட்டின் வடபகுதியை புறநானூற்றில் குறிப்பிடப்பெற்றுள்ள **'நுங்கன்'** என்ற பெயராலும் பட்டத்தாலும் வழங்கிய அரசர்கள் ஆண்டு வந்ததை முன் குறிப்பிட்டேன் அல்லவா? வேங்கடம் என்ற பகுதி வடதிசையில் கிருஷ்ணை நதி வரையிலுமோ அல்லது ஓங்கோலுக்குத் தெற்கில் கிருஷ்ணை நதிக்கும் வடபெண்ணைக்கும் இடையிலுள்ள பகுதியின் பாதி வரையிலுமோ பரவியுள்ள பகுதிதான் என்பதை நிறுவுவதற்கு இக்கருத்து அடிப்படையாக அமைகின்றது. **'வேங்கடம்'** என்ற இப்பகுதி கிழக்குக் கடற்கரையின் அருகில் திருப்பதி மலைக்கு **'வேங்கடம்'** என்ற பெயர் அமைந்திருந்தலே ஒரு சான்றாக அமைகின்றது. சங்க இலக்கியங்களில் வெப்பம் மிக்க பகுதியாகக் குறிப்பிடப்பெறும் வேங்கடத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது அப்பகுதியின் ஓரத்திலோ இம்மலை இருந்திராவிடில் சிறந்த தமிழறிஞர்களாகத் திகழ்ந்த முதலாழ்வார்கள் இம்மலையை **'வேங்கடம்'** என்று வழங்கியிரார். இவர்கள் பாடல்களில் சங்க இலக்கியச் சாயலும் நெறியும் நிழலிடுவதை நாம் நன்கு அறிவோம்.

சோணாட்டின் வட எல்லையில் கிழக்குப் பகுதியில் தொடங்குகின்றது இத்திருப்பதி மலை. இதிலிருந்து

1. வெள்ளைக்காரர்கள் நாட்டை ஆண்டகாலத்தில் ஊர்ப்பெயரையொட்டி மாவட்டப் பெயர் அமைத்தது இது நிர்வாகத்திற்கும் பிறவற்றிற்கும் வசதியாகக் இருந்தது. இக்காலத்தில் கட்சி அரசியலில் போட்டி போட்டுக் கொண்டு ஊர்ப்பெயர்கள் ஆள் பெயர்களாக மாற்றப் பெற்று வருகின்றன. இது குழப்பத்தை விளைவிப்பதைத்தவிர வேறு பயன்காண்டற்கில்லை. மக்களிடையே ஏதோ ஒரு விதமாகக் உணர்வை உண்டாக்குகிறது.

வேங்கடம் என்ற பகுதி பாண்டிநாட்டின் வட எல்லை யாக நீண்டு மேற்குக் கடற்கரையை எட்டுகின்றது.

"...............வடவயின்
வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை
மறப்போர் பாண்டியர் அறத்திற் காக்கும்

—அகம்-27

என்ற அகப்பாடற்பகுதி பாண்டிய அரசன் இந்த வேங்க டம் உள்ள திசையினின்றும் வேழங்களைக் கொண்டான் என்று குறிப்பிடுகின்றது.

"நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட்டு உள்ளதை
அயிரியாறு இறந்தன ராயினும் மயரிறந்து
உள்ளுப தில்ல"

—அகம்-253

[பேர்இசை - பெரும்புகழ்; எருமை - ஓர் ஊர்: உள்ளதை-உள்ளதாகில்; அயிரி-ஓர் ஆறு; இறந் தனர்-கடந்து சென்றனர்; மயர்இறந்து-மறவி யற்று; உள்ளுப-நினைப்பர்]

என்ற இன்னோர் அகப்பாட்டின் பகுதி கர்நாடகத் திலுள்ள அயிரி என்ற ஆற்றைக் கடந்து சென்று பாலை நிலத்தை அடைந்தனனாகக் குறிப்பிடுகின்றது. அயிரியாற் றிற்கு அப்பாலுள்ள பகுதி பாலை நிலம் அல்லது வேங் கடம் என்பதாக இப்பாடல் வெளிப்படையாகக் குறிப் பிடாவிடினும், அஃது அத்தகைய நிலம் என்பதாக நினைக் கச் செய்கின்றது. ஆயினும்,

''கழைஅமல் சிலம்பின் வழைதலை வாடக்
கதிர்கதங் கற்ற ஏகல் நெறியிடைப்
பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇக்
கான மஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை
அயிரியாற் றடைகரை வயிரின் நரலும்

—அகம்-177

[கழை-மூங்கில்; அமல்-நிறைந்த; சிலம்பு-பக்க மலை; வழை-சுரபுன்னை; தலை-உச்சி; கதிர்-(ஞாயிற்றின்) கதிர்; கதம்-சினம்; ஏகல்-பெருகிய கற்கள்; நசைஇ-விரும்பி; வயிர்-ஊதுகொம்பு; நரலும்-ஒலிக்கும்]

என்ற இன்னொரு பாடற்பகுதி இதனைத் தெளிவாக்கு கின்றது. இதில் இன்னொரு தலைவன் அயிரியாற்றைக் கடந்து காடுகளுக்கு அப்பால் செல்லுகிறான். அவன் செல்லும் நெறியிலுள்ள பக்க மலைகளில் மூங்கில்கள் நிறைந்துள்ளன. அங்குள்ள வெப்பத்தினால் சுரபுன்னை வாடிக் கரிந்த நிலையிலுள்ளது. வழியிலுள்ள கற்குவியல்கள் கதிரவனின் வெப்பத்தை ஏற்று அதனை எல்லாப் பக்கங்களிலும் பரப்புகின்றன. இந்த அயிரியாற்றைத் துங்கபத்திரையின் உபநதியாகக் கொள்வர் டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள்[2]. இந்நதி கன்னடத்தில் 'ஹேகரி' என வழங்குகின்றது.) இந்தத் துணை நதி மேற்குத் தொடர்ச்சி மலையின் கீழ்ப்பகுதியில் உற்பத்தியாகிக் கர்நாடகப்பகுதியின் வடஎல்லை வழியாகப் பாய்கின்றது. இங்ஙனம் கிழக்குக் கடற்கரையில் தொடங்கும் வேங்கடம் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம் வரையில் நீண்டு செல்லுகின்றது. இம்மலையைக் கடந்து சென்றால் மேற்கிலுள்ள கடல் தென்படும்.

---

2. A History of Tirupati Part - II

**எருமை நாடு:** இனி, மேலே சுட்டிய அகப்பாட்டில் (அகம் 253) குறிப்பிட்ட எருமை நன்னாடு இன்னதென்ன அறிந்து கொள்வது இன்றியமையாததாகின்றது. மைசூரில் கிடைத்த கன்னடக் கல்வெட்டுகளாலும் (E. C. Car Vol. X Ch. 20) அதே இடத்தில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுகளாலும் (AR for 1907 Part I) எருமை நன்னாடு என்பது கர்நாடக மாநிலம் ஆகும் என்று அறியக்கிடக்கின்றது.[3]

தமிழில் எருமை (விலங்கு) என்பது வடமொழியில் மகிஷம் என வழங்கும். புராணக் கதைப்படி மகிஷாசுரன் என்பவன் நாட்டில் பேரழிவினை ஏற்படுத்திய மாபெரும் அசுரனாவான். அரசரின் அரண்மனைக்கருகிலுள்ள சாமுண்டி மலையிள்ள சாமுண்டீஸ்வரி என்ற தேவதை அந்த அசுரனைக்கொன்று நாட்டைத் தீங்குகளினின்றும் மீட்டுவித்ததாகக் கதை. அந்த நகர் மகிஷாசுரனின் ஆட்சியின் கீழிருந்தால் மகிஷாசுரனூர் என்று வழங்கி வந்தது. இது வெள்ளைக்காரரால் மைசூர் என வழங்கப்பெற்று அப்பெயரே அம்மாநிலத்தின் பெயராகவும் நிலைத்து விட்டது. அண்மையில் அம்மாநில அரசு, அதனை அதன் பழம் பெரும் பெயராகிய கர்நாடகம் என வழங்கச் சட்டமும் இயற்றியதை[4] நன்கு அறிவோம். எனவே, மகிஷம் என்பது பழைய பெயராகிய 'எருமை' என்பதன் மொழிபெயர்ப்பாகும் என்பதை நாம் அறிதல் வேண்டும். இடைக்காலத்தில் அப்பெயருக்குப் புராண வழக்கும் ஏற்பட்டுச் சமயச் சார்பும் உண்டாயிற்று.

---

3. புறம்-273. ஔவை துரைசாமி பிள்ளை உரை கண்டு தெளிக.

4. நாடு விடுதலை அடைந்த பிறகு திருவாங்கூர் கேரளம் ஆயிற்று; தெலுங்கு நாடு ஆந்திரம் ஆயிற்று; சென்னை மாநிலம் தமிழ்நாடு ஆயிற்று.

சங்ககாலத்தில் அந்நாட்டிற்கு 'எருமை நன்னாடு' என்று வழங்கியதை அகநானூற்றால் (அகம்-253) அறிகின்றோம்.

"நாரறி நறவின் எருமை யூரன்"

—அகம்-35

"எருமை குடநாடு"

—அகம்-115

என்ற சங்ககால வழக்காறுகள் இதனை உறுதிப்படுத்தும்; இவை சங்ககாலத்தில் மைசூருக்கு வழங்கப்பெற்ற பெயர்களாகும். இவற்றுள் 'எருமை குட நாடு' என்ற தொடர் கவனத்திற்குரியது. தொல்காப்பியம் என்ற தொல்லிலக்கணப்படி செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தில் செந்தமிழ்மொழி வழங்கி வந்தது. உரையாசிரியர்கள் இந்த நாடுகளின் பெயர்களையும் கூறியுள்ளனர்.

தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்ற நன்னூல் விருத்தியுரையில் (நூற்பா-273) காணப்பெறும் வெண்பா இப்பன்னிரு நாட்டின் பெயர்களையும் குறிப்பிடுவதை அறியலாம். இவற்றுள் 'குட நாடு' என்ற பெயர் 'மேற்கு நாடு' என்று பொருள் தரும் தொடராகும். கேரளமும் கர்நாடகமும்-தமிழகத்தின் மேற்குத் திசையில் உள்ளவை. ஆகவே, குடநாடு என்பது இந்த இரண்டும் சேர்ந்த நாட்டையோ அல்லது தனித்தனியாக இவற்றுள் ஒன்றையோ குறிப்பிடும் தொடர் என்றாகின்றது. எனவே, சேரர் குடநாட்டினின்றும் பிரித்தறிவதற்காகவே 'எருமை குடநாடு' என்ற தொடர் வழங்கப்

பெற்றது என்பதை நாம் அறிதல் வேண்டும். இவ்வாறு தொல்காப்பியர் காலத்திலேயே மைசூர் பன்னிரு நாடுகளில் ஒன்றாக அமைந்து தமிழ் வழக்கும் பெற்றது. இக்காலத்தில் இங்கும் கேரளத்திலும் செந்தமிழ் பயின்று வந்தது. சங்ககாலத்திலும்கூட மைசூர்ப் பகுதியில் செந்தமிழ் வழங்கலாயிற்று என்ற உண்மை இந்நாட்டை பற்றிய பாடல்களைச் சங்க இலக்கியங்களில் சேர்க்கப் பெற்றமையால் அறியக்கிடக்கின்றது புறநானூற்றுப் பாடல்களும் (புறம்-273, 303) அகநானூற்றுப் பாடலும் (அகம்-72) எருமை வெளியனாராலும் இன்னொரு பாடல் (அகம்-72) அவர் திருக்குமாரர் எருமை வெளியனார் மகனார் கடலனார் என்பவராலும் பாடப் பெற்றமை இவ்வுண்மைக்கு மேலும் அரணாக அமைகின்றது. தொல்காப்பியர் காலத்தில் இப்பகுதியில் பயின்று வந்த செந்தமிழ் காலப்போக்கில், பல நூற்றாண்டுகளில், கன்னடமாக மாறியது. இவ்வரலாற்றை நினைந்தே பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் தமது மனோன்மணீயத்தில் தமிழ்த் தாய் வாழ்த்தில் 'கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும், உன் உதரத்து உதித்து எழுந்து ஒன்று பல ஆயிடினும்' என்று பாடி வைத்தார் என்று கருதலாம்.

இதுகாறும் கூறியவற்றால் தொல்காப்பியர் காலத்தில் மைசூர்ப்பகுதி (தற்காலக் கர்நாடகம்) தமிழ் கூறு நல்லுலகத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது என்பதனையும், அதன் வட எல்லையில் அயிரியாற்றினை அடுத்து **'வடவேங்கடம்'** இருந்தது என்பதனையும், அறிகின்றோம். ஆகவே தமிழ்கூறு நல்லுலகத்தின் வட எல்லையாக வழங்கிய 'வேங்கடம்' (வடவேங்கடம்) தென்னிந்தியத் தீப கற்பகத்தின் வடக்குப் பகுதியில் கீழ்க் கோடியிலிருந்து மேற்கோடி வரை பரவியிருந்த பகுதியாகும் என்பதனைத் தெளிவாக அறிகின்றோம்.

# 3. (வட)வேங்கடத்தை ஆண்ட அரசர்கள்*

**வேங்கடப்** பகுதியை ஆண்ட அரசர்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் ஒரு சில குறிப்புகளால் அறிந்து கொள்ள முடிகின்றது. எட்டுத்தொகை நூல்களாகிய அகநானூற்றிலும் புல்லி என்ற ஓர் அரசன் குறிப்பிடப் பெறுகின்றான். பத்துப்பாட்டில் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப் படையாலும், அகநானூற்றாலும் **திரையன்** என்ற ஓர் அரசனைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன புறநானூறு **ஆதனுங்கன்** என்ற ஓர் அரச குறிப்பிடுகின்றது. இந்த மூன்று அரசர்களைப்பற்றியும் சங்க நூல்களில் அறியக்கிடக்கும் செய்திகளைக் கோவைப் படுத்தி ஒரு வரலாறு காண முடிகின்றது.

**புல்லி**: இவன் தமிழகத்தின் வட எல்லையாக விளங்கும் வடவேங்கடத்தையும் அதனைச் சூழ்ந்த நாடுகளையும் ஆண்ட ஓர் அரசன். புல்லி ஆண்ட நல்ல நாட்டைக் கடந்தால் வடுகு மொழி வழங்கும் வடுகர் நாடு வந்துறும் என அறியக்கிடப்பதால், தமிழகத்தின் வடஎல்லையைக் காத்து நின்றவன் இப்புல்லி எனக் கூறுதல் தவறாகாது.

''புடையலங் கழற்கால் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்

* சப்தகிரி (செப்டம்பர்-1988)யில் வெளிவந்தது.

பிழியார் மகிழர் கலிசிறந்து ஆர்க்கும்
மொழிபெயர் தேஎம்''

அகம்—295

[புடையல்-ஒலிக்கின்ற; நடைஅறா- செல்லற்கு அரிய; விலங்கி-கடந்து; நோன்சிலை-வலிய வில்; பகழி-அம்பு; பிழி-கள்; கலி-செருக்கு; மொழி பெயர்-வேற்று மொழி வழங்கும்; தேஎம்-தேசம்]

என்ற அகப்பாட்டடிகளால் இது தெளிவாகின்றது. இப் புல்லி என்பான் கள்வர் இனத்தாரின் தலைவனாவான். சங்க காலத்திற்குப் பிறகு தமிழகத்தின் அரசியல் அமைதி யைக் குலைத்து நாட்டைப் பாழாக்கிய களப்பிரர் என்ற இனத்தாரையும் கள்வர் குலத்தவராகவே கருதுவர் சில வரலாற்று ஆய்வாளர்கள். தென்னவர் என வழங்கப் பெறும் பாண்டியர் கள்வர் தலைவராவர் என்றும், அப் பாண்டியர் படைக்குப் பயன்பெறும் யானைகள் யாவும் கள்வர் தலைவனாகிய புல்லி என்பான் வாழும் வேங்கடத் தினின்றே வந்தன என்றும் அகப்பாடல்களால் அறியக் கிடக்கின்றன

ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்;
ஏவல் இளையர் தலைவன்; மேவார்
அருங்குறும் பெறிந்த ஆற்றலொடு பருந்துபடப்
பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக்
கெடா நல்லிசைத் தென்னன்.

—அகம்-342

[ஆ-பசு; அருங்குறும்பு-அரிய அரண்; படு-வந்து கூடும்; செரு-போர்; செல்-இடி; இசை-புகழ் தென்னன்-பாண்டியன்].

''வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை
மறப்போர் பாண்டியர்.''

—அகம்-27

என்ற மதுரைக் கணக்காயனாரின் கூற்றுகளால் மேற் கண்ட செய்திகளை அறியலாம். இதனால் யாதோ ஒரு வகையால் புல்லி பாண்டியர் குலத்தோடு தொடர்புடைய வனாதல் தெரிகின்றது. புல்லி ஆண்ட வேங்கட நாடு வேழங்கள் மலிந்த நாடு; வேங்கடத்தில் கொண்ட வெங் கோட்டு யானைகளையுடையது பாண்டியர் படை என்று மதுரைக் கணக்காயர்கூறுவதையும் காணலாம்.

புல்லி ஆண்ட நாட்டைச் சார்ந்த வீரர்கள் தாம் வாங்கும் பொருள்களுக்கெல்லாம் யானைகளையும் யானைக் கோடுகளையுமே விலையாகக் கொடுப்பர். இந்த வீரர்கள் தம் நாட்டையடுத்த காட்டினுள் புகுந்து பெண் யானைகள் வருந்துமாறு அவற்றின் கன்றுகளைக் கைப்பற்றுவர். அவற்றை வெண்கடம்ப மரக்கிளையினின் றும் உரித்தெடுத்த நாரால் ஆன கயிற்றால் கட்டிக் கொணர்ந்து, தம் ஊரிலுள்ள கள்ளுக்கடைகளின் வாயிலி டத்தே தாம் உண்ட கள்ளின் விலையாகக் கட்டிப் போவர்.

> கறையடி மடப்பிடி கானத் தலறக்
> களிற்றுக்கன் றொழித்த உவகையர் கலிசிறந்து
> கருங்கால் மாஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து
> பெரும்பொளி வெண்ணார் அழுந்துபடப் பூட்டி
> நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
> நறவுகொடை நல்லில் புதவுமுதற் பிணிக்கும்
> கல்லா இளையர் பெருமகன் புல்லி.
>
> —அகம்-83

[கறை-உரல்; பிடி-பெண் யானை; ஒழித்த-பிரித் துக் கொண்ட; கலி-செருக்கு; கருங்கால் மரம்- கடம்பமரம்; கொழுகொம்பு - வளவியகிளை; பெரும்பொளி-பெரிதாக உரித்த; வெள் நார்- வெள்ளிய நார்; பூட்டி-கட்டி; நுடங்கும்-அசை

யும்; நியமம்-அங்காடி; நறவு-கள்; கொடை-விற்கும்; புதவுமுதல்-வாயில்].

என்ற கல்லாடனார் பாட்டால் இதனை யறியலாம்.

வீரர்களின் செயலோடு வீரர்களின் தலைவனாகிய புல்லியின் செயலையும் அறிந்து கொள்ள விழைவது இயல்பேயன்றோ? மாமூலனார் கூறுவதைக் கேட்போம்:

''உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வயக்கிய மாவண் புல்லி''

—அகம்-61

[உரும்-இடி; சிலைக்கும்-ஒலிக்கும்; நோன்ஞாண்-வலிய நாண்; வன்சிலை-வலியவில்; நிறம்-மார்பு; அண்ணல்-தலைமை வாய்ந்த; கோடு-கொம்பு; நறவு-கள்; நொடை-விற்ற; நாள்மகிழ் அயரும்-நாளோலக்கச் சிறப்புச் செய்யும்; மழபுலம்-மழவரது புலம்].

வீரர் பலருடன் புல்லி கானகம் சென்று களிறு வேட்டையாடி, அவற்றின் வெண்கோடுகளைக் கொணர்ந்து அககோடுகளையும் அவற்றை விற்றுப் பெற்ற நெல்லையும் நாளவைக்கண் தன்னைப் பாடி வரும் பரிசிலர்க்கு ஈந்து இன்பம் அடைவான். இங்ஙனம் இவர்களது செயலால் பிடியினை இழந்த களிறும், களிற்றினை இழந்த பிடியும் அழுது கூப்பிடும் பேரொலி அம்மலையகத்தே மாறாது ஒலிக்கும் ஒன்று. புலவர்கள் அவனது நாட்டைப் புகழ்ந்து பேசுவர் (நற்றிணை-14).

வேழம் வீழ்த்தும் வன்கண்மையுடையாரது செயல்களைக் கூறிய சங்கப் புலவர்கள் வலக்கை இடக்கை அறியாத ஆயர்களின் செயல்களையும் புலப்படுத்தியுள்ளனர்.

"கோடுயர் பிறங்கல் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரிய
.............................................
குடவர் புழுக்கிய பொன்கவிழ் புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி"

—அகம்-393

[கோடு-சிகரம்; பிறங்கல்-பாறை; புலம்-நாடு; படர்ந்த-அடைந்த; வம்பலர்-புதியர்; காய்பசி-மிக்க பசி; தீரிய-ஒழிய; குடவர்-இடையர்; புழுக்கிய-ஆக்கிய; புன்கம்-சோறு; பகுக்கும்-அளிக்கும்; நிரை-பசுக்கூட்டம்; குழீஇய-மிகப் பெற்ற].

என்ற மாமூலனார் பாடலில் அந்நாட்டு ஆயர் தம் நாடு நோக்கி வருவாரை விருந்தாக ஏற்று வரகு அரிசியால் அட்ட சோற்றை ஆவின் பாலோடு கூட்டி அவர்கட்கு அளித்து வரு விருந்து பார்த்திருக்கும் பண்புடையாளர் என்று போற்றியுரைக்கின்றார். அவரே இன்னொரு பாடலில் கூறுவதையும் கேட்போம்:

"பயந்தலைப் பெயர்ந்து மாதிரம் வெம்ப
வருவழி வம்பலர் பேணிக் கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நன்னாடு"

—அகம்-31

[பயம்-நீர்; பெயர்த்து-அற்று; மாதிரம்-திசைகள்; வெம்ப-கொதிக்க; வம்பலர்-புதியர் (வழிப் போக்கர்); கோவலர்-இடையர்; மழவிடை-இளைய எருது; தீம்புளி-இனிய புளிச்சோறு; செவியிடை-(பசியால்) காதடைப்பு; பகுக்கும் அளிக்கும்].

பொருள் வயிற்பிரிந்து செல்லும் புதியர் கோடையின் வெம்மையால் நீர் நிலைகள் எல்லாம் வற்றிப்போன நிலையில், தம் நாட்டின் வழியாகச் செல்லுங்கால் எருது களின் கழுத்தில் கட்டி வைத்த புளிச்சோற்றைத் தேக் கிலையில் வைத்துத் தருவர் என்று ஆயர்களின் விருந்தோம் பும் பண்பினை எடுத்துக் கூறுவர்.

இங்ஙனம் வீரரும் ஆயரும் கலந்து வாழும் வேங்கட நன்னாடாண்ட இரவலர்க்கு இல்லை என்னாது ஈயும் வண்மையும், அதனால் வளமார்ந்த புகழும் உடைய வனாய்த் திகழ்ந்தான். அத்தகையவன் அவன் என்று அறிந்த புலவர் பெருமக்கள் அவனைப் பெருகப் பாராட் டினர்.

''பொய்யா நல்லிசை மாவன் புல்லி''

—அகம்-359

என்றும்,

''நெடுமொழிப் புல்லி'' —அகம்-393

என்றும் மாமூலனார் சுருங்கிய வாய்பாட்டால் பாடிப் போற்றுவதைக் கண்டு மகிழலாம்.

**திரையன் :** இவன் தமிழகத்துப் பேரரசர் மூவரோ டும் ஒருங்கு வைத்து மதிக்கத்தக்க மாண்புடையவன். ஆயி னும், இவன் குறுநில மன்னன் என்றே வழங்கப்பெறுவான் (தொல். பொருள் மரபு-83 பேராசிரியர் உரை காண்க) பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன்;

தொண்டைமான் இளந்திரையன் என வழங்கப்படுவான். கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாராட்டப் பெற்றவன். 'இளந்திரையனார்' என்று சங்கப்பாடல்களால் அறியத் தக்கவனும் இவ்வரசனே. இவன் கவியரங்கேறிய காவலன். இவன் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாடல்களும் (94, 99, 106) புறநானூற்றில் ஒருபாடலும் (185) காணப்பெறுகின்றன.

இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை; அந்நீர்த்
திரைதரு மரபின் உரவோன் உம்பல்
—பெரும்பாண் 29-31.

என்ற பெரும்பாணாற்றுப் படையின் அடிகளினால், இவன் முன்னோன் திரைகடல் வழியாகப் போந்து தொண்டை நாட்டுக்கு வேந்தனாயினான் என்றும், அவன் வழித்தோன்றல் இவன் என்றும் அறியலாம். வென்வேற்கிள்ளி என்ற சோழனுக்கும் நாக நாட்டு வேந்தன் மகள் பீலிவளை என்பாளுக்கும் பிறந்து, கடலில் கலமூர்ந்து வருங்கால் அது சிதைந்து போக இவன் திரையில் மிதந்து கரை அடைந்தான் என மணிமேகலையால் (24-ஆம் காதை) அறிய முடிகின்றது. பின்பு அவன் அக்காரணத்தால் திரையன் எனப்பட்டான். வேந்தன் மகன் என்றற்கு அடையாளமாகத் தொண்டைக் கொடி அணிந்திருந்ததுபற்றி அவன் தொண்டைமான் ஆயினான்.

இவன் ஆண்ட தொண்டை நாட்டுக்கு வடக்கெல்லை வேங்கடமாகும்.

"வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் ளருவி வேங்கடம்"
—அகம்-213

என்ற சான்றோர் கூற்றினால் இஃது அறியப்பெறும். இதற்குத் தென் எல்லை பெண்ணையாறும், மேல் எல்லை வடார்க்காட்டையும் சேலமா நாட்டையும் பிரிக்கும் சவ்வாது மலைத் தொடருமாகும் என்பது கல்வெட்டு களால் அறியக் கூடிய குறிப்பாகும்.

> "வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை"
>
> —அகம்-85

> "செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
> பல்பூங் கானல் பவத்திரி"
>
> —அகம்-340

என்ற குறிப்புகளால் இவன் வேங்கட நாடாண்ட விழுச் சிறப்புடையான் என்பதும், பூஞ்சோலை பல சூழ்ந்த **பவத்திரி** என்னும் ஊர் உடையான் என்பதும் இவனைப் பற்றி அறியத் தக்க செய்திகளாகும். 'பவத்திரி' என்னும் ஊர் கிழக்குக் கடற்கரையில் தற்காலக் கூடூருக்கு அருகில் உள்ளது.

இத்திரையன் தமிழ் மூவேந்தருள்ளும் "அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்" உடைமையாற் சிறந்தவன் என்றும், 'குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண், பகல் செய் மண்டிலம் பாரித் தாங்கு, முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டி னர்க்கருளி' மேம்பட்டவன் என்றும், 'புலவர் பூண்கட னாற்றிப் பகைவர், கடிமதிலெறிந்து குடுமி கொள்ளும், வென்றியல்லது வினையுடம்படினும், ஒன்றல் செல்லா' உரவோன் என்றும், அவன் நாட்டில் ஆறலைக்கள்வரும் பிற தீங்கு புரிவோரும் இலர் என்றும் பெரும்பாணாற்றுப் படை பெரிதாகப் பேசுகின்றது. மேலும் அப்பாடலால் அறியக் கூடிய செய்திகள் இவை: 'திருமாலை முதல்வ னாகக் கொண்ட குடியிற் பிறந்தவன்; திரைதருமரபின்

வழி வந்தவன். மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும் முரசு முழங்குதானை மூவேந்தரின் சிறப்புடையவன். 'நீர்ப்பேர்' என்னும் பெயருடையதொரு பேரூர் இவனுக்கு உரியது. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசோச்சிய பெருமகன் இவன். யானைகள் கொணரும் விறகினால் வேள்வி வேட்கும் அந்தணர் நிறைந்த வேங்கடமலையும் இவன் ஆட்சிக்குட்பட்டது' (பெரும் பாண் 29-37;319).

நல்லிசைப் புலவர் வரிசையில் சேர்ந்த பெருமை வாய்ந்த இவன் 'இளந்திரையம்' என்ற ஒரு நூல் இயற்றியவனென்று இறையனார் அகப் பொருளுரை, நன்னூல் மயிலைநாதர் உரை முதலியன தெரிவிக்கின்றன; நன்னூல் மயிலைநாதர் உரையில் (பக். 245) திரையனூர் என்பதற்குத் திரையனால் செய்யப்பட்ட ஊர், திரையனது ஊர் என்று பொருள் செய்திருத்தலின், இப்பெயருள்ள ஊர் ஒன்று பண்டைக் காலத்தில் இவனால் நிருமிக்கப் பெற்றதென்று அறியக் கிடக்கின்றது.

பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற் றிருந்த புல்விர்காள்! பாடுகோ
ஞாயிற் றொளியான் மதிநிழற்கே தொண்டையர்
கோவீற் றிருந்த கொடை.

வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது; மேலும்
சோழன் உறந்தைக் கரும்பினிது; தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது.

ஆழி யிழைப்பப் பகல்போம் இரவெல்லாம்
தோழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலை நாராய் திரையவோஒ வென்னும்
செறுமாலை சென்றடைந்த போது.

என்பவற்றால் இவன் பரம்பரையோருடைய பெருமை புலப்படும்.

செங்கோன்மையால் சிறப்புமிக்க இவன் ஆட்சியில் அளியும் தெறலும் எளிய முறையில் நடந்தன. இவனைப் பகைத்து மலைந்த மன்னர்களின் மன்றங்கள் பாழ் பட்டன; இவனை நயந்தவர் நாடுகள் நன்பொன்பூப்ப நலமிகுந்தோங்கின. நாடோறும் வேந்தர் பலரும் பல்வேறு வகையில் பணிந்து, 'நட்புக்கொள்ள வேண்டி நயந்திசி னோரும், துப்புக் கொள வேண்டித் துணையிலோரும், கல்வீழ் அருவி கடற்படர்ந்தாங்கு' இவன்பால் வந்த வண்ணம் இருந்தனர். இவர்கட்கு வேண்டுவனவற்றை அருளிய இப்பெருமகன் அரசியலின் செம்மை குறித்து அவர்கட்குச் சில அறிவுரைகளும் வழங்கினன். எ-டு, 'அரசியலை ஒரு சகடமாக உவமித்து, சகடத்தை உகைப் பவன் உகைக்குந் திறத்தை மாண்புற அறிந்தானாயின், அஃது இடையூறு சிறிதுமின்றி இனிது செல்லும்; அத்திறம் அறியானாயின் நெறியல்லா நெறியிற் சென்று சேற்றில் அழுந்தி மிக்க துன்பத்துக்குள்ளாவன்; அவ்வாறே அரசியலை நடத்தும் வேந்தன் அரசியல் முறையைத் திறம்பட அறிந்தானாதல் வேண்டும்; அதனால் நாடு நலம் பெறும்; அவனும் சீர் பெறுவன்; அறியானாயின் உட்பகை புறப்பகைகளாகிய சேற்றில் அழுந்திக் கெடுவன்' (புறம்-185) என்று அறிவுறுத்துவானாயினன்.

**ஆதனுங்கன்:** ஆதன் அழிசி, ஆதன் அவினி என்பாரைப்போல் ஆதன்நுங்கனும் ஒரு குறுநில மன்னன். வேங்கடமலையும் அதனைச் சூழ உள்ள நாடும் இவனுக்கு உரியவை. இவனுக்குப்பின் வந்தவனே வேட்டுவர் தலைவனான புல்லி என்பான். புல்லி ஆதனுங்கனுக்கு முற்பட்டவன் என்று கருதுபவரும் உளர். வேங்கடத்தில் இப்போது திருமால் கோயில்

கொண்டிருக்கும் பகுதியே ஆதனுங்கன், புல்லி முதலாயினோர் இருந்து நகர் அமைத்து வாழ்ந்த இடம் என்று கருதலாம். சங்கச் சான்றோர். காலத்துக்குப் பின்னும் இளங்கோ அடிகள் காலத்துக்கு முன்னுமாகிய இடைக் காலத்தில் இவ்விடத்தில் திருமால் கோயில் எழுந்தது என்று கருதவும் இடம் உண்டு. வேங்கடம் இன்றும் அழகிய சிறுசிறு அருவிகளால் பொலிவது போலப் பண்டும் சிறந்து விளங்கியது. 'கல்விழி அருவி வேங்கடம்' (புறம்-389) என்ற ஆத்திரையனார் கூற்றால் இதனை அறியலாம். 'வீங்குநீர் அருவி வேங்கடம்' (சிலம்பு-11:41) என்று இளங்கோ அடிகளும் கூறுவர். இவன் இரவலர் இன்மை தீர்க்கும் இனிய உள்ளம் படைத்தவன். கள்ளில் ஆத்திரையனார் என்னும் தொண்டை நாட்டு நல்லிசைப் புலவர் ஒருவர் இளையராய் இருந்த காலத்தே இவனைச் சென்று கண்டார். தன்பால் வந்த புலவரை ஆதனுங்கன் அன்புடன் வரவேற்று அருகில் இருத்தி, 'பிள்ளைப் பொருந கோடை முற்றிவற்கடம் உற்ற வறுமைமிகு காலத்தே, உறு பொருள் ஈந்து உற்ற துயர் தீர்ப்பாருள் அடியேனையும் ஒருவனாக உள்ளுவாயாக' (புறம்-389) எனச் சொல்லி, வேண்டுவன நல்கினன் என்பது வரலாறு.

ஆதனுங்கனின் அருங்குணத்தை ஆத்திரையனார் நன்கு உணர்ந்து அவனைத் தம் உள்ளத்தே வைத்துப் போற்றுவாராயினர். அவனை மறப்பதும் அவருக்கு அரிதாயிற்று. ஒரு சமயம் ஆத்திரையனார் தமது ஊராகிய கள்ளிலைவிட்டு வேங்கடத்திற்குச் சென்று ஆதனுங்கனைக்கண்டு அளவளாவியிருந்தார். இருவரும் சொல்லாடுகையில், ஆத்திரையனார் தமக்கு ஆதனுங்கன்பால் உள்ள அன்பினை எடுத்தோத வேண்டிய நிலை உண்டாயிற்று. அவர்,

''எந்தை வாழி ஆத னுங்கவென்
நெஞ்சத் திறப்போர் நிற்காண் குவரே

நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென்''

—புறம்-175

என்று பாடிப் போற்றினார்.

ஆண்டுகள் பல உருண்டோடின. ஆதனுங்கனும் மீளா உலகம் புக்கான். இதனை அறிந்து வேங்கடஞ் சென்ற ஆத்திரையனார் அவன் நாட்டை அவன் வழித்தோன்றலாகிய நல்லோர் முதியன் என்பான் ஆண்டு வருதலைக் கண்டார். அவன் முன்னோன் ஆதனுங்கன்பால் தான் இளைஞனாய் இருந்த காலத்தில் வந்தமையும், அப்பொழுமு ஆதனுங்கன் தன்பால் காட்டிய அன்புடைமையையும் எடுத்துக் கூறி,

''ஆத னுங்கன் போல நீயும்
பசித்த ஒக்கல் பழங்கண் வீட
வீறுசால் நன்கலம் நல்குமதி பெரும''

—புறம்-389

என்று போற்றினான்.

மேலே குறிப்பிட்ட மூன்று அரசர்களும் நீண்ட எல்லையாக இலங்கும் வேங்கடத்தின் வெவ்வேறு பகுதிகளை ஆண்டதாக அறியக் கிடக்கின்றது. ஒரு சில சங்கப் பாடல்களாலும் கல்வெட்டுகளாலும் மூவரில் ஒருவர் கிழக்குப் பகுதியையும், மற்றொருவர் மேற்குப் பகுதியையும், பிறிதொருவர் நடுப்பகுதியையும் ஆண்டதாகக் கருதலாம். நுங்கன் என்ற பெயரையும் பட்டத்தையும் உடைய அரசர்கள் கிருஷ்ணை நதிக்கருகிலுள்ள பகுதியைப் பதினான்காவது பதினைந்தாவது நூற்றாண்டுகள் வரை ஆண்டதாக அறிகின்றோம். பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று நுங்கதேவ மகாராயர், நுங்கராயர் என்ற இரண்டு அரசர்

களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றது. பதினைந்தாவது நூற்றாண்டைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு வீர நுங்கன் என்ற பெயரையுடைய அரசன் ஒருவன் பிரகாசம் மாவட்டத்தைச் சார்ந்த ஓங்கோல் வட்டத்திலுள்ள கணு பார்த்தியினை ஆண்டதாகக் குறிப்பிடுகின்றது (புறம்-389 ஔவை. சு. துரைசாமி பிள்ளை உரை காண்க).

அகநானூற்றுப் பாடலால் (அகம்-340) **பவத்திரி** என்னும் ஊர் கூடூருக்கு அருகில் உள்ளதாக அறியக் கிடக்கின்றது என முன்னர்க் குறிப்பிட்டேன். மேலும் நெல்லூர்க் கல்வெட்டுகளால் பவத்திரி என்னும் ஊரைக் கடல் கொண்டது என்றும், அது 'கடல் கொண்ட பவத்திரி கோட்டம்' என்ற கல்வெட்டுச் சொற்றொடரால் அறியக் கிடக்கின்றது என்பதையும் அறிய முடிகின்றது. இந்தக் கடல்கோளுக்குப் பிறகு திரையன் தன் தலைநகரைக் காஞ்சிக்கு மாற்றிக் கொண்டான் என்பது தெளிவாகின்றது. காஞ்சி மாநகர் இளந்திரையனின் தலைநகராக இருந்தது என்பதனையும், அது வட நாட்டிலுள்ள நாலாந்தா, தட்சசீலம் போன்று பல்கலைக் கழகங்களைக் கொண்டிருந்தது என்பதனையும் நாம் அறிவோம்.

புல்லி என்பான் வேங்கடத்தின் மேற்குப் பகுதியை ஆண்டிருத்தல் கூடும். இப்பகுதி பாண்டியர் அரசாண்ட பகுதிக்கு மேற்பகுதியாக அமைந்திருந்தது என்பது அடியிற் கண்ட சங்கப் பாடல்களின் பகுதிகளால் அறியக் கிடக்கின்றது.

''செந்நுதல் யானை வேங்கடம்''

—அகம்-265

"ஓங்கல் யானை உயங்கிமதம் தேம்பிப்
பன்மா ஒருசிறைப் பிடியொடு வதியும்
புடையலங் கழற்கால் புல்லிக் குன்றத்து"

—அகம்-292

"ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத் தியம்பும்
கடுமான் புல்லி காடிறந் தோரே"

—நற்-15

மேற்குத் தொடர்ச்சி மலை இயல்பாக யானைகள் வாழும் இடமாகும். அவை பெரும்பாலும் அண்மையிலுள்ள மலைப் பகுதிகளில் அலைந்து திரிந்திருத்தல் கூடுமேயன்றிக் கிழக்குக் கடற்கரைப் பகுதியையோ அன்றி கிழக்குப் பகுதியையோ எட்டியிருத்தல் முடியாது.

# 4. இன்றைய திருவேங்கடம்*

இன்று கற்றறிந்த புலவர்களும் பொதுமக்களும் திருப்பதி மலையையே 'வட வேங்கடம்' என்று கருதுகின்றனர். தேசியகவி பாரதியாரும் வடவேங்கடத்தை 'வட - மாலவன் குன்றம்' என்றே வழங்குவர். இதனை,

"நீலத் திரைகடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு"

—பா. க. செந்தமிழ்நாடு-5

என்று தமிழ்நாட்டு எல்லையை வகுத்துக் காட்டும் பாடலில் கண்டு தெளியலாம். தொல்காப்பியப் பாயிரத்தில் கூறப்பெற்ற 'தமிழ் கூறு நல்லுலகமே' பாரதியின் கருத்தில் புதிய வடிவங்கொண்டு நிற்பதை எளிதில் கண்டு தெளியலாம். தொல்காப்பியப் பாயிரமேயன்றி சங்க இலக்கியங்களில் வேங்கடத்தைப்பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன என்று முன் கட்டுரைகளில் காட்டப் பெற்றது. இந்தக் குறிப்புகளைத் தெளிந்து சங்கப் பாடல்களில் வேங்கடம்பற்றிய வருணனைகளைக் கொண்டு சீர் தூக்கி ஆராயும்போது திருப்பதி மலை

* சப்தகிரி (செப்டம்பர்-1990) யில் வெளிவந்தது.

யைத் தொல்காப்பியர் கூறும் 'வடவேங்கடம்' என்று அறுதியிட்டு உரைப்பது தவறு என்பதும் தெளிவாக்கப் பெற்றது. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் 'வடவேங்கடம்' இன்னதுதான் என்று இனமும் காட்டப்பெற்றது.

**'திருப்பதியின் இருப்பும் சூழலும்:** முதலில் 'திருப்பதி' என்ற நகரத்தின் இருப்பையும் அதன் இயற்கைச் சூழ் நிலையையும் காண்போம். கோவிந்தராசர் இங்குத் திருக்கோயில் கொண்டிருப்பதால், இந்நகரத்தைப் பக்தர்கள் 'கோவிந்தராசப் பட்டணம்' என்றே வழங்குகின்றனர். இந்த நகரத்தை ஒட்டியுள்ள மலையையும் மக்கள் திருப்பதி என்றே வழங்குகின்றனர். விவரம் அறிந்தோர் அதனைத் 'திருமலை' என்று கூறுவர். (மலையைத் 'திருமலை' என்றும் நகரைத் 'திருப்பதி' என்றும் வழங்குவதே சரியாகும்). இந்த மலை தமிழ் கூறு நல்லுலகத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள ஒழுங்கற்ற தாழ்வான சில குன்றுகளின் கூட்டமாகும். இம்மலை 14 டிகிரி வட குறுக்கையுளும் (North latitude) 80 டிகிரி கீழ் நெடுக்குக் கோட்டிலும் (Longitude) அடங்கி சென்னைக்கு வடமேற்குத் திசையில் சுமார் 85 கல் தொலைவில் அமைந்துள்ளது. இம்மலை 'ஏழுமலை' என்றே வழிவழியாக வழங்கப் பெற்று வருகின்றது. பேருந்தில் மலைக்குச் சென்று திரும்பும் சாலையில் முதலில் நாம் காண்பது-கீழிருந்து மேல்-விருஷபாத்திரி (எருத்து மலை): அடுத்து முறையே நீலாத்திரி, நீலமலை, அஞ்சனாத்திரி (மைவரை), சேஷாத்திரி (சேடமலை, சேடம்—பாம்பு), கருடாத்திரி (கருடமலை) நாராயணாத்திரி (நாராயணமலை), வேங்கடாத்திரி (வேங்கடமலை) என்ற பெயர்ப் பலகைகளைக் கண்டு ஏழுமலையையும் இனங்கண்டு கொள்கிறோம். '**அத்திரி**' என்ற வடமொழிச் சொல் மலையைக் குறிப்பது. இந்த மலைக்குன்றுகள் நேராக ஓர் ஒழுங்கில் அமையவும் இல்லை; ஒன்றையொன்று தொடர்ந்த நிலையில் ஒரு சங்கிலி போல

வும் அமையவில்லை. அவை ஒன்றையொன்று தழுவிய நிலையில் ஒன்று சேர்ந்த கூட்டம் போல், ஒரு குழப்பமான சுருள்போல், அமைந்து கிடக்கின்றன. பேருந்தில் மலை மேல் ஏறுபவர்கள் இருபக்கமும் நோக்கி இந்நிலையைக் கண்டு தெளியலாம்.

இக்குன்றுகள் கடல்மட்டத்திற்கு மேல் 1000 அடி முதல் 2500 அடி வரை உயரமுள்ளனவாக அமைந்துள் ளன. மலையெங்கும் புல் பூண்டுகள் காணப்பெறுகின் றன. இங்கும் அங்குமாகச் சிறு சிறு மரங்கள் தென்படு கின்றனவேயன்றி பெரிய மரங்களைக் கொண்ட அடர்ந்த காடுகள் இல்லை. மலையின் உயரங் காரணமாக தட்ப வெப்ப நிலையில் சிறிது மாற்றம் காணப்படுகின்றதே யன்றி பெரும்பாலும் அந்நிலை மலையைச் சூழ்ந்துள்ள சமவெளியின் தட்பவெட்ப நிலையையே ஒத்துள்ளது என்று கூறலாம். இன்று வனப் பாதுகாப்புத் துறையினர் பல இடங்களில் யூகலிப்டஸ் உள்ளிட்ட பல மரங்களை வளர்த்து வருகின்றனர். தேவையான மழையின்மை காரணமாக அவை நீலகிரியிலுள்ளவை போன்று செழித்து உயர்ந்து வளரவில்லை. சுமார் ஐம்பது ஆண்டு கட்கு முன்பு ஆண்டின் சில திங்களில் மலையின்மீது மலேரியா நோய் தலைகாட்டிக் கொண்டிருந்ததாகக் கருதப் பெற்றது. ஆயினும் திருமலைதிருப்பதி தேவஸ் தானத்தார் மேற்கொண்ட அரிய முயற்சியினால் மலேரியா நோய் நிலைகள் முற்றிலும் இல்லாதொழிந் தன. இன்று நாட்டின் நாலாபுறங்களினின்றும் வரும் அடியார்கட்காக தங்கும் வசதிகளும் நீர் வசதிகளும் இயன்ற வரை நல்ல முறையில் செய்யப்பெற்று வருகின் றன. ஆண்டு தோறும் திருத்தலப் பயணிகளின் கூட்டம் பெருகிக் கொண்டே வருகின்றது. இறைவனின் கருவூல மும் பொங்கி வழிந்து கொண்டேயுள்ளது.

**'வேங்கடம்'— சொற்பொருள் மாற்றம்:** முன் கட்டு ரையொன்றில் **'வேங்கடம்'** என்ற சொல்லின் பொருள்

குறிப்பிடப் பெற்றது. அதனை நினைவு கூர்வது ஈண்டுப் பொருத்தமுடைத்து. பக்தியியக்கம் செல்வாக்குப் பெற்ற இடைக் காலத்தில் **'வேங்கடம்'** என்ற சொல்லும் புதுப் பொருளைப் பெற்றுவிட்டது. ஈண்டு திருவாய்மொழியிலுள்ள ஒரு பாசுரத்தை ஆய்வது பொருத்தமாகின்றது.

வேங்க டங்கள்மெய் மேல்வினை முற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லன வேசெய்வார்
வேங்க டத்துறை வார்க்கு 'நம'தெனல்
ஆங்க டமைஅ துசுமந் தார்கேட்கே"

—திருவாய் 3.3:6

[வேம்- வெந்துபோம்; கடங்கள்-பாவங்கள்; மேல்வினை-இனி விளையச்கூடிய பாவங்கள் (ஆகாமியம்); முற்றவும்-சகல பாவங்களுக்கும்; நல்லன-கைங்கரியங்கள்; நம-நம: (வடசொல்) சுமந்தார்க்கு-வசிக்கிறவர்கட்கு]

ஆழ்வார்கள் காலம்வரை 'வேம்-வெந்துபோம், கடங்கள்-பாவங்கள்' என்று வழங்கின. தன்னை அடைந்தவர்களுடைய பாவம் அனைத்தையும் ஒழிப்பதனால் இத்திவ்விய தேசத்தை **'வேங்கடம்'** எனக் கூறத் தொடங்கினர். அவர்கள் காலத்திற்குப் பிறகு 'வேம்' என்ற சொல் 'எரித்தல்' என்ற பொருளைக் கொண்டிருந்த மரபு மறைந்து 'வேம்' என்ற சொல் **'பாவம்'** என்ற பொருளை ஏற்றது. பக்தியியக்கம் ஓங்கியிருந்த காலத்தில் சமயக் கருத்துகளும் மக்கள் மனத்தில் நுழையத் தொடங்கி அதனால் அவர்கள் மனநிலை விரிந்த காலத்தில், மனித மனம் ஏற்கனவே தான் படைத்த சொல்லுக்குப் புதுப் பொருளையும் சேர்க்கத் தொடங்கியது. 'பாவமும்' ஆன்மாவுக்குத் தாங்க முடியாத வெப்பத்தைத் தருவதாகும் என்று மனம் கற்பிக்கத் தொடங்கியது. எனவே 'வேம்' என்ற சொல் 'பாவம்' என்ற பொருளை

யும் ஏற்க வேண்டியதாயிற்று. அங்ஙனமே, 'கடம்' என்ற சொல்லும் புதுப்பொருளை ஏற்றது. 'கடம்' என்ற சொல் சங்க காலத்தில் பாலை நிலத்தைக் குறிக்கும் சொல்லாக வழங்கியமை முன்னர்க் குறிப்பிடப் பெற்றது.[1] உரையாசிரியர்கள் அதற்கு 'அருஞ்சுரம்' என்று பொருள் வழங்கியதும் சுட்டிக் காட்டப் பெற்றது. இடைக்காலத்தில் 'கடம்' என்ற சொல் 'எரித்தல்' என்ற பொருளை ஏற்றது. **'வேங்கடம்'** என்ற கூட்டுச்சொல் 'பாவங்களை எரித்தல்' என்ற பொருளில் வழங்கி மேலும் அது 'பாவங்களை எரிக்கும் இடம்' என்றும் வழங்கத் தொடங்கியது. சங்க காலத்தில் இயற்பெயராக வழங்கிய **'வேங்கடம்'** இடைக் காலத்தில் காரணப் பெயராக மாறத் தொடங்கியது; ஆழ்வார் பாசுரத்திலும் இப் பெயராகவே ஏறிவிட்டது நம் போன்று கற்றறிந்தவர் கள் இச் சொல்லாராய்ச்சியில் ஈடுபட்டுத் தலையை உடைத்துக் கொள்ளுகின்றோம். ஆனால் நாடோறும் பல்லாயிரக் கணக்கில் திருத்தலப்பயணமாக வரும் பக்தர் கள்-கற்றவர்கள் கல்லாதவர்கள் உட்பட-அனைத்தையும் மறந்து 'வேங்கடத்தைத் தமது பாவங்களையெல்லாம் தீயினில் தூசாக எரிக்கும்' இடமாகவே கருதுகின்றனர். இன்னும் சிலர் 'வேங்கடம்' என்ற திவ்விய தேசம் அழிவில்லாத ஐசுவர்யங்களை அளிக்கும் இடமாகவும் கருதுகின்றனர் (இதுவராக புராண விளக்கம் ஆகும்). வேண்டுவார்க்கு வேண்டுபவற்றைத் தரும்'**கலியுக வரதன்'** எழுந்தருளியிருக்கும் இடமாகக் கருதும் மனங்கட்குச் சொற்களுக்குப் புதிய பொருளைச் சேர்த்துக் கொள் வதில் ஒரு சிரமமும் இருக்க முடியாதல்லவா? எனவே இவர்கள் கருத்திற்கு ஏற்ப 'வேம்' என்பது 'அழிவின்மை' 'கடம்' என்பது 'ஐசுவரியம்' என்ற பொருள் வழங்கத்

1. சங்ககால (வட) வேங்டம் - (1) காண்க.

தொடங்கியது. தன்னை அடைந்தார்க்கு அழிவில்லாத ஐசுவரியங்களைத் தருதலால் இந்தத் திவ்விய தேசம் 'வேங்கடம்' என்று பெயர் பெற்றதாக இவர்கள் மனம் எண்ணுவதில் வியப்பொன்றும் இல்லை. இத்தகைய பக்தர்கள்—சைவர்கள், வைணவர்கள் உட்பட எல்லோரும்—மனத்திற்குகந்த 'பக்தி அவியல்' பாடலும் எழுந்தது.

திருப்பதி மிதியாப் பாதம்
சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க் கீயாக் கைகள்
இனியசொற் கேளாக் காது
புரப்பவர் தங்கள் கண்ணீர்
பொழிதரச் சாகாத் தேகம்
இருப்பினும் பயனென்? காட்டில்
எரிப்பினும் இல்லை தானே.[2]

என்ற பாடல் எத்தனை மனங்கட்கு ஆறுதல் அளிக்கின்றது என்பதை நம்மால் அளவிட்டு உரைத்தல் இயலாததன்றோ?

'வேங்கடம்' என்ற சொல்லின் பொருள் இடைக்காலத்தில் அதிசயிக்கத்தக்க முறையில் வளர்ந்ததற்குத் திருமூலரின் பாடல் ஒன்று சான்றாக விளங்குகின்றது,

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாதே
—திருமந்திரம்-232 (உயிர் நிலையாமை)

இப்பாடலில் **'வேங்கடம்'** என்ற சொல் உடலைக் குறிக்கின்றது. 'வேங்கட நாதன்' வேகும் இயல்புள்ள உட

2. விவேக சிந்தாமணி—28

னுக்கு நாதன் ஆகின்றான். 'நாதன்' ஈண்டு ஆன்மாவைக் குறிக்கின்றது: அத்துடன் நில்லாமல் ஆன்மாவுக்கும் ஆன்மாவாக விளங்கும்—அந்தர்யாமியாக இருக்கும்—பரமான்மாவையும் குறிக்கின்றது. வைணவ தத்துவத்தில் சித்தும் (உயிரும்) அசித்தும் (உடல், உயிரற்ற பொருள்களனைத்தும்) எம்பெருமானுக்கு உடலாக இருப்பதாகக் கூறப்படும்.

இப்போது எல்லோர் மனத்திலும் '**வேங்கடம்**' என்னும் பெயர் ஒரு சொல்லாகவே தென்படுகின்றது. சொல்லிலக்கணத்தின் அடிப்படையில் அமைந்த பெயரின் முக்கியத்துவமும் நாளடைவில் மறைந்துவிட்டது. ஆயினும் ஒரு சொல் நீர்மைத்தாக வழங்கும் பெயரில் பழங்காலத்தின் பெருமையும் சிறப்பும் சேர்ந்தே மிளிர்கின்றது. அப்பெயரில் 'அச்சத்தை விளைவிக்கும் பழங்கூறு' அடியோடு இல்லாதொழிந்தது. வடஎல்லையாக வழங்கும் 'வடவேங்கடம்' என்ற அடையுடன் கூடிய பெயரும் வழக்கற்றுப்போய் வைணவ சம்பிரதாயத்தின் அடையாகிய '**திரு**' என்பது சேர்ந்து '**திருவேங்கடம்**' என்று வழங்கி வருகின்றது. 'திரு' என்பது என்னென்ன பொருள்களிலெல்லாம் வழங்கி வருகின்றதோ அப்பொருள்களெல்லாம் 'வேங்கடம்' என்ற பெயருடன் சேர்ந்து அது ஊருக்குப் பெருமையையும் சிறப்பினையும் அளித்துவிட்டது. மலையின் பெயரில் ஏற்பட்ட இம்மாற்றம் காலப்போக்கில் இம்மலைக்கு ஏற்பட்ட மாற்றத்துடன், எல்லாவகையிலும் பொருந்துவதாக அமைந்துவிட்டது.

**திருப்பதி புகழோங்கிய காலம்:** வட எல்லையின் முக்கிய எல்லைக் குறியாகத் (Land Mark) திகழும் '**வடவேங்கடம்**' (திருப்பதி) எக்காலத்தில் தமிழர்கள் யாவரும் சிறப்பாகக் கருதும் இடமாக அமைந்தது என்பதைச் சிந்திப்போம். திருப்பதி மிகவும் புகழடைந்தது, சமயச்

சார்பு பற்றியதேயாகும். இடைக் காலத்தில்தான் இது திருத்தலப் பயணிகளின் முக்கிய இடமாக அமைந்தது. சங்க காலத்தில் இச்சமயச் சார்பு இவ்விடத்திற்கு ஏற்பட வில்லை. இத்தகைய சார்பு ஏற்பட்டது பிற்காலத்தில் தான். ஆயினும் திருப்பதிபற்றிய சமயச் சார்பான குறிப்பு புறப்பொருள் வெண்பா மாலையிலும் சிலப்பதி காரத்திலும் காணப்பெறுகின்றது. இவையே முதன் முத லாகக் கூறப்பெறும் மிகப் பழைய குறிப்புகளாகக் கருத லாம்.

முதலில் ஐயனாரிதனார் வாக்கினைக் காண்போம்.

"வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்(கு)
இருளீயும் ஞாலத்(து) இடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழி யவன்"[3]

[வெறி-வாசனை; அறை-ஒலிக்கும்; நெறி-ஒலிக்கும்; நெறி-முறைமை]

என்ற பாடலல் **'வேங்கடம்'** குறிப்பிடப்பெற்றிருப்பது டன் அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவாழி யைத் தரித்துக் கொண்டிருக்கும் குறிப்பும் 'ஆழியவன்' என்ற சொல்லால் காட்டப்பெற்றிருத்தல் நோக்கத் தக்கது.

**சிலம்பின் குறிப்பு:** சிலப்பதிகாரத்தில் வரும் 'வேங் கடம்' பற்றிய குறிப்பு இது: இந்தக் காவியத்தில் வரும் மாங்காட்டு மறையோன் திருத்தலப் பயணம் செய்து வரு கின்றான். உறையூரையடைந்த கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் வைகறையாமத்து அவ்வூரைக் கடந்து

3. புறப்பொருள் வெண்பாமாலை—பாடாண்படலம் —புலவர் ஆற்றுப்படை (23) உதாரணச் செய்யுள்.

தென் திசையை நோக்கிச் செல்லுபவர்கள், கனன்று எழும் கதிரவன் வெப்பத்தைப் பொறுக்கலாற்றாது வழியில் ஒரு மருதநிலப் பரப்பில் வனப்புற்றுத் திகழாநின்ற ஓர் இளமரக்காவில் திருத்தலப்பயணிகள் தங்குவதற்கென்று அமைக்கப் பெற்றிருந்த இருப்பிடத்தில் இளைப்பாறுதற் பொருட்டுச் சென்று புகுகின்றனர். அப்பொழுது தென்திசையினின்றும் வடதிசை நோக்கிச் செல்லும் மறையோனும் அவ்விடத்தில் வந்து புகுகின்றான்; வருகின்றவன், 'தீது தீர் சிறப்பின் தென்னனை' வாழ்த்திக் கொண்டே வருகின்றான். அங்ஙனம் வருகின்றவனைக் கோவலன்,

'யாது நும்மூர்? ஈங்கென் வரவு?'[4]

என்று வினவுகின்றான். இந்த இரண்டு வினாக்களில் முன்னதினும் பின்னது சிறப்புடையதாகலின் அதற்கு விடைகூறும் இடத்தில் **திருவரங்கம், திருவேங்கடம்** இவற்றின் வருணனைகள் வருகின்றன. அவை,

நீல மேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்து
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்

திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத்தானத்து

4. சிலம்பு - காடுகாண் — அடி-32

மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்
என்கண் காட்டென்று என்னுளம் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்[5]

[குன்றம்-மலை; பால் விரிந்து - பக்கங்களில் விரிந்து; விரிந்து-படம் விரிந்து; திறல்-ஆற்றல்; திரை-அலை; துருத்தி - ஆற்றிடைக் குறை (அரங்கம்); கிடந்த வண்ணம் - அறிதுயில் கொண்டு கிடக்கின்ற அழகு; வீங்குநீர்; - மிகவும் பெருகி விழாநின்ற நீர்; மின்னுக்கொடி - மின்னலாகிய புத்தாடை; பகை அணங்கு - பகைவரை வருத்துகின்ற; ஆழி-திருவாழி; பால் வெண்சங்கம்-பால் நிறத்தினையுடைய சங்கு; நலம்-அழகு; ஆரம்-கௌத்துவ மணிமாலை; பொலம்பூ ஆடை; பொற்பூ ஆடை; நெடியோன்-திருநெடுமால்; நின்ற வண்ணம் - நின்ற திருக்கோலம்]

இவற்றைத் தவிர, இதே காவியத்தில் வேறு இரண்டு இடங்களில் வேங்கடத்தைப் பற்றிய குறிப்பு காணப் பெறுகின்றது.

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நல்நாட்டு"[6]

என்றும்,

5. சிலம்பு - காடுகாண் — அடி 35-53
6. ஷை வேனிற்காதை அடி—1-2

"வேங்கட மலையும் தாங்கா விளையுள்
காவிரி நாடும்"[7]

என்றும் வருதலைக் காணலாம்.

உறையூர் காவிரியின் தென்பால் உள்ளது. திருபாணாழ்வார் திருவவரித்த திவ்விய தேசமாகும் இது. உறையூருக்கு நேர் வடக்கில் காவிரி நதியின் வடகரையில் திருவரங்கம் என்னும் திருப்பதி உள்ளது.

கொண்டல் வண்ணனைக்கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி யரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்(று)ஒன் றினைக் காணாவே

—அமலனாதி-10

என்று பாண்பெருமாள் அநுபவித்த பெரிய பெருமாள் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசமாகும் இது. உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சியொன்று இப்பொழுது நம்மனத்தில் எழுந்து நம்மைத் தன்னிலை கெட்டழியச் செய்கின்றது[8].

**கோதண்டப்பாணிபிள்ளையின் கருத்து:** மேற் குறிப்பிட்ட வருணனையைக் குறித்து இராவ்சாகிப் கோதண்டபாணிப் பிள்ளையின் ஆய்வுக் குறிப்பு இது: "இந்தத் திருவரங்கத்திற்கு மிக அண்மையிலுள்ளதும், தான் தங்கியிருந்ததுமான உறையூரிலுள்ள மாங்காட்டு மறையோன் திருவரங்கத்தை விரித்துக் கூறுவது மிகவும் பொருத்தமேயாகும். இங்குத் திருவரங்கத்தைப் பற்றி

7. ஷெ கடலோடு காதை அடி—31-32
8. திருப்பாணாழ்வார் இறைவனோடு கலந்த வரலாறு.

அவன் கூறிய செய்தி ஆறு வரிகளில் மிகச் சுருக்கமாக உள்ளது. ஆனால், அவன் இன்னும் நேரில் கண்டறியாத வேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள் சற்று விரிவாகப் பதினொரு அடிகளில் கூறப் பெற்றுள்ளன. கோவலன் பூம்புகாரில் வாழ்ந்த பெருவணிகன். திருவேங்கடம் மலைநாட்டை விடப் பூம்புகாருக்கு மிகவும் அண்மையி லுள்ளது. ஆதலின் அவன் வேங்கடத்தைப் பற்றி நன்கு அறிந்திருத்தலும் கூடும். மிகத் தொலைவில் மலை நாட்டிலுள்ள மாங்காட்டு மறையோன் அறிந்திருப்பதை விடக் கோவலன் திருவேங்கடத்தைப்பற்றி நன்கு அறிந் திருத்தல் கூடும் என்று கருதுவதில் தவறு ஒன்றும் இல்லை; இஃது அறிவுக்குப் பொருத்தமான ஊகமே யாகும். அதுவும் இன்று திருப்பதி புகழ் அடைந்திருப்பது போல் அன்றும் அனைவருக்கும் தெரிந்துள்ள ஊராக இருந்திருப்பின் கோவலன் இந்த ஊரைப் பற்றி நன்றாகவே அறிந்திருப்பான் என்றும், அதுவும் தமிழகத் தின் வடஎல்லையின் முக்கியமான ஓர் இடம் என்று அறியும் அளவுக்குத் தெரிந்திருப்பான் என்றும் கருதுவது இந்த ஊகத்தை மேலும் வலியுறச் செய்கின்றது. திருப்ப திக்கு நேரில் சென்று அதனைக் கண்டறியாத மாங்காட்டு மறையோன் அவ்வூரைப்பற்றி ஓரளவு நன்கு அறிந் திருக்கக்கூடிய கோவலனுக்கு மிக விரிவாக அத்திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் திரு மேனியை நேரில் கண்டதுபோல் விவரமாகக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. இது கொல்லத் தெரு வில் ஊசி விற்கும் கதை போன்றதாக நினைக்கவும் தூண்டுகின்றது.[9]''

மேலும் அந்த அறிஞர் கூறுவது: ''காவியப் போக் கினைக் கவனித்தாலும் வேங்கடம் பற்றிய குறிப்பு காவிய

9. வடவேங்கடம் என்ற தலைப்பில் வந்துள்ள ஆங்கிலக் கட்டுரையில் (Tamil Culture - Vol. IX No. 1, Jan.-March-1961)

நிகழ்ச்சியுடன் எவ்வாற்றானும் பொருந்துமாறு இல்லை. இக் குறிப்பு நிகழ்ச்சிகளுடன் இணையாமல் தனியாகக் கிடப்பதனால் இஃது இடைச் செருகலாகவும் இருத்தல் கூடும். வேங்கடத்திற்கும் அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கும் புகழ் தேடுவதற்காகவே யாரோ ஒருவரால் மேற்கொள்ளப்பெற்ற திட்டம்போல் தோன்றுகின்றது. பெருங்கவிஞராகிய இளங்கோவடிகள் தம்முடைய சமயப் பொதுநோக்கைப் புலப்படுத்திக் கொள்வதற்காகவே இப்படிச் சேர்த்திருப்பார் என்று கொள்வதற்கில்லை; அப்படிக் கொண்டாலும் திருவரங்கம் என்ற வைணவ தலத்தைக் குறிப்பிடுவதனாலேயே அக்குறிக்கோள் நிறைவு பெற்றுவிடும்'' என்பது.

இன்னும் அவர் கூறுவது : ''திருவரங்கத்தை வருணிக்கும் பகுதியில் ஈற்றடியாகிய 'திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்' என்பதிலுள்ள உம்மையை நீக்கியும், திருவேங்கடம், அங்கு எழுந்திருளியுள்ள மூர்த்தி இவற்றின் வருணனையை முற்றிலும் நீக்கியும் படித்தால்,

40 திருவமர் மார்பன் கிடந்த வண்ணம்
52 என்கண் காட்டென்று என்உளம் கவற்ற
53 வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்

என்பதாக அமைந்து, பொருளும் பாட்டின் அமைப்பும் கெடாது பொருந்தும் என்று கூறித் திருவேங்கடத்தைப் பற்றிய வருணனை முற்றிலும் இடைச்செருகலே என்று பின்னும் வற்புறுத்திச் செல்வர். பின்பழகிய பெருமாள் சீயர் அருளிய ஆறாயிரப்படி குரு பரம்பரையிலும், இராமநுசரின் திவ்விய சூரி சரிதையிலும் காணப்பெறும் உடையவர் காலத்தில் திருமலையில் நிகழ்ந்த சைவ சமய வாதத்தைப் பற்றிய குறிப்புகளை எடுத்துக் காட்டி இந்தச் சூழ்நிலையில் திருமலையை **வைணவத் தலம்**

என்பதை நிலைநாட்டவே இத்தகைய இடைச் செருகல் யாரோ ஒருவரால் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்று கூறி தன் முடிவுக்கு அரண் அமைத்துக்கொள்வர்.

**பிள்ளையவர்களின் முடிவு பற்றி அடியேனின் கருத்து:** பிள்ளையவர்களின் முடிவு சரியானது என்பதை எந்த ஆய்வு மனமும் உடனே ஒப்புக் கொள்ளாது. மேற்குறிப்பிட்ட சிலப்பதிகாரப் பகுதியினை அடுத்து மதுரைக்குச் செல்லும் வழியை விளக்கிய பின்னர் அடுத்து வரும்,

நீள்நிலம் கடந்த நெடுமுடி அண்ணல்
தாள்தொழு தகையேன் போதுவல்[10]

என்ற அடிகளால், மாங்காட்டு மறையோன் தன்னைத் திருமாலடியான் என்று குறிப்பிடுகின்றான். திருமாலின் திவ்விய தேசங்கட்குத் திருத்தலப்பயணமாகப் புறப்பட்டவன் என்றும் சொல்லிக் கொள்ளுகின்றான். மாங்காட்டு மறையோன் கோவலனுக்கு மதுரைக்குச் செல்லும் வழியை விளக்கிய பின்னர் கோவலன் மறையோனை வினவியதற்கு மறுமாற்றமாக வருகின்றன திருவரங்கம், திருவேங்கடம் இவற்றின் வருணனைகள். மாங்காட்டு மறையோன் தான் பார்க்க வேண்டிய திவ்விய தேசங்களைப்பற்றி முன் சென்று திரும்பியவர்களிடமிருந்து தெரிந்து வந்திருத்தல் கூடும். ஒரு பக்தன் பிறிதொரு பக்தனிடம் திருத்தலங்கள்பற்றிய செய்திகளைக் கூறுங்கால் வழிகளை மட்டிலும்தான் கூறுவான் என்று கருதுதல் தவறு. அவன், தான் செவி வழியாகக் கேட்டவற்றையும், தான் நேரில் சென்று காணுங்கால் உள்ளக் கிளர்ச்சியால் தன் மனத்தில் எழுந்த கருத்துகளையும் கூட்டியும் குறைத்தும் கூறியிருத்தல் கூடும். எப்பொழுதும் தொலைவி

10. சிலப்பு - காடுகொண் - அடி (148-49)

லுள்ள இடம் பார்க்க விழைவார்க்கு அதிகக் கவர்ச்சியை யூட்டும் என்பது நம் அநுபவமாகும். திருவேங்கடம் பற்றித் தான் கேட்டவற்றால் மறையோனின் மனத்தில் அதிகக் கவர்ச்சியை எழுப்பியிருத்தல் கூடும். அந்தக் கவர்ச்சியின் காரணமாக அந்த ஊரையும் அங்குள்ள மூர்த்தியையும் சற்று அதிகமாகவே அம்மறையோன் வருணித்திருத்தல் கூடும். மறையோன் மதுரைக்கு வழித்திறம் கூறும்பொழுதும் திருமால் குன்றத்தைக் குறிப்பிடுங்கால் தன் இறையன்பு மேலீட்டால் கேட்போர் திறம் நோக்காது ஆங்குள்ள வியத்தகு செய்திகளையெல்லாம் விரித்தோதுவதனைக் காணலாம். இங்ஙனம் கூறுவது இறையன்புடையாரின் இயல்பு என்பதைத் தெரிவிக்கவே இளங்கோவடிகளும் அவன் பேசுமளவும் பேசவிடுகின்றனர் என்று கருதலாம். எனவே நேரில் கண்ட திருவரங்கத்தைக் குறைவாகவும் இன்னும் சென்று காணாத திருவேங்கடத்தை அதிகமாகவும் மறையோன் வருணித்துள்ளான் என்பதை மட்டிலும் காரணமாகக் கொண்டு திருவேங்கடத்தைப் பற்றிய வருணனை இடைச் செருகல் என்று பிள்ளையவர்கள் கூறுவது சிறிதும் பொருந்தாது என்பது காய்தல் உவத்தல் இன்றி ஆராய்வார் மனத்தில் தோன்றும் கருத்தாகும்.

தவிர, இன்னோர் உண்மையையும் ஈண்டு அறிதற்பாலது. சிலப்பதிகாரம் வரலாற்று அடிப்படையில் அமைந்த காவியமாயினும் அஃது ஒரு வரலாற்று நூல் அன்று. கண்ணகி வரலாற்றைச் சாத்தனார் மூலம் அறிந்த இளங்கோவடிகள், மேலும் அவளுடைய வரலாற்றைப் பலர் மூலம் நன்கு தெரிந்து தெளிந்து தம் கற்பனையையும் துணைக்கொண்டு காவியம் அமைத்த பொழுது எத்தனையோ செய்திகளைவிட்டும் இருக்கலாம். பல செய்திகளைக் கற்பனையால் சேர்த்துக்கொண்டும் இருக்கலாம். ஈண்டு நாம் காணும் இரண்டு இட வருண

னைகளும் மாங்காட்டு மறையோனின் வாயில் வைத்துப் பேசப் பெற்றதாலும் அதனைக் கூறுபவர் இளங்கோ அடிகளே யாவர் என்பதை நாம் மறக்கலாகாது. திருவரங் கத்தைக் குறைவான அடிகளிலும் திருவேங்கடத்தை அதிக மான அடிகளிலும் கூறியவர் இளங்கோவடிகளேயன்றி மாங்காட்டு மறையோன் அல்லன். எனவே ஒன்றன் குறைவையும் மற்றதன் நிறைவையும் காரணமாகக் கொண்டு நிறைவாகவுள்ளதை இடைச் செருகலாகக் கொள்ளல் எவ்வாற்றானும் பொருந்துவதன்று. பொது வாக இக்கால ஆராய்ச்சியாளர்கள் சமாதானம் சொல்ல முடியாததற்கெல்லாம் எளிய வழியாகக் கைகொள்ளும் முறைகளில் 'இடைச் செருகல்' என்று தள்ளிவிடுவது ஒன் றாகும்.

**வேங்கடத்தின் புகழ்:** திருப்பதியின் புகழ் சமயச் சார்புடையது என்று முன்னர்க் குறிப்பிட்டேன். அதனை ஈண்டு தெளிவாக்குவேன். ஆழ்வார் பெருமக்களால் மங்க ளாசாசனம் செய்யப்பெற்ற திருவேங்கடம் பதினொான் றாம் நூற்றாண்டில்தான் பெரும் புகழ் அடையத் தொடங்கியது. இராமாநுசர் திருவேங்கடத்தின்மீதுள்ள திருக்கோயிலின்பால் காட்டிய அக்கறையும் அவருடைய சொந்தப் பெருமையும் சிறப்புமாகச் சேர்ந்து திருக்கோயி லின் பெருமையை மிகவும் உயர்த்திவிட்டது.

இராமாநுசர் திருமலைக்கு மூன்று தடவை வந்ததாக அவரது வரலாற்றால் அறியக்கிடக்கின்றது. இன்று திரு மலையில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் யாவும் இராமாநுசர் வகுத்தவையே என்று **'திருமலையொழுகு'** என்ற நூலால் அறிகின்றோம்.[11] இராமநுசர் திருவேங்கட

11. காலப்போக்கில் சில முறைகள் வழக்காறு அற் றன என்றும் சொல்வர்.

முடையானுக்குக் கைங்கரியம் செய்யும் அர்ச்சகர்க்குக் குடியிருப்பு வசதிகள், பிற வசதிகள் இவற்றைச் செய்தார். தம் தாய் மாமனாகிய திருமலை நம்பியையே இவற்றையெல்லாம் கண்காணிக்கும் மேலாளராகவும் நியமனம் செய்தார். இராமநுசருடைய சமூகச் சீர்திருத்தமும் அவருடைய தத்துவ ஞானமும் பாமர மக்கள் மனத்தையும் கவர்ந்தன. அவருடைய வடமொழி அறிவு அவருக்குப் பலவகையில் கைகொடுத்து உதவியது. அவரது கீதைப் பேருரையும் பிரம்மசூத்திரப் பேருரையும் (இரண்டும் வடமொழியில் உள்ளவை), அவரை வடநாட்டினருக்கும் அறிமுகம் செய்து வைத்தன. இதனால் இராமாநுசரின் புகழ் நாட்டின் நாலா புறங்களிலும் பரவியது. இதனால் அவர் மிக நெருங்கிய உறவுடன் கைங்கரியம் செய்து வந்த திருவேங்கடமுடையானின் பெருமையும் சிறப்பும் எங்கும் பரவி அவன் கோயில் கொண்டிருக்கும் திருவேங்கடத்திற்கும் ஒரு முக்கியத்துவம் ஏற்படலாயிற்று இவற்றைத் தவிர சைவ-வைணவ வாக்குவாதம்பற்றிய வரலாறும் திருமலையின் புகழ் எங்கும் பரவக் காரணமாக அமைந்தது. இது பற்றிய வரலாறு சுமார் 700 ஆண்டுகட்கு முன்பிருந்த பின்பழகியப் பெருமாள் சீயர் அருளிய **ஆறாயிரப் படி குருபரம்பரையி**லும் இராமாநுசாச்சாரியரின் **திவ்விய சூரி சரிதை**யிலும் காணலாம்.

திருவேங்கடத் தப்பனைச் சைவர்கள் 'எங்கள் நாயனார்'—எங்கள் தலைவர்—என்று உரிமை கொண்டாடியதாக ஆறாயிரப்படி குருபரம்பரை தெரிவிக்கின்றது. இங்ஙனம் உரிமை கொண்டாடுவதற்குப் பேயாழ்வாரின் ஒரு பாசுரமும் ஒரு காரணமாக இருந்தது.

தாழ்சடையும் நீள்முடியும் தண்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்நாணும் தோன்றுமால்—சூழும்

திரண்டருவி பரவும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் நன்றாய் இசைந்து.

—மூன். திருவந்-63

என்ற பாசுரம் அரி-அர வடிவத்தைக் காட்டுவது. இப் பெருமானிடம் சடையும் கிரீடமும் காணப்படுகின்றன. மழுவும் சக்கரமும் காணப்படுகின்றன. சிவபெருமானுக் குரிய பாம்பாகிய அணியும் இவரிடம் தோன்றும்; திரு மாலுக்குரிய பொன் நாணும் தோன்றும் என்கின்றார் ஆழ்வார். 'திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந் தைக்கு' உரியதொரு நிலை என்று பேயாழ்வார் சைவத் தொடர்பையும் ஒப்புக்கொள்வதுபோல் அமைந்துள்ளது இப் பாசுரம். இதிலிருந்து சிவச் சின்னங்களும் பேயாழ் வார் காலத்தில் திருவேங்கடமுடையானுக்கு உரியனவாக இருந்தன என்று கருதுவோர் இன்றும் உளர். இவர்கள் இந்த நிலை உடையவரால் மாற்றப்பெற்றது எனவும் ஊகிக்கின்றனர். தங்கள் ஊகத்திற்கு ஆதாரமாக குருபரம் பரைக் கதைகளையும் சுட்டிக் காட்டுகின்றனர். இதனைப் பொறுமையுடன் ஆராய வேண்டும்.

ஆறாயிரப்படி குருபரம்பரையில் இராமாநுசர் சைவர்களை நோக்கி, 'உங்கள் தம்பிரானுக்கு (கடவு ளுக்கு) அசாதாரண சின்னமான திரிசூல-டமருகத்தையும், எங்கள் பெருமாளுக்கு அசாதாரண சின்னமான திருவாழி திருச்சங்காழ்வார்களையும் (சக்கரத்தையும் சங்கையும்) பண்ணித் திருவேங்கடமுடையான் திருமுன்பே வைக்க லாம். அவர் எத்தை எடுத்துத் தரித்துக்கொள்ளுகின் றாரோ அத்தையிட்டு அவர் சொரூப நிருபணம் பண்ணக் கடவது' என்று சொன்னதாக வருகின்றது. 'இதிலிருந்து இராமாநுசர் காலத்தில் வேங்கடவன் சங்கு சக்கரங் களைத்தரித்திருக்கவில்லை என்பது புலனாகின்றதல்லவா?' என்று கேட்கின்றனர். இஃது ஒரு முக்கியமான கேள்வி.

ஆறாயிரப்படி குரு பரம்பரையைத் தொடர்ந்து நோக்கினால் பின்பழகிய பெருமாள் சீயர் மேலும், 'அவ் வாயுதங்களைப் பண்ணி அவர் சந்நிதியிலே வைத்துக் கருவறையில் ஒருவருமில்லாதபடி சோதித்துத் திருக்காப் பைச் சேர்த்துக்கொண்டு புறப்பட்டுவந்து...'' என்று கூறு வதைக் காணலாம். காலை வேளையில் பூட்டைத் திறந்து பார்க்கும்போது சங்கும் சக்கரமும் தரித்துக் கொண்டிருந்தாராம் பெருமாள். திரிசூலத்தையும்-மருகத் தையும் அணிந்து கொள்ளவில்லையாம். இதனால் ஒரு சூழ்ச்சி நடந்திருக்கக்கூடும் என்று கருதுவர் சிலர்.

வேறு குருபரம்பரைக் கதைகளில் இச்செய்தி சிற்சில கூட்டல் கழித்தல்களுடன் காணப்படுகின்றது. 'பிரபந் நாம்ருதம்' என்ற நூலில் வேங்கடத்தெம்மானுக்குத் திரு மார்பில் இராமாநுசர் திருமகளின் உருவை அமைத்தார் என்ற செய்தி காணப்படுகின்றது

மேற்கூறிய வரலாறுகளேயன்றி இன்னொரு வரலா றும் வழங்கி வருகின்றது. பெரும்பக்தனான தொண்டை மான் சக்கரவர்த்திக்குச் சங்கு சக்கரங்கள் பெருமானால் அளிக்கப்பெற்றதாக ஐதிகம் ஒன்று உண்டு. திருவேங்கடத் தலபுராணத்தில் 'இராமாநுசன் பிரார்த்தனைப்படி சீநிவாசன் சங்கு சக்கரம் தரித்த அத்தியாயம்' என்பது 29-வது அத்தியாயமாகக் காணப்படுகின்றது. இதில் ''தொண்டைமான் சக்கரவர்த்தி வெற்றி பெரும் பொருட்டு, முன்பு தன் சங்கு சக்கரங்களை அவன் கையில் கொடுத்து அவனுக்கு வரம் கொடுத்தபடியாகவே பல நாள் சீநிவாசப் பெருமாள் தன் சங்கு சக்கரங்களை உலகி னர் கண்களுக்குப் புலப்படாதபடி ஒளித்து வைத்திருந்த னன். இதனைக் கருத்திற்கொண்டு திவ்விய கவியும் தலைவியின் பிரிவாற்றாமை கண்டு செவிலி இரங்குந் துறையில்,

'முனித்தொண்டை மான்கையில் சங்காழி நல்கி
ஒன்மூரல் செவ்வாய்க்
கனித்தொண்டை மான்கையில் சங்காழிகோடல்
கருமம் அன்றே'

—திருவேங்கடத்தந்தாதி-53.

[மூரல்-புன்முறுவல்; கனித்தொண்டை-கோவைப் பழம்; சங்கு-வளையல்; ஆழி-மோதிரம்].

எனப் பாடி மகிழ்ந்துள்ளார் என்று கருதலாம். "அப்பெருமானின் திருவடிவைக் கண்டவர்கள் தம்தம் கருத்துக்கு இயைந்தபடி அரன் என்றும், குமரன் என்றும், மாயவன் என்றும் பலவாறு சொல்லிய சமய வாதங்களால் வேறுபாடு உற்றுப் பகைமை கொள்வார்கள்" என்று காணப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் இராமாநுசர் திருப்பதிக்கு வந்ததாக இத்தலபுராணம் தெரிவிக்கின்றது. 'பண்டைய வேதநெறியோடு திருக்குருக்கூரின்கண் வந்த மெய்ஞ் ஞானத் தமிழ் மறையாகிய திருவாய்மொழி ஓங்கும்படி செய்து, சரசுவதி தலைமேல் கொண்டு பாராட்டும்படி ஸ்ரீ பாஷ்யம் இயற்றிய' எதிராசர் என்று இராமாநுசர் இங்கே குறிக்கப் பெறுவதைக் காண்கிறோம். இவர் வேங்கடமாமலையை அணுகி அங்குள்ள குதர்க்க வாதிகளை வாதத்தால் வென்று அடக்கி 'வேங்கடத்து அண்ணலை வாழ்த்தினார்' என்றும் இத்தல புராணம் நுவல்கின்றது. 'உலகினர் யாவரும் அறியுமாறு சங்கு சக்கரங்களைத் தாமரைக் கைகளில் தரித்தருளித் தரிசனம் தந்தருள வேண்டும் என்று இராமாநுசர் வேண்டிக் கொள்ள, அவ்வண்ணமே அப்பெருமான் தரிசனம் தருவான்' என்று எதிர்காலம் உரைப்பதுபோல் கூறுகின்றது தலபுராணம். இது,

பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி

என்று சிலம்பில் வருவதை நினைவூட்டுவதாகக் கருதலாம்.

கையிலுள்ள சங்கு சக்கரங்கள் திருமாலின் எல்லாவித ஆற்றலுக்கும் அறிகுறி. மார்பில் உள்ள பெரிய பிராட்டியார் சத்தியத்தின் மார்பில்தான் உண்மையான அழகு திகழும், அருள்பொலியும் என்ற பேருண்மைக்கு நினைவுக் குறி. இத்தகைய பேருண்மைகளை நிலைநாட்டி நாட்டை வாழ்வித்தார் உடையவர் என்ற வரலாற்றுச் செய்தியைத் தான் விநோதமாகவும், ஓர் அளவு இரசமாகவும், சிவ பக்தர்களுக்குச் சற்று விரசமாகவும், வைணவ குருபரம்பரை வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

**கோதண்டபாணிப் பிள்ளையின் மற்றொரு கருத்து:** பிற்காலத்தில் வடவேங்கடத்தில் நேரிட்ட மாற்றத்தைக் குறிப்பிடும் முறையில் பூதத்தாழ்வாரின் இரண்டு பாடல்களைச் சான்றுகளாகக் காட்டி விளக்குவர். அச்சான்றுகள்பற்றியும் ஈண்டு ஆராய்வோம். பூதத்தாழ்வார் இம்மலையை **இளங்கிரி** எனச் சுட்டுவதாகக் காட்டுவர். பிள்ளைவர்கள் முன்னர்க் குறிப்பிட்ட ஆங்கிலக் கட்டுரையில்,

நெறியார் குழற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து
அறியாது இளங்கிரி என்(று) எண்ணி—பிறியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனற் குன்றென்றும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு.

[இளங்கிரி-சிறுமலை] இரண். திருவந்-53.

இப்பாடலில் 'இளங்கிரி' என்ற சொல் 'சிறுமலை' என்று பொருளில் ஆளப்பெற்றுள்ளது என்றும், இது பல

நூற்றாண்டுகளில், தொல்காப்பியர் காலத்திலிருந்து முதலாழ்வார்களில் ஒருவராகிய பூதத்தாழ்வார் காலம் வரையில் உள்ள காலப்பகுதியில், நிலவியல் கூறுகளின் அடிப்படையில், இம்மலைகட்கு ஏற்பட்ட மாற்றத்துக்கு ஒரு சான்றாக அமைகின்றது என்றும் விளக்குவர்.

மேலும் அவர் கூறுவது: '**வேங்கடம்**' என்று வழங்கும் இப்பகுதியில் இப்பொழுதுகூட மலைகளின் பல்வேறு அழிவு மாற்றங்களைக் காணலாம். கோடைக்காலத்தில் கதிரவனின் கடும் வெப்பமும், மாரிக்காலத்தில் பெய்யும் மழையும் இப்பகுதியிலுள்ள சில பாறைகளைப் பெரும் பெரும் பிறைத்துண்டுகளாகப் பிளவுபடச் செய்துள்ளன. சில பாறைகளைச் சில கூரிய கற்குவியலாகவும் கூழாங் கற்களாகவும் சிதைத்துள்ளன. இன்னும் சிலவற்றை மணலும் மண்ணும் கலந்த மேடுகளாகவும் மாற்றம் அடையும்படிச் செய்து விட்டன. இதனால் இம்மலைப் பகுதியில் தாவரங்கள் தலைகாட்டுவதற்கு வாய்ப்பும் நேரிட்டது. ஒரு காலத்தில் வழுக்கைப் பாறைகளாக இருந்தவற்றில் பசுமையும் செழுமையும் தலைகாட்டத் தொடங்கியது.

இப்பொழுது இம்மலைகளில் சிறு புல் பூண்டுகள், காடுகள் என்ற பல்வேறு நிலைத் தாவரங்களைக் காண லாம். இங்ஙனம இம்மலை பூதத்தாழ்வார் காலத்தில் பல்வேறு மாற்றங்கள் அடைந்து மக்கள் வசிப்பதற்கேற்ற நிலையையும் அடைந்துவிட்டது. அதனால் அவர் அம் மலையைக் குறிக்க "**இளங்கிரி**" என்ற சொல்லை ஆண்டுள்ளார் என்பது. இந்த ஆழ்வாரின் இன்னொரு பாடலைக் காட்டி அதில் கோயிலைப் பற்றிய குறிப்பு வருகின்றது என்றும் கூறுவர். அவர் காட்டும் பாடல்:

வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்று
உளம்கோயில் உள்ளம் வைத்துள்ளினேன் வெள்ளத்து
இளங்கோயில் கைவிடேல் என்று

—இரண். திருவந்-54

[நிற்பு—உகந்து வாழும் இடம்; வெள்ளம்-திருப் பாற்கடல்].

இதில் 'இளங்கோயில்' என்பதற்கு முதற்கோயில் பழுது பார்க்கப்படுங்கால் அதிலுள்ள இறைவனின் திருமேனியை எழுந்தருளச் செய்வதற்குத் தற்காலிகமாக அமைக்கப்பெறும் கோயில் என்னும் சரியான பொருளையே கூறுவர். இத்தகைய தற்காலிகக் கோயில் திருமலையில் காணப்பெறவில்லை என்று கூறும்போதுதான் தவறு நேரிடுகின்றது. இதனை ஈண்டுச் சற்று ஆய்ந்து அவர் காட்டும் சான்றுகளின் பொருத்தமின்மையைத் தெளிவாக புலப்படுத்துவேன்.

**ஆய்வு:** முதலில் அவர் கூறும் கருத்துகள் இன்னவை என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

**முற்கருத்து:** வேங்கடத்திற்கு "இளங்கிரி" என்ற பெயர் பூதத்தாழ்வாரால் தரப் பெற்றது என்பது (முதற் பாடல் —இரண். திருவத்-53)

**இரண்டாவது கருத்து:** 'இளங்கோயில்' என்ற இன்னொரு கோயில் இருந்ததாகக் கருதி, அத்தகைய இரண்டாவது கோயில் திருமலையில் இல்லையே என்று கூறுவது (இரண்டாம் பாடல்—இரண். திருவந்-54.)

முதற்பாசுரத்தின் பொருளை நோக்கும்போதே பூதத்தாழ்வார் மலையை 'இளங்கிரி' என்று குறிப்பிடவில்லை

என்பது தெரியவரும். மேற்குறிப்பிட்ட பாசுரத்தில் மலையை ஆழ்வார் ஒரு சமத்காரம் பொலிய வருணித்திருப்பது மேல்நோக்காகப் பார்ப்பவர்க்கே தெரியவரும். திருமலை யாத்திரையாக வரும் பெரியவர்கள் பலர்,

வெறியார் தண்சோலைத் திருவேங் கடமலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே.

—பெரு. திரு-4:8.

என்று குலசேகரப் பெருமாள் விரும்பினபடி, திருமலை ஏறும் வழியில் அன்பு வைத்து, திருமலைமேல் சென்று வாழ்வதைக் காட்டிலும், திருமலை வழியில் கிடப்பதையே பெரும் பேறாகக்கொண்டு அவ்வழியிலேயே வீற்றிருந்து எம்பெருமானைச் சிந்தை செய்கின்றனர். அப்போது மூச்சுவிடுதல், உடம்பு அசைத்தல் முதலிய ஒன்றுமின்றி வால்மீகி போன்ற மாமுனிவர்களைப்போல் யோக நிலையில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அவர்கள் கூந்தல் கற்றை முன்னின்று பின்தாழ்ந்திருப்பதைக் கண்ட பூங்கொடிகள் அவர்களை 'வீற்றிருக்கும் மனிதர்கள்' என்று தெரிந்து கொள்ளாமல், இவை 'சிறுமலைகள்' என்று எண்ணி அவற்றின்மீது படர்கின்றன. இங்ஙனம் பக்தர்கள் மேலும் பூங்கொடிகள் படர்ந்திருப்பது அற்புதமான காட்சியாக அமைகின்றது. இப்படிப்பட்ட காட்சிக்கு இடமான திருமலையே நாம் விரும்பும் திருப்பதியாகும். இங்கு வழியில் வீற்றிருக்கும் பெரியோர்களை '**இளங்கிரி**' (சின்னமலை) எனக் கூறினாரேயன்றி மலையை அன்று என்று அறியத்தக்கது. எனவே, திருமலையை **இளங்கிரி** என்று வருணிக்கவில்லை என்பது தெளிவு.

இரண்டாவது பாசுரத்திலும் சமத்காரமாக ஒரு கருத்து வெளியிடப் பெறுகின்றது. 'தென்னன் பொருப்பும் தெய்வ வடமலையும்' எனப் போற்றப்பெறும்

திருமாலிருஞ் சோலை மலை, திருவேங்கடமலைகளில் எம்பெருமான் வைத்துள்ள விருப்பத்தையே தம்முடைய திருவுள்ளத்திலும் வைத்திருக்கும் திறத்தை ஒரு சமத்காரமாக வெளியிடுகின்றார் ஆழ்வார். ஸ்ரீவசனபூஷணத்திலும் ''கல்லும் கனைகடலும்'' (பெரி.திருவந்-68) என்கிறபடியே இது சித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமாயிருக்கும்'' இளங்கோயில் கைவிடேல்' (இரண். திருவந்-54) என்று இவன் பிரார்த்திக்க வேண்டும்படியாக இருக்கும்'[12] என்றருளிச் செய்தது இப்பாசுரத்தை உட்கொண்டேயாகும் என்பது ஈண்டு அறியத்தக்கது. ஆழ்வார் எம்பெருமானை நோக்கி, ''மேற்குறிப்பிட்ட இரண்டு மலைகளிலும் நீ எவ்வளவு மகிழ்ச்சியுடன் வாழ்கின்றாயோ அவ்வளவு மகிழ்ச்சியுடன் என் இதயத்திலும் வாழ்கின்றாய் என்று கண்டறிந்த அடியேன் 'வெள்ளத்து இளங்கோயில் கைவிடேல்' என்று பிரார்த்திக்கின்றேன்'' என்கிறார் இப்பாசுரததில்.

இக்கருத்தை மேலும் தெளிவாக்குவது இன்றியமையாதது. 'வெள்ளம்' என்பது திருப்பாற்கடல். திருப்பாற்கடல் எல்லா அவதாரங்கட்கும் மூலக்கிழங்காக இருப்பது. விபவாவதாரங்களும் மற்றும் அர்ச்சாவதாரங்களும் இதன் மூலமாகவே நிகழ்வதாகக் கொள்ளும் கொள்கை வைணவர்களிடம் உள்ளது. இக்காரணம் பற்றித் திருப்பாற்கடல் 'இளங்கோயில்' எனப்படும். (இளங்கோயில்-பாலாலயம்). இக்காலத்தும் திருக்கோயில்களைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்க நேருங்கால் அங்குள்ள எம்பெருமான் திருமேனியைப் 'பாலாலயப் பிரதிஷ்டை' செய்வது வழக்கமாக இருப்பதை நடைமுறையில் காணலாம். வேறொரு பெருங்கோயிலில் சென்று சேர்வதற்கு

12. ஸ்ரீவச. பூஷ. சூத்திரம் 176, 177 (புருஷோத்தம நாயுடு பதிப்பு)

உறுப்பாகச் சிறுகக் கொள்ளும் கோயில் பாலாலயம் ஆகின்றது. திருமலை முதலிய திவ்விய தேசங்களும் அன்பர்களுடைய இதயமுமாகின்ற பெருங்கோயிலிற் சென்று சேர்ந்து வாழ்வதற்குப் பூர்வாங்கமாகவே, எம்பெருமான் திருப்பாற்கடலில் வாழ்வதாக ஆழ்வார் கள் அநுசந்திப்பார்களாதலால், அந்த அநுசந்தானத் திற்கு இணங்கத் திருப்பாற்கடலை **'இளங்கோயில்'** என்று சொல்லுதல் பொருத்தமுடைத்தல்லவா? பெருங்கோயிலிற் சென்று சேர்ந்த பிறகு இளங்கோயிலில் அன்பு இருக்கக் காரணம் இல்லாமையால், எம்பெருமானுக்கும் தமது திருவுள்ளமாகின்ற பெருங்கோயிலில் வாழ்வு அமைந்த பிறகு, இளங்கோயிலாகிய திருப்பாற்கடலில் அன்பு குறைந்துவிடும் என்றறிந்த ஆழ்வார், 'பிரானே, அவ் விளங்கோயில் நீ வைத்திருக்கும் அன்பினைக் குறைத்துக் கொள்ளலாகாது. என் உள்ளத்தில் வந்து சேர்வதற்கு அவ்விடம் பூர்வாங்கமாக இருந்ததனால், அதன்மீது அடியேன் நன்றி பாராட்டக் கடவேன். அதன் காரண மாகப் பிரார்த்திக்கின்றேன். அவ்விடத்தை நீ ஒருநாளும் கைவிடலாகாது' என்கின்றார். இதனால்,

'பணிக்கடல் பள்ளிகோளைப்
பழகவிட்டு ஓடிவந்துஎன்
மனக்கடலில் வாழவல்ல
மாயமணாள நம்பீ!''

—பெரியாழ். திரு-5:4-9

[பள்ளிகோளை—பள்ளி கொள்ளலை]

என்று பெரியாழ்வார் கூறுவதுபோல், திருப்பாற்கடலை யும் புறக்கணித்து விட்டுத் தம் இதயத்தில் வந்து சேரும் படியான பேரன்பு எம்பெருமானுக்கு விளைந்தமையைத் தெரிவிப்பதே பூதத்தாழ்வார் பாசுரத்தின் உட்பொருளா கும் என்பது ஈண்டு அறியத்தக்கது. இதனால் இளங்

கோயில் என்பது, திருமலையில் உள்ள இன்னொரு கோயில் என்று திரு. பிள்ளையவர்கள் கூறுவது சிறிதும் பொருத்தமுடைத்தன்று என்பது தெளிவாகும்.

இதுகாறும் கூறியவற்றால் சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை, முதலாழ்வார்கள், பாரதி வரை கூறுவது இப்பொழுதுள்ள திருவேங்கடமே என்பது தெளிவாகும்.

# 5. நாலாயிரமும் திருவேங்கடமும்*

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் தென்னாட்டில் வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் சிறந்த பக்திப் பனுவல். திருமால் திருவருளால் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அருள் மிக்குப் பாடிய இன் தமிழ்ப் பாக்களைக் கொண்டது. இதனுள் திகழும் பாசுரங்கள் ஒவ்வொன்றும் செவிக்கினிய செஞ் சொல்லாலாயது; சொற்சுவை பொருட்சுவைகளில் சிறந்தது. பிறவித் துயரறுத்து அந்தமிழ்ப் பேரின்பத்தை அளிக்கவல்லது. இவ்வாற்றான் ஒவ்வொரு பாசுரமும் ஒவ்வொரு நூல் என்னத்தக்க மாட்சிமையுற்று 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' என்று வழங்கலாயிற்று. இவ்வரிய நூல் ஆழ்வார் அருளிச்செயல், திவ்வியப் பிரபந்தம், ஸ்ரீகோசம் என்றும் வழங்கப்படும். இது மக்களின் கீழ் மையை அகற்றி மேன்மையளிக்கும் மறையாய் விளங்குத லின் இதனைத் தென்மொழி மறை என்பர் சான்றோர். வடமொழி மறையினும் இது சிறப்புடைய தென்பர். வட மொழி மறை பகவானுடைய அனந்த கல்யாண குணங் களைப் (Auspicious qualities) பேசத் தொடங்கி அக் குணங்களை முற்றிலும் சொல்ல முடியாமல் மீண்டது என்பர்; நம் தமிழ் மறையே 'உயர்வற உயர்நல முடைய வன்' (திருவாய் 1.1:1) என்று அப்பெருமானுடைய கல்

---

* சப்தகிரி (மார்ச்சு-1988) யில் வெளி வந்தது.

யாண குணங்களை முதலடியிலேயே பேசத் தொடங்கித் தெளிவாகக் கூறியுள்ளது. 'பக்திப் பனுவல்' என்ற நூல் வகையில் இதனைப் போன்ற பெருமையுடைய நூல்கள் இலக்கிய உலகில் மிகச் சிலவற்றைத்தான் சொல்ல முடியும்.

இந்தப் பக்திப் பனுவலில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற முதலாழ்வார்கள் மூவரும்; பெரியாழ்வாரும், அவர் அருமைத் திருமகள் ஆண்டாளும்; குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுர கவியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரும் ஆகிய பன்னிருவர் அருளிச் செய்த இருபத்து மூன்று பிரபந்தங்களும் திருவரங்கத் தமுதனார் இராமாநுசர்மீது பாடியருளிய 'இராமாநுச நூற்றந்தாதி' என்ற ஒரு பிரபந்தமுமாக இருபத்து நான்கு பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. ஆண்டாள் அரங்கநாதனுடன் ஐக்கியமான படியால் அவளையும், மாதவனைப் பாடாமல் மாறனிடரைப் (நம்மாழ்வார்) பாடிய மதுர கவிகளையும் ஆழ்வார்களுடன் சேர்க்காமல் ஆழ்வார்களைப் '**பதின்மர்**' என்று பேசும் ஸ்ரீ வைணவ சம்பிரதாயமும் உண்டு. நெஞ்சை நோக்கிக் கூறும் பாடல் ஒன்றில் முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார், ஆழ்வார்களைப் "**பதின்மார்**" என்று கூறுவதும், அவர்களின் அருளிச் செயல்களைப் '**பதின்மர் செந்தமிழ்**' என்று வழங்குவதும் இச்சம்பிரதாயத்தை நோக்கியே என்று கருதலாம்.

> "பதின்மர்செந் தமிழைநீ படிக்கிலாய் கேளாய்
> படித்தபேர் தாளையும் பணியாய்"[1]

என்பது அவர் வாக்கு. திவ்வியப் பிரபந்தத்திலுள்ள பாசுரங்கள் யாவும் 108 திவ்விய தேசங்களில் அர்ச்சாவதார

---

1. திருவேங். கலம்-24

மாக எழுந்தருளியுள்ள எம்பெருமான்களைப் பற்றியன வாகும். இப்பாசுரங்களின் பெருமையை வேதாந்ததேசிகர்,

செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே[2].

[தெளியாத-விளங்காமலிருந்த; மறை நிலங்கள்-வேதப் பகுதிகள்]

என்று சிறப்பித்துப் பேசுவர். இவற்றை நாம் பொருளுடன் குருமுகமாகப் பெற்றால் இதுவரை நமக்கு விளங்காமலிருந்த வேத விழுப் பொருளையெல்லாம் நன்கு அறிய முடியும் என்று அறுதியிடுவர் இந்தச் சுவாமி அவர்கள்.

**நாதமுனிகள் அடைவுபடுத்தியது:** ஆழ்வார்கள் வீடுபேறு பெற்று நெடுங்காலமான பிறகு காலவெள்ளத் தாலும் போற்றுவாரின்மையாலும் எப்படியோ மறைந்து போன இப்பாசுரங்களை நாதமுனிகள் என்ற வைணவப் பெரியார் அரும்பாடு பட்டுத் திரட்டி (சுவையான வரலாறு இதுபற்றி உண்டு) வேத வியாசர் வேதங்களை நான்காக வகுத்துத் தொகுத்ததுபோல, நாதமுனிகளும் இப்பாசுரங் களை நான்கு தொகுதிகளாக்கி ஒவ்வொரு தொகுதியிலும் கிட்டத்தட்ட ஆயிரம் பாசுரங்கள் அடங்கியிருக்குமாறு அடைவுபடுத்தினார். பாசுரங்களை அவர் '**இசைப்பா**' '**இயற்பா**' எனப் பிரித்து இசைப்பாக்களை மூன்று தொகுதிகளாகவும், இயற்பாக்களை ஒரு தொகுதியாகவும் அடைவுபடுத்தி வெளியிட்டார். இத் தொகுதிகள் வருமாறு:

---

2. தே. பி—40

**அ. இசைப்பாத் தொகுதிகள்:**

**1. முதலாயிரம்:** இதில் அடங்கிய பிரபந்தங்களும் அவற்றிலடங்கிய பாசுரங்களின் தொகையும்: 1. பெரியாழ்வார் திருமொழி 473; 2. திருப்பாவை 30; 3. நாச்சியார் திருமொழி 143; 4. பெருமாள் திருமொழி 105; 5. திருச்சந்தவிருத்தம் 120; 6. திருமாலை 45; 7. திருப்பள்ளி எழுச்சி 10; 8. அமலனாதிபிரான் 10; 9. கண்ணி நுண் சிறுத்தாம்பு 11. ஆக, பிரபந்தங்கள் 9க்குப் பாசுரங்கள் 947.

இவற்றுள் பெரியாழ்வார் திருமொழியிலுள்ள 'திருப்பல்லாண்டைத்' தனிப் பிரபந்தமாகக் கருதும் மரபும் உண்டு. 1 எண்ணுள்ளது பெரியாழ்வாராலும்; 2, 3 எண்களுள்ளவை ஆண்டாளாலும்; 4 எண்ணுள்ளது குலசேராழ்வாராலும்; 5 எண்ணுள்ளது திருமழிசைப் பிரானாலும்; 6, 7 எண்ணுள்ளவை தொண்டரடிப் பொடிகளாலும்; 8 எண்ணுள்ளது திருப்பாணாழ்வாராலும்; 9 எண்ணுள்ளது மதுரகவிகளாலும் அருளிச் செய்யப் பெற்றவை.

**2. பெரிய திருமொழி:** இதில் அடங்கிய பிரபந்தங்களும் பாசுரத் தொகையும்: 10. பெரிய திருமொழி 1084; 11. திருக்குறுந்தாண்டகம் 20; 12. திருநெடுந்தாண்டகம் 30. இம்மூன்று பிரபந்தங்களும் திருமங்கையாழ்வாரால் அருளிச் செய்யப்பெற்றவை; அடங்கிய பாசுரங்கள் 1134.

**3. திருவாய் மொழி:** இதில் அடங்கிய பிரபந்தமும் பாசுரத் தொகையும் 13. திருவாய்மொழி 1102, இப்பிரபந்தம் நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பெற்றதாகும்.

**ஆ. இயற்பாத் தொகுதி:**

**4. இயற்பா :** இதிலடங்கிய பிரபந்தங்களும் பாசுரத் தொகையும்: 14. முதல் திருவந்தாதி 100; 15. இரண்

டாம் திருவந்தாதி 100: 16. மூன்றாம் திருவந்தாதி 100; 17. நான்முகன் திருவந்தாதி 96; 18. திருவிருத்தம் 100; 19. திருவாசிரியம் 7; 20. பெரிய திருவந்தாதி 87; 21. திருவெழுக்கூற்றிருக்கை 1; 22. சிறிய திருமடல் 1; 23. பெரிய திருமடல் 1; 24. இராம நுசநூற்றந்தாதி 108; ஆக, பிரபந்தங்கள் 11க்குப் பாசுரங்கள் 701.

இவற்றுள் 14, 15, 16 எண்ணுள்ளவை முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோராலும்; 17 எண்ணுள்ளது திருமழிசைப்பிரானாலும், 18, 19, 20 எண்ணுள்ளவை நம்மாழ்வாராலும் 21, 22, 23 எண்ணுள்ளவை திருமங்கையாழ்வாராலும்; 24 எண்ணுள்ளது திருவரங்கத்து அமுதனாராலும் அருளிச் செய்யப் பெற்றவையாகும்.

**தொகுதிபற்றிய குறிப்பு:** இவண் கூறப்பெற்ற முதலாயிரம், பெரிய திருவாய்மொழி, இயற்பா என்ற பாகுபாடும் பிரபந்தங்களின் அமைப்பு முறையும் நாதமுனிகள் காலத்தில் ஏற்பட்டவையாகும். பிரபந்தங்களின் எண்ணிக்கை இத்தனை என்பது நாதமுனிகள் காலத்து வழங்கி வந்ததாகத் தெரியவில்லை. திருவரங்கத்தமுதனார் இராமாநுசர்மீது அருளியுள்ள 'இராமாநுச நூற்றந்தாதி' இராமாநுசர் காலத்தில் இயற்பாத் தொகுதியுடன் 24-ஆவது பிரபந்தமாகச் சேர்க்கப் பெற்றது. அக்காலத்திலிருந்து முதலாயிரத்திலுள்ள கண்ணிநுண் சிறுத்தாம்பைப் போலவே, இயற்பா இறுதியிலுள்ள **'இராமாநுச நூற்றந்தாதி'** எங்கணும் பெருவழக்காக ஓதப்பெற்று வருகின்றது. இன்றுள்ள திவ்வியப் பிரபந்தத்தின் பிரபந்தங்களின் தொகையும் பாசுரங்களின் தொகையும் வேதாந்த தேசிகர் காலத்தில் வரையறுத்துக் கூறப் பெற்றனவாகும். தேசிகர் திருப்பல்லாண்டைத் தனிப் பிரபந்தமாகக் கொள்ளவில்லை.

**பிரபந்த வகைகள்:** அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த திவ்வியப் பிரபந்தங்கள் இருபத்து நான்கில் 1 முதற் குறிப்பால் பெயர் பெற்றவை அமலனாதி பிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆகிய (2) 2. அந்தாதித் தொடையாய் பெயர் பெற்றவை முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, பெரிய திருவந்தாதி ஆகிய (4). 3. முதற் குறிப்பாலும் அந்தாதித் தொடையாலும் பெயர் பெற்றது நான்முகன் திருவந்தாதி (1). 4. பாடியவர்களால் பெயர் பெற்றவை பெரியாழ்வார் திருமொழி, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி ஆகிய (3). 5. அளவால் பெயர் பெற்றவை பெரிய திருமொழி, திருவெழுக் கூற்றிருக்கை (2). 6. பாடியவர் பெயராலும் அந்தாதித் தொடையாலும் பெயர் பெற்றது இராமநுச நூற்றந்தாதி (1). 7. பாவால் பெயர் பெற்றவை திருவாசிரியம் திருச்சந்த விருத்தம் ஆகிய (2). 8. செயலால் பெயர் பெற்றவை திருப்பாவை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய (2). 9. தன்மையால் பெயர் பெற்றவை திருவிருத்தம், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருமாலை ஆகிய (6). 10. சிறப்பால் பெயர் பெற்றது திருவாய்மொழி (1).

**திருவேங்கடத்தின் மீது மங்களாசாசனம்:** 108 திருப்பதிகளுள் கோயில், திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சி) என்ற மூன்றும் வைணவப் பெருமக்களால் மிகவும் சிறப்பாகப் போற்றப் பெறுவன. நம்மாழ்வாரின் முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில் திருவரங்கம் திருவெஃகா, திருவேங்கடம் என்ற மூன்று திருப்பதிகளின் பெயர்கள் மட்டிலும் வருவதால் (பாசுரம் 28, 26, 31) இவை இச் சிறப்புப் பெயர்கள் பெற்றனவாகப் பெரியோர் பணிப்பர். இந்த மூன்று திவ்விய தேசங்களுள் திருமலை (திருவேங்கடம்) நடுநாயகமாகத் திகழ்வது;

வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டனுள் முதலாகக் கூறப் பெறுவது. இதனைத் திவ்விய கவி,

தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான்—தேனேய்
திருவேங் கடந்தொழுதேம் தீய விபூதிக்குள்
கருவேம் கடந்தனெமிவ் வாழ்வு[3].

[சரணம்-உபாயம்; பலம்-உபேயம்; தேன்ஏய்-தேன் நிறைந்த; தீய விபூதி - லீலா விபூதி; மருவேம்-பொருந்தேம்]

என்று சிறப்பித்துப் பாடுவர். வேதாந்த தேசிகரும்,

கண்ணனடி யிணைஎமக்குக் காட்டும் வெற்பு;
கடுவினையர் இருவரையும் கடியும் வெற்பு;
திண்ணமிது வீடுஎன்னத் திகழும் வெற்பு;
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு;
புண்ணியத்தின் புகல்இதுஎனப் புகழும் வெற்பு;
பொன்னுலகிற் போகமெலாம் புணர்க்கும் வெற்பு;
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு;
வேங்கடவெற்பு எனவிளங்கும் வேத வெற்பே[4]

[கடியும்-ஒழிக்கும்; திண்ணம்-உறுதி; செறிந்த-நிறைந்த; புகல்-இருப்பிடம்; பொன் உலகு-பரமபதம்; புணர்க்கும்-அடைவிக்கும்]

என்று போற்றிப் புகழ்வர்.

இத்தகைய பெருமை வாய்ந்த திருவேங்கடத்தைப் பற்றிய பாசுரங்கள் 213 திவ்விய பிரபந்தத்தில் உள்ளன. இவற்றைப் பாடியவர்கள் பதின்மர்; பத்து ஆழ்வார்கள்.

3. நூற். திருப். அந்: 96
4. தே. பி. 82

எந்தெந்த ஆழ்வார்கள் எத்தனை எத்தனைப் பாசுரங்கள் அருளியுள்ளனர் என்பதன் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | 10 | பாசுரம் |
| 2. | பூதத்தாழ்வார் | 9 | ,, |
| 3. | பேயாழ்வார் | 19 | ,, |
| 4. | திருமழிசையாழ்வார் | 15 | ,, |
| 5. | திருப்பாணாழ்வார் | 2 | ,, |
| 6. | குலசேகராழ்வார் | 11 | ,, |
| 7. | பெரியாழ்வார் | 7 | ,, |
| 8. | ஆண்டாள் | 16 | ,, |
| 9. | திருமங்கையாழ்வார் | 62 | ,, |
| 10. | நம்மாழ்வார் | 62 | ,, |
| | மொத்தம் | 213 | பாசுரங்கள் |

திருவேங்கடத்தைப்பற்றியும் அங்கு எழுந்தருளியிருக்கும் நெடியோனைப் பற்றியும் ஆழ்வார்கள் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முயல்வது நம் கடமையாகும். இம் முயற்சியில் ஈடுபடுவதற்கு முன்னர் வைணவத் தத்துவத்தைப்பற்றிய ஒரு சிறு குறிப்பினை மனத்திலிருத்த வேண்டும். வைணவத் தத்துவம் **சித்து, அசித்து, ஈசுவரன்** என்று மூவகைப் பட்டிருக்கும் இதனைத் **'தத்துவ திரயம்'** (திரயம்—மூன்று) என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருக்கும். இந்த உறவினை **'சரீர-சரீரி பாவனை'** என்று போற்றியுரைப்பர் அப்பெருமக்கள். அசித்தும் எப்பெருமான் படைப்பாதலால், அதுவும் வழிபாட்டிற்குரியது.

சென்றுசேர்திரு வேங்கட மாமலை
ஒன்றுமேதொழ நம்வினை ஓயுமே.

—திருவாய் 3. 3:8

என்ற நம்மாழ்வார். பாசுரம் இக் கருத்திற்கு அரண் செய்வதாக அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்ன வுடனேயே எம்பெருமான் மனம் மகிழ்ந்து நமக்குத் திருவருள் பாலிக்கும் பெருமை பேசப்படுகின்றது. இதில்,

திருமா லிருஞ்சோலை மலைஎன்றேன்; என்னத்
திருமால் வந்துஎன் நெஞ்சுநிறையப் புகுந்தான்.

—திருவாய் 10.8:1

என்ற திருவாய்மொழிப் பாசுரம் இதற்குச் சான்றாக நிற்கின்றது. திருவேங்கடமாமலை பற்றிய நம்மாழ் வாரின்,

'அகலகில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகர்இல் புகழாய்! உலகம் மூன்று
உடையாய் என்னை ஆள்வானே!
நிகர்இல் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

—திருவாய். 6.10:10

என்ற பாசுரம் சரணாகதித் தத்துவத்தை விளக்குவதாக அமைகின்றது. இதில், 'நிகரில் புகழாய்' என்பதனால் **வாத்சல்யம்** என்னும் குணத்தையும், 'உலகம் மூன்று உடையாய்' என்பதனால் **சுவாமித்துவம்** என்னும் குணத் தையும் 'என்னை ஆழ்வானே' என்பதனால் **சௌசீல்யம்** என்னும் குணத்தையும் 'திருவேங்கடத்தானே' என்பத னால் **சௌலப்பியம்** என்னும் குணத்தையும் தெரிவிப்ப தாகப் பெரியோர் பணிப்பர். பிராட்டியின் புருஷகார பலத்தாலே ஈசுவரனுடைய சுதந்திரத் தன்மை மாய்ந்து

இந்த நான்கு குணங்களும் தலை எடுக்கின்றன. இந்த நான்கையும் பற்றாசாகக் கொண்டு சேதநன் ஈசுவரனைப் பற்றுகின்றான். இந்த நான்கு குணங்களுள் சௌலப்பியமே தலை சிறந்தது. காரணம், இந்தத் திருக் குணத்தைத்தான் அர்ச்சாவதாரத்தில் காண முடியும். சௌலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரமாகை யாலும்[5] இந்த அவதாரத்தைக் கண்டு பற்றுகைக்கு எளிதாக இருப்பதனாலும் சரணாகதிக்கு இஃது எளிதாக அமைகின்றது.

5. முமுட்சு-139

# 5. வேங்கடம் - மாலவனுக்கா? வேலவனுக்கா?*

'திருவேங்கடம் திருமாலுக்கு உரியதன்று; அது முருகனுக்கே உரியது. 'வைணவர்கள் முருகன் உருவத்தையே மாற்றித் திருமால் உருவமாகச் செய்துவிட்டார்கள்' என்று கற்றோர்களிடையே ஒரு பேச்சு நிலவி வருகின்றது. இக்கருத்தினைப் **பேராசிரியர் மு. இராகவய்யங்கார்** அவர்கள் மறுத்து பல்லாண்டுகட்கு முன்னர் ஓர் ஆய்வுக் கட்டுரை வரைந்துள்ளார். அஃது இன்னும் கற்றவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை என்று கருத வேண்டியுள்ளது. அதுபற்றிய கருத்துகளை மீண்டும் அறிஞர்கள் முன் வைக்கின்றேன்.

**ஆய்வுக்குரிய செய்திகள்:** 1. இன்னின்ன நிலம் இன்னின்ன தெய்வத்திற்கு உரியதென்று பாகுபடுத்தி நூற்பா செய்யுமிடத்தில்[1] தொல்காப்பியர் திருமாலுக்கு முல்லை நிலமாகிய காட்டையும், முருகனுக்கு குறிஞ்சி நிலமாகிய மலையையும் உரிமையாக்குவதால், மலைநிலமாகிய வேங்கடம் முருகனுக்கு உரியதேயன்றித் திருமாலுக்கு உரியதாகாது என்பது.

---

* சப்தகிரி (அக்டோபர்-1987)யில் வெளிவந்தது.

1. தொல். பொருள். அகத்திணை.-5.

2. 'ஓடியா விழவின் நெடியோன் குன்றம்' (அகம்-149) என்ற அகநானூற்றுத் தொடரில் 'நெடியோன் குன்றம்' என்பதற்கு 'முருகன் மலை' என்று பொருள் கொள்வதுபோல், சிலப்பதிகாரத்தில் வரும் 'நெடியோன் குன்றமும்' என்ற தொடருக்கும் (வேனிற் காதை) பொருள் கொள்ள வேண்டும் என்பது.

3. சிலப்பதிகாரம் காடு காண்காதையில் 'வீங்கு நீரருவி வேங்கடம்' என்பது முதல் 'செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்' என்பது வரையுள்ள அடிகள் இடைச் செருகல் என்பதும், முருகக் கடவுட்கே வழங்கியிருந்த அடைமொழிகளைப் பிற்காலத்தில் யாரோ ஒருவர் திருமாலுக்குப் பொருத்த வேண்டிச் 'செங்கண் நெடியோன்' எனச் சிறப்பித்தும் 'பகை வெண் ஆழியும் பால் வெண் சங்கமும்' என்று, இராமாநுசர் காலத்திற்கு முன்பில்லாத திருமாலடையாளங்களை இடையிற் புகுத்திப் போந்ததுவுமாகும் என்பது.

4. திருவேங்கடமுடையான் திருமேனியில் நாகாபரணமும் சடையும் உளளன என்பது எல்லார்க்கும் தெரிந்ததாதலால், இதுவே திருமாலுக்கு அங்கே சம்பந்தம் இல்லை என்பதற்குச் சான்று என்பது.

இந்த நான்கு காரணங்களையும் தமிழ் இலக்கிய அடிப்படையில் ஆராய முற்படுகின்றேன்.

**முதலாவது காரணம்:** குறிஞ்சி நிலத்துக் கடவுள் முருகனே யாதலால் 'நெடியோன் குன்றம்' என்று வேங்கடத்தை மாயோன் மலையாக இளங்கோ அடிகள் கூறியது நியாயம் ஆகாது என்று கூறும் வாதம் பொருத்த மற்றது. அதேகாதையில் பாண்டி நாட்டு அழகர் மலையையும் திருமாலிருஞ்சோலையையும் கூறியுள்ளார் அன்றோ? அம்மாதிரியே திருவேங்கடத்தையும் அவர் மாலவன்

குன்றமாகக் கருதுவது பொருத்தந்தானே. தொல்காப்பியர் ஒவ்வொரு கடவுளர்க்கும் நிலம் வகுத்திருப்பது உண்மையேயாயினும், மலைப்பகுதியில் திருமால் கோயில் கொள்வது உண்டென்றால் அது பிழை என்றும், அதனால் அத்திருமாலை மலைக்குரிய முருகனாக்கி விடுதல் தமிழ் நூல் முறை என்றும் துணிவதுதான் மிகவும் விநோதமான போக்காகும். எனவே, இப்போக்கினை ஏற்றுக் கொள்வோமாயின், ஆழ்வார் பெரு மக்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருமாலிருஞ்சோலை, திருக்குறுங்குடி, திருநீர்மலை, திருமெய்யம், சிங்கவேள் குன்றம் (அகோபிலம்) திருக்கடிகை (சோழ சிங்கபுரம், சோளிங்கர்), பதரிகாசிரமம் முதலான மலைப்பகுதியில் கோயில் கொண்டுள்ள திருமால்களை என்ன செய்வது? அன்றியும், வயல் (மருதல்) கடல் (நெய்தல்) நிலப்பகுதிகளில் கோயில் கொண்ட திருமால், சிவபிரான், முருகன் முதலிய தெய்வங்களையும் அவ்விதமே நீக்கிவிட்டு, அவ்வந்நிலங்களுக்கு உரியவராகத் தொல்காப்பியத்தில் வரையறுக்கப் பெற்ற இந்திரனையும் வருணனையும் முறையே குடியேற்ற வேண்டியதும் இன்றியமையாததாகிவிடும். இஃது அசம்பாவிதமான செயல்களன்றோ?

முருகக் கடவுள் மலை (குறிஞ்சி)த் தெய்வமாதலால் திருவேங்கடமலைக்கும் அவர் பொதுவில் அதிதெய்வம் என்பதில் மறுப்பில்லை. ஆனால், அவருக்குரிய மலையில் வேறெத் தெய்வமும் சிறப்பாகக் கோயில் கொள்ளக் கூடாது என்று துணிவதே நூல் வழக்கோடும் உலகவியல் போடும் மாறுபடுவதாகும். திருவேங்கட புராணத்தில் கூறப்பெற்ற வாமன சரிதத்தில், சுப்பிரமணியர் தாரகாசுரனைக் கொன்ற தோஷம் போகும்பொருட்டுத் திருவேங்கடத் திருமாலைக் குறித்துத் தவம் செய்தார் என்று கூறப்பெற்றுள்ளது. ஒரு கடவுளுக்குரிய கோயிலில் வேறு கடவுளரைக் காப்பாளராகவும் (க்ஷேத்திர பாலக

ராகவும்), வழிபடுபவராகவும் அமைக்கும் மரபு உண்டு என்பதை நாம் அறிவோம். எடுத்துக் காட்டாக, திருவரங்கம் பெரிய கோயிலின் கோயில் காப்பாளருள் விநாயகரும் (தும்பிக்கையாழ்வார்) ஒருவர். அங்ஙனமே திருவேங்கடத்திற்கு முருகவேள் கோயில் காப்பாளராக வும், திருமாலை வழிபடுபவராயுமுள்ளார்.

கந்தன் வேங்கடக் காவல் இயற்றிடற்
கெந்த நோன்பியற் றிப்பெற் றனன்

என்று திருவேங்கடப் புராண ஆசிரியரும்,

"'வந்திக்க வந்தனை கொள்'ளென்று
கந்தனும் மாதவரும்
சிந்திக்க வந்தனை வேங்கடநாத!"

—திருவேங். அந்.-3

[வந்திக்க-வணங்க; வந்தனை-வணக்கம்; கந்தன்-முருகன்; மாதவர்-முனிவர்; சிந்திக்க-தியானிக்க; வந்தனை-வந்து தோன்றினாய்].

என்று திவ்விய கவியும் பாடுவதாலும் அறியலாம். இங்ஙனமே, திருமாலின் முக்கிய இடமாகச் சங்க நூலான பரிபாடலிலும், சிலப்பதிகாரம் கூறும் திருமாலிருஞ் சோலைமலையிலும் முருகனுக்கு இடம் உண்டு. இதனை,

"—பஞ்சவர்தம்
பங்கங் களைந்தான்
பனிரெண்டு கையொருவர்
பங்கம் களைந்தான்
பதி"

—அழக. கலம்-8

என்று அழகர் கலம்பக ஆசிரியர் கூறுவதனாலும் அறிய லாம்.

**இரண்டாவது காரணம்:** அகநானூற்றுப் (அகம்-149) பாடல் அடியிலுள்ள 'நெடியோன்' என்ற சொல் முருகனைக் குறிப்பது உண்மையே யாயினும், இங்ஙனம் அருகிக் காணப்பெறும் வழக்கு திருமாலுக்குப் பெருகி வழங்கும் வழக்காக இருப்பது சிந்திக்கத் தக்கது. 'நெடியோன்' என்பது பொதுவாக 'உயர்ந்தோன்' என்ற பொருளுடையது. இச்சொல் மற்றத் தெய்வங்கட்கும் வழங்கும் ஒரு பொதுச் சொல்லாகும். அங்ஙனம் வழங்கும் போது அஃது அடையுடனாவது முன் தொடர்ச்சி பற்றியாவது அவர்களுள் ஒருவரைக் குறிக்குமேயன்றித் தனித்து நின்ற நிலையில் அங்ஙனம் அவர்களைக் குறிக்கும் ஆற்றலுடைய தன்று.

முந்நீர் விழவின் நெடியோன்

—புறம் 9

தேர்வீசிருக்கை நெடியோன்

—ஷை. 114

பொலந்தார் மார்பின் நெடியோன்

—மதுரைக்காஞ்சி அடி 61

நிலந்தரு திருவின் நெடியோன்.

—சிலப். 28 அடி 4

என்று பாண்டியனையும் பாரி போன்ற அரசர்களையும் அடையுடன் 'நெடியோன்' என்ற சொல்லால் பண்டை நூல்கள் கூறுவதைக் காணலாம் அங்ஙனமே,முருகவேளும் 'பல் பொறி மஞ்ஞை வெல்கொடியுயரிய, ஒடியா விழவின் நெடியோன்' (அகம் 149) என்றும், 'சேவலங் கொடிய நெடியன்' (பரிபாடல்) என விசேடத்துடனும், 'நெடியோய் நின்குன்றின் மிசை' (பரிபாடல்) என முன் தொடர்புபற்றியும் கூறுவது பண்டைய வழக்கே என்பது

ஈண்டு அறியத் தக்கது. ஆனால், திருமாலைக் குறிக்கும் போது 'நெடியோன்' என்பது அக்கடவுட்குத் தமிழில் அநாதியாய் வழங்கும் 'மால்', 'மாயோன்' என்பவை போன்ற திருநாமமாய், நிலங்கடத்தற்கு நீண்ட திரிவிக்கிரமன் என்ற பொருள் குறிக்கும் பெயராகும்.

'நெடியோன் குறளுருவாகி'
'நெடியோன் மார்பில் ஆரம்போல'
'நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி'

'நெடியோன் அன்ன நெடுங்கை'

—பெருங். 5.4:9

'நெடியவன் மூவகைப்படிவம்'

—ஷை. 2, 15:10

என்று அடைகளும் முன் தொடர்ச்சிகளும் இல்லாமல் தனித்து நின்றே திருமாலைக் குறிக்கும் ஆற்றலுடைய தாதலைக் காணலாம்.

திருவேங்கடமுடையானை 'நெடியோன்' என்ற பெயரால் இளங்கோவடிகள் கூறியது அப்பெருமானைத் திரிவிக்கிரமனாகக் குறிக்கும் ஆழ்வார் பெருமக்கள் வழக்குகட்கு மிகவும் ஒத்துள்ளதையும் காணலாம். 'நெடியோனே வேங்கடவா' (பெரு. திரு. 4:9) என்றார் குலசேகரப் பெருமாள். 'தாள் பரப்பி மண் தாவிய ஈசனை' (திருவாய் 3.3;11) என்று சிறப்பித்தார் சடகோபர். நச்சினார்க்கினியரும் 'நிலங்கடந்த நெடிமுடியண்ணலை நோக்கி உலகம் தவம் செய்து வீடு கபற்ற மலை' (சிறப். பாயிரம் உரை) என்று திரிவிக்கிரமனாகவே திருமலை எம்பெருமானைக் கூறி மகிழ்வதைக் காணலாம். தொல்காப்பியப் பாயிரத்திலேயே உரையாசிரியர் திருவேங்கடத்தைத் திருமாலுக்கு உரிய தாக்கி விட்டார் என்பது கருதத் தக்கது. இவ்வாறு 'மாலும் குறளாய் வளர்ந்திரண்டு

மாணடியால் ஞாலம் அளந்த' வரலாற்றால் திருவேங்கட முடையானைப் பெரியோர்கள் கூறி வருவதுபற்றி ஈட்டாசிரியரும் குறிப்பிடுகின்றார்: திருவேங்கடமுடையானையன்றோ கவிபாடிற்றெனனில், 'கொண்டாய் குறளாய் நிலமீரடியாலே' விண்டோய் சிகரத் திருவேங்கடம் மேய, அண்டா [பெரி. திரு. 1.10;4] என்றும், 'மண்ணளந்த இணைத் தாமரைகள்' என்றும், 'உலகம் அளந்த பொன்னடியே அடைந்துய்ந்து' என்றும் ஆழ்வார்கள் அருளிச் செய்யா நிற்பார்கள்; எல்லாரையும் திருவடிக் கீழ் இட்டுக் கொள்ளுகைக்காக நிற்கிற நிலையாலும், 'வரையாதே கானமும் வானரமுமான' இவற்றுக்கு முகங் கொடுத்துக் கொண்டு நிற்கிறபடியாலும் திருவேங்கட முடையானை ஸ்ரீவாமனனாகச் சொல்லக் கடவதிறே' என்பதாக.

வேதத்திலும் 'அகில புவனங்களையும் தன் மூவடிக் கீழ் ஒடுக்கியவன் எவனோ, அப்பெருமான் கிரியில் நிலை பெற்றருள்கின்றான்' என்ற கருத்து திரிவிக்கிரமனாகிய திருவேங்கடமுடையான் திருமலையில் நித்திய வாசம் செய்தருள்கின்ற சிறப்பையே குறிப்பதாக' விளங்குவர் பேராசிரியர் மு. இராகவய்யங்கார்.[2] இந்த விழுப்பொருளையே இழைத்தார் ஒருவருமில்லாமறைகளை இன்தமிழால், குழைத்தாராகிய குருகைப்பிரானும்'[3]

குன்றம் ஏந்திக்
　　குளிர் மழை காத்தவன்
அன்று ஞாலம்
　　அளந்த பிரான், பரன்

---

2. ஆராய்ச்சித் தொகுதி-கட்டுரை, 20-பக். 269

3. சட. அந்.—59

சென்று சேர் திரு
வேங்கட மாமலை.

—திருவாய். 3.3:8

என்று அருளிச் செய்தார். இக் கருத்தை உட்கொண்டே சுவாமி தேசிகனும்,

விண்ணவரும் மண்ணவரும்
விரும்பு வெற்பு;
வேங்கடவெற் பெனவிளங்கும்
வேத வெற்பே.[4]

என்ற அடிகளில் 'வேத வெற்பு' என்று சிறப்பித்து உரைத்தனர் போலும்.

**மூன்றாவது காரணம்:** ''வீங்கு நீர் அருவி... நின்ற வண்ணமும்''[5] என்று கூறியது இடைச் செருகல் என்று கூறியவரின் கூற்று தவறு என்பதை வேறோர் இடத்தில் விளக்கியுள்ளேன்[6]. சமாதானம் கூற முடியாததற்கெல்லாம் எளிதான வழியாக இக்காலத்தார் மேற்கொள்ளும் முறை 'இடைச் செருகல் என்பது; இதற்குக் கூறும் நியாயங்களும் விநோதமாக அமையும். 'பகையணங்காழியும் பால்வெண் சங்கமும்' (அடி 47) என்று திருமாலுக்குக் கூறப் பெற்ற அடையாளங்கள் இராமநுசர் எம்பெருமானின் திருமேனியில் நிறுவிய பின்புதான் திருவேங்கடம் திருமால் திருப்பதியானது என்று கருதுவது தவறானது. இது பழைய தமிழ் நூல்களையேனும் வழக்குகளையேனும் அறியாமல் கூறியதாகும். இராமாநுசருக்கு முன்பிருந்த ஆழ்வார் பெருமக்கள் திருவேங்கடமுடையானைத்

4. தே. பி. —32
5. சிலம்பு காடுகாண்—அடி—41-51
6. கட்டுரை—4 பக்.57 காண்க

திருமாலாகவே பாடியதை நாம் கருதுதல் வேண்டும். 'தாழ் சடையும் நீள் முடியும்' (மூன். திருவந். 63) என்று தொடங்கும் பேயாழ்வார் பாடல் அரி-அரன் வடிவமான திருவேங்கடமுடையான் வடிவைப் புகழ்ந்ததாகும். பொய்கையார் 'கைய வலம் புரியும் நேமியும்' (முதல். திருவந். 28) என்றருளிப்பதையும், குலசேகரப் பெருமாள் 'மின் வட்டச் சுடராழி' (பெரு. திரு. 4:3) என்று கூறியிருப்பதையும், திருமங்கை மன்னன் 'சுடராழிவலனுயர்த்த மல்லார் தோள் வடவேங்கடவாணன்' (பெரி. திரு.) என்று நுவன்றிருப்பதையும் நம்மாழ்வார் 'சீறா எரியும் திரு நேமி வலவா... திருவேங்கடத்தானே' (திருவாய் 6.10:2) என்று பணித்திருப்பதையும், பெரியாழ்வார் பெண் கொடி 'வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை வேங்கடவற்கென்னை விதிக்கிறியே' (நாச். திரு. 1:1) என்று அருளிச் செய்திருப்பதையும் காண்பார்க்கு இவ்வுண்மை விளங்காமற்போகாது. இவற்றையெல்லாம் யாதோ ஒரு காரணத்தால் புறக்கணித்தாலும் ஐயனாரிதனார் வாக்கிலுள்ள (புறப்பொருள் வெண்பாமாலை-பாடாண் படலம்-புலவராற்றுப் படை-43-எடு செய்யுள்) 'ஆழியவன்' என்ற தொடராவது இவ்வுண்மையை நிலைநாட்டாமற் போகாது.

இளங்கோ அடிகள் கூறிய திருவேங்கடச் சிறப்பு முருகனுக்கே உரியதென்றும், அது பின்னர் திருமால் திருப்பதியாகின்றது என்றும் கருதுவது இன்னொரு வழியாலும் பிழையுடையதாகின்றது. திருவேங்கடத்தின் பெருமையைக் கோவலனுக்குரைத்த மாங்காட்டு மறையோன் தன்னைத் திருமாலடியான் என்று குறிப்பிட்டுத் தான் திருமால் திருத்தலங்கட்குத் திருத்தலப் பயணமாகப் புறப்பட்டவன் என்று கூறிய கதை நிகழ்ச்சியைப் பாடுமிடத்தில் 'வீங்குநீர் அருவி... நின்றவண்ணமும்'[7] என்ற திருமலை வருணனை வருகின்றது. இதனை,

7. சிலம்பு-காடுகாண்-அடி. 41-51

40. (திருவரங்கத்து) திருவமர் மார்பன்
கிடந்த வண்ணமும்

..............................

51. (திருவேங்கடத்து) செங்கண் நெடியோன்
நின்ற வண்ணமும்
எங்கண் காட்டென்று
என்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை
மாங்காட் டுள்ளேன்

..............................

148. நீணிலம் கடந்த
நெடுமுடி அண்ணல்
தாடொழு தனயேன்
போதுவல்

என்ற அடிகளால் அறியலாம். இவ்வாறு கூறிய திருவேங்கட வருணனை முருகனுக்கு உரியதாயின், திருமால் திருத்தலப் பயணத்தின் பொருட்டுத் திருமாலிருஞ் சோலை மலையைச் சேவித்துக்கொண்டு வருவதாக அந்த மறையோன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதோடும், 'கோயில், திருமலை' என்ற பண்டைய வழக்கிற்கேற்பத் திருவரங்கச் சிறப்பை முன்பும், திருவேங்கடச் சிறப்பைப் பின்பும் வைத்து அவன் அவ்விடத்துக் கூறிய இயை போடும் மிகவும் முரணுதல் காணலாம். இதனாலும் திருவேங்கடம் திருமால் மலை என்பதே இளங்கோ வடிகளின் கருத்தென்பது மலை இலக்காக அமைகின்றது.

**வேறு சான்றுகள்:** திருவேங்கடம் திருமாற்கே சிறப்பாக உரியதலம் என்பதற்கு ஆழ்வார்களின் திருவாக்குகளேயன்றி வேறு பழைய சான்றுகளும் உள்ளன. அவற்றையும் ஈண்டு நிரல்படக் கூறுவது பொருத்தமாகும்.

1. 'வெறிகொள்...... அருளியும் ஆழியவன் (பு. வெ. மா. 230) என்ற ஐயனாரிதனாரின் தெளிவான வாக்கு முன்னர்க் காட்டப் பெற்றது.[8]

2. பாரதம் பாடிய பெருந்தேவனாரும் தம் காலத்துப் புகழுடன் திகழ்ந்த திருவரங்கம், திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சி), அழகர் மலை ஆகிய திருப்பதிகளை,

> ''தேனோங்கு நீழல் திருவேங் கடமென்றும்
> வானோங்கு சோலை மலையென்றும்-தானோங்கு
> தென்னரங்கம் என்றும் திருவத்தி யூரென்றும்
> சொன்னவர்க்கும் உண்டோ துயர்.''

என்று தம் பாரத்தில் பாடியுள்ளமை ஈண்டு கருதத் தக்கது.

3. ஆசிரிய மாலையுடையார் 'புடையது நெடுமால் வரைக்கப்புறம் புகினும்' என்று கூறுவர்.

4. இவற்றையெல்லாம் நன்கு அறிந்தே சிவபரத்துவம் 'கூறும் அத்வைதியாகிய நச்சினார்க்கினியர் கூறிய உரையிலடங்கிய கருத்து மேலே காட்டப் பெற்றது.

5. கம்பநாடரும் 'கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரேல் உம் கொடிய கொடுமை நீங்கி, வீடுறுதிர்' (கம்பரா. கிட்கிந்தை. நாடவிட்ட, 29) என்று கூறுவர். மேலும் அவர்,

> வலம்கொள் நேமி
> மழைநிற வானவன்
> அலங்கு தாளிணை
> தாங்கிய அம்மலை

---

8. கட்டுரை-4 பக்.53 காண்க.

விலங்கும் வீடுறு
  கின்றன மெய்ந்நெறிப்
புலங்கொள் வார்கட்
  கனையது பொய்க்குமோ

—கிட்கிந்தை-ஆறுசெல். 36

என்று அம்மலையைச் சிறப்பித்தனர்.

6. ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வாரும் 'திருவேங்கடம் நங்கட்குச் சமன் கொள் வீடு தரும் தடங் குன்றமே' (திருவாய் 3. 3:7) என்று பணித்தருளினர்.

7. முன்னோர் கூறிய மரபை நன்குணர்ந்த சிவப் பிரகாச அடிகளும் தாம் பாடிய கீகாளத்திப் புராணத்தில்

அரவணைச் செல்வன் வாழும்
  அந்தமிழ் நிலத்தின் எல்லைத்
திருமலை கண்டு ணர்ந்தோர்
  செறிவினைத் தொடர றுக்கும்
பெருமலை கண்டி றைஞ்சிப்
  பிறங்குவெள் ளருவி தாழும்
பொருவரும் ஏம கூடப்
  பொருப்பினை இனிது கண்டான்.

என்று பாடினார்.

8. திருவேங்கடத்துக் கோயில் காப்பவராக முருக வேள் அமைந்துள்ளார் என்று கூறப்பெறுவதற்கேற்ப அத்திருமலைச் செவ்வேளை அருணகிரியார் பாடியுள்ள னர் என்பதை நாம் அறிவோம். ஆயினும், அவர் திரு வாஞ்சியத்தைப் பற்றின 'இபமாந்தர் சக்ரபதி' என்ற திருப்புகழில் வேங்கடத்து அண்ணலை 'பிரசித்த நெடிய வன்' என்றும் 'உயர்சார்ங்க சக்ரகரதலன்' என்றும் கூறி

யுள்ளமை கருதத் தக்கது இதனால் அப்பெரியார் திருவுள்ளத்திலும் திருவேங்கடம் குறிஞ்சித் தெய்வமாகிய செவ்வேளுக்குரிய தாயினும், அது திருமாலின் புகழ் பெற்றத் திருக்கோயில்களில் ஒன்றாக இருப்பது தெளிவாகும்.

**நான்காவது காரணம்:** சீநிவாசக் கடவுளின் திருமேனியில் நாகாபாரணமும் சடையும் உள்ளமையால் அத் திருமேனி திருமாற்கு உரியதன்று என்று கூறும் செல்வேள் கட்சியினர் அத்திருமேனி முருகனுக்கு உரியது என்பதை நிலைநாட்டத் தவறுகின்றனர். செவ்வேளுக்கு வக்காலத்து வாங்கிச் அதனைச் சிவபிரானுக்கு உரிய தாக்குகின்றனர். சிவபிரானின் சம்பந்தம் ஒரு பக்கப் பார்வையாவே உள்ளது. திருவேங்கடமுடையானின் திருமேனி சிவபிரானை. ஒருபாற் கொண்டதாக உள்ளது. இந்த அரிஅரன் உருவினையே பேயாழ்வார் 'தாழ்சடையும் நீள் முடியும்' (மூன். திருவந். 63) என்று சிறப்பித்தார். பொய்கை யாழ்வாரும் 'அரன் நாரணன்' (முத. திருவந். 5), 'ஏற்றான் புள் ஊர்ந்தான்' (ஷை 74), 'பொன் திகழும் மேனிப் புரிசடை அப்புண்ணியனும்' (ஷை 88) என்ற மூன்று பாசுரங்களில் இவ்வடிவத்தைப் போற்றினார். திருமங்கை மன்னனும்,

''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து
பிரமனைத்தன் உந்தியே தோற்றுவித்து''

—பெரி. திரு. 3. 4:9

என்றும்,

'குழல்நிற வண்ண நின் கூறுகொண்ட
தழல்நிற வண்ணன்''

—பெரி. திரு. 3.4:9

என்றும் கூறுவர். இந்த அரி-அரன் திருவுருவம் இன்றும் கூர்ந்து சேவிக்கத் தக்கதாக உள்ளது. இத்தகைய திருக் கோலத்தை இந்த எம்பெருமான் கொண்டிருந்ததால், அரியோ அரனோ என்ற வாதம் உண்டாக அதனை உடையவர் தீர்த்து வைத்தார் என்ற செய்தி முன்னர்[9] விளக்கப்பட்டது.

திருமலை சிவபிரானுக்குரிய தலமாகக் கருதப் பெற்றிருப்பின் தேவாரம் முதலிய திருமுறைகள் இயற்றிய சிவனடியார்களுள் ஒருவரேனும் இம்மலை சிவனுக்குரியதாகப் பாடியிருப்பர். செவ்வேளின் படைவீடுகளைப் பற்றிப் பாடிய நக்கீரர் முதலிய சங்கத்தார் காலத்தேனும் முருகன் வரைப்பு என்று கொண்டாடியிருப்பர். இரண்டும் இல்லையாதலின், பண்டைக் காலத்திலேயே திருமலை சிவபிரானுக்கேனும் முருகவேளுக்கேனும் சிறப்புடைய தலமாகக் கருதப்பட்டதன்று என்பது தெளிவாகின்றது. சோழ அரசர்கள் காலத்தில் திருமலையில் ஏற்பட்ட கல்வெட்டுகளிலும் 'ஸ்ரீ வைணவர்கள் இரட்சை' 'இந் நிபந்தம் செய்தது ஸ்ரீ வைணவர்களோம்' எனக் காணப்படுவதாலும் திருமலைக் கோவில் உடையவருக்கு முன்பே சிறிதும் ஐயமின்றித் திருமால் குன்றமாகவே கொள்ளப்பட்டிருந்தது என்று தெளிந்து கொள்ள முடிகின்றது.

9. கட்டுரை—4 பக். 61-65 காண்க

# 7. முதலாழ்வார்கள் காட்டும் திருமலைக் காட்சிகள்*

இக்காட்சிகளைக் காண்பதற்குமுன் இம்மூன்று பக்த மணிகளைப்பற்றி ஒரு சிறு குறிப்பு. ஒருவரை ஒருவர் அறியாது ஓடித்திரியும் யோகிகளாக இருந்து வந்த இவர்களை எம்பெருமான் திருக்கோவலூரில் ஓர் இரவில் சந்திக்க வைத்த வரலாற்றை நாம் அறிவோம்.

நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் பனிமறுத்த பண்பாளா!—வாசல்
கடைகழியா உள்புகா காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி இனி.

—முத. திருவந். 68

[குன்று-கோவர்த்தனம்; பாயும்-சொரியும்; பனி-மழை; மறுத்த-தடுத்த; வாசல் கடை-வாசலுக்கு வெளியே; கழியா-வெளிப்பட்டுப் போகாமல்; உள் புகா-உள்ளே புகாமலும்; இடைகழி-நடுக் கட்டு].

என்பது இந்நிகழ்ச்சிக்கு அகச் சான்றாக அமைகின்றது. பரபக்திக்குப் பொய்கையாழ்வாரும், பரஞானத்

* சப்தகிரி (மார்ச்சு, 1986)யில் வெளிவந்தது.

திற்குப் பூதத்தாழ்வாரும், பரமபக்திக்குப் பேயாழ் வாரும் எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றனர் என்பது வைணவப் பெருமக்களின் கொள்கை. இந்த மூன்று நிலை களும் முத்தியிலே உண்டாகக் கூடியவையேயாயினும், மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கட்கு இருள் தருமா ஞாலத்தில் இருக்கும்போதே எம்பெருமான் திரு வருளால் விளைந்தன என்பதும் அவர்களின் நம்பிக்கை யாகும்.

இன்னொரு கருத்தும் ஈண்டு நினைவில் கொள்ளத் தக்கது. வைணவத் தத்துவம் **சித்து**, **அசித்து**, **ஈசுவரன்** என்று மூவகைப் பட்டிருக்கும். இதனைத் **'தத்துவத் திரயம்'** (திரயம்-மூன்று) என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருக்கும். இந்த உறவினைச் **'சரீர-சரீரி பாவனை'** என்று போற்றியுரைப்பர் அப்பெருமக்கள். அசித்தும் எம்பெருமான் படைப்பாதலால் அதுவும் வழிபாட்டிற் குரியது.

சென்று சேர் திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே.

—திருவாய் 3.3:8

என்ற நம்மாழ்வாரின் கருத்திற்கு இஃது அரண் செய்வ தாக அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்னவுட னேயே எம்பெருமான் மனமகிழ்ந்து நமக்குத் திருவருள் பாலிக்கும் பெருமை பேசப்பெறுகின்றது.

திருமா லிருஞ்சோலை
மலைஎன்றேன்; என்னத்
திருமால் வந்துஎன்
நெஞ்சுநிறையப் புகுந்தான்.

—திருவாய். 10.8:1

என்ற திருவாய்மொழி இதற்குச் சான்றாக நிற்கின்றது. எனவே, அசித்தாகிய வேங்கடமலையில் சில காட்சிகளைக் காண்டலும் இறையநுபவம் பெற்றதாக அமைகின்றது. இத்தகைய பல அழகிய காட்சிகளை முதலாழ்வார்கள் காட்டிச் செல்கின்றனர். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

**பொய்கையார் காட்டுபவை:** ஒரு காட்சி இது. திருவேங்கடமலையில் வாழும் குறவர்கள் தங்கள் தினைப் புனங்களில் பட்டி மேயும் யானையைத் துரத்துவான் வேண்டிப் பரண்களில் இருந்தபடியே தங்கள் கையிலிருந்த மாணிக்கக் கட்டியை யானையின்மீது எறிகின்றனர். அப்போது அங்குத் திரியும் மலைப்பாம்புகள் யானைமீது கண்ட எறிந்த இரத்தினத்தைக் கண்டு யானையை மேகமாகவும் இரத்தினத்தை மின்னலாகவும் எண்ணி மயங்குகின்றன; மின்னலுடன் இடி தோன்றும் என அஞ்சி அப்பாம்புகள் புற்றினுள் புகுந்து கொள்கின்றன.

ஊரும் வரிஅரவம் ஒண்குறவர் மால்யானை
பேர எறிந்த பெருமணியைக் காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்
எம்மென்னும் மாலது இடம்.

—முதல் திருவந். 38

[ஊரும்-திரியும்; வரி-கோடு; அரவம்-பாம்பு; ஒண்-அழகிய; மால்-பெரிய; மணி-மாணிக்கம்; கார்-மேகம்; எம்-எங்களுடையவன; மாலது-எம்பெருமானுடைய.]

என்பது பொய்கையாழ்வார் சித்திரிக்கும் சொல்லோவியம்.

**மற்றொரு காட்சி இது:** புனங்களில் பட்டிமேயும் யானையைத் துரத்தும் குறவர்கள் ஒரு கையில் அம்பு

தொடுக்கப்பெற்ற வில்லையும் மற்றொரு கையில் கொளுத்தின தீவட்டியையும் கொண்டு யானையை அதட்டிச் செல்லுகின்றனர். யானை வெருவி ஓடுங்கால் விண்ணினின்றும் விழும் மீன் தானாக அதன் வழியில் பேரொளியுடன் விழுவதைக் கண்டு அதனைக் குறவர்களின் கைத் தீவட்டி என்று மயங்கி மேல்செல்லாது அப்படியே திகைத்து நின்று விடுகின்றது.

பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ
வெஃருவிப் புனந்துறந்த வேழம் இருவிசும்பில்
மீன்வீழக் கண்டஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று.

—முதல் திருவந். 40

[பகழி-அம்பு; செந்தீ-தீவட்டி; புனம்-கொல்லை; வேழம்-யானை; விசும்பு-ஆகாயம்; மேல்-ஒரு காலத்தில்; அசுரர் கோன்-இரணியன்; உகந்தான்-மகிழ்ந்தான்; குன்று-திருமலை].

என்பது இந்த ஆழ்வாரின் சொல்லோவியம்.

**பூதத்தார் காட்டுபவை:** ஒரு காட்சி இது. திருமலையில் மதப் பெருக்கால் செருக்கித் திரிகின்றது ஒரு களிறு. வழியில் அது தன் சிறந்த பிடியைக் காண்கின்றது. அதனைமீறி அப்பால் செல்லமாட்டாது அதற்கு இனிய உணவு ஈந்து அதன் மனம் நிறைவிக்க விரும்புகின்றது. அதன்முன் நின்று இரண்டே கணுக்களையுடைய மூங்கில் குருத்தொன்றைப் பிடுங்கி அருகில் ஒரு மலை மூழைஞ்சினுள்ளிருக்கும் ஒரு தேனடையில் தோய்த்து அப்பிடியின் வாயில் ஊட்டுகின்றது. இதனை ஆழ்வார்,

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்நின்று
இருகண் இளமூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடங்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை.

—இரண். திருவந். 75

[வேழம் யானை; பிடி-பெண் யானை; இருகண்-இரண்டு கணுக்களையுடைய; வண்ணன்-நிறத்தன்; வரை-மலை]

என்று சொல்லோவியமாக்கிக் காட்டுவார். இத்தகைய ஒரு காட்சியைத் திருமங்கையாழ்வார் இமயமலையின் காட்சியாகக் காட்டுவார். திருப்பிரிதி என்ற திவ்விய தேசத்தை வருணிக்கும் இந்த ஆழ்வார் இக்காட்சியைக் காட்டுகின்றார்.

வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர்முளை
அளைமிகு தேன்தோய்த்து
பிரச வாரிதன் இளம்பிடிக் கருள்செய்யும்
பிரிதிசென் றடைநெஞ்சே
—பெரி. திரு. 1. 2:5

[வரைசெய்-மலை போன்ற; களிறு - ஆண் யானை; வெதிர்-மூங்கில்; வளர் முளை-வளரும் இளமூங்கில்; அளை முழஞ்சு; பிரசவாளி-தேன் வெள்ளம்; அருள் செயும்-கொடுக்கும்.]

என்பது இக்காட்சியைச் சித்திரிக்கும் ஆழ்வாரின் சொல்லோவியம். இங்கு ஆண் யானை தன் பெண் யானைக்கு ஒரு தேன் தோய்ந்த மூங்கிற் குருத்தைத் தந்து அதனை மகிழ்விக்கின்றது. எம்பெருமான் பிராட்டியை உவப்பிக்கும்படியைக் கூறுதல் இதற்கு உள்ளுறைப் பொருள். எம்பெருமானார் திருமலைக் கெழுந்தருளித் துவயத்தின் பொருளைத் திருமந்திரத்தோடும் சரம சுலோகத்தோடும் உபந்யசித்த பொழுது அனந்தாழ்வான் இப்பாசுரத்தை உடையவர் பரமாக நிர்வகித்தருளினார்.

இந்தக் காட்சியை நினைவிற்கொண்ட கம்பநாடன், சித்திரகூட மலையில் இத்தகைய காட்சி யொன்றினைச் சீதைக்கு இராமன் வாயிலாகக் காட்டுவான்.

உருகு காதலில் தழைகொண்டு
மழலைவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினை
முழைநின் றும் வாங்கி
பெருகு சூழ்இளம் பிடிக்குஒரு
பிறைமருப் பியானை
பருக வாயினில் கையில் நின்று
அளிப்பன பாராய்.[1]

[முருகு-மணம்; நாறு-வீசுகின்றன; முழை-கல் இடுக்கு; பெருகு சூல்-முதிர்ந்த கருப்பம்; மருப்பு-தந்தம்]

இங்கு ஓர் ஆண் யானை சூல்கொண்டுள்ள தன் இளம் பிடியின்மீது அளவற்ற அன்பு கொண்டுள்ளது. ஒரு மலையிடுக்கில் தேன்கூடு கட்டப்பெற்று அடையில் தேன் ததும்பி நிற்கின்றது. உருண்டை வடிவில் காணப்பெறும் அதனைத் தேனீக்கள் சூழ்ந்து மொய்த்துக் கொண் டுள்ளன. ஆண் யானை அண்மையிலுள்ள மரத்தினின்று ஒரு தழைக் கொத்தினை ஒடித்து அதனைக் கொண்டு அவ்வண்டுகளை ஓச்சுகின்றது. பிறகு அந்தத் தேனடை யினை அப்படியே அசையாமல் தனது துதிக்கையினால் வாங்கிச் சூல் நிறைந்து பருகுவதற்கும் சிரமப்படும் தன் பிடியின் வாயில் வைத்துப் பருகுமாறு செருகுகின்றது. இந்த யானை மூங்கில் குருத்தினை விரும்பவில்லை. தேனடையை மட்டிலும் அளிக்க விரும்புகின்றது போலும்.

முன்னோர் மொழிப்பொருளே
யன்றி அவர் மொழியும்
பொன்னேபோல் போற்றுவோம்.[2]

1. கம்ப. அயோத்தி—சித்திர கூட-10
2. நன்னூல்-9

என்னும் தமிழ் இலக்கிய மரபினையொட்டிப் பாடும் இயல்பினையுடையவர் நம் தமிழ்க் கவிஞர்கள் என்பதை இப்பாசுரங்கள் காட்டுகின்றன. பூதத்தாழ்வாரைத் திருமங்கையாழ்வாரும் இவர்கள் இருவரையும் கம்ப நாடனும் பின்பற்றி இருப்பதைக் கண்டு மகிழலாம். இதனால் ஒருவரையொருவர் பார்த்தெழுதினார் என்று கூறுதல் கூறுவோரின் கடுகு உள்ளத்தைக் காட்டுகின்றது.

**இன்னொரு காட்சி:** திருமலையில் வாழும் வானரங்கள் எம்பெருமானுக்குச் செய்யும் பூசனைகளைக் காட்டுகின்றார்.

போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் போதுள்ளம்!—போதும்
மணிவேங் கடவன் மலரடிக்கே செல்ல
அணிவேங் கடவன்பேர் ஆய்ந்து.

—இரண். திருவந். 72

[போது-விடியற்காலம்; போது-மலர்; அரிந்து-கொய்து; பேர்-திருநாமம்; போது-மலர்]

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. அதிகாலையில் முனிவர்கள் துயில் விட்டெழுமாப்போலே குரங்குகளும் எழுந்து பூத்த சுனைகளிலே சென்று நீராடி அங்குள்ள செவ்வி மலர்களைக் கொய்து கொண்டு போய்த் தன் சாதிக்கேற்ற வாறு ஏதேனும் ஒன்றைத் துதிசெய்து பணியா நிற்கும் என்கின்றார்.

இதனை அடியொற்றியே கம்பநாடனும் சித்திர கூடக் குரங்குகளின் செயல்களை எடுத்துக் காட்டுவான். இங்குள்ள குரங்குகள் மூப்படைந்து கண் இடுகிப்போய் வழியறியாது வருந்தும் மாதவர்க்கு அவர் செல்ல வேண்டிய அருநெறிகளைக் காட்டுகின்றன.

இடுகு கண்ணினர் இடறு
 மூப்பினர் ஏக
நெடுகு கூனல்வால் நீட்டின
 உருகுறு நெஞ்சகக்
கடுவன் மாதவர்க்கு அருநெறி
 காட்டுப காணாய்[3].

[இடுகு-இடுகிய; இடம்-துன்பம்; ஏக-செல்ல; நெடுகு கூனல்-மிக்க கூனையுடைய; மாதவர்-தவசிகள்]

என்பது கம்பன் படைத்த சொல்லோவியம். இங்கு இராமன் சீதைக்குப் பல சித்திரகூடமலைக் காட்சிகளைக் காட்டுகின்றான். இன்னும் சில மந்திரிகள் சிலம்பின் நூல், பஞ்சின் நூல் இவற்றை ஆராய்ந்து தெரிந்து அந்தணர்க்கு அளிக்கின்றன. கடுவன்கள் முனிவர்கட்கு மாங்கனிகளை அளிக்கின்றன (33). இங்ஙனம் குறிஞ்சி நிலக்காட்சிகள் வழிவழியாகப் புதியபுதிய கற்பனைப் போக்குகளுடன் இலக்கியங்களில் புலவர்களால் காட்டப் பெற்று அறிவுக்கு விருந்தாக அமைகின்றன. குறிஞ்சி நிலக்காட்சி சித்திரிப்பில் கபிலர் வல்லவர். அவர்தம் சங்கப் பாடல்களில் இக்காட்சிகளைக் கண்டு மகிழலாம். தத்துவஞானியர் இந்த அசித்துக் காட்சிகளிலும் ஆழங் கால்படுகின்றனர்.

**பேயாழ்வார் காட்டுபவை:** ஒரு காட்சி இது. பேயாழ்வார் காட்டும் யானையோ 'ஆதிமூலமே!' என்று ஓலமிட்டழைத்த கசேந்திரன் மரபுவழி வந்தது போலும். அது புரியும் வழிபாட்டுச் செயலை ஒரு சமத்காரம் பொலியப் பேசுகின்றார் ஆழ்வார். வழிபாட்டுக்குச் செல்லும் அடியார்கள் வாய் கொப்பளித்துக் கை கால்

3. கம்ப-அயோத்தி—சித்திர கூட-30

களை நீரால் தூய்மைசெய்து கொண்டு மலர்களை எடுத்துப் போவது வழக்கமாகும். திருமலையிலுள்ள ஆண் யானையொன்று இந் நெறியை மேற்கொள்ளுகின்றது. இக்காட்சியினை ஆழ்வார்,

புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி
உகுமதத்தால் கால் கழுவிக் கையால்—மிகுமதத்தேன்
விண்ட மலர்கொண்டு விறல்வேங் கடவனையே
கண்டு வணங்கும் களிறு.

—மூன். திருவந். 70

[புகு-வாயில் புகும்; வாய் பூசுதல்-கொப்பளித்தல்; மிகுமதம்-அதிக மதம்; விறல்-மிடுக்கு; களிறு-ஆண் யானை]

என்ற பாசுரத்தால் காட்டுவர். கன்னத்திலிருந்தும் மத்தகத்திலிருந்தும் பெருகியொழுகும் மத நீரால் வாய் கொப்பளிக்கின்றது யானை. அருவி போல் கால்வரை பெருகி வழியும் மதநீரினால் கால் கழுவுகின்றது. இங்ஙனம் திருமலையிலுள்ள ஐயறிவு விலங்குக்கும் தன்னை வழிபடும் ஞானத்தைத் தரக்கூடியவன் திருமலையப்பன் என்பது ஆழ்வார் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்.

**இன்னொரு காட்சி:** இன்னொரு யானையின் செயலையும் அதன் முடிவையும் காண்போம். ‘மத யானை போல் எழுந்து மாமுகில்காள்!’ (நாச். திரு. 8:9) என்று ஆண்டாள் வருணித்ததை நாம் அறிவோம். திருமங்கை மன்னனோ,

கரிய மாமுகில் படலங்கள் கிடந்துஅவை
முழங்கிடக் களிறு

—பெரி. திரு. 1.2.10

என்று திருப்பிரிதித் திருமொழியில் மேகத்தை யானை யோடு ஒப்பிட்டுப் பேசுவர். திருமலையில் ஆண் யானை யொன்று கரிய மலை முகட்டில் படிந்திருந்த முகிற்பட லத்தை எதிரியான ஒரு யானையென்று மயங்கிப் பெரிய வேகத்துடன் சென்று துதிக்கையால் குத்துகின்றது. இத னைக் கண்ட யாளியொன்று 'இக் களிற்றுக்கு இவ்வளவு மதமா?' என்று சினந்து ஓடிவந்து அந்த யானையின்மீது பாய்ந்து ஓங்கி அறைந்து அதன் கொம்புகளை முறிக்கின் றது. யானையும் வாய்விட்டுப் பிளிறிக் கொண்டு மடிந் தொழிகின்றது. ஆயினும், அது சினந்தணியாமல் அங் கேயே நின்ற வண்ணம் பெரு முழக்கம் செய்து மலை யையே அதிரவைக்கின்றது. இப்படி ஒரு காட்சி.

களிறு முகில்குத்தக் கையெடுத் தோடி
ஒளிறு மருப்பொசிகை யாளி—பிளிறி
விழகொன்று நின்றதிரும் வேங்கடமே! மேனாள்
குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று

—மூன். திருவந். 71

[களிறு-ஆண் யானை; முகில்-மேகம் கை-துதிக்கை: ஒளிறு-விளங்குகின்ற; ஓசி-முறிக்கின்ற; குழகன்று-இளங்கன்று (வத்சலாசுரன்)]

என்பது ஆழ்வார் காட்டும் சொல்லோவியம்.

**பிறிதொரு காட்சி:** திருவேங்கட மலையில் களி றொன்று தன் பிடியுடன் கலந்திருக்கும்பொழுது ஊடல் நிகழ்கின்றது. உடனே அது தன் பேடையை விட்டுப் பிரிந்து இங்குமங்கும் திரிகின்றது. தன் சினத்திற்குப் போக்குவீடாகத் தன் கொம்பினை மணிப்பாறைகளில் குத்துகின்றது. அப்பொழுது அதன் கொம்பினின்றும் முத்துகள் உதிர்கின்றன.

புரிந்து மதவேழம் மாப்பிடியோ டூடி
திரிந்து சினத்தால் பொருது—விரிந்தசீர்
வெண்கோட்டு முத்துதிர்க்கும்
வேங்கடமே! மேலொருநாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை.

—மூன். திருவந். 45

[வேழம்-யானை; பிடி-பெண் யானை; கோடு-கொம்பு; மண்-பூமிபிராட்டி]

என்பது ஆழ்வார் காட்டும் சொல்லோவியம். திருமலையிலுள்ள பளிங்குப் பாறைகளிலே யானை தன் நிழலைக் கண்டு எதிரி யானை என்று மயங்கி அதனோடு போர் செய்ததென்றும் கொள்ளலாம்.

**மற்றொரு காட்சி:** திருவேங்கட மலையின் உயர்ச்சியைக் காட்டும் போக்கில் மூங்கில்களின் வளர்ச்சியையும் காட்டுகின்றார் இந்த ஆழ்வார். திருமலையின் மூங்கில் மதி மண்டலத்தளவும் நீண்டு வளர்ந்துள்ளது. அது மதியைப் பற்றிக் கொண்டிருக்கும் இராகுவையும் தகர்த்துக் கிரகணத்தையே விடுவித்து விடுகின்றது. 'திங்களை போய் வென்று, விளங்கு மதிகோள் விடுக்கும் வேங்கடமே!' (72)என்பது ஆழ்வாரின் திருவாக்கு! (கோள்—கிரகணம்). இத்தகைய பல காட்சிகளைத் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரும் காட்டுவார்.

இந்த ஆழ்வாரும் ஒரு குரங்கின் செயல்களைக் காட்டி மகிழ்கின்றார். தெளிவான கற்பாறையின்மீது உட்கார்ந்து கொண்டுள்ளது பெண் குரங்கொன்று. அது தனக்குச் சார்பாக உள்ள ஆண் குரங்கொன்றை நோக்கி விண்ணில் வெண்மையாகத் தோன்றும் திங்களைப் பிடித்துத் தருமாறு வேண்டுகின்றது.

தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி
அளிந்த கடுவனையே நோக்கி—விளங்கிய
வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே!

—மூன். திரு. 58

[சிலாதலம்-கற்பாறை; மந்தி-பெண்குரங்கு; கடுவன்-ஆண் குரங்கு; மதியம்-திங்கள்]

என்பது பேயாழ்வாரின் சொல்லோவியம். இப்பாசுரத்தால் திருமலையின் உயர்ச்சி காட்டப்பெறுகின்றது.

இயற்கையை நாம் காண்பது ஒரு வகை; நம் மனத்தில் அஃது ஒருவித சலனத்தையும் ஏற்படுத்துவதில்லை. அது கவிஞர்களிடம் பல்வேறு வித சலனங்களை ஏற்படுத்திப் பல்வேறு கற்பனைக் காட்சிகளைப் படைக்கத் தூண்டுகின்றது. கவிஞர்கள் பக்தர்களாக இருப்பின் அவர்கள் பிறிதோர் உலகத்தையே படைத்து விடுகின்றனர்; அதில் தத்துவக் கருத்துகளையும் மிளிரச் செய்துவிடுகின்றனர். இவை இயற்கையைத் துய்ப்பவர்கட்கு எழிலைக் காட்டி மகிழ்விக்கின்றன; முருகுணர்ச்சியையும் தூண்டுகின்றன. பக்திக்கண் கொண்டு நோக்குபவர்கட்கு பரவசத்தை ஏற்படுத்திப் பரமனின் விசுவரூப தரிசனத்தையே காட்டி விடுகின்றது. இத்தகைய பாசுரங்களைப் படித்து அநுபவிக்கக் கற்றுக் கொள்ளாவிடில் நமக்கு இவ்வுலகில் ஆறுதல் அளிக்கும் பொருளே இல்லை என்று ஆகிவிடும்.

# 8. பக்திசாரர் கருத்தில் திருவேங்கடம்

ஒரு சமயம் அத்திரி வசிட்டர், பிருகு பார்க்கவர், புலத்தியர், அங்கிரசு முதலான பிரம்ம இருடிகள் பலரும் சத்தியலோகம் சென்று நான்முகனைத் திருவடி தொழுது கூப்பிய கையராய்"நாங்கள் பூலோகத்தில் தவம் இயற்றக் கருதுகின்றோம். சிறந்த இடத்தை உறுதி செய்து சொல்ல வேண்டும்" என்று வேண்டினர். நான்முகனும் தேவ சிற்பியான விசுவகர்மாவை வரவழைத்து இம் முனிவர்கள் காணுமாறு துலாக்கோல் நாட்டி ஒரு தட்டில் பூமியை யும், மற்றொரு தட்டில் **திருமழிசை**[1] என்னும் ஊரையும் வைத்து நிறுக்கச் செய்தார். தேவ தச்சன் அங்ஙனமே செய்தான். பூமி வைக்கப்பட்ட தட்டு இலேசுபட்டு மேலோங்கி நின்றது. திருமழிசை வைக்கப்பெற்ற தட்டு கனம் பெற்றுத் தாழ்ந்து நின்றது. இவ்வேறுபாட்டை நான்முகன் அம்முனிவர்கட்குக் காட்டித் திருமழிசைக்கு **'மஹீஸார க்ஷேத்திரம்'** என்ற காரணப் பெயரிட்டு அவண் சென்று தவம் இயற்ற அநுமதி வழங்கி அவர்களை அனுப்

1. **திருமழிசை:** இந்தத் திருத்தலம் சென்னை திருவள்ளூர் (திருஎவ்வுளூர்) என்ற பேருந்து வழியில் பூவிருந்த வல்லியைத் தாண்டி சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது.

பினான். இந்த வரலாற்றை நினைவு கூர்ந்த வண்ணம் திருக்கச்சி நம்பிகள்,[2]

உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும், மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.[3]

[புகழக்கோல்-துலாக்கோல்]

என்று தனியன் அமைத்துக் காட்டினார்.

இந்தத் திருத்தலத்தில் அவதரித்தவர் **திருமழிசையாழ்வார்**. இவர் பேயாழ்வாரின் சீடராகிப் **பக்திசாரர்** என்ற புதிய திருநாமமும் பெறுகின்றார். இவர் அருளிச் செய்த திருச்சந்த விருத்தத்திலும்[4] நான்முகன் திருவந்தாதியிலும்[5] திருவேங்கடம் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. இவற்றால் இவர் கருத்தில் திருவேங்கடம் பெற்ற பெருமையை அறிந்து கொள்ள முடிகின்றது. தம்முடைய திருவுள்ளத்தில் எம்பெருமான் பேராமல் நிலைபெற்றிருக்கின்ற இருப்பைக் கூறும் போக்கில்,

'திற்பதுமோர் வெற்பகத்து'

---

2. **திருக்கச்சி நம்பிகள்:** உடையவரின் ஆசாரியர்களில் ஒருவர். பிறந்த ஊர் பூவிருந்தவல்லி. பிறப்பால் பொன் வாணிகர். கச்சிநகர்ப் பேரருளாளனுக்கு ஆலவட்ட கைங்கரியம் புரிந்து வந்தவர். ஆளவந்தாரின் திருவடி சம்பந்தி.
3. திருச்சந்த விருத்தத் தனியன்.
4. திருச்சந். விருத்.-65
5. நான். திரு. 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 90.

என்று திருவேங்கடத்தில் எம்பெருமான் நின்ற திருக் கோலத்தில் இருப்பதைக் காட்டுவார்.

**வேங்கடம்-சூழ்நிலை :** திருமலையில் மழைபோல் சொரிகின்ற அருவிகள் (ஆகாய கங்கை, பாதாள கங்கை, கபிலதீர்த்த அருவி போன்றவை) அங்குமிங்கும் கிடக்கின்ற இரத்தினங்களைத் திரட்டிக்கொண்டு வந்து இழிகின்றன. மலைப்பாம்புகள் அவற்றை மின்னல் என்று மயங்கி புற்றிலே சென்று மறையும். களிற்றி யானை அந்த இரத்தினங்களின் ஒளியைக் கண்டு அவற்றை நெருப்புச் சுவாலைகள் என்று மயங்கி அஞ்சி நிற்கும்; பாம்பின் வாய்ப்பட்டதென்று வருந்திச் சோராத துயரத்துடன் அஞ்சுகின்ற பெண்யானை பிளிறும் பேரொலி பக்க மலைகளில் எதிரொலிக்கும். இத்தகைய சூழ்நிலையைச் சங்க இலக்கியங்களில் கண்டு மகிழலாம். எடுத்துக்காட்டாக,

ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிடி பூசல்
நெடுவரை விடரகத் தியம்பும்
கடுமான் புல்லிக் காடிறந் தோரே.[6]

[ஞால்-தொங்குகின்ற; பாந்தன்-பெரும் பண்டிதர்; விடர்-மலைப்பிளப்பு]

என்பது மாமூலனார் பாடிய பாலை நிற வருணனைப் பகுதி (இப்பாடல் புல்லி ஆண்ட வேங்கடமலைப் பகுதி). தொங்குகின்ற வாயையுடைய ஆண்யானை பெரும்பாம்பின் வாயில் அகப்பட்டுக் கொண்டது. இதனைக் கண்டு சோராத துயரோடு அஞ்சுகின்ற பெண்யானை பிளிறும் பேரொலி நீண்ட மலையிடத்துள்ள விடரகத்தே சென்று

6. நற். 14.

எதிரொலித்து நிற்கும் கடிய குதிரையையுடைய கள்வர் கோமான் புல்லி என்பவனுடை காட்டின்கண்ணே சென்ற நம் காதலர்' என்பது இதன் பொருள். ஞானசம்பந்தப் பெருமானும் கயிலாயத்தை வருணிக்கும்போது,

> பரிய களிற்றை அரவு விழுங்கி
> மழுங்க இருள்கூர்ந்த
> கரிய மிடற்றர் செய்ய மேனி
> கயிலை மலையாரே —1. 68:2

என்று இத்தகைய களிற்றினை அரவு விழுங்கிய காட்சியைக் காட்டுவர். கம்பநாடனும்,

> இடிகொள் வேழத்தை எயிற்றொடும்
> எடுத்துடன் விழுங்கும்
> கடிய மாசுணம் கற்றறிந்
> தவரென அடங்கிச்
> சடைகொள் சென்னியர் தாழ்விலர்
> தாமிதித் தேறப்
> படிகள் ஆமெனத் தாழ்வரை
> கிடப்பன பாராய்[7].

சித்திர கூட மலையை வருணிக்கும் பகுதியில் இத்தகைய அஞ்சத்தக்க காட்சியைக் காட்டுவான். இத்தகைய அச்சத்தை விளைவிக்கும் திருமலையை அடைவதற்கு இரண்டு வழிகளைக் கையாளுகின்றார் ஆழ்வார். ஒன்று திருவேங்கடமுடையானை வாய்விட்டு அழைத்தல், மற்றொன்று கூடல் இழைத்தல்[8]. திருமலைச் சூழலையும், தம் குறிக்

7. கம்ப. அயோ. சித்திர கூடப்—35.

கோளையும் இணைத்து ஆழ்வார் வழங்கும் சொல்லோவியம்.

அழைப்பன் திருவேங்கடத் தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பேர்
அருவி மணிவரன்றி விந்திழிய யானை
வெருவி அரவொடுங்கும் வெற்பு

—நான். திருவந். 39

என்பது திருவேங்கடமுடையானைச் சேவிக்க வேண்டும் என்றும், திருமலையில் நிரந்தரமாக வசிக்க வேண்டும் என்றும் ஆழ்வார் தம் ஆவலைப் புலப்படுத்துகின்றார்.

திருமலையில் ஒலிக்கின்ற அருவிகளின் மூலம் முத்துகள் உதிர்கின்றன; திருவோணத் திருவிழாவால் திருப்பல்லாண்டு பாடுதல், திருமறை ஓதுதல், நாட்டியம் ஆடுதல் முதலியவற்றால் எழும் ஒலிகள் எம்மருங்கும் கேட்கின்றன. எம்மருங்கும் பக்தர் குழாம்கள் திரண்டு நிற்கின்றனர். இந்தகைய சூழ்நிலை நிலவும் திருவேங்கமலையில் கோயில் கொண்டிருப்பவன் இப்போது ஆழ்வார் நெஞ்சில் புகுந்து அங்கு நிலையாகத் தங்கிவிட்டான். என்றாலும் தம் உள்ளத்தில் தங்குவதற்கு முன்பு திருவேங்கடம் அவனுக்குப் பாலாலயமாக இருந்தது. அதனைக் கண்டு சேவிக்க விருப்பம் கொண்டதாகக் கூறுகின்றார்.

---

8. **கூடல் இழைத்தல்:** வட்டமாகக் கோடு கீறி அதற்குள்ளே சுழி சுழியாகச் சுற்றும் சுழித்து இரண்டிரண்டு சுழியாகக் கூட்டிப் பார்க்கும்போது இரட்டைக் கணக்காக முடிவு பெற்றால் கூடுகை; ஒற்றைக் கணக்காக முடிவு பெற்றால் கூடாமை என்று ஒருவகை நியமத்தை ஏற்படுத்திக் கொண்டு குறிபார்த்தல் 'தெள்ளியார் பலர்' (நாச். திரு. 4) என்ற திருமொழியால் ஆண்டாள் அநுட்டித்தது இது.

...வேங் கடவா என்னுள்ளம் புகுந்தாய்
திருவேங்கட மதனைச் சென்று
.........காணலுறுகின்றேன் (41)

என்பது ஆழ்வாரின் திருவாக்கு.

திருவேங்கடமலையில் யானையொன்று தன் துதிக்கையைத் தூக்கிக்கொண்டு கம்பீரமாக நிற்கின்றது. தேவலோகம் மலைக்கு அருகிலிருப்பதால் அங்குள்ள முழுமதியும்—பூர்ணசந்திரன் —ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றான். அதனைப் பிடுங்கித் திருவேங்கடமுடையானுக்கு 'மங்கல விளக்காக' வைக்க எண்ணுகின்றது. இக்கருத்தில் உள்ள யானை அசையாது ஆடாது இருப்பதால் அதனை எளிதாகப் பிடித்து விடலாம் என்று நாற்புறம் சூழ்கின்றனர் வேடர்கள்; மலைவாழ் குறவர்கள் அதன் மீது அம்புகளைப் பிரயோகிப்பதற்காக வில்லும் கையுமாக நிற்கின்றனர். இத்தகைய திருமலையை நாட்டிலுள்ளார் அனைவரும் திரண்டு எழுந்து வலம் வந்து அந்த மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாகப் பாடி ஆடினால் நல்லது என்று திருவுள்ளம் கொள்ளுகின்றார் ஆழ்வார் (நான். திருவந். 46).

நன்மணி வண்ணனான திருவேங்கட முடையான் திருக்கோயில் கொண்டிருக்கும் மலைச்சாரலில் யாளிகளும் வலிமை மிக்க சிங்கங்களும் உலவுகின்றன. பொன்னையும் மாணிக்கத்தையும் முத்துகளையும் அருவிகள் கொண்டு வந்து கொழிக்கின்றன; மலர்பூத்த மரங்கள் எம்மருங்கும் நிறைந்து இருந்து அழகைப் பொழிகின்றன. காடுகள் 'மந்திபாய் வடவேங்கடம்' என்று சொல்லத் தக்கனவாய்க் குரங்குகளின் நடமாட்டம் நிறைந்ததாய்க் காணப்படுகின்றன. வேட்டுவ மக்கள் எங்கும் நிறைந்

துள்ளன. திருவேங்கட முடையானைக் காண விரும்புவது போல் இவற்றையும் காண விரும்புகின்றார் ஆழ்வார் (நான். திருவந். 47).

**பக்தர் குழாம்:** ஏழுமலை அப்பனின் இணைத் தாமரை அடிகளில் அன்பு பூண்டு மலர்களைத் தூவி மங்களாசாசனம் செய்துகொண்டு நிற்கும் மக்கட் கூட்டம் வெட்டி வீழ்த்தப்பெற்ற மரங்கள் படுகாடு கிடப்பதைப் போல் கால் பேராமல் நின்ற வண்ணம் உள்ளது. பெருமானே நின்ற நிலையில் இருக்கும்போது இவர்கட்கு உட்கார எப்படி மனம் வரும்? திருமலை எங்கும் மக்கட் கூட்டமே. இப்படிச் சம்சாரிகளால் நிறைந்து திகழும் தண்ணருவி வேங்கடம் நித்தியசூரிகட்கும் நிலத்தேவரான வைணவர்கட்கும் வைப்பு நிதியாக இருக்கும்—''வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு''. நிற்கும் நெடுமாலும் எல்லோர்க்கும் வைத்தமா நிதியாகத் திகழ்கின்றான்.

**முக்கிய விருந்தினர்கள்:** இக்காலத்தில் அமைச்சர்கள், ஊராட்சித் தலைவர்கள், மக்களவை உறுப்பினர்கள் முதலியோர் தங்கள் பதவிக்காலம் தொடர்ந்து நிலைபெற வேண்டும் என்று காணிக்கைகளுடன் ஏழுமலையான் சந்நிதிக்கு வந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம். கள்ளநோட்டு அடிப்பவர்கள் கடத்தல் காரர்கள், கறுப்புச் சந்தைக்காரர்கள் இவர்கள் வருகைக்கும் குறைவில்லை. எல்லோர் மனநிலைகளையும் ஆசைகளையும் அவன் நன்கு அறிவான். கண் மூன்றுடையானும் நான்முகனும் இன்னும் பலதேவர்களும் தங்கள் அதிகாரம் நிலைத்து நிற்பதற்காக மலையனை மலர் அஞ்சலி செய்து வணங்குகின்றனர் (42). இவர்கள் ஏதோ ஒருகால் வந்து போகும் வழக்கமுடையவர்கள் அல்லர். நாள்தோறும் வழிபடும்

நேரங்களிலெல்லாம் தவறாமல் குடை, சாமரம் முதலிய வழிபடுவதற்குரிய உபகரணங்களுடன் வந்து வழிபட்டுப் போவர் (43). ஆகவே அன்பர்களை சேணுயர் வேங்கடத்தை— மல்குதோய் சென்னி வடவேங்கடத்தானை— சென்று வணங்குமாறு பணிக்கின்றார் ஆழ்வார்,

சென்று வணங்குமினோ
சேணுயர் வேங்கடத்தை
நின்று வினைகெடுக்கும்
நீர்மையால் (42)

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. பாவங்களைப் போக்குவதே திருமலையின் இயல்பு.வேம்-பாவம்; கடம்-எரித்தல். 'வேங்கடம்' என்றசொல்லின் பொருள் தன்னை அடைந்தவர்களின் பாவமனைத்தையும் ஒழிப்பது என்பதாகும்.

**ஆற்றுப் படுத்தல்:** ஒரு பாசுரத்தில் கிளரொளி இளமை கெடுவதற்குமுன் திருமலை செனறு திருமலையப்பனைச் சேவிக்குமாறு பணிக்கின்றார். ஒரு சமயம் இராவணன் தனது பத்துத் தலைகளையும் மறைத்துக்கொண்டு நான்முகனிடம் சென்று வரம் வேண்டுகின்றான். எம்பெருமான் ஒரு சிறு குழந்தை வடிவாய் நான்முகனுடைய மடியில் உறங்குவான் போல் கிடந்து "இவன் பத்துத் தலைகளையுடைய இராவணன்; உண்மை உருவத்தை மறைத்துக்கொண்டு உன்னை வஞ்சித்து வரம் பெற வந்துள்ளான். இவனுக்கு நீ வரம் அளித்தால் பெருந்தீங்காக முடியும்" என்று தெரிவிப்பவன்போன்று தன் திருவடியால் இராவணனுடைய பத்துத் தலைகளையும் எண்ணிக் காட்டினான் என்பதாக ஒரு வரலாறு. "இப்படிப்பட்ட எம்பெருமான் திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். அவனையடையந்து

சேவியுங்கள்'' என்று இளைஞர்களை ஆற்றுப் படுத்துகின்றார் ஆழ்வார்.[9]

**வழிபாட்டின் பயன்:** இங்ஙனம் திருவேங்கடமுடையானை வழிபடுவதால் பயன் என்ன? இரண்டு பாசுரங்களால் இதனைத் தெரிவிக்கின்றார். நித்தியசூரிகள் எம்பெருமானை இடைவிடாது அநுபவிக்கப்பெற்றாலும் அங்குப் பரத்துவத்திற்கே உரிய உண்மைக் குணங்களை மட்டிலுமே அநுபவிக்கலாம். சௌலப்பிய சௌசீல்ய குணங்கட்க்குப் பாங்கான எளிமைக் குணங்களை இந்த நிலத்திலே வந்துதான் அநுபவிக்க வேண்டும். அவற்றை அநுபவிப்பதற்காக உண்மையான பக்தியுடன் அவர்கள் திருமலைக்கு வருகின்றனர். பாவங்களையும் உடம்பைப்பற்றின நோய்களையும் போக்கடிக்க வல்லது திருமலையே. அசுரர்கள் மாளும்படி தனது திருவாழியைத் தொட்டு வானவர்களைக் காத்தருளின எம்பெருமானுடைய மலை திருமலையேயாகும்.

வேங்கடமே விண்ணோர்
தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய்
தீர்ப்பதுவும்; — வேங்கடமே
தானவரை வீழத்
தன்னாழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை.

—நான். திருவந். 48

9. முதல். திரு. 45; மூன். திரு. 77 என்ற பாசுரங்களிலும் இந்த வரலாறு குறிப்பிடப் பெற்றுள்ளது.

என்பது ஆழ்வார் பாசுரம். மெய்வினை நோய் தீர்ப்பதற்கு விளக்கமாகத் தீபிகையில் ஒரு வரலாறு காட்டுவார் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள். திருமலைக்கு மேற்குத் திசையில் நந்தன புரம் என்ற சிற்றூர் ஒன்றில் புரந்தரன் என்ற ஓர் அந்தணானரின் திருக்குமாரன் மாதவன் என்பான் தன் மனைவியாகிய சந்திரரேகையோடு ஒரு மலர்ச் சோலை யில் விளையாடிக் கொண்டிருக்கையில் மாலினி என்ற சண்டாளக் கன்னிகையின் கட்டழகில் ஈடுபட்டு அவளைக் கூடி மனையாளைத் துறந்தான். தன் கைப்பொருள் அனைத்தையும் இழந்து பின்னர் வழிப்பறித்தல் உயிர்க் கொலை முதலான கொடுந் தொழில்கள் புரிந்து பொருள் சேர்த்து அவளுக்குக் கொடுத்து வந்தான். இறுதியாக வறுமையுற்று பல நோய்களையும் பெற்று அவளாலும் துறக்கப்பட்டான். பல பாவங்கள் தொடரப் பித்தன் போல் அலைந்து திரிந்தவன் இத்திருமலையை வந்தடைந் தான். மலையின் சிறப்பால் தனது தீவினையெல்லாம் நீங்கப்பெற்று முன்னைய நிலைமை யடைந்தான். திரு மலை எம்பெருமானைச் சேவித்து முத்தியையும் அடைந் ததனால் இம்மலைக்கு 'வேங்கடாசலம்' என்ற திரு நாமமும் ஏற்பட்டதாக ஒரு வரலாறு வடமொழி பிரம் மாண்ட புராணத்திலும் பவிஷ்யோத்திர புராணத்திலும் காரணப்படுகின்றது. திருமலை, நோய் தீர்க்கும் விஷயம் இப்போது அனைவரும் காண்கின்ற உண்மையாகும்.

ஒரு பாசுரத்தில் ஆழ்வார் தமது அநுபவங்களை வெளியிடுகின்றார். 'மலை' என்று வரும் பெயர்களை யெல்லாம் அடுக்கடுக்காய்ச் சொல்லுவதாக ஒரு விநோத முயற்சியால் 'கொக்குமலை, குருவிமலை, பசுமலை, எருத்துமலை... என்று பலவற்றைச் சொல்லி வருகின்ற அடைவிலே தம்மையும் அறியாமல் 'திருவேங்கடமலை' என்று தம் திருவாயில் வந்துவிட்டது. இதனையே

பற்றாசாகக் கொண்டு எம்பெருமான் தம்மைத் திருவேங் கடம் பாடினவனாகக் கணக்கிட்டுக் கொண்டான். யாத்ருச்சிகமாக சொன்ன உத்தியால் பரமபதத்தையும் பெற்றவராகின்றார். தம் அறிவு பூர்வமாக ஒரு நல்ல சொல்லும் சொல்லாதிருக்கவும் எம்பெருமான் தானே மடிமாங்காய் இட்டுத் திருவுள்ளம் பற்றுகின்ற இச்செயல் வியத்தற்குரியது என்று இதனையே அநுசந்தித்து ஈடுபட்டு நிற்கின்றார்.

''எம்பெருமான் எல்லா சாத்திரங்களாலும் புகழப் பெறுபவனாதலால் அவனுக்கு **'நூலாளன்'** என்ற திருப் பெயர் உண்டு. இதற்குப் பெண்பால் 'நூலாட்டி' என்பது; இது பெரிய பிராட்டியாரைக் குறிப்பது. அவளுடைய கேள்வனார் எம்பெருமான்; அவன் கற்கின்ற நூல் வலை யில் பட்டிருந்தவன்; அதாவது பரம்பரையாக எம்போலி யரால் ஓதப்பெற்று வருகின்ற சாத்திரங்க ளாகின்ற வலையிலே புறமதத்தினராலும் குயுக்திவாதத்தினராலும் அசைக்கவொண்ணாதபடி அகப்பட்ட எம்பெருமா னுடைய திருவடிகளாகின்ற வலையிலே நான் சிக்கிக் கொண்டிருக்கின்றேன்'' என்கின்றார்.

வெற்பென்று வேங்கடம்
    பாடினேன்; வீடாக்கி
நிற்கின்றேன்! நின்று
    நினைக்கின்றேன் — கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த
    நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன்
    காண்.

—நான். திருவந். 40

என்பது ஆழ்வார் பாசுரம். மூன்றாம் அடியில் சாத்திரங்களை எம்பெருமானுக்கு வலையாகவும் ஈற்றடியில் அவ்வெம்பெருமானின் திருவடிகளைத் தமக்கு வலையாகவும் அருளிச் செய்தார். எம்பெருமானைச் சாத்திரங்களினின்றும் பிரிக்க முடியாததைப்போலத் தம்மையும் அப்பெருமானின் திருவடிகளினின்றும் பிரிக்க முடியாது "எம்பெருமான் ஒரு வலையில் அகப்பட்டான்; நானும் ஒரு வலையில் அகப்பட்டேன்" என்று சமத்காரமாகச் சொல்லப்பட்ட நயம் அநுபவித்து மகிழத்தக்கது.

**அடியார் பெருமை :** அடியார் பெருமை எல்லாச் சமயத்தினராலும் சிறப்பித்துப் பேசப்படுகின்றது. ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் மிகச் சிறப்பித்தும் பேசுவதை நாம் அறிவோம். இக்கருத்தை இந்த ஆழ்வாரும் ஒரு மாசுரத்தில் சிறப்பித்தும் பேசுகின்றார். திருவேங்கடமுடையானின் திருவடிகளில் பலவித வண்ண மலர்களைச் சமர்ப்பித்து வழிபட்டவர்கள் யாவரும் பரமபதத்தில் பெருமை பொலிய இருந்து ஆட்சி செய்பவர்கள். இவர்களைக் காட்டிலும் எம்பெருமானுக்கு அடிமைப் பட்டவர்கட்கு அடிமைப்பட்டவர்கள் மிகவும் சிறந்தவர்களாவர் என்கின்றார் ஆழ்வார் (90).

இங்ஙனம் பக்திசாரரின் பாசுரங்கள் விளைவிக்கும் அநுபவத்தை நம் அநுபவமாக்கிக் கொண்டு பகவதநுபவம் பெற்று மகிழ்கின்றோம்.

# 9. குலசேகரப் பெருமாள் காட்டும் திருவேங்கடம்*

குலசேகராழ்வார் கேரள மாநிலத்தில் கோழிக்கோடு பகுதியை ஆண்டு வந்த அரசர். திருவஞ்சிக்களத்தில் கௌஸ்துவாம்சமாய் அவதரித்தவர். இவர் சோழ பாண்டியர்களை வென்று தமிழ்நாடு மூன்றுக்கும் தலைமை பூண்ட செய்தி ''கொல்லி காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன்'' (பெரு. திரு. 2:10) என்ற விருதினால் அறியக் கிடக்கின்றது. எம்பெருமான் திருவருள் நோக்கத்தால் திருமாலே சிறந்த தெய்வம் என்று உணர்ந்தவர். அவனுக்கு அடிமையானவர். எம் பெருமானுடைய அநந்த கல்யாண குணக்கடலில் ஆழங் கால்பட்டு நெஞ்சுருகி ஈடுபட்ட இவர் திருமாலின் விபவா வதாரங்களில் இராமகிருஷ்ணாவதாரங்களினிடத்திலும்; அர்ச்சாவதாரத்தில் திருவரங்கம், திருவேங்கடம், திரு வித்துவக்கோடு போன்ற திவ்விய தேசத்து எம்பெருமான் களிடத்திலும் பெருங்காதல் கொண்டவர். இராமாயணக் காலட்சேபத்தையே எப்போதும் பொழுது போக்காகக் கொண்டவர். பாகவதர்களைச் சிறப்பாக உபசரிப்பவர். தமது திருமாளிகைத் திருவாராதனத்தில் எழுந்தருளி

* சப்தகிரியில் (நவம்பர்-1986) வெளிவந்தது.

யுள்ள இராமபிரானுக்கும் இராச கோபாலனுக்கும் நித்திய நைமித்திக உற்சவங்களைக் குறைவறச் செய்து கொண்டிருந்தவர். இவர்,

தில்லைநகர் திருச்சித்ர கூடந் தன்னுள்
அரசு அமர்ந்தான் அடிசூடும் அரசை அல்லால்
அரசாக எண்ணேன் மற்(று) அரசு தானே

—பெரு. திரு. 10:7

என்று கோவிந்தராசனின் திருவடிகளைத் தலைமேல் சூடுதலையே மகுடாபிஷேகமாகப் பாவிப்பவர்; பெருமாளுடைய (இராமபிரானுடைய) இன்ப துன்பங்களைத் தமது சுக துக்கங்களாகக் கருதியதனால் இவருக்குப் 'பெருமாள்' என்ற பெயரும் வழங்கலாயிற்று.

இவர் மனம் அடிக்கடி கோயில் வாசத்தையே நாடியது. இவர் தம் தலைநகரைவிட்டுத் திருஅரங்கத்துக்குச் சென்று பெரிய பெருமாளைச் சேவிப்பாராயின் பின்பு தலைநகருக்கு மீளுதல் அரிதென்றும், திருவரங்கத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிடுவரென்றும் கருதி அந்தப் பயணத்தைத் தடுக்க ஓர் உபாயத்தை மேற்கொண்டனர் அமைச்சர்கள். இவர் பாகவதர்களை உபசரிப்பதில் விருப்பமுள்ளவராதலால், பல பாகவதர்களை வரவழைத்து இவர் திருமுன்பு அனுப்பலாயினர். திருமாலடியார்களைப் பூசித்த பேறு அறுபதினாயிரம் ஆண்டுக்காலம் திருமாலை ஆராதனம் செய்த பயனுக்கு மேற்பட்டது என்ற சாத்திர உண்மையை அறிந்தவராதலால் திருவரங்கத் திருத்தலப் பயணத்தை நிறுத்தி அடியார்களை உபசரிப்பதில் ஈடுபடலாயினர். அமைச்சர்கள் அடிக்கடி இம்முறையை மேற்கொண்டதால் இவர் ஆட்சிக்குட்பட்ட நாடெங்கும் வைணவ அடியார்களின் கூட்டம் பெருகலாயிற்று.

அடியார்களின் கூட்டம் பெருகியும் அவர்கள் செல்வாக்கு வளர்ந்தும் வருவதைக் கண்ட அமைச்சர்கள் பொறாமை கொண்டனர். அவர்கள் அந்தரங்கமான இடத்திலும் எக்காலத்திலும் சிறிதும் தடையின்றி நடமாடுவதையும் அரசனிடம் வரம்பு கடந்த சுதந்திரத்துடன் பழகுவதையும் அமைச்சர்கள் காணும்போது இப்பொறாமை மேலும் வளர்வதாயிற்று. அவர்கள் அடியார்களிடம் அரசனுக்கு வெறுப்பை உண்டாக்கக் கருதினர். ஒரு சமயம் அரண்மனையில் இராம நவமிப் பெருவிழா நடை பெற்றபோது, இராமமூர்த்திக்கும் அர்ச்சாவதாரமுள்ள மற்ற எம்பெருமான்கட்கும் திருமஞ்சனம் செய்தற் பொருட்டுத் திவ்வியாபரணங்களையெல்லாம் களைந்து வைத்தனர். எல்லோரும் சுவாமி சேவையில் கருத்தூன்றி நிற்கும்போது அமைச்சர்கள் திருவாபரணத் திரளிலிருந்து ஒரு நவரத்தினமாலையை எடுத்து ஒளித்து வைத்தனர். பின்பு அர்ச்சகர், பெருமாளுக்கு அலங்காரம் செய்யும் பொழுது அந்த முக்கிய அணிகலத்தைக் காணாமல் கவலைப்பட்டுச் செய்தியை அரசனுக்கு அறிவித்தனர். அரசன் மனங்கலங்கி கள்வனைத் தேடிப் பிடிக்குமாறு அமைச்சர்கட்குக் கட்டளையிட்டனன். அமைச்சர்கள் பாகவதர்களே எங்கும் சுதந்திரமாகத் திரிவதால் அவர்கள்தாம் இதனைக் களவு செய்திருத்தல் வேண்டும் என்று அவர்கள்மீது அடாத பழி சுமத்தினர்.

அரசனால் அப்பழியைத் தாங்க முடியவில்லை. அடியார்களின் நற்குண நற்செயல்களை நன்கு அறிந்த மன்னர்க்கு அவர்கள்மீது சங்கை கொள்வதற்கு மனம் ஒப்பவில்லை. உடனே அவர் பழி சுமத்தின அமைச்சர்களைக் கடிந்து "வைணவ சிகாமணிகள் இத்தகாத செயலை மனத்தினாலும் கருதார்: இது திண்ணம்: இதனை உறுதிப்படுத்துவதற்கு யானே பிரமாணம் காட்டுவேன்" என்று கூறிக் கொடிய நாகம் ஒன்றினைக் கொண்ட குடம்

ஒன்றினை அவையின்முன் தருவித்து, "வைணவ அடியார்கள் மனம் மொழி மெய்களால் தூய்மையுடையராயின் இந்நாகம் என்னை ஒன்றும் செய்யாது; இல்லையாயின், இஃது இப்பொழுதே என்னைத் தீண்டிக் கொல்லட்டும்" என்று சூளுரைத்து அக்குடத்திலுள் கையிட்டனர். நாகம் வாளா இருந்தது; இந்நிகழ்ச்சியை,

> ஆரம் கெடப்பரன் அன்பர்கொள்
> ளார்என்று அவர்கட்கே
> வாரம் கொடுகுடப் பாம்பில்கை
> இட்டவன், மாற்றலரை
> வீரம் கெடுத்தசெங் கோல்கொல்லி
> காவலன், வில்லவர்கோன்
> சேரன் குலசே கரன்முடி
> வேந்தர் சிகாமணியே.[1]

என்ற மணக்கால் நம்பி அருளிய தனியனால் அறியலாம். தம் சூழ்ச்சி பலியாததைக் கண்ட அமைச்சர்கள் பேரச்சம் கொண்டனர்; தம் பிழையைப் பொருத்தருளுமாறு அரசனைச் சரண் அடைந்தனர். அரசனும் அதனைப் பொறுத்து அதற்குக் கழுவாயாக பாகவதர்கட்கு எப்பொழுதும் பணிவிடை செய்யுமாறு கட்டளையிட்டான். பாகவத அபசாரம் மிகக் கொடுமையானது. 'ஈசுவரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்கள் (மனிதர் செயல்கட்கு அப்பாற்பட்ட செயல்கள்) எல்லாம் பாகவத அபசாரம் பொறாமை'யன்றோ?[2]

**ஆழ்வார் திருவேங்கடத்தின்மீது கொண்ட காதல்:** இக்கழி பெருங்காதலை அவர் அருளியுள்ள ஒரு

1. பெருமாள் திருமொழி தனியன்
2. ஸ்ரீவச. பூஷ. 196.

திருமொழியில் கண்டு அநுபவிக்கலாம்! திருவேங்கடமலையில் பிறத்தலும் அங்கு ஏதாவது ஒரு பொருளாக இருத்தலும் போதும் எனக் கூறுகின்றார்.

நாளுக்கு நாள் வளர்ந்து கொழுக்கும் மனித உடம்பெடுத்துப் பிறத்தலை விரும்பாத ஆழ்வார் கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பதற்கு விரும்புகின்றார். இப்படிப் பிறந்தால் அது விரஜா நதியைச் சேர்ந்து வைகுந்தத்தில் பிறந்து வாழ்வதோடு ஒக்கும் என்று கருதினர் என்பது போதரும். 'இதனால் ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி' திருவேங்கடத்தானுக்கு ஏதாவது ஒரு வகையில் வழுவிலா அடிமை செய்ய வாய்ப்பாகும் என்று சிந்தித்தார் போலும். இப்படிக் கூறியவரின் சிந்தனை மேலும் சிறகடித்துப் பறக்கின்றது. குருகிற்குச் சிறகுகள் இருப்பது அவர் நினைவிற்கு வருகின்றது. இதனால் அஃது இவற்றின் துணைகொண்டு திருமலையைத் துறந்து வேறிடத்திற்குச் சென்றாலும் செல்லக்கூடும் என்று கருதுகின்றார். அங்ஙனமின்றி அந்த மலையிலேயே பிறத்தல், வாழ்தல், இறத்தல் ஆகிய செயல்களையுடைய மீனாய்ப் பிறந்தாலும் போதுமே என்று எண்ணுகின்றார்.

தேனார் பூஞ்சோலை
 திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும்
 விதியுடையேன் ஆவேனே.

—பெரு. திரு. 4:2

என்பனால் தன் அவாவினை வெளியிடுகின்றார்.

மேலே மீனாய்ப் பிறந்தாலும் போதும் என்று எண்ணியவர், மீன் நீர் நிலையைப் பற்றியே உயிர் தரிக்க வேண்டி வரும். அப்படிப் பிறப்பதைவிட எம்பெருமானுக்கு அந்தரங்கச் சேவகனாகத் தொண்டு புரியும் வாய்ப்

புக் கிடைக்கப் பெற்றால் தான் யாதொரு தடையுமின்றி அர்ச்சக பரிசாரர்களுடன் எளிதில் திருக்கோயிலில் புக்குக் கருவறையை அடைந்து எம்பெருமான் அருகில் நின்று பணிபுரியலாம் என்ற எண்ணம் பளிச்சென்று இவர் மனத்தில் உதிக்கின்றது. அடியார்களின் பெருங் கூட்டத்தில் ஒருவனாக இருந்தாலும் அவர்கள் நடுவில் சிக்கி நெருக்குண்டு உள்ளே புக முடியாமல் தடுமாறும் நிலை ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். இங்ஙனமின்றி அப்பெருமானுக்கு அணுக்கத் தொண்டனாய் அவன் வாய்நீர் உமிழும் பொற்காளாஞ்சியை ஏந்திக் கொண்டு செல்லும் வாய்ப்பு இருந்தால் எளிதில் உள்ளே சென்று விடலாம் என்று கருதுகின்றார்.

மின்வட்டச் சுடராழி
வேங்கடக்கோன் தான்உமிழும்
பொன்வட்டில் பிடித்துடனே
புகப் பெறுவேன் ஆவேனே.

—பெரு. திரு. 4:3

என்று தன் விருப்பத்த வெளியிடுகின்றார்.

தான் விரும்பும் அந்தரங்கப்பணி கிடைத்தால் பொன் வட்டில்மேல் மனம் சென்று அதனைக் களவாடும் ஆசை தோன்றலாம்; அதனால் சிறை வாசமும் கிட்டலாம் என்ற எண்ணவோட்டம் எழுகின்றது ஆழ்வாருக்கு. ஆதலால் இயங்குதிணைப் பிறப்பு வேண்டும் என்பதில்லை; நிலைத்திணைப் பிறப்பு கிடைத்தாலும் போதும் என்று எண்ணுகின்றது இவர் மனம். வானவர் கோனுடன் பூமாரி பொழியும் இடமாதலால் அத்திருமலையில் மலர்ப்பணியாற்றும் மரமாகவேனும் இருக்கலாமே என்று கருதுகின்றார். "தேனின் இனிய பிரானே செண்பகச் சூட்டவாராய்" (பெரியாழ். திரு. 27: 1) என்ற பெரி

யாழ்வார் வாக்கால் எம்பெருமான் திருவுள்ளத்திற்குச் சண்பக மலர் மிகவும் உகப்பாதலை அறிகின்றார். உடனே,

பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே.

—பெரு. திரு. 4:4

என்று தன் ஆசையை வெளியிடுகின்றார்.

இந்த ஆசைக்கும் தடை தோன்றுகின்றது. திருமலைக்கு வருகின்ற செல்வர்களுள் யாரேனும் ஒருவர் சண்பக மரத்தையும் பெயர்த்துக் கொண்டேகின் திருமலையின் வாழ்க்கையை இழக்க நேரிடுமே என்ற ஊகம் கால் கொள்ளுகின்றது இவர் சிந்தனையில். ஒன்றுக்கும் உதவாத புல்பூண்டு செடி கொடியின் புதராக — தம்பகமாக — வேனும் இருந்தால் தனக்கு யாதொரு தீங்கும் நேரிடாது என்று எண்ணி,

எம்பெருமான் ஈசன் எழில்வேங் கடமலையில்
தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே.

—பெரு. திரு. 4:5

என்று தன் விருப்பத்தைப் புலப்படுத்துகின்றார்.

சிறிது சிந்தித்த அளவில் இதற்கும் ஓர் ஆபத்து உண்டு என்பதாக எண்ணுகின்றது இவர்தம் திருவுள்ளம். காட்டுத் துறையினர் செடி கொடிகளை அடிக்கடிச் சோதிக்கும் இயல்புடையவராதலால், அவர்கள் தம்பகத்தைக் களைந்தெறிந்திடக்கூடும் எனவும் அது தானே விரைவில் தீர்ந்தொழியக் கூடும் எனவுமான எண்ணம் முகிழ்க்கின்றது இவர் திருவுள்ளத்தில். மலையின் ஒரு பகுதியாக இருப்பின் என்றும் மாறாத ஒரே நிலையில் இருக்கலாமே என்ற எண்ணம் ஓடுகின்றது. உடனே,

'தென்ன' என வண்டினங்கள்
 பண்பாடும் வேங்கடத்துள்
அன்னனைய பொற்குவடாம்
 அருந்தவத்தன் ஆவேனே.

—பெரு. திரு. 4:6

[தென்ன-தெனதென; அன்னனைய-அப்படிப் பட்ட]

என்று பொன்மயமான சிகரமாகும் நசையினை வெளியிடுகின்றார்.

சிறிது நேரத்தில் இந்தப் பாரிப்பும் மறையத் தொடங்குகின்றது. புதிய திருக்கோயில்களை நிறுவுவோர், பழைய கோயிலுக்குத் திருப்பணி புரிவோர், மலைமுகட்டுப் பாறைகளை உடைத்துக் கொண்டு போவாராதலால் அதுவும் தனக்கு ஏற்றதன்று என எண்ணுகின்றார் ஆழ்வார். ஆதலால் எவராலும் பெயர்த்துக்கொண்டு போக முடியாத கானாறாக வேனும் பெருகும் பேறு கிடைக்கக் கூடாதா என்று எண்ணுகின்றது இவர் மனம். உடனே,

தேனார் பூஞ்சோலைத் திருவேங் கடமலைமேல்
கானாறாய்ப் பாயும் கருத்துடையேன் ஆவேனே.

—பெரு. திரு. 4:7

என்று தன் அத்யவசாயத்தை வெளியிடுகின்றார்.

இக்கருத்தைச் சிந்தித்ததும் இதிலும் ஒரு குறையிருப்பதை உணர்கின்றார். ஆற்றில் எப்பொழுதும் நீரோட்டம் இருக்காதன்றோ? அப்பொழுது திருமலையிலும் வாழ்க்கை இழந்ததாகவன்றோ முடியும்? அங்ஙனமின்றி எப்பொழுதும் ஒரு தன்மையாகத் திருவேங்கடமுடை

யானைச் சேவிக்கவரும் அடியார்களின் அடிப்பொடி படும் படி வழியாய்க் கிடக்கும் நிலைமை தனக்கு வாய்த்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கின்றது இவரது தூய்மையான திருஉள்ளம். உடனே,

வெறியார் தண்சோலைத் திருவேங் கடமலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே.

—பெரு. திரு. 4:8

[வெறிஆர் - மணம்மிக்க; நெறி-வழி]

என்று தன் அவாவினைப் புலப்படுத்துகின்றார் ஆழ்வார்.

இதனைச் சிறிது ஆராய்ந்தவுடன் இதிலும் ஒரு குறை தட்டுப்படுகின்றது. வழி என்பது அவரவர் வசதிக்குத் தக்கபடி மாறுபடுவதன்றோ? ஓரிடத்திற்கு ஒன்றுதான் வழியாக இருக்க முடியும் என்று சொல்ல முடியாது. அன்றியும், அது விலகி நிற்கும் பான்மையது. இப்போதுள்ளதுபோல பேருந்து வசதிகள் இருக்கும்போது எல்லோரும் நடந்துதான் வருவர் என்று சொல்ல முடியுமா? இவற்றையெல்லாம் எண்ணிய ஆழ்வார் நெறியாக அமையவேண்டும் என்று விரும்புவதைவிட எம்பெருமானது திருவருள் நோக்கம் பதியுமாறு அவன் கண் வட்டத்தில் மெய்யடியாரும் பிறரும் வேறுபாடின்றி எல்லோரும் இடைவிடாது நடமாடும்படியான ஓர் அசேதநப் பொருளாகி, அதில் அவனது திருப்பவளத்தைக் காணும்படியான அறிவையும் பெறவேண்டும் என்று தன் சிறப்பான விருப்பத்தை விண்ணப்பிக்கின்றார்.

நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையடும் கிடந்தி
யங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே.

—பெரு. திரு. 4:9

என்பது அவர்தம் விண்ணப்பம். இப் பாசுரத்தை அடியொற்றியே திருமால் கோயில்களின் கருவறையின் வாயிற்படி 'குலசேகரன்படி' என்று இவர் பெயரையிட்டு வழங்கும் சம்பிரதாயமும் இருந்து வருகின்றது.

இந்தப் பேற்றுக்கும் குந்தகம் விளையினும் விளையலாம் என்று எண்ணுகின்றார் ஆழ்வார். திருமலைக்கு வரும் பக்தர்களுள் செல்வராக இருக்கும் எவரேனும் ஒருவர் சந்நிதிக்குள் கருங்கல் படி இருப்பது திருவேங்கடமுடையனது செல்வ நிலைக்குத் தகாது என்றும், தங்க வாசலுக்கு உட்புறமுள்ள வாயில் கருங்கல்லாக இருப்பது சிறிதும் கூடாது என்றும் கருதித் தங்கத் தகட்டால் மூடுவதற்கும் முன்வரலாமன்றோ? அப்படிச் செய்தால் திருவேங்கட அப்பனின் திருமுக மண்டலச் சேவையை இழக்க நேரிடுமே. ஆகையால் படியாய்க் கிடப்பதும் பாங்கன்று என்று அறுதியிடுகின்றார். பின்னர் எந்தப் பிறவியை வேண்டுவது என்பது தோன்றவில்லை. அவன்தாள் வணங்க அவன் அருளின்றி முடியுமா? முடியாதன்றோ? இந்த ஞானம் தம் உள்ளத்தில் தோன்றவே தாமாக ஒரு பிறவியையும் வேண்டிக் கொள்ள விரும்பாதவராய்,

எம்பெருமான் பொன்மலைமேல்
    ஏதேனும் ஆவேனே.

—பெரு. திரு. 4:10

என்று சொல்லித் தம் ஆசைக்குத் தலைக்கட்டி விடுகின்றார்.

இந்தப் பெருமாள் திருமொழியை அடியொற்றியே முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார்,

மாடாக நிழற்றுசெழு
    மரனாகத் தவச்சிறிய

பூடாகக் குழைத்தநறும்
 புதலாக வழிப்படுமோர்
ஓடாகப் பெறுவமெனில்
 உயிர்காள்! நற் கதிபெறலாம்
வீடாகத் திருநெடுமால்
 வீற்றிருக்கும் வேங்கடத்தே.

—திருவேங். கலம். 72

என்ற பாடலை அருமையாக அமைத்து ஆழ்வாரிடம் தமக்குரிய ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றார்.

# 10. ஆண்டாளும் திருவேங்கட முடையானும்*

இந்த உலகில் ஞான பக்தி வைராக்கியங்களுடன் திகழ்ந்து முக்தியடைந்த பெரியோர்கள் பலர். இவர்களுள் உயர்நிலையில் நின்று புகழ் பெற்றவர்கள் இருடிகளும் ஆழ்வார்களும் என்று பெரியோர்கள் பணிப்பர். இவர்களுள்ளும் இறையன்பில் ஒருவரோடொருவரிடையே ஏற்றத் தாழ்வு உண்டு என்ற பெற்றியை உரை மன்னன் பெரியவாச்சான்பிள்ளை எடுத்துக் காட்டி மிகத் தெளிவாக விளக்குவர்[1].

இருடிகளையும் ஆழ்வார்களையும் ஒப்ப நோக்கினால் இருடிகளின் பக்தி அணுவளவாகவும் ஆழ்வார்களின் பக்தி மலையளவிலும் காணப்பெறும். அங்ஙனமே மற்றைய ஆழ்வார்களின் பக்தியும் பெரியாழ்வார்களின் பக்தியும். மற்றையோர் பக்தி அணுவளவாகவும், பெரியாழ்வார் பக்தி மலையளவாகவும் தோற்றம் அளிக்கும். பெரியாழ்வாரின் பக்தியையும் அவர்தம் அருமை மகள் ஆண்

---

* சப்தகிரி (டிசம்பர்-1986)யில் வெளிவந்தது.

1. திருப்பாவை வியாக்கியாமை மூவாயிரப்படி அவதாரிகை காண்க.

டாள் பக்தியையும் சீர் தூக்கினால், பெரியாழ்வார் பக்தி அணுவளவிலும் ஆண்டாள் பக்தி மலையளவிலும் தோன்றா நிற்கும்.

இந்நிலைக்குக் காரணம் என்ன? இருடிகளின் பக்தி சொந்த முயற்சியால் வளர்த்துக் கொண்டது. ஆழ்வார்கள் எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப் பெற்று, சம்சார உலகினின்றும் எழுப்பப் பெற்றவர்கள். பெரியாழ்வார் பொங்கும் பரிவால், எம்பெருமானுக்குத் தீங்கு வராமல் மங்களாசாசனம் செய்தவர். ஆண்டாள் தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தவள். ஆடவன் ஆடவனைக் கண்டு நட்புக் கொள்வதைக் காட்டிலும் நங்கை நம்பியைக் கண்டு நட்புக் கொள்வது பள்ளமடையாக இருக்கும்.

**வேங்கடத்தெம்மான்மீது காதல் :** ஆண்டாள் திருமலையப்பன்பால், மேகத்தைத் தூதுவிடுவதாக அமைந்த நாச்சியார் திருமொழியிலுள்ள பதிகம் ஒன்று அன்னையாரின் கழிபெருங்காதலைக் காட்டுகின்றது. தூதுப் பாடல்களும் பிரபந்தங்களும் 'காமம் மிக்க கழிபடர் கிளவிகளா'கும்.

இயம்புகின்ற காலத்து எகினம் கிள்ளை
பயம்பெறு மேகம்பூ வைபாங்கி—நயந்தகுயில்
பேதைநெஞ்சம் தென்றல் பிரமரம்ஈ ரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை.

[எகினம்-அன்னம்; பிரமரம்-வண்டு]

என்ற இரத்தினச் சுருக்கப் பாடலால் தூதுவிடுவதங்குரிய பொருள்கள் இன்னவை என்பது அறியப்படும். இவற்றுள் மேகமும் ஒன்று. இவையெல்லாம்,

சொல்லுந போலவும்
கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும்
என்மனார் புலவர்.[2]

என்ற நூற்பாவின் பகுதியால் பேசுவன போலவும் கேட்பன போலவும் அமைத்துக் கோடல் கவிதை மரபாக இருந்து வருகின்றது.

'கற்பூரம் நாறுமோ' (நாச். திரு. 7) என்று திருச்சங் காழ்வானோடு சொல்லாடிப் பொழுது போக்கின அன்னை ஆண்டாளுக்கு அது மறுமொழி தரவில்லை. எம்பெருமானது பிரிவால் அவள் ஆற்றாமை மீதூர்ந்து செல்லத் தொடங்குகின்றது. காலமும் கார் காலமாக உள்ளது. மேகங்களும் 'ஆழியுட்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி, ஊழி முதல்வன் போல் மெய் கறுத்து, பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில், ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து' (திருப்-4) வந்து தோன்றுகின்றது. கார்காலத்தில் தவறாது திரும்புவதாகக் கூறிப் போன எம்பெருமானின் திருவாக்கு அவள் நினைவிற்கு வருகின்றது. அப்படியே அவனும் மேகங்களுடன் வந்திருக்கக் கூடும் என்று நினைக்கின்றாள். "மேகங்காள் எம்பெருமானும் உம்முடன் வந்தானோ!" என வினவுகின்றாள். அவை மறுமொழி தரவில்லை; அந்த எம்பெருமானும் அவள் கண்ணுக்குத் தென்படவில்லை. ஆகவே, தன்னுடைய நிலைமையை எம்பெருமானுக்கு அறிவிக்க வேண்டுமென்று மேகங்களை இரக்கின்றாள். இந்தத் திருமொழி முழுதும் மேகத்தைத் தூதுவிடுவதாகச் செல்லுகின்றது. மேகங்களை நோக்கி,

கண்ணீர்கள் முலைக்குவட்டிற்
துளிசோரச் சோர்வேனைப்

2. தொல். பொருள். செய்யு. 192.

பெண்ணீர்மை ஈடழிக்கும்
இதுநமக்கோர் பெருமையே.

—நாச். திரு. 8:1

[குவடு-நுனி: துளிசோர-அரும்ப; சோர்வேனை-வருந்துகின்ற என்னை; ஈடு அழிக்கும் இது-உரு வழிக்கின்ற இது: தமக்கு-அவருக்கு]

என்று வினவுகின்றாள். 'திருவேங்கடமுடையானைப் பெரியாழ்வாரின் திருமகள் ஆசைப்பட்டுப் பெறா தொழிந்தாள் என்றால் அவனுடைய பெருமை என்னாகும்?' என்கின்றாள்.

அடுத்து, மேகங்களை நோக்கி இவ்வாறு பேசுகின்றாள்;

மாமுத்த நிதிசொரியும்
மாமுகில்காள்! வேங்கடத்துச்
சாமத்தின் நிலங்கொண்ட
தாளாளன் வார்த்தை யென்னே?

—நாச். திரு. 8:2

[முகில்-மேகம்; சாமத்தின் நிறம்-நீலநிறம்; தாளாளன்-பெருமை பாராட்டி நிற்பவன்].

என்பது அவள் திருவாக்கு. ''வள்ளண்மை வாய்ந்த மேகங்களே! கைம்மாறு கருதாது, யாரும் வேண்டாத நிலையில், விலையுயர்ந்த பொன்னையும் முத்துகளையும் பொழிகின்றீர்கள். இப்படிப்பட்ட நீங்கள், அடி வீழ்ந்து வேண்டுகின்ற எனக்காக ஒருவாய்ச்சொல் நல்கலாகாதோ? திருவேங்கடமுடையானுடைய செய்தி உங்கட்குத் தெரியாமலிராதே; ஏதாவது சொல்லுங்கள்'' என்கின்றாள்.

மேகங்களோ வாய்ப்பூட்டு போட்டாற்போல் வார்த்தை சொல்லாமல் வாளா இருக்கின்றன. இதனால் தன் ஆற்றாமையின் கனத்தைச் சொல்லி வருந்துகின்றாள்.

காமத்தீ யுள்புகுந்து
கதுவப்பட் டிடைக்கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கு
இலக்காய்நான் இருப்பேனே.
—நாச். திரு. 8:2

[கதுவப்பட்டு-அறுக்கப்பட்டு; கங்குல்-இரவு; இடை ஏமம்-நள்ளிரவு)

''காமத்தீ என்னுள் புகுந்து என்னை வாட்டுகின்றது. நள்ளிரவில் ஒரு தென்றல் காற்றுக்கு நான் இலக்காகி எவ்வாறு இருப்பேன்? தென்றல் காமத்தீயிற்குத் துணையாக இருந்து நோயை அதிகப்படுத்துகின்றதே. உள்ளே காமத்தீ; வெளியே தென்றற் காற்று. இருதலைக் கொள்ளிக்கிடையில் அகப்பட்ட எறும்புபோல் இவற்றுக்கிடையே தடுமாறிக் கிடக்கின்றேன்'' என்று வருந்துகின்றாள்.

''எம்பெருமானைப் பிரித்து பட்ட துக்கத்தினால் என் மேனியழகு கெட்டது. உடல் இளைத்தமையால் வளையல்கள் கழன்றொழிந்தன. நானும் நெஞ்சு தளர்ந்து உறக்கமொழிந்து கிடக்கின்றேன். இந்த நிலையில் எம்பெருமானின் திருக்குணங்களை எங்ஙனம் போற்றி உயிர் காத்திருக்க முடியும்? எளியாரை எல்லாரும் கைவிடுவது உலக இயல்பேயன்றோ?

ஒளிவண்ணம் வளைசிந்தை
உறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையால் இட்டென்னை
ஈடுஅழியப் போயினவால்.
—நாச். திரு. 8:3

[ஒளி-உடல் காந்தி; வண்ணம்-நிறம்; வளை-வளையல்; சிந்தை-நெஞ்சம்; உறக்கம்-தூக்கம்; ஈடுஅழிய-சீர் குலையும்படி).

என்பது அவளுடைய நெஞ்சகக் குமுறல். இங்ஙனம் தன் லையை மேகங்கட்கு உணர்த்திச் சில செய்திகளை வேங் கடவாணன்மாட்டுச் சொல்ல வேண்டுகின்றாள்.

**முதற் செய்தி:** ஆண்டாள் தெரிவிக்க விரும்பும் முதற்செய்தி இது: ''என் மார்பிலுள்ள இளமுலைகளை அவ்வெம்பெருமான் விரும்பி இடைவிடாது அணைந்து கொண்டே கிடக்க வேண்டும் என்று நான் ஆசைப் படுகின்றேன்'' என்பது.

என்ஆகத் திளங்கொங்கை
விரும்பித்தாம் நாடோறும்
பொன்ஆகம் புல்குதற்கு
என்புரிவுடைமை செப்புமினே.

—நாச். திரு. 8:4

[ஆகம்-மார்பு; தாம்-எம்பெருமான்; பொன் ஆகம்-விரும்பத்தக்க மார்பு புல்குதல்-அணைதல்; புரிவுடைமை-ஆசையுடைமை]

என்பது பிராட்டியாரின் திருவாக்கு. ''ஒரு பொருளிலே விருப்பமுள்ள சிறார்களைப் பெற்றோர் எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் அவர்கள் சமாதானம் அடைவ தில்லை. விரும்பினவற்றைப் பெறும் வரையிலும் விடாத பிடிவாதங் கொள்வதுபோல், என் இளங்கொள்கைகளும் அவ்வெம்பெருமானுடைய திருமார்புடன் அணைய வேண்டும் என்று பிடிவாதம் செய்கின்றன.'' என்கின் றாள். ''சொற்கேளாத பிரஜைகளைப் (பிள்ளைகள்) போலேயாய்த்து முலைகளின்படி'' என்ற இன்சுவைமிக்க பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான வாக்கியம் சுவைத்து மகிழத் தக்கது.

**இரண்டாவது செய்தி :** "வான் கொண்டு கிளர்ந்தெழுந்த மேகங்களே, எம்பெருமான் என்னிடத்துப் பறித்துப்போன கைவளையல்களைத் திருப்பிக் கொடுப்பதாக இருந்தால் என் நிலையைத் தெரிவியுங்கள்" என்பது. இரண்டாவது செய்தி,

*தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே.*

—நாச். திரு. 8;5.

என்பதாகும். அவனுடைய மன ஈடுபாட்டை அறிந்து கொண்டு தன் நிலையைத் தெரிவிக்குமாறு வேண்டுகை என்ற குறிப்பும் இதில் புலனாகின்றது. **சாற்றுமினே:** "அவன் தரிலும் தருகின்றான், தவிரிலும் தவிருகின்றான்; நீங்கள் அறிவித்துப் போருங்கள்" என்ற வியாக்கியான வாக்கியமும் கண்டு மகிழத்தக்கது. அன்றியும், "அவனுடைய திருவுள்ளத்தைக் நீங்கள் அறிந்து கொண்டு அதனை என்னிடம் வந்து 'சாற்றுங்கள்" என்று கொள்வதற்கும் தட்டில்லை.

**மூன்றாவது செய்தி :** தன்னுடைய நலன்களையெல்லாம் பறித்துச் சென்ற நாரணற்குத் தன்னுடைய நடலை நோயைத் தெரிவிக்க வேண்டும் என்பது மூன்றாவது செய்தியாகும். இச்செய்தி தாங்கிய பாசுரம்:

*சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த*
*தண்முகில்காள்! மாவலியை*
*நிலங்கொண்டான் வேங்கடத்தே*
*நிரந்தேறிப் பொழிவீர்காள்!*
*உலங்குண்ட விளங்கனிபோல்*
*உள்மெலியப் புகுந்தென்னை*
*நலங்கொண்ட நாரணற்குஎன்*
*நடலைநோய் செப்புமினே.*

—நாச். திரு. 8:6

[சலம்-கடல் நீர்; நிரந்து ஏறி-பரவியிருந்து; உலங்கு-பெருநுளும்பு (பெருங் கொசுக்கள்); நலம்-பெண்மைக்குரிய நாண் முதலிய குணங்கள்; நடலை நோய்-நிற்பது, இருப்பது, விழுவது, எழுவதாய்ப்படுகின்ற நோய்]

பாசுரத்தின் பொருள் தெளிவு. சில சொற்றொடர்களின் நயம் நம் மனத்தைக் கவர்கின்றது. 'மாவலியை ............பொழிவீர்காள்'': பயனையே கருதுபவர்களான (பிரயோஜநாந்தரபரர்களான) தேவர்களுக்காகத் தன்னை வாமன மாணியாக்கிக் கொண்டு இரந்து மூன்றடிமண் பெற்ற பெருமான் எழுந்தருளியிருக்கின்ற தேசத்தில் வாழும் நீங்கள் பயன் கருதாத எனக்காகக் (அநந்யப் பிரயோஜநையான எனக்காகக்) காரியம் செய்ய வேண்டாவோ? எம்பெருமான் ஓர் அசுரன் பக்கல் சென்று காரியம் செய்ததுபோல் நீங்களும் ஓர் அசுரன் பக்கல் சென்று காரியம் செய்ய வேண்டும் என்றா நான் சொல்லுகின்றேன்? இல்லையே: உடையவன் பக்கலிலே யன்றோ உங்களைப் போகுமாறு வேண்டுகின்றேன்?'' என்ற குறிப்பு இதில் புலப்படுவதைக் கண்டு மகிழலாம். 'ஏறிப்பொழிவீர்காள்!': ''சாய்கரத்தை உயர வைத்துத் தண்ணீர் வார்ப்பாரைப்போலே, காணவே விடாய் கெடும்படி உயரவேறி வர்ஷிக்கிறி கோளிறே; அவன் வர்த்திக்கிற (இருக்கிற) தேசத்திலே அவனோடே உங்களுக்கு ஒரு சம்பந்த முண்டானால் அவன் ஸ்வபாவமுண்டாக வேண்டாவோ?'' என்ற பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான வாக்கியம் கண்டு அநுபவிக்கத் தக்கது.

''உனக்காக யாம் செய்யத் தக்கது என்ன?''வென்று அந்த மேகங்கள் வினவ,

'நலங்கொண்ட நாரணற்கு என்
நடலைநோய் செப்புமினே'.

என்று அந்த மேகங்கள் செய்யத் தக்கதைச் செப்புகின்றாள். ''உலங்கு என்ற பெருங் கொசுக்கள் விளாம்பழத்தில் மொய்த்தால் அதன் சாறெல்லாம் சுவறிப்போவது போல், என் உடம்புடன் அணைந்து என் ஆற்றல் முழுவதையும் கொள்ளை கொண்ட பெருமானுக்கு நான் இங்ஙனம் நோவுபட்டுக் கிடக்கும் நிலையை எடுத்துக் கூறுங்கள்'' என்று வேண்டுகின்றாள்.

**நான்காவது செய்தி:** இஃது உயிரனைய செய்தியானதால் சொல்லும் போதே மிகப் பணிவாகத் தொடங்குகின்றாள்.

சங்கமா கடல்கடைந்தான்
　　தண்முகில்காள்! வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக் கீழ்
　　அடிவீழ்ச்சி விண்ணப்பம்.

—நாச். திரு. 8:7

[சங்கம்-சங்கு; மா-பெருமை வாய்ந்த; சே அடி-செவ்விய அடி; அடி வீழ்ச்சி-அடியேனுடைய]

என்ற பீடிகையுடன் தொடங்குவது கண்டு மகிழத் தக்கது. அதற்குப் பிறகு சொல்ல வேண்டிய செய்தியைத் தெரிவிக்கின்றாள்.

கொங்கைமேல் குங்குமத்தின்
　　குழம்பழியப் புகுந் தொருநாள்
தங்குமேல் என் ஆவி
　　தங்குமென்று உரையீரே.

—நாச். திரு. 8:7

''அவர் என்னுடன் கலவி செய்ய வருவாரென்று நம்பி முலைத் தடங்களில் குங்குமக் குழம்பு பூசி அணி செய்து வைத்துள்ளேன்; அதனைப் பயனுடையதாம்படிச் செய்வாராகில் தரிக்கலாம் என்று சொல்லுங்கள்'' என்

கின்றாள். 'என் ஆவி தங்கும்' என்ற சொல் நயம் நோக்கத்தக்கது. ''ஒரு நாள் அணைந்த அளவால் போகத்துக்குப் போராது; அஃது உயிர் தரிப்பதற்கே சாலும்'' என்ற குறிப்பு அறிந்து மகிழத்தக்கது.

இவளுடைய பாரிப்புக்கெல்லாம் ஒரு நாள் அணைந்தால் போருமோ? ஊழியெல்லாம் அணைத்துக் கிடந்தாலும் திருப்தி பெறமாட்டாத அபிநிவேசமன்றோ (பற்று) இவளது? அப்படிப்பட்ட அபிநிவேசம் ஒரு நாள் தங்கின அளவாலே திருப்தி பெறுமோ? **'ஒரு நாள் தங்குமேல் என் ஆவி தங்கும்'**: ''குணஜ்ஞானத்தாலே தரியாளோ என்றிருக்க வொண்ணாது; ஆணையுமாகில் தரிக்கலாம்'' என்பது பெரியவரச்சான் பிள்ளையின் வியாக்கியான வாக்கியம்.

**உள்ளத்தைத் தொடும் செய்தி:** இறுதியாகத் தன் நிலைமையை மீண்டும் ஒரு முறை புலப்படுத்திக் கூறும் செய்தி நம் உள்ளத்தையும் நெகிழ வைக்கின்றது. ''கார் காலத்தில் தவறாமல் வந்து சேர்கின்றேன்'' என்று சொல்லிப் போன பெருமான் வாராதொழிந்தாலும் நாம் திருநாம சங்கீர்த்தனம் பண்ணிக் கொண்டாவது ஒருவாறு தரித்திருப்போம் என்று கருதி, அடியார்கட்காகக் காரியம் செய்வதையே கடமையாகக் கொண்டு விரோதிகளைப் போக்குவதில் உற்சாகம் கொண்டு கிளருமவனான சக்கரவர்த்தித் திருமகனுடைய திருநாமங்களைச் சங்கீர்த்தனம் பண்ணத் தொடங்கினேன்; அதுவே காரணமாக உடனே தளர்ச்சியடைந்தேன்; மழைக் காலத்தில் எருக்கம் பழுப்புகள் அற்றற்று விழுவது போல் ஒசிந்து தளர்ந்து தளர்ந்து விழும்படியான நிலைமையை அடைந்தேன்; இந்நிலையிலும் அப்பெருமான் எனக்கு அருள் செய்ய நினைந்திலன்; என் வாழ்நாளெல்லாம் இப்படித் துக்கமயமாகவேயோ கழியப் போகின்றது? ஒரு நாளாகிலும் ஒரு வாய்ச்சொல்

அருளமாட்டாரோ?'' (நா. திரு. 8:8) என்று தான் ஏங்கி நிற்கும் நிலையைப் புலப்படுத்துகின்றாள்.

இதன் பின்னர் அவள் பேசும் பேச்சுதான் நம் உள்ளத்தில் ஆழப்பதிகின்றது. இஃது எம்பெருமான் திருவுள்ளத்தைக் கட்டாயம் தொடத்தான் செய்யும். அன்னையார் மேகத்தை விளித்துப் பேசுகின்றார்.

மதயானை போல்எழுந்த
 மாமுகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்!
 பாம்பணையான் வார்த்தை யென்னே!
கதியென்றும் தானாவான்
 கருதாதோர் பெண்கொடியை
வதைசெய்தான் என்னும்சொல்
 வையகத்தார் மதியாரே.

—நாச். திரு. 8:9

[பதி-இருப்பிடம்; தான்-எம்பெருமான்; வதை-கொலை; மதியார்-மதிக்க மாட்டார்கள்].

பாசுரத்தின் பொருள் வெளிப்படை. எனினும் சொற்றொடர்கள் குறிக்கும் தொனிப் பொருள் நம் இதயத்தில் ஒலிக்கின்றது. குக்கிராமமே குடியிருப்பானவர்கள் வந்தேறிகளாய்த் திருநாள் சேவித்து விட்டுப் போவது போலன்றியே எம்பெருமான் திவ்விய தேசத்திலேயே நிரந்தரமான வாழ்வு பெற்றிருப்பதால் செருக்கியிருக்கும் நிலைகண்டு 'மதயானை போல்எழுந்த மாமுகில்காள்!' என விளிக்கின்றாள். இதற்கு முன்னுள்ள பாசுரத்தில் கார் காலத்தில் வருவதாகச் சொல்லிப் போன எம்பெருமான் குறிப்பைப் புலப்படுத்தும் வகையில் 'கார் காலத்தெழுகின்ற கார்முகில்காள்![9] என்று விளித்தவளன்றோ? ஈண்டு 'பாம்பணையான் வார்த்தை என்னே!' என்பதில் திருவனந்தாழ்வானிடம்.

"சென்றால் குடையாம்; இருந்தால்சிங் காசனமாம்;
நின்றால் மரவடியாம்; நீள்கடலுள்—என்றும்
புணையாம்; மணிவிளக்கம்; பூம்பட்டாம்: புல்கும்
அணையாம்.

—முதல். திருவந். 53

[சென்றால்-உலாவினால்; இருந்தால்-உட்கார்ந்தால்; மரவடி-பாதுகை; புணை-மெத்தை (தெப்பம்): விளக்கு-தீபம்; பூம்பட்டு-திரிப்பரி வட்டம்; புல்கும்-தழுவும்; அணை-தலையணை].

என்று பொய்கையாழ்வார் அருளிச் செய்தபடி ஆதிசேடனிடம் எம்பெருமான் எல்லாவித கைங்கரியங்களையும் கொள்வதுபோல், என்னிடத்தும் கொள்வன் என்றிருந்தேன்; பாம்பணையைக் கைவிட்டுத் திருமதுரையில் வந்து பிறந்த கண்ணபிரான் தேர்த்தட்டில் நின்று சொன்ன வார்த்தையை (சரமசுலோகத்தை)[3] மெய்யென்று நம்பி மோசம் போனேன். பாம்போடே அணைந்து பாம்பின் தன்மையையே தனக்கும் உண்டாகப் பெற்றான். அதற்கு நாக்கு இரண்டாக இருப்பதுபோல் இவனும் இரண்டு நாக்குப்பெற்றான்"—'பொய்யனாகி விட்டான்' என்ற கருத்து இதில் தொனிப்பதைக் கண்டு மகிழ்கின்றோம். தன்னுடைய காக்கும் தொழிலை மறந்ததோடன்றி 'ஒரு பெண் பிள்ளையைக் கொலை செய்தான்' என்ற கருத்து உலகில் பரவுமாகில் பின்னர் அவனை மதிப்பார் உண்டோ? என்று அவன்மீது கழிபேரிரக்கமும் கொள்கின்றாள். இங்ஙனம் அன்னை ஆண்டாள் வேங்கடவாணன்மீது தூது விடுவதாக அமைந்த திருமொழியில் ஆழங்கால் பட்டு அன்னையாரின் அநுபவத்தையே பெற முயல்கின்றோம்.

3. பகவத் கீதை 18:66

# 11. மங்கை மன்னன் கருத்தில் வேங்கடம்

சோழ மண்டலத்தில் 'திருவாலி நாடு' என் ஒரு பகுதி யுண்டு. இதனை 'மங்கை நாடு' என்றும் வழங்குவர். இப்போது சிறப்புடன் திகழும் திருவாலி - திருநகரி'ப் பகுதியைச் சார்ந்தது சோழ வேந்தனின் தானைத் தலைவ ராகத் திகழ்ந்தவர் நீலன் என்பார். இவர் கள்ளர் குலத் தைச் சார்ந்தவர். இவருக்குத் திருமகனாகப் பிறந்தவர் கலியன். பிறந்த ஆண்டு நள என்பது; மாதம், கார்த் திகை; நாள், முழுமதியம் கூடிய கிருத்திகை நட்சத்திரம். 'கலந்ததிருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே' என்பது இவரது வாழித் திருநாமம். தந்தை யாருக்குப் பிறகு கலியன் ஆலி நாட்டின் தலைவராகவும் சோழ மன்னனின் தானைத் தலைவராகவும் விளங்கினார். ஆலி நாட்டைச் சார்ந்த திருவெள்ளக்குளம் என்ற ஊரில் மருத்துவர் ஒருவரின் வளர்ப்புத் திருமகளார் குமுதவல்லியை மணந்து கொள்ள விரும்பி அந்த நங்கை விதித்த இரண்டு நிபந்தனைகளையும் நிறைவேற்றும் நிலையில் இருந்தார்.

ஒரு நிபந்தனையின்படி திரு விலச்சினையும் பன்னிரு திருமண்காப்பும் பெற்றிருத்தல் வேண்டும் என்பது. கலியனும் திருநறையூர் சென்று அங்கு எழுந்தருளியுள்ள நம்பி திருமுன்பு திருவிலச்சினை பெற்று பன்னிரு திருமண்

காப்புகளையும் தரித்துக் கொண்டார். மற்றொரு நிபந்தனை ஓராண்டுககாலம் நாடோறும் 1008 ஸ்ரீ வைணவருக்கு அமுது செய்வித்து அவரது ஸ்ரீபாததீர்த்தமும் பிரசாதமும் உண்டு வர வேண்டும் என்பது. கலியனும் குமுதவல்லியார்மீது கொண்ட ஆராக் காதலாலே இதனை நிறைவேற்றிக் குமுதவல்லி யாரை ''நாடும் நகரமும் அறியக் கண்ணாலம் கோடித்துக்'' கை பிடித்தார் கலியன்.

**ததியாராதனை:** கலியன் தன் கையிலகப்பட்ட செல்வத்தையெல்லாம் பாகவதர்கட்கு அமுது படைத்திடுவதிலேயே செலவழித்தார். அரசனுக்குச் சேர வேண்டிய பகுதிப் பணமும் இதிலே கழிந்தது. பொருள் முட்டுப்பாட்டால் தம் அமைச்சர்களாகிய நீர்மேல் நடப்பான், நிழலிலொதுங்குவான், தாள் ஊதுவான், தோலாவழக்கன் என்ற அமைச்சர்களின் துணை கொண்டு முகமூடிக் கள்வர்கள்போல் ஆறலைத்துப் பொருளீட்டத் தொடங்கினார். எம்பெருமானே மணவாளர் கோலத்துடன் புது மணம் புணர்ந்த தம் மனைவியுடன் எல்லாவிதப் பொன் அணிகளையும் புனைந்து கொண்டு இவர்கள் கையில் சிக்கிக்கொண்டு அணிகலன்கள் அனைத்தையும் கழற்றித் தந்தான். கால்விரலில் அணிந்திருந்த அறுநாழி மோதிரத்தைக் கழற்ற முடியவில்லை. கலியன் மாப்பிள்ளையின் காலைப் பிடித்துக் கொண்டு தன் பல்லால் கடித்து வாங்கினர். (பிரபத்தி—சரணாகதி ஆகிவிட்டது.)

**திருமந்திர உபதேசம்:** அணிகலன்களை ஒன்று சேர்த்துக் கட்டி வைத்த மூட்டையைக் கலியனால் தூக்க முடியவில்லை. உடனே கலியன் மாப்பிள்ளையை நோக்கி, ''நீர் ஏதோ மந்திரம் செய்தீர்'' என்று சொல்லி அவரை வாளுருவி அதட்ட,மாப்பிள்ளையும் கலியனின் வலத்திருச் செவியில் மூன்று பதமாய், எட்டு எழுத்துகளாய்,இலங்கும் சகல வேத சாரமான திருமந்திரத்தை முன்பு நர-நாராய

ணனாய்த் தமக்குத்தாமே சொல்லிக் கொண்டே குறை தீர உபதேசித்தார். மணக்கோலத்துடனும் எம்பெரு மானும் திடீரென்று மறைந்து பெரிய திருவடிமேல் காள மேகம் போன்ற திருமேனியுடன் சேவை சாதித்தார்.

இங்ஙனம் யாதொரு காரணமும் பற்றாது கிடைத்த திருமந்திரத்தையும் அதற்கு உள்ளீடான ஸ்ரீமந் நாராயண னுடைய சொரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களையும் அருள்மாரி என்னும் பெரிய பிராட்டியாரின் அருளினாலே கண்டு அநுபவிக்கின்றார். தானும் **திருமங்கையாழ்வார்** என்ற திருப்பெயருடன் ஆழ்வாராகின்றார். இந்த அநுபவத்தின் விளைவாக,

வாடினேன்; வாடி வருந்தினேன் மனத்தால்;
  பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன்; கூடி, இளையவர் தம்மொடு
  அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன்; ஓடி உய்வதோர் பொருளால்
  உணர்வெனும் பெரும்பதம் திரிந்து
நாடினேன்; நாடி நான்கண்டு கொண்டேன்
  நாரா யணாஎன்னும் நாமம்.

—பெரி. திரு. 1.1:1

என்ற முதற்பதிகத்தின் முதல் பாசுரம் தொடங்கிப் பத்துப் பாசுரங்களால் முதல் திருமொழியை முடிக்கின் றார்.

**வடநாட்டுத் திருத்தலப் பயணம்:** திருமந்திரம் பிறந்த இடம் பதரிகாச்சிரமம். பதரி இமயமலையிலிருக் கும் ஒருதிருத்தலம். பதரிஎன்பது வடமொழியில் இலந்தை மரத்தின் பெயராகும். அம்மரங்கள் அடர்ந்து கிடக்கும் வதரி, வதரி நாதன் எழுந்தருளியிருக்கும் திருமலை

முழுதும் வதரியாகும். அவன் எழுந்தருளியிருக்கும் தலம் வதரிகாச்சிரமம் ஆகும். இலந்தைப் பழம் பெரிய பிராட்டியாரின் திருவுகப்புக்குரியது. திருக்கோயில் முழுவதையும் இருள் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தை மரம் உள்ளதென்றும், கலியுகத்தில் அது மக்கட்குப் புலனாகாது என்றும் கூறப்பெறுகின்றது. இந்த மரத்தின் அடியில் தான் வதரி-நாராயணன் தவசி வடிவில் இருந்து நரனுக்குத் திருமந்திரத்தை உபதேசித்ததாக வரலாறு. இதுவே இன்றைய வதரி-நாராயணனின் திருக்கோயிலாகத் திகழ்கின்றது. இந்த வதரியைத்தான் திருமங்கையாழ்வார் **'பாரோர் புகழும் வதரி'** (சிறியதிருமடல்) என்று போற்றுவார்.

திருமந்திரம் பெற்ற நிகழ்ச்சி திருமந்திரம் பிறந்த இடமாகிய பதரிகாச்சிரமத்தைச் சேவிக்க வேண்டும் என்ற அவாவைத் தூண்டியதால் வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார் ஆழ்வார். திருமந்திரப் பொருளின் எல்லை நிலமான திருத்தலங்களில் புக்கு அநுபவிக்க இழிகின்றார். வழியிலுள்ள திருப்பிரிதி என்ற திவ்விய தேசத்தைச் சேவித்துக் கொண்டு வதரியை அடைகின்றார். இங்குள்ள வதரிநாராயணன் சடை முடி கொண்ட தவசி வடிவில் இரு திருக்கைகளில் திருவாழி, திருச்சங்கு தாங்கிய நிலையிலும் மற்ற இருகைகளில் அபய முத்திரையுடனும் பத்மாசனத்தில் இருந்த திருக் கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றான்[1]. இவரைத் தமது விடாயெல்லாம் தீரும்வரை சேவிக்கின்றார். அதன்பிறகு சாளக்கிராமம் (இமய மலையிலுள்ளது), நைமிசாரணியம், வடமதுரை, அயோத்தி, பிருந்தாவனம், ஆயர்பாடி, கோவர்த்தனம்,

1. வடநாட்டுத் திருப்பதிகள் — அட்டைப்படம் இவ்வெம்பெருமானைக் காட்டுகின்றது.

வண் துவராபதி ஆகிய தலங்களைச் சேவித்து மங்களா சாசனம் செய்துகொண்டு 'சென்று காண்டற்கரிய' சிங்கவேள் குன்றத்திற்கு வருகின்றார். 'நின்ற செந்தீ மொண்டு சூறை நீள்விசும்பூடு இரிய' (1.7:5), 'தோய்ந்த தீயால் விண் சிவக்கும்' (1.7:8), 'கனைத்த தீயும் கல்லும் அல்லா வில்லுடை வேடருமாய்' (1.7:7) என்று சிங்கவேள் குன்றத்தின் நிலவெம்மையைப் பேசித் தீர்த்த ஆழ்வாரை நோக்கி "ஆழ்வீர் 'தெய்வமல்லால் சொல்ல வொண்ணா' (1. 7:4) என்றும், 'சென்று காண்டற்கரிய' (1 7:5) என்றும் சொல்லிக் கொண்டு சிங்கவேள் குன்றத்தில் ஏன் துவள்கின்றீர்? 'தீர்த்த நீர்த்தடம் சோலைசூழ் திருவேங்கடம்' (1.8:4) தெழிகுரல் அருவித் திருவேங்கடம்' (திருவாய் 3.3:1), 'சிந்துபூ மகிழும் திருவேங்கடம்' (ஷை 3.3:2) என்று நெஞ்சு குளிரப் பேசும்படியான ஈரத்தமிழ் நடையாடுதற்கு எல்லை நிலமான திருவேங்கட மாமலையில் நாம் அனைவர்க்கும் எளிதாகச் சேவை சாதிக்கின்றோம். இங்கே வந்து தொழுது ஆனந்த மடைவீர்" என்று அருளிச்செய்ததாகத் தம் உள்ளுணர் வால் அறிந்து வேங்கடம் அடைகின்றார். 'திருவேங்கடம் அடை நெஞ்சமே!' என்று ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகத் தம் நெஞ்சத்தை ஆற்றுப்படுத்துகின்றார்.

இந்த மலையையும் இங்கு எழுந்தருளியிருக்கும் எம் பெருமானையும் நான்கு திருமொழியால் (பெரி.திரு. 1. 8; 1.9; 1.10; 2.1) மங்களா சாசனம் செய்துள்ளார். இந்த நான்கு திருமொழியாலும் மங்கை மன்னன் கண்ட வேங்கடத்தையும் அவர் சிந்தையில் கோயில் கொண்ட திருவேங்கடவாணனையும் காண்போம். இந்த வேங்கட வாணன் நம்மாழ்வாருக்கு 'எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதமாக' இருக்கின்றான்.

**வேங்கடத்தின் சூழ்நிலை :** அழகு என்பது ஒரு தத்துவம் எங்கெங்கெல்லாம் அழகு ததும்பி வழிகின்

றதோ அங்கங்கெல்லாம் ஆண்டவன் கோயில் கொண்டிருப்பான் என்பது நம் முந்தையோர் கண்ட கொள்கை.

ஆலமும் கடம்பு நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்[2]

என்பது பரிபாடல். ஆலமரமும் கடப்பமரமும் யாற்றிடைக் குறையும் குன்றும் பிறவுமாகிய இடங்களிலெல்லாம் இறைவன் பல்வேறு பெயர்களில் பல்வேறு தெய்வங்களாக இருப்பான் என்று கருதியே பண்டையோர் அவ்விடங்களில் திருக்கோயில் அமைத்து வழிபட்டு வந்தனர் என்று கருதலாம். இறைவனுடைய திருமேனியையும் அழகெலாம் திரண்ட திவ்விய மங்கள விக்கிரமாகக் கருதும் மரபும் உண்டு. நம்மாழ்வார் திருமாலிருஞ் சோலை அழகரின் திருமேனி அழகில் ஈடுபட்ட திறம் தனிச் சிறப்பு வாய்ந்தது. ஆழ்வார் இத்தலத்திற்கு (மானசீகமாக) வருங்கால் கற்பகத் தரு கப்பும் கிளையுமாகப் பணைத்துப் பூத்தாற்போல் நிற்கின்றான் எம்பெருமான். அவனது அழகு வெள்ளம் அலைமோதி ஆழ்வார்மீது பாய்கின்றது. எம்பெருமானை நோக்கி வினவுகின்றார்.

முடிச்சோதி யாய்உனது
    முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
    தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும்
    பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ?
    திருமாலே கட்டுரையே.

—திருவாய் 3. 1:1

2. பரிபா. 4.

என்பது பாசுரம். திருமங்கையாழ்வார் திருமலைக்கு வரும்போது அதன் அழகு அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. அதனைப் பல பாடல்களில் குறிப்பிடு கின்றார். 'எல்லா உலகங்களுக்கும் திலகம் போன்று விளங்குவது திருமலை' என்கின்றார் ஒரு திருப்பாசுரத் தில். அதே பாசுரத்தில் மணம் மிக்க மலர்கள் நாறும் விசாலமான சோலைகளால் சூழப்பட்டது (1.8:9) என்றும் செப்புகின்றார். திருமலை தீர்த்தங்கள் நிறைந்த இடம். எண்ணற்ற தீர்த்தங்கள் அங்கு உள்ளன. 'விண்ணினின்றும் மழை நீரும் பனி நீரும் பெய்யப் பெற்ற தும் காளமேகங்கள் வந்துபடியும்படியான உயர்ந்து ஓங்கி யிருக்கின்ற சோலைகளால் சூழப்பெற்றதுமான மலை' (1.8:7) என்று குறிப்பிடுவார், மேலும் இந்த மலையை, 'தேனேய் பூம்பொழில் திருவேங்கடமாமலை' (1.9:2), என்றும், 'வேயேய் பூம்பொழி சூழ் விரையார் திருவேங் கடம்' (1.9:1) என்றும், 'குன்றேய் மேகம் குளிர் மாமலை வேங்கடம்' (1.8:3) என்றும், 'நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார் திருவேங்கடம்' (1. 9:4), 'கரிசேர் பூம்பொழில் சூழ் கனமாமலை' (1. 9:7) என்றும், 'கோல்தேன் பாய்ந் தொழுகும் கமலச்சுனை வேங்கடம்' (1, 9:9) என்றும் பலவாறு சோலைகளையும் சுனைகளையும் காட்டுவார்.

**வேங்கடவாணன் :** திருமலையின் இயற்கை எழிலி லும் மலையின் உச்சியிலும் ஈடுபட்ட திருமங்கை யாழ்வார் மலைமீது திருக்கோயில் கொண்டுள்ள மாலவன் மீதும் தம் உள்ளத்தைப் பறி கொடுத்துப் பல படியாகப் பேசுகின்றார். திருமலையப்பன் கிருதயுகத்தில் வெளுத்த நிறத்தையுடையவன்; கலியுகத்தில் கறுத்த நிறத்தை யுடையவன்; துவாபர யுகத்தில் சாமள நிறத்தையுடைய வன் என்கின்றார். இவர்களைப் பலன்களை விரும்பாத சொரூபத் தெளிவுடைய பரமைகாந்திகள் வழிபடுகின்ற னர் (1. 8:2) என்பார்.

1. **அர்ச்சாவதார ஆற்றல்கள்:** எம்பெருமான் தனது விபவாவதார காலத்தில் பல விரோதிகளை ஒழித்துத் தனது அவதாரங்களின் நோக்கத்தை நிறைவேற்றியது போலவே, தனது அர்ச்சாவதாரத்திலும் (வேங்கடவாணன் நிலையில்) பல விரோதிகளை ஒழிக்க வல்லவர் என்பதைக் காட்டுகின்றார். திருவேங்கட முடையான்தான் குருந்தம் ஒசித்த கோபாலனாக வந்தவர்; சங்குகள் தங்கியிருக்கின்ற திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்கின்ற தாமரைக் கண்ணினன் (வியூகம்); கொக்கு வடிவமாகச் செருக்குடன் கிளர்ந்து வந்த பகாசுரனின் வாயை இரண்டாகக்கிழித்தெறிந்தவர் (பெரி திரு. 1. 8:1); கல்நெஞ்சத்தையுடைய பூதனையிடப் பாலமுதம் பருகியதுடன் அவள் உயிரையே குடித்த அற்புதச் செயலைப் புரிந்தவர் (1.8:2); கண்ணனாக இருந்தபொழுது பேராமல் நிலையாக நின்று கொண்டிருந்த பெரிய மருத மரங்களிடையே தவழ்ந்து நளகூபரமணிக்ரீவர்களின் சாபத்தை நீக்கிய பெருமையுடையவர்; குன்றம் ஏந்தி இந்திரன் பெய்வித்த கல்மாரியைத் தடுத்து ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்த பேரருளாளர் (1.8:3); பாரதப் போரில் பார்த்தனுக்குச் சாரதியாக நின்று தேர் செலுத்தி பாரதப்போரை வெற்றியுடன் முடித்த வித்தகர்; ஆயர் பாடியில் கோபியருடன் குரவைக் கூத்து ஆடிய கோபாலன் (1.8:4); வள்ளண்மை மிக்க மாவலியின் யாக பூமியில் மாணியாய் எழுந்தருளி தன் திருக்கையாலே மண்ணிரந்து கொண்டவர்; தசரத இராமனாக நின்று மராமரங்கள் ஏழினையும் ஓரம்பினால் துளைத்து அற்புதச் செயலைப் புரிந்தவர் (1.8:5) முன்னொரு காலத்தில் பிரளயம் கொள்ளாதபடி, பாலகனாய் ஏழுலகையும் தன் திருவயிற்றில் அடக்கி ஓர் ஆலந்தளிரிலே சயனித்தருளியவர்; சந்திரனின் க்ஷரோகத்தைப் போக்கியவர்: திண்திறல் அரியாகி ஒண்திறல் அவுணனின் மார்பைத் தன் வள்ளுகிரால் பிளந்து அவன்

உயிரைக் குடித்த திறலுடையவர் (1.8:6). ஐம்பெரும் பூதங்களாக நின்று ஆயிரம் திருப்பேர்களால் பேசப்பட நின்ற பெம்மான் (1.8:7). நித்திய சூரிகட்குத் தலைவன்; பிராட்டியாருக்கு நாயகன் (1.8:8); திருவெட்டெழுத்து மந்திரத்தை அநுசந்திப்பவர்களின் பிறப்பறுத்துத்திரு நாட்டில் நித்திய கைங்கரியச் செல்வத்தை அளிப்பவர் (1. 8:9). இப்படிப்பட்ட எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாகிய 'திருவேங்கடம்' என்ற திவ்விய தேசத்தை அடையுமாறு ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகத் தம் நெஞ்சுக்கு உபதேசிக்கின்றார் ஆழ்வார்.

**பாவங்களைப் போக்குமாறு வேண்டுதல்:** ஆழ்வாரின் திருவுள்ளமும் அவர் விருப்பத்திற்கு இசைய, இருவருமாகத் திருவேங்கடமுடையானை அநுபவிக்கத் திருமலையில் வந்து புகுந்தனர். எல்லாவற்றுக்கும் இறைவனாய், எல்லாவித உறவுகளாகவும் திருமால் இங்கு நிரந்தரமாக இருப்பதால் தம்முடைய விருப்பங்கள் எல்லாம் இங்கே நிறைவேறும் என்ற மிகுந்த பாரிப்புடன் வந்த ஆழ்வாருக்கு திருமலையப்பன் முகம் காட்டவில்லை; ஆழ்வார் மிகவும் திருவுள்ளம் நொந்து எல்லாம் அறிந்தவனாய், எல்லாவித ஆற்றலுடையவனாய்த் தமக்கு வகுத்த நாதனாய், பெரிய பிராட்டியாரை ஒரு நொடிப் பொழுதும் விட்டுப் பிரியாதவனாய் இருக்கும் எம்பெருமான் இப்போது தம்மை அலட்சியம் செய்திருப்பதற்குத் தம்முடைய மிகுந்த பாவங்களே காரணமாக வேண்டும் என்று கருதி அவற்றைப் போக்க வேண்டும் என்று பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு திருமலையப்பன் திருவடிகளிலே விழுந்து சரண புகுகின்றார். அப்பெருமான் திருவுள்ளத்தில் இரக்கம் பிறக்குமாறு பாசுரம் பேசுகின்றார். அவற்றைக் காண்போம்.

''திருமலையில் எழுந்தருளியுள்ள பெருமானே, நீயே எல்லாவித உறவுகளுமாக இருக்க, அது செய்

யாமல் தாய், தந்தை, தாரம், சுற்றம். மக்கள் என்று உற வினரால்லாதவரை உறவினர்கள் என்று நம்பி மிகவும் துன்பப் பட்டேன். உண்மையில் எந்தவித ஆற்றலும் அற்றவர்களான அவர்களை வீணே நம்பி மோசம் போனேன். இப்போது நல்லறிவு ஏற்பட்டு நின்னை வந் தடைந்தேன்'' (1.9:1). இப்பாசுரத்தில் நாயேன்—நாய் போல நீசன் என்று நைச்சியாநுசந்தானம் பண்ணுகிற படி. இவ்விடத்தில் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செயல் பாரீர்: ''நாயேன்'' —நான் செய்து கொண்ட படி யைப் பார்த்தால் பிறர்க்குமாகேன்; தேவரீர்க்குமாகேன். மனம் போனபோக்கில் கல்லைவிட்டெறிவார்கள். உள்ளே புகுதரில் தொட்டனவும் தீண்டினவும் பொகட வேண்டி வரும். ''இப்பூ மண்டலத்தில் மான்விழிபோன்ற கண்ண ழகுள்ள மாதர்களின் கண் மயக்கில் சிக்கி நானாவித நரகம் புகுவதற்குக் காரணமான பாவங்களை நான் ஒரு வனே செய்தேன். இப்போது அநுதாபம் பிறந்தமையால் நின்னை வந்தடைந்தேன்'' (1.9:8). ''விவேகம் சிறிது மின்றி யாசித்து வந்தவர்கட்குப் பொருள் தாராதொழி யினும், இனிமையான தேன் ஒழுகும் சொற்களைக் கூட சொல்லா தொழிந்தேன். கணக்கிலடங்கா உயிர்களைக் கொன்றேன்; அந்தக் கணத்திலேயே நின்னை வந்தடைந் தேன்'' (1.8:3). இப்பாசுரத்தில் 'அன்றே வந்தடைந்தேன்' என் பதில் 'அன்றே' என்பதற்கு அநுதாபம் பிறந்தாதல், பிராயச் சித்தம் பண்ணியாதல் வருகையன்றிக்கே, கொன்ற கை கழுவாதே உதிரக் கை கழுவாதே வந்து சர ணம் புகுந்தேன்' என்பது பெரியவாச்சான்பிள்ளை உரை.

''சாத்திரங்களில் சொல்லப் பெற்றிருக்கும் அத்தனை மக்களிலும் பிறப்பதும் இறப்பதும் செய்தாயிற்று. இன்ன மும் பிறவிகள் எடுக்க வேண்டும்படி மீத வினை இருந்தா லும், பிறப்பதற்கு ஆற்றலில்லாதபடி மிகவும் மெலிந்து போனேன். இந்நிலையில் இளைத்து நின் திருவடிகளில்

வந்து விழுந்து விட்டேன்'' (1.8:4). ''அதிபாதகம், உப பாதகம், மகா பாதகம் என்னும்படியான பாவங்கள் எப்படிப் பட்டவையாயினும் செய்யுங்கால் சிறிதும் சலியாமல் செய்து விட்டேன். பின்னர் அப்பாவங்கட்கு நேரக் கூடிய பலன்களைக் கேள்வியுற்று, 'என்ன செய்தோம்!' என்ன செய்தோம்! என்று வருத்தத்தால் குன்றிப் போனேன். 'நாராயணா' என்று நாலெழுத்துச்சொல்லி உன்னைத் துதிக்கவும் முடியாத ஆற்றலற்றவனானேன். ஆயினும் நின்னடிக்கே வந்து புகுந்தேன்'' (1.8:5). ''உடல் ஐம்பெரும் பூதங்களாலானது. மண்ணையும் மணலையும் கல்லையும் சேற்றையும் கொண்டு வீடு கட்டு மாப்போலே ஐந்து பூதங்களைக்கொண்டு இந்த ஊனாலான பிண்டம் உண்டாக்கப் பெற்றது. 'தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும், வேண்டா நாற்ற மிகு உடல்' (திவ்விய கவி) என்றவாறு புண்கள் நிறைந்து கிடக்கும் இந்தத் 'திருமேனி!' இப்படிப் பட்ட உடலில் அகப்பட்டுத் துவண்டு போனேன்; இனி எந்த ஓர் உடலையும் ஏற்க ஆற்றலின்மையால் பிறப்பு இறப்புத் தொடர்கட்கு அஞ்சி நின் திருவடிவாரத்தில் வந்து விழுந்தேன், (1.8:6)

''அறிவு நடையாடாத இளம்பிராயத்தில் பல தவறான செயல்களில் ஈடுபட்டேன்; குமரப் பருவத்தில் மாதர்க்காகத் தேடித் திரிந்து அலைந்து சதிர்கேடனானேன். போனகாலம் பழுதாய்ப் போனாலும் இனியாகிலும் நல்வழியில் சென்று உய்யலாம் என்று நின்னையடைந்தேன்'' (1.8:7). ''பல பிறப்புகள் உண்டாகும் வித்துக்களாகப் பல செயல்களைச் செய்தேன். இங்ஙனம் பல பிறவிகளில் உழன்று வந்த அடியேன்,' 'யாத்ருச்சிக சுக்ர விசேடத்தாலே' நின்னைக் காணவேண்டும் என்ற ஆசை பிறந்தது இந்தப் பிறவியில். அதனால் நான் நின்ற நிலை மிகவும் பொல்லாதது என்று என் நெஞ்சில்

பட்டது. இதுவரையில் நடந்தவற்றையும் இனி நடக்கப் போகின்றவற்றையும் நினைந்து சகிக்க மாட்டாமல் உன் திருவடிகளை வந்து பணிந்தேன்.'' (1.8:8). ''நின்னுடைய உறவை அறுத்துக்கொண்டு தொலை தூரம் ஓடிப்போன எனக்கு ஓரிடத்திலும் ஒருவகையான ஆதாரமும் இல்லை. ஆன்மாவுக்கு ஞானமும் ஆனந்தமும் நிருபகமாயினும் என் வரையில் நான் பாவமே நிருபகமாம்படி பாவங்களையே செய்து பாவியானேன். உன்னைப் பெறுவதற்கு உறுப்பான வழிகளைப்பற்றி எள்ளளவும் ஞானமில்லை; நீயோ எப்படிப்பட்ட குறைவாளரையும் காக்க வல்ல ஆச்சரிய சக்தியுள்ளவன். உன்னுடைய குளிர்ந்த திருவுள்ளத்தில் என்னைப் போன்றவர்களின் தீய செயல்களினால் சீற்றம் பிறந்தாலும் அதனைப் பொறுப்பித்துக் காக்கவல்ல பெரிய பிராட்டியாரும் 'அகல கில்லேன் இறையும்' என்று நின் திருமார்பில் உறையா நின்றாள். இப்படியிருக்கும் இருப்பிலே நான் வந்து சரணம் புகுந்தேன்'' (1. 8:9).

இப்பாசுரத்தில் **'மாதவனே!'** என்ற சொல் பிராட்டியை முன்னிட்டுச் சரண் புகுந்தமையை விளக்கும். மா—பிராட்டிக்கு; தவன்-நாயகன். மேலும் இப்பாசுரத்திலுள்ள **'பாவமே செய்து பாவியானேன்'** என்ற தொடருக்கு பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் தரும் சிறப்புரை: 'பாவமே செய்தேன்' என்றாவது, 'பாவியானேன்' என்றாவது சொன்னால் போதாதோ? இப்படி இரண்டையும் சேர்த்துச் சொன்னதன் கருத்து யாதெனில் கேளீர்: ''பாவம் செய்து புண்ணியான்மாவாக ஆவதுமுண்டு; புண்ணியம் செய்து பாவியாவதும் உண்டு. தசரத சக்கரவர்த்தி அசத்தியவசனமாகிற பாவத்திற்கு அஞ்சி, சொன்ன வண்ணம் செய்தலாகின்ற புண்ணியத்தைப் பண்ணியும், சாட்சாத் வடிவெடுத்து வந்த புண்ணியமான இராமபிரானை இழந்து ஆபாச தர்மத்தில் நிலை நின்றான் என்ற காரணத்தினால் அவனுடைய புண்ணியம்

பாவமாகவே ஆயிற்று; பரமபத பிராப்திக்குத் தகுதியற்று வனாய் விட்டான். 'சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன்' என்று பாவிகளில் முதல்வனான சிசுபாலன் தான் உள்ள வரையிலும் பாவமே செய்து போந்தாலும் முடிவில் நல்ல பேறு பெற்றவனாதலால் அவனுடைய பாவமெல்லாம் புண்ணியமாகவே ஆயிற்று. ஆக இப்படிப் பாவம் செய்து புண்ணியசாலி ஆவதும், புண்ணியம் செய்து பாவியா வதும் உண்டாயினும் 'பாவமே செய்து பாவியானேன்'— அதாவது தசரதனைப் போலே புண்ணியத்தைச் செய்து பாவியானவனல்லேன்; சிசுபாலனைப் போலே பாவத் தைச் செய்து புண்ணியான்மாவாக ஆனவனும் அல் லேன். செய்ததும் பாவம், ஆனதும் பாவியாக'' என்றது காண்க.

இங்ஙனம் பலவாறு முறையிட்டு ஒரு தடவைக்கு ஒன் பது தடவையாக 'அடியேனை ஆட்கொண்டருள வேணும், அடியேனை ஆட்கொண்டருள வேணும்' என்று பிரார்த்திக்கின்றார். ஆழ்வார்.

**3. அகப்பற்று, புறப்பற்றுகளைப் போக்குமாறு வேண்டுதல்:** அகப்பற்று புறப்பற்றுகள் கழிந்து பர பக்தி பெருகினாலன்றோ கைங்கரியப் பிராப்தி ஏற்பட வழி உண்டாகும். அதனால் இருவகைப் பற்றுகளைப் போக்க வேண்டும் என்றும் பக்தி சம்பத்தைத் தந்தருள வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றார்.

இங்குத் திருவேங்கடமுடையானை இராமனாக விளிக்கின்றார், அவனும் இவனும் ஒருவனே என்ற ஒற் றுமை நயம் தோற்றுவதற்காக. ''இராவணனால் குடி யிருப்புஇழந்து கிடந்த தேவர்கள் யாவரும் களித்து வந்து தொழும்படியான திருவேங்கட மலையிலே எழுந்தருளி

யிருக்கின்ற எம்பெருமானே! இவ்விருள்தருமா ஞாலத்தின் இருப்பு பெருந்துக்கம் என்றுணர்ந்த என் இடரைப் (அகங்காரம், மமகாரம்) போக்கியருளாய்'' (1.10:1). புற்றிலே அரவங்கள் மாறாதவாறு இருப்பதுபோல, இலங்கை இராவணனுக்கு முன்பும் மாலியவான் முதலியவர்கள் குடியிருந்த இடம். அவர்களையும் பெரிய திருவடியின்மீது ஏறிச்சென்று ஒழித்த வரலாற்றை நினைவு கூர்கின்றார். ''ஆர்த்தர்களைக் காப்பதற்கென்றே தனிமாலை இட்டிருக்கின்ற உனக்கு என்னுடைய விரோதிகளைப் போக்குகை ஒரு பெரிய செயலன்று. அருள் செய்ய வேண்டும்'' (1 10:2).

''பிறரை இரட்சிக்க நான் ஆற்றலுடையனாயினும், பாவிகளின் தலைவனான உம்மை இரட்சிப்பது எனக்கு எளிதன்று; இஃது அருமையான செயல்'' என்று எம்பெருமான் திருவுள்ளம் ஆனதாகக் கருதி,'' பிரளய காலத்தில் கடல் சூழ்ந்த உலகங்களையெல்லாம் திருவயிற்றிலே வைத்திட்டு இளையதொரு ஆலந்தளிரின்மீது திருக்கண் வளர்ந்தருளின அகடிதகடநா சமர்த்தனான உனக்கு அரிதான செயலும் உண்டோ? எல்லாம் எளிதே என்று அந்த ஆற்றல் சிறப்புத் தோன்றத் திருமலையில் சேவை சாதிக்கின்றாய். எனக்கு அருள்புரியாய்'' (1. 10;3). 'திருமலையில் எழுந்தருளியிருக்கின்ற இருப்பில் பரத்துவம், சௌலப்பியம் என்ற இரண்டு திருக்குணங்களும் விளங்குகின்றன என்ற குறிப்பை இரண்டு நிகழ்ச்சிகளால் புலப்படுத்துகின்றார். திருவாய்ப்பாடியில் ஆய்ச்சியர் உறிகளின் மேலே சேமித்து வைத்த நெய் முதலிய பசு தரும் பொருள்களை அமுது செய்தருளின நிகழ்ச்சியால் சௌலப்பியம் புலப்படுகின்றது. வாமன மாணியாய் மாவலியிடத்துச் சென்று நீரேற்று நிலம் பெற்று ஈரடியாலே உலகளந்தாய்' என்ற நிகழ்ச்சியால் பரத்துவத்தை வெளியிடுகின்றார்.

உண்டாய் உறிமேல் நறுநெய் அமுதாக
கொண்டாய் குறளாய் நிலம்ஈர் அடியாலே
விண்தோய் சிகரத் திருவேங் கடம்மேய
அண்டா! அடியேனுக் கருள்புரி யாயே (4)

என்பது பாசுரம். திருவேங்கட மலை பூமண்டலத்தில் இருப்பதால் நம் போன்ற மனிதர்கள் சென்று சேவிப்பதற்குப் பாங்காயிருக்கும். விண்தோய் சிகர திருவேங்கட மாகையால் நித்திய சூரிகள் வந்து சேவிப்பதற்குப் பாங்காய் இருக்கும். இக்காரணங்களால் "வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு' (நான். திருவந். 45) என்றார் திருமழிசைபிரான், "மந்திபாய் வடவேங்கட மாமலை, வானவர் சந்தி செய்ய நின்றான்" (அம்லனாதி-3) என்றார் பாண்பெருமாள். நித்திய சூரிகள் சர்வகாலமும் பரத்துவத்திலே திளைத்தவர்களாகையாலே சௌலப்பியத்தைக் காண வருவார்கள்; மனிதர்கள் பரத்துவத்தை விரும்பிச் செல்லுவார்கள். 'திருவேங்கடம் மேய அண்டா!' என்ற விளியும் ஈண்டுப் பொருத்தமாக அமைந்துள்ளது. 'அண்டன்' என்று இடையனுக்கும் தேவனுக்கும் பெயர். 'உறிமேல் நறுநெய் அமுதாக உண்ட அண்டா!' என்று யோசித்து 'இடையனே!' எனலாம்; 'குறளாய் ஈரடியாலே நிலம் கொண்ட அண்டா!' என்று யோசித்து 'தேவனே! —பரமபுருடனே!' எனலாம். இரண்டு யோசனையாலும் சௌலப்பியம் பரத்துவம் விளங்கினமை கண்டு தெளியலாம். இவ்வாறு கூறியவர் 'அடியேனுக்கு அருள் புரியாயே' என்று பிரார்த்திக்கின்றார் (1.10:4).

பக்தர்களின் விரோதிகளிடம் சீற்றமும் பக்தர்களிடத்தில் வாத்சல்யமும் விளக்கத் திருமலையில் சேவை சாதிக்கின்ற போக்கைக் காட்டும் நிகழ்ச்சிகளாக வெறுந்தூணில் ஆளரியாக 'அவதரித்து' இரணியனின் உடலைப் பிளந்தெறிந்ததையும் சிறுக்கனான பிரகலாதாழ்வானுக்கு

அருள் செய்ததையும் பேசிக்‘குறிக்கோள் எனை நீயே’—‘ஓரடியானும் உளன் என்று திருவுள்ளத்தில் வைத்திரு’என்கின்றார். ‘‘திருவனந்தாழ்வானைப்போலே என்னையும் அத்தாணிச்சேவகத்திற்கு ஆளாக்கிக்கொள்வாய்’’என்பது குறிப்பு (1.10:5). இந்த ஐந்து பாசுரங்களும் ‘அடியேன் இடரைக் களையாயே’ (1), ‘அருளாயே’ (2), ‘அடியேற்கு அருளாயே’ (4), குறிக்கோள் எனை நீயே’ (5) என்று பிரார்த்தனையாகச் செல்வதைக் காண்கின்றோம்.

இங்ஙனம் பிரார்த்தித்த ஆழ்வாரை நோக்கித் திருமலையப்பன் அவன் திருவுள்ளத்தில் புகுந்தான். இதனை அறிந்த ஆழ்வார் அதனை இனிதாக அநுபவிக்கின்றார்.

மன்னா இம் மனிசப் பிறவியை நீக்கித்
தன்னாக்கித் தன்னின் அருள்செய்யும் தலைவன்
மின்னார் முகில்சேர் திருவேங் கடம்மேய
என் ஆனை என் அப்பன் என்நெஞ்சில் உளானே(6)

என்பது பாசுரம். எம்பெருமான் தமது நெஞ்சில் புகுந்தவாறே தாம் சம்சாரத்தில் நின்றும் விலகிவிட்டதாகவே நினைத்துப் பேசுகின்றார் ஆழ்வார். ‘‘நிலைத்திராத இந்த மானிடப் பிறவியைப் போக்கடித்து, என்னையும் தனக்கு ஆளாக்கிக் கொண்டு எனக்கு இன்னருள் செய்யும் எம்பெருமான், மின்னலோடு கூடிய முகில்கள் சேரப் பெற்ற திருமலையில் எழுந்தருளியிருக்கின்ற என் ஆனை போன்றவன், என் நெஞ்சில் எழுந்தருளி விட்டான்’’ என்கின்றார். இதில் ‘மின்னார்முகில் சேர்’ —பிராட்டியும் பெருமாளும் சேர்ந்த சேர்த்தியை உவமையிட்ட அற்புத நயம் அநுபவித்து மகிழத் தக்கது (1.10:6).

‘அண்ணா அடியேன் இடரைக்களையாயே!’ என்று முதற்பாசுரத்தில் தாம் வேண்டிக் கொண்டபடித் தம்

முடைய இடரைக் களைந்து அருளுகின்றார் திருமலையப்பன். இச்செயல் நம்பின்னைப் பிராட்டியின் கலவிக்கு விரோதிகளாக இருந்த ஏழு அசுராவேசம் கொண்ட காளைகளின் வலியை அடக்கினது போலிருக்கையாலே, அதனை இப்பாசுரத்தில் பேசி இனியராகின்றார். ''மானினது நோக்கினையொத்த நோக்கையுடைவனான நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொள்வதற்காக அவளுடைய தந்தையின் கட்டளைப்படி ஏழு காளைகளைக் கொன்றொழித்த பெருமிடுக்கனே! அன்று அவளுக்கு எவ்வளவு இன்பமாக இருந்தாயோ, எனக்கும் அவ்வளவு இன்பமாயிருப்பவனே! திருவேங்கடமுடையானே! அந்த நப்பினைப் பிராட்டியையும் கூட்டிக் கொண்டு என் மனத்தில் குடிகொண்டிருக்கின்றாய்! இப்படியும் ஒரு திருவருளுண்டோ?'' என்கின்றார். (1.10:7)

''இப்படி என் நெஞ்சில் நப்பின்னைப் பிராட்டியோடும் கூடவந்து புகுந்த பின்பு அவன் திருவடிகளில் கைங்கரியம் பண்ணுவது தவிர, வேறொன்றும் நான் அறியேன்'' என்கின்றார். ''எம்பெருமான் தன்னை உகவாதார்க்கு எட்டாதவன்; தன்னை உகந்தவர்க்குக் கையாளாக இருப்பன். துரியோதனாதியர் திறத்திலும் பாண்டவர் திறத்திலும் இதனைக் காணலாம். 'சிறிது பக்தியுடையாக்கும் அவன் அணியன என்பதை என்னைக் கொண்டே அறியலாம்' என்று கூறுவது போல 'என் சிந்தையுள் நின்ற மாயன், என்கின்றார். திருமலையில் சர்வசுலபனாய் எழுந்தருளியிருக்கும் திருமலையப்பனின் திருவடிகளைத் தவிர வேறொன்றும் அறியேன் (1.10:8). இங்ஙனம் தான் பெற்ற பெரும் பேற்றை ஒரு பாசுரத்தில் வாயாரச் சொல்லி மகிழ்கின்றார்.

வந்தாய்; என்மனம் புகுந்தாய் மன்னிநின்றாய்
நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!
சிந்தா மணியே! திருவேங் கடம்மேய
எந்தாய்! இனி யான்உனை என்றும் விடேனே (9)

என்பது பாசுரம். 'வந்து என்மனம் புகுந்து மன்னி நின்றாய்' என்று ஒரு வாக்கியமாகவே சொல்லி விடலாம். ஆனால் ஆழ்வார் அங்ஙனம் சொல்லவில்லை. தம்முடைய பேரானந்தம் நன்கு விளங்குமாறு வந்தாய்—என் மனம் புகுந்தாய் — மன்னி நின்றாய் என்று தனித்தனி வாக்கிய மாக நீட்டி நீட்டி உரைத்து மகிழ்கின்றார்.

**வந்தாய்** — பரமபதம், திருப்பாற் கடல் முதலான சிறந்த இடங்களை விட்டு இவ்விடம் (திருமலை) வந்தாய். **என்மனம் புகுந்தாய்** — வந்த இடத்திலும் அநுட்டானம் என்ற நியம நிட்டைகளில் சிறந்த யோக்கியர்களின் மனத்தைத் தேடியோடாமல் நாயினும் கேடனான என் மனத்தைத் தேடிப் பிடித்து வந்து புகுந்தாய். **மன்னி நின்றாய்**—. 'இனிய இடங்களில் நாம் சுகமாய் இருப்பதை விட்டு இவருடைய அழுக்கு நெஞ்சில் சிறைப்பட்டுக் கிடப்பானேன்?' என்று வெறுத்து நெஞ்சைவிட்டு நீங்காமல் 'இதனைவிடச் சிறந்த இடம் வேறொன்று நமக்கு இல்லை' என்று என் நெஞ்சில் நிலைத்து இருந்து விட்டாய். 'அப்ராக்ருதனான நீ மிகவும் கீழான என் நெஞ்சில் வந்து புகுந்ததனால் உன்னுடைய தேசுவுக்கு எள்ளளவும் குறை இல்லை; மாறாக முன்னிலும் தேசு விஞ்சி நிற்கின்றது' என்று குறிப்பிடுவதுபோல் 'நந்தாத கொழுஞ்சுடரே!' என விளிக்கின்றார். **சிந்தாமணியே**— காமதேனு, கற்பகத் தரு முதலானவைபோல நினைத்த மாத்திரத்தில் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியவனே! இப்படிப் பட்ட உன்னை இனி நான் ஒரு நொடிப்பொழுதும்

விட்டுப் பிரிய மாட்டேன்'' என்று தமக்குப் பரபக்தி வாய்க்கப் பெற்றதைப் பேசுகின்றார்.

**நெஞ்சைப் போற்றுதல்:** தமிழ் இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் நெஞ்சை வேறு படுத்திப் பேசுவது மரபு. நெஞ்சைத் தூது விடுவதாகவும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன அன்றோ? நல்ல பொருள்களைப் பற்றிப் பேசிக்கொண்டு பொழுதுபோக்குவதற்கு இந்த இருள்தருமா ஞாலத்தில் வேறு யாரும் உடன்படாமல் 'உண்டியே உடையே உகந்தோடுகின்றவர்களாக' (பெரு. திரு 3:4) இருப்பதால் உசாத்துணையாக இருப்பதற்கு நெஞ்சு தவிர வேறு இல்லாமையால் அந்த நெஞ்சை நோக்கியே ஆழ்வாரும் பேசுகின்றார். ''யானும் என் நெஞ்சும் இசைந்தொழிந்தோம்''. (திருவாய்) என்று சடகோபரும் அருளிச் செய்தார். ஆகையால் நெஞ்சை விளித்துச் சொல்லுவதென்பது பக்தர்கட்கு ஒரு நற்போது போக்காக அமைந்ததால் மங்கை மன்னனும் நெஞ்சை நோக்கி இத்திருமொழியின் (பெரி. திரு. 2.1) ஒவ்வொரு பாசுரங்களிலும் 'திருவேங்கடமுடையானுக்கு அடிமைத் தொழில் பூண்டாயே! அடிமைத் தொழில் பூண்டாயே!' என்று சொல்லி உகக்கின்றார். 'நாயேன் வந்தடைந்தேன் நல்கியான் என்னைக் கொண்டருளே' (1·9:1) என்றும், 'இனியான் உன்னை என்றும் விடேன்' (1.10:9) என்றும் ''பகவத்விஷயத்தில் நான் ஈடுபடும்படியாக அவன் திறந்து அடிமைத் தொழில் பூண்டது நின்னாலன்றோ?'' என்று ஒருகால் சொன்னதுபோலே ஒன்பது முறை சொல்லி நெஞ்சைப் புகழ்கின்றார். இதனை விரிவாகக் காண்போம்.

''என் நெஞ்சமே! இந்த இருள்தருமா ஞாலத்தில் பிறந்த என்னுடைய நெஞ்சாக நீ இருந்தும் இந்த

மண்ணோருடைய நெஞ்சு எங்ஙனம் தீய பொருள் களையே சிந்தை செய்கின்றதோ அங்ஙனமே நீ விஷயாந் தரங்களைச் சிந்தியாமல் சம்சார நாற்றமே கண்டறி யாத நித்தியசூரிகளின் நெஞ்சுபோலே மிக்க தவம் செய்த மனிதர்களான மிருகண்டு, முதலாழ்வார்கள், புகழ் மழிசை ஐயன், அருள் மாறன், சேரலர்கோன், துய்ய பட்டநாதன், தொண்டரடிப் பொடிகள், நற்பாணன் போன்றவர்களின் நெஞ்சிலும், திருமலையிலும் நித்திய வாசம் பண்ணுபவனும் வாமன மாணியாக வடிவெடுத்த வனுமான எம்பெருமான் திறத்தில் அடிமைத் தொழிலை ஏற்றுக் கொண்டது நின்னுடைய பெறுதற்கரிய பேறு அன்றோ? (2.1:1). ''திருமலையம்பனுடைய திருக்குணங் களின் தன்மையறிந்து நீ அவன் திறத்தில் அடிமை பூண்டாயே! நாம் உறவினரென்றும், பங்காளிகள் என்றும், ஆபாச பந்துக்களைக் கற்பித்துக்கொண்டு அவர்கட்கு நன்மை செய்வதும், சிலரை விரோதிகள் என்றும் கற்பித்துக்கொண்டு அவர்கட்குத் தீமை செய்வது மாக இருக்கின்றோம். எம்பெருமானே எல்லாத் திறத் திலும் வேற்றுமையின்றி அன்புடையவனாகச் சொல்லப் படுபவன். இதனைக் கண்டறிந்து 'அவனுக்கு அடிமை செய்கையே புருஷார்த்தம்' என்று கொண்டாயே! (2.1:2) என்று உகக்கின்றார்.

''எண்டிசையுமுள்ள பூக்கொண்டு ஏத்தியுகந்து தொண்டரோங்கள் பாடியாட ''(திருவாய். 4.7:8) என்று நம்மாழ்வார் கூறியவாறு பல வகைப்பட்ட மலர்களைக் கையிலேந்திக் கொண்டு துதிக்க வருகின்ற தொண்டர் களையும் அவர்களோடு சம்பந்தம் பெற்ற மற்றுமுள் ளோரையும் பொருட்படுத்தி அவர்களைப் பரமபதத்தில் கொண்டு சேர்க்கின்றான் என்ற இச்சிறந்த குணத்தைக் கண்டு அத்திருமலையப்பனுக்குத் தொண்டு பூண்டாயே!'' (2.1:3) என்று நெஞ்சத்தை உகக்கின்றார். ''எம்பெரு

மான் இந்த மண்ணுலகத்திலே வந்து அவதரித்துப் பக்தர் களிடம் பல்வேறு பட்ட கைங்கரியங்களைக் கொண் டருளி, அந்த அளவிலும் மனநிறைவு பெறாமல், இன் னும் அவர்களிடத்தில் நித்திய கைங்கரியம் கொள்ள வேண் டும் என்று அவர்களைத் திருநாட்டிலே கொண்டு வைக்குப வனாய், கோபாலகிருஷ்ணனான திருவேங்கடமுடை யானுக்குத் தொண்டு பூண்டாயே!'' (2.1:4) என்று உகக் கின்றார்.

''சமணர்கள், பௌத்தர்கள் முதலிய புறமதச்சமயத் தவர் மிகுதியாக இருந்தும் அவாகள் கூட்டத்தில் சேர்ந்து பாழ்பட்டுப் போகாமல் ஸ்ரீவைணவ சம் பிரதாயத்தில் பிறந்து எம்பெருமானுக்கு அடிமைப்பட்டு வாழப் பெற்றோமே'' (2.1:5, 6, 7) என்று தம் நெஞ்சை உகக்கின்றார். ''சேயன், அணியன், சிறியன், பெரியன்'' என்று பக்வத்விஷயத்தில் இழியமாட்டாத சம்சாரிகள் பக்கல் சேராமல் திடீரென்று திருமலையப்பன் திறத்தில் அடிமைத் தொழில் பூண்டு நின்றாயே!'' (2. 1:8). ''நெஞ்சமே, நீ நேற்றுவரையில் விஷயாந்திரங்களில் மண்டித் திரிகின்ற சம்ாரிகளுடன் கூடியும், அவர்கள் அநுபவித்த விஷயங்களையே அநுபவித்தும், அவர்கள் பேசுகின்ற பேச்சுகளையே பேசியும் போந்தாயன்றோ? இப்படியிருந்த நீ இன்று திடீரென்று எப்படிப்பட்ட நிலைக்கு வந்து விட்டாய்! நீ பெற்ற பேற்றை நீ அறிகின்றிலை. ஆகையால் நான் எடுத்துச் சொல்லு கின்றேன்; அன்புடன் கேளாய். பக்திக்குப் போக்கு வீடாகப் பாடியும் ஆடியும் பலரும் பணிந்து ஏத்தினாலும் காணமுடியாதவனும், நான்முகன் இந்திரன் சிவன் முதலான மேலான தேவர்கள் மேவித் தொழப்பெற்றவனு மான திருவேங்கடமுடையான் திறத்தால் அடிமைத் தொழில் பூண்டாய் காண்!'' என்று உகக்கின்றார்.

இங்ஙனம் ஆழ்வார் தம் நெஞ்சைப் புகழ்ந்து பேசும் முகத்தால் திருவேங்கடமுடையானை அநுபவித்து இனிய ராகின்றார். இங்ஙனமாக நாம் திருமலையப்பன் மீதுள்ள பாசுரங்களில் ஆழங்கால்பட்ட வண்ணம் அவனையும் அவன் திருக்குணங்களையும் அநுபவிக்கின்றோம்.

# 12. சடகோபன் சிந்தயில் திருவேங்கடம்

''நம்மாழ்வார் பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை முதலிய வற்றை நோக்கும்போது அவர் ஆழ்வார் திருநகரித் திருக் கோயிலிலுள்ள திருப்புளியாழ்வாரின் திருவடிவாரத் திலேயே தம்முடைய வாழ்க்கையைக் கழித்ததாக ஊகிக்க இடந்திருகின்றது. அவர் மங்களாசாசனம் செய்துள்ள 36 திவ்வியதேசங்கட்கும் சென்று வந்ததாகக் கருதுவதற்கு இடந்தரவில்லை. மாறாக அந்தந்த திவ்விய தேசத்து எம் பெருமான்களே நேரில் வந்து ஆழ்வாரின் மங்களாசாசனம் பெற்றார்கள் என்ற ஐதிகமும் உண்டு. இதற்குமேல் ஆய்ந்து முடிவுசெய்ய எந்தவித இலக்கியத் தடயங்களும் கிடைக்கவில்லை.

இன்னொரு சம்பிரதாயமும் ஈண்டுக் கருதத் தக்கது. **'கங்குலும் பகலும்'** (7.2) என்ற ஒரு திருவாய்மொழி தவிரமற்று எந்த ஒரு பாசுரத்தாலும் திருவரங்க நாதனுடைய குறிப்பை அறிந்து கொள்ளவில்லை. அப்படி யிருந்த போதிலும், ''வான் திகழும் சோலை மதிளரங்கர் வண் புகழ்மேல் ஆன்றதமிழ் மறைகளாயிரமும்'' என்ற பட்டரின் திருவாய்மொழிபற்றிய தனிய னால் திருவாய்மொழி ஆயிரமும் பெரிய பெருமாள் விஷயமாகவே அருளிச் செய்யப்பட்டது என்பது தெளி வாகும் என்பர். இக்கருத்தினை ஈட்டு ஸ்ரீ—சூக்தியும்

அரண் செய்கின்றது. அது கூறுவது; "பெரிய பெருமாள் திருவடிகளிலே திருவாய்மொழி ஆயிரமும் சொல்லிற்று. 'திருமோகூர்க்கு ஈத்தபத்து (திருவாய் 10.1:11) 'திரு வேங்கடத்துக் கிவைபத்து' (ஷை—6.10:11) என்று பிரித் துக் பிரித்துக் கொடுத்த தித்தனை. பெருமான் திருப்பல கையில் அமுது படியிலே மற்றைத் திருப்பதிகள் நாயன் மார்க்கும் அளந்து கொடுக்குமாப்போலே என்று பிள்ளை (நம்பிள்ளை) அருளிச் செய்வர்." இது நிற்க.

○ ○ ○

உடையவரின் முக்கிய சீடர்களுள்கள் ஒருவரான கூரத்தாழ்வானின் மக்கள் இருவர். ஒருவர் பராசரபட் டர்; மற்றொருவர் சீராமப் பிள்ளை. இவர்கள் ஒரு கரு இரட்டையர் (Identical twins). ஒரு சமயம் இருவரும் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்க நேர்ந்தது. அப் போது பட்டரின் திருவாய்மொழி காலட்சேபம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. **'முந்நீர் ஞாலம் படைத்த'** (திரு வாய் 3.2) வந்தபொழுது சீராமபிள்ளை கேட்டார்: "ஆழ்வார் இப்போது பகவதாநுபவத்தை ஆசைப்பட்டி ருந்தாராகில் அது ஒரு தேசவிசேஷத்தில் சென்று அநு பவிக்க வேண்டியதாகையாலே இங்குக் கிடைக்கவில் லையே என்று துடிக்கலாம். இப்போதோ இவருக்குப் பரமபதம் விவட்சிதம் இல்லை. இராமகிருஷ்ணாதி அவதாரங்களில் அநுபவிக்க ஆசைகொண்டிருந்தாலும் அவை ஒரு கால விசேஷத்திலே கழிந்து விட்டனவே! என் றாவது துடிக்கலாம். இப்போது அவதாரங்களில் அநுப வாபேட்சை சென்றதாக இல்லாமையாலே அந்த துடிப் பிக்கும் அவகாசமில்லை. கீழே நடந்த திருவாய்மொழியே

1. திவ்வியார்த்த தீபிகை 7.2:11 இன் உரை.
2. இது தெற்குத் திருமலை எனப்படும். திருமாலி ருஞ்சோலை மலைபற்றியது.

'முடிச்சோதியாய்' (*3.1*)[3] என்பது; அழகர் திருமலையிலே அநுபவிக்க இழந்தவரிவர் என்பது அதனால் தெளிவா கின்றது; அர்ச்சாவதாரத்திலுண்டான அநுபவாபேட்சை தலைக் கட்டாமற் போகக் காரணமில்லையே; மேன் மேலும் மனோரதப்படி அநுபவிக்கலாமே; இழந்து நோவு படுகைக்குக் காரணம் என்கொல்?'' என்று,

இதற்கு பட்டர் அருளிச் செய்த சமாதானம்: ''ஆழ் வார் அநுபவிக்க ஆசைப்பட்ட இடம் பரமபதமானால் என்ன? வியூகமானால் என்ன? விபவாவதாரம் என்றால் என்ன? அதுபற்றி வாசி (வேற்றுமை) இல்லை. தர்மியின் ஐக்கியத்தாலே விஷயம் எங்கும் ஒருபடிப்படப் பூர்ண மாகவே உள்ளது. அர்ச்சாவதாரங்களை நாமெல்லாரும் அநுபவிப்பது போலன்றே ஆழ்வார் அநுபவிப்பது. அங்கும் விஷயத்தைப் பூர்ணமாக அநுபவிக்க ஆசைப் பட்டார்; அஃது அசாத்திய மானமையாலே தளர்ந்தார்'' —என்று.[4]

**விளக்கம்:** பரத்துவம் வியூகம் விபவங்களோடு அர்ச் சாவதாரத்தோடு வேற்றுமையறத் தர்ம ஐக்கியத்தாலே விஷயம் எங்கும் ஒரே தன்மையவாக இருக்கும். அது குறைந்து தோன்றினால் நினைக்கின்ற மக்களுடைய நினைவின் தோஷத்தாலே யாயிருக்கும். கடலருகே சென்று நின்றால் தன் கண்களாலே முகக்கலாமளவே (Eye span) காணுதல் கூடும்; அப்படியே அழகருடைய அழகு முதலா னவற்றை அநுபவிக்கப் புக்கவிடத்தில் விளாக்குலை கொண்டு அநுபவிக்கக் கூடியனவாக இல்லை. பெரு விடாய்ப்பட்டவன் சேர்ந்த குளிர்ந்த தண்ணீர் அண்மை யிலிருக்க நோயினாலே வாய்மூடப் பெற்றால் அதனைக்

3. இதுவும் தெற்குத் திருமலைபற்றியது.
4. திவ்வியார்த்த தீபிகை 3.2 அவதாரிகை காண்க.

குடிக்க முடியாது துடிக்குமாப்போன்று, விஷயமும் அண்மையிலிருந்து விடாயும் மிச்கிருக்கச் செய்தே, அளவிற்கு உட்படாத விஷயமாகையாலே பரிச்சேதித்து அநுபவிக்க வொண்ணொதொழிய நோவுபடுகின்றார்.

ஆயின் 'பிரகிருதி சம்பந்தத்தை யறுத்துத் தந்தருள வேணும் என்று வேண்டுவதற்குக் காரணம் என்ன என்றால், ''இவ்வாறு அநுபவிக்கவொண்ணா தொழிந்தது இறைவனுடைய வைலட்சண்யத்தாலே வந்தது' என்று அறிய மாட்டாது, தம்முடைய கரணங்களின் குறைவு காரணமாக வந்தது என்று கருதி 'இறைவன் தான் முதலிலே இத்தைக் கழித்துத் தன்னை அநுபவிக்கைக்கு உறுப்பாக உலகத்தைப் படைத்தான்; படைக்கப்பட்ட உலகத்திலே தான் வந்து அவதரித்தான்; அதற்குமேல அந்தர்யாமி உருவமாக நின்று சத்து ஆதிகளை நிர்வகித்தான்; அவன் இப்படி உபகாரங்களைத் தொடர்ந்து செய்து கொண்டுவர, நான் அவற்றையெல்லாம் அசத்துக்குச் சமமாக்கிக் கொண்டேன்; இனி நான் அவனைக் கிட்டுதல் என்று ஒன்று உண்டோ?'' என்று எல்லையற்ற துக்கக் கடலில் மூழ்கினவராய் 'முடிந்தேனேயன்றோ?' என்று ஆழ்வார் சோகிக்க, இறைவன், 'நீர்கரணங்களின் குறைவு காரணமாக வந்தது என்று சோகிக்க வேண்டா; கரணசங்கோசமில்லாதாரும் நம்மை அநுபவிக்குமிடத்தில் இப்படியன்றோ படுவது?' என்று இவர் இழவினை வினை நினைத்து' நீர் நினைத்த வகைகளெல்லாம் பரிமாறுகைக்கு ஈடாக வடக்குத் திருமலையில் நின்றோம்; அங்கே கிட்டி அநுபவித்து மகிழ்வீர்' என்று தான் அங்கு நிற்கின்ற நிலையைக் காட்டிச் சமாதானம் பண்ண, ஆழ்வாரும் ஒருவாறு சமாதானமடைந்தவராய் இனிமையோடே தலைக்கட்டுகின்றார்.[5]

5. ஈட்டின் தமிழாக்கம்—3, 2 முன்னுரை காண்க.

ஆயின், தெற்குத் திருமலையில் நிற்கின்ற நிலையை அநுபவிக்க நினைத்துப் பெறாமல் நோவுபட்ட இவரை வடக்குத் திருமலையில் நிற்கின்ற நிலையைக் காட்டிச் சமாதானம் செய்தபடி என்?' என்னில்: முலைவேண்டி அழுத குழந்தைக்கு முலையைக் கொடுத்துப் பசியைப் போக்குதல் செய்வதுதானே? நன்று; 'இன்ன முலையைத் தரவேண்டும் என்று அழுதால் அம்முலையையே கொடுத்து ஆற்ற வேண்டாவோ?' என்னில்: வேண்டா; இவர் தாம் வழி திகைத்து அலமர்கையாலே 'அதுவே வேணும்; அதுவன்று இது' என்ற தெளிவில்லையாயிற்று இவர்க்கு. மற்றும் 'ஒரு பொருள்தானே ஒருபோது தாரகமாய், மற்றைப்போது அதுதானே பாதகமாகக் காணா நின்றோம்; பசியில்லாத காலத்தில் பாதகமான சோறு தானே அது கழிந்தவாறே தாரகமாகா நின்றதே? 'இவர்க்கு இன்னது இன்னபோது தாரகமாம்; இன்னது இன்னபோது பாதகமாம்' என்று தெரியாது; குணங்களின் ஆவிஷ்காரத்தாலே (பிரகாசத்தாலே) தப்பித்துக் கொண்டு செல்லுகின்ற ஈசுவரனுக்கும் தரித்த இவருக்கும் தெரிவது இதுதான். மற்றும் மக்களுக்கு மட்டும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நீர்மை அங்கு (அழகர் மலை); கானமும் வானரமும் வேடுமானவற்றுக்கு[6] முகம் கொடுத்த நீர்மையுண்டே இங்கு (திருமலை).[7]

ஆழ்வார் சமாதானம் அடைந்த விதத்தை ஈட்டாசிரியர் குறிக்கின்றார் இவ்வாறு: 'தர்மி ஒன்றே ஆகையாலே விஷயம் எங்கும் ஒக்கல் பூர்ணமான பின்பு, ஒரு தேச விசேடத்தாலே சென்றால் செய்யக் கூடிய அடிமைகளெல்லாம் இந்நிலத்திலே செய்வதற்குப் பாங்காக இருக்குமாகில், நமக்கும் இவ்வுடம்பு விரோதியாதலின்றி அடிமை

6. நான். திருவந். 47.
7. ஈட்டின் தமிழாக்கம் 3.2 முன்னுரை காண்க.

செய்கைக்குப் பாங்காக இருந்ததேயாகில், இனித் தான் அங்குச் சென்றாலும் குணாநுபமவன்றோ பண்ணுகிறது? அந்தச் சௌலப்பிய முதலிய நற்குணங்கள்தாம் விளங்கிக் காணப்படுவதும் இங்கேயாகில், இனி 'அங்குள்ளாரும் (வானவர் முதலானோர்) வந்து அடிமை செய்வதும் இங்கேயாகில், நாமும் அங்கே (திருமலைக்குச்) சென்று புக்கு அடிமை செய்வோம்' என்று முடிவு செய்கின்றார். பசியும் இருந்து கையிலே சோறும் கொண்டிருப்பவன் நீரும் நிழலும் கண்டால் உண்ணப் பாரிக்குமாறு போன்று ஆழ்வாரும் அடிமை செய்யப் பாரிக்கின்றார்—எல்லாக் காலத்திலும் எல்லா அடிமைகளும் செய்த இளைய பெருமாளைப் போல. உணவையே முக்கியமாகக் கொண்ட ஒருவன் ஊண் அத்தியாயம் (Dietics) படிக்குமாறு போன்று இருப்பது ஒன்றாயிற்று இவரது கைங்கரிய மனோரதம்.[8]

நம்மாழ்வாரின் அருளிச் செயல்களில் காணப்பெறும் திருவேங்கடத்தைப் பற்றிய பாசுரங்கள் :

| | |
|---|---|
| திருவிருத்தம் | 7 |
| பெரியதிருவந்தாதி | 1 |
| திருவாய்மொழி | 35 |
| பாசுரங்கள் | 43 |

இவற்றுள் 3.3 திருவாய்மொழியும் 6.10 திருவாய்மொழியும் பதிகங்கள். இவற்றுள் முன்னது வைணவ தத்துவத்தின் முடிந்த முடிவாக இறைவனுக்குச் செய்ய வேண்டிய கைங்கரியத்தையும், பின்னது அவனை எல்லோரும் ஒக்க அடையக் கூடிய சரணாகதியையும் குறிப்பிடுகின்றன. இவற்றை விரிவாகக் காண்போம்.

8. ஈட்டின் தமிழாக்கம். 3.3 முன்னுரை காண்க.

**கைங்கரியம் :** திருவேங்கடமுடையான் திருவடிகளிலே எல்லாத் தேசத்திலும் எல்லாக் காலத்திலும் எல்லா நிலைகளிலும் எல்லாவித அடிமைகளும் செய்யவேண்டும் எனப் பாரிக்கின்றார்.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்;
தெழிகுரல் அருவித் திருவேங் கடத்து
எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே (1)

[ஒழிவு இல்-ஓய்வு இல்லாத; வழு இலா-குற்றமற்ற; அடிமை-கைங்கரியம்]

என்பது பாசுரம். **ஒழிவு இல்:** கீழ்க்கழிந்த காலத்தை மீட்க முடியாதாதலால், இதன் கருத்து யாதெனில்: 'அந்தோ! கீழே வெகு காலம் வீணாய்க் கழிந்து விட்டதே; என்கின்ற இழவுநெஞ்சில் படாதபடி அதனை மறந்து ஆனந்தமயமாகக் கைங்கரியம் பண்ணப் பாரிக்கின்றார்' என்று கொள்ள வேண்டும். 'கீழ்க்கழிந்த காலத்திலிழவு நெஞ்சிற் படாதபடி மறப்பிற்கையேயிறேயுள்ளது' என்பது ஈடு. கழிந்த காலத்தில் அடிமை செய்யமுடியாதாதலின் இனிமேலுள்ள காலம் எல்லாம் என்றே பொருள் கொள்ள வேண்டும் என்பது குறிப்பு. **உடனாய்:** காலமெல்லாம் எல்லாத் தேசங்களிலும் விடாதே தொடர்ந்து அடிமை செய்ய வேண்டும் என்ற பாரிப்பைக் காட்டுகின்றது. அர்ச்சாவதாரப் பெருமான் புறப்பாடு கண்டருளிப் பல விடங்களுக்கும் எழுந்தருள்வது உண்டல்லவா? அவ்விடம் ஒன்றும் தப்பாமல் எங்கும் அடிமை செய்யப் பாரித்தலில் குறை இல்லை. மேலும் இளைய பெருமாள் பெருமாளுக்குப் படை வீட்டிலும் வனத்திலும் அடிமை செய்தாற் போலே என்று கொள்ளினும் இழுக்கவில்லை. **மன்னி** என்பதால் பெருமாளும் பிராட்டியும் தினரயை வளைத்துக் கொண்டிருந்தாலும் படிக்கம், குத்து விளக்குப் போன்று

அந்தந்த இடங்கட்குத் தக்கவாறு நின்று அந்தரங்கமான அடிமைகளைச் செய்யவேண்டும் என்ற விருப்பம் தெளிவாகும். ஆக 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி' என்று எல்லாக் காலத்தையும் எல்லாத் தேசத்தையும் எல்லா நிலைகளையும் நினைக்கச் செய்கிறது. ஒழிவில் காலமெல்லாம் என்பதற்கு ஈட்டாசிரியர் ஓர் ஐதிகம் குறிப்பிடுகின்றார்: "ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் இத்திருவாய்மொழி பாடப்புக்கால் 'ஒழிவில் காலமெல்லாம்; காலமெல்லாம், காலமெல்லாம்'...என்று இங்ஙனே நெடும் போதெல்லாம் பாடி, மேலே போகமாட்டாதே அவ்வளவிலே தலைக் கட்டிப் போவராம்" என்று. இதனால் அரையர் ஆழ்வாருடைய நிலைமையை அப்படியே அடைந்து கைங்கரியத்தில் தமக்குள்ள ஈடுபாட்டினைக் காட்டினர் என்பது பெறப்படும்.

**வழுவிலா அடிமை:** குற்றமற்ற அடிமை. குற்றமாவது குறைவு. எம்பெருமான் திறத்தில் ஈடுபட்டவர்கள் எத்தனைப் பேருண்டோ அத்தனைப் பேரும் தனித்தனியே செய்கிற கைங்கரியங்களையெல்லாம் தாம் ஒருவரே செய்யக் கருதுகிறபடி. இளைய பெருமாள் காட்டிலேயும் கூடப்போந்து செய்த அடிமைகளும் செய்ய வேண்டும்; பரதாழ்வான் பாடி வீட்டிலே பிரிந்திருந்து செய்த அடிமைகளும் பிரியாமலிருந்து செய்யவேண்டும் என்றபடி. ஓரடிமை குறையினும் இவர்க்கு உண்டது. உருக்காட்டாது (உணவின் நலன் உடலில் தெரியாதிருத்தல்). ஸ்ரீவசன பூஷணத்தில் அருளிச் செய்யப் பெற்ற இளைய பெருமாளின் கைங்கரிய சாம்ராஜ்யம் ஈண்டு நினைக்கத் தக்கது (முமுட்சு 105, 108). 'வழுவிலா தடிமை' என்பதற்கு இன்னொரு விதமாகவும் பொருள் கூறலாம்; தான் கைங்கரியம் செய்வதாக அநுபவ மகிழ்ச்சி கைங்கரியத்திற்கு வழு; அஃதில்லாமை சொன்ன படியாம். கைங்கரியத்தில் 'களையறுக்

கிறது' (178) போன்ற முமுட்சுப்படி சூக்திகள் நினைக் கத்தக்கவை. 'உனக்கே நாம் ஆட்செய்வோம்-மற்றை நம் காமங்கள் மாற்று' (திருப். 29) என்ற ஆண்டாள் கருத்தும்,

தனக்கே யாக எனைக் கொள்ளும் ஈதே
எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே

என்ற திருவாய்மொழியின் (2.9:4)யின் கருத்தும் உண்மை யான கைங்கரியத்திற்கு எடுத்துக் காட்டுகளாகும். **செய்ய வேண்டும்:** கைங்கரியம் செய்வதைக் காட்டிலும், 'செய்ய வேண்டும்' என்ற பாரிப்பு நிலை நின்றிருந்தாலும் போதும் என்பது சாத்திரப் பொருள். **தெழிகுரல் அருவி:** 'கைங்கரியத்தில், ருசியுடையீர், அடிமை செய்ய வாருங் கள்!' என்று அருவிகள் அழைக்கின்றனவாம்! 'சிலைக்கை வேடர் தெழிப்பு அறாத சிங்கவேள் குன்றம்' (பெரி. திரு. 1.7:2) என்ற மங்கை மன்னன் கூற்றில் திருத்' தலப் பயணிகட்கு வழிப்பறி செய்கின்ற வேடருடைய ஆர வாரமும் உத்தேச்யமாக இருக்கிற தென்றால் திருமலை அருவியின் ஓசையும் உத்தேச்யமாக இருப்பதைச் சொல்ல வேண்டுமா? **திருவேங்கடத்து எழில் கொள் சோதி:** 'அடிமை கொள்ளுகைக்குப் பாங்கான நிலம் இது' என்று அவன் வந்து வசிக்கின்ற தேசம். பாங்கான நிலம் ஆயினவாறு என்? என்னில்: இச்சரீர சம்பந்தம் அற்று அர்ச்சிராதி மார்க்கத்தாலே ஒரு தேச விசேடத்திலே போனால் இவன் செய்யக் கூடிய அடிமையை இந்நிலத்தில் இவன் செய்யக் கூடியவாறு அவன் (இறைவன்) வந்து வசிக்கின்ற தேசம் என்பது கருத்து. 'தொலைவில் உள்ளவனேயாகிலும் மேல் விழ வேண்டும்' என்று வடிவழகு இருத்தலின் 'எழில் கொள் சோதி' என்கின்றார். வானார் சோதி (பரம பதநாதன்) யையும் நீலாழிச் சோதி (பாற்கடல் நாதன்)யையும் வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு 'வேங்கடத்து எழில் கொள் சோதி' என்கின்றார்.

வானார் சோதி பகல் விளக்குப் பட்டிருக்கும்; நீலா ழிச் சோதி கடல் கொண்டு கிடக்கும்; வேங்கடத்து எழில் கொள் சோதி குன்றத்திட்ட விளக்காயிருக்கும் ; 'வேங்க டமே ய விளக்கே' (பெரி. திரு. 4.7:5) என்றல்லவா சொல் லிப் போந்தார் திருமங்கையாழ்வார்? என்பது ஈட்டு சூக்தி.

**திருமந்திரப் பொருள்:** இப்பாசுரம் கைங்கரியப் பிரதானமான திருமந்திரத்தின் பொருளைக் குறிப்பிடுவ தாகக் கொள்வர். திருமந்திரப் பொருளாவது; ''எம்பெரு மானுக்கே உரியனான நான் எனக்கு உரியன் என்பது ஒழிய வேணும்; சர்வ சேஷியானவனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்' என்பது. 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்' என்ற இதனால், நான்காம் வேற்றுமையின் பிரார்த்தனையைச் சொல்லுகின்றது. 'நான்காம் வேற்றுமை' என்றது 'நாராயணாய' என்ற பதத்திலேயுள்ள 'ஆய' என்னும் நான்காம் வேற்றுமையுருபினை (சதுர்த்தியை); 'பிரார்த் தனையைச் சொல்லுகிறது' என்றதன் பொருளை ''ஆய என்கின்ற இத்தால் 'சென்றால் குடையாம்' (முதல் திருவந்-53) என்று பொய்கையாழ்வார் கருத்துப்படி எல்லா அடிமைகளும் செய்ய வேணும் என்று அபேட்சி கின்றது'', ''ஆகையால் 'வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்' என்ற பிரார்த்தனையைக் காட்டு கின்றது'' (முமுட்சு-105, 108) என்பனவற்றால் அறிய லாம். 'நாம்' என்பதனால், பிரணவத்தில் சொல்லப் படுகின்ற இவ்வான்மாவிதுடைய சொரூபத்தைச் சொல்லுகின்றது; 'இது, ''சொல்லின் சுபாவத்தைக் கொண்டு சொன்னோம்'' என்று அருளிச் செய்தருளின வார்த்தை. ஆன்மாவின் சொரூபம் - இறைவனுக்குச் சேஷமாய் (அடிமையாய்) இருக்கும் தன்மை; ''சேஷத்து

வமே ஆத்மாவுக்குச் சொரூபம்'', ''பிரணவத்தால், கண்ண புரம் ஒன்றுடையானுக்கு அடியேன், ஒருவர்க்குரியனோ? (பெரி. திரு. 8.9:3) என்கின்றபடி சிவ-பர சம்பந்தம் சொல்லிற்று'' (முமுட்சு. 55, 72) என்பனவற்றால் அறிய லாம், 'இது' என்றது 'பிரணவத்தால் ஆன்மாவின் சொரூபத்தைச் சொல்லுகிறது' என்று மேலே கூறியத னைச் சுட்டுகிறது. 'சொல்லின் சுபாவத்தைக் கொண்டு சொன்னோம்' என்றது 'மகாரத்தின் பொருளான நான் அகாரத்திற்குப் பொருளாயுள்ள எம்பெருமானுக்கே உரியவன்' என்னும்போது 'நான் உரியவன்' என்ற கர்த்தாவிலே நோக்காயிருத்தலைத் திருவுள்ளம்பற்றி. பொருளின் முக்கியத்துவத்தை நோக்கும்போது 'அகாரத் தின் பொருளான எம்பெருமானுக்கே மகாரத்தின் பொருளான ஆன்மா உரியது' என்ற பொருளே போதரும். 'அருளிச் செய்தருளின் வார்த்தை' என்றது நம்பிள்ளை இங்ஙனம் அருளிச் செய்தார் என்பதைக் குறித்தது. 'தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து எழில்கொள் சோதி எந்தை தந்தைக்கு' என்பதனால் நாராயண பதத்தின் பொருள் சொல்லப்பெறுகின்றது. சௌலப்பியமும், வடிவழகும், சுவாமித்துவமும் நாராயண பதத்தின் பொருள். 'திருவேங்கடத்து' என்றதனால் சௌலப் பியமும், 'எழில் கொள்சோதி' என்பதனால் வடிவழகும், 'எந்தை' என்பதனால் சுவாமித்துவமும் போதருகின்றன என்பது அறியப்படும். பிராப்த விஷயத்தில் (வகுத்த விஷயத்தில்) செய்யும் கைங்கரியமே பிராப்பியம் (பலம்).

எம்பெருமானார் இத்திருவாய் மொழியை அருளிச் செய்யும்போது அந்தக் காலட்சேபக் குழுவில் நூற்றுக் கணக்காக எழுந்தருளியிருந்த சீடர்களை நோக்கி ''ஆழ்வார் பாரித்த குறை தீரத் திருவேங்கடமுடையான் பரிசரத்திலிருந்து நித்திய கைங்கரியம் செய்ய விருப்ப முடையார் யாரேனும் உளரோ?'' என்று வினவியருள,

குளிரருவி வேங்கடமாகையாலே எல்லாரும் குளிருக்கு அஞ்சி விடை கூறாதிருக்க, அனந்தாழ்வான் எழுந்து 'அடியேனுக்கு நியமித்தருள வேணும்' என்றார்; அது கேட்டு உகந்த எம்பெருமானார் 'நீர் ஒருவரே ஆண் பிள்ளை' என்று போரப் பொலியக் கொண்டாடித் தழுவி யருளி விடை கொடுத்தருளினார். அது முதலாக **அனந்தாண் பிள்ளை** என்று அவருக்குச் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று என்பது இதிகாசம்.

இளமாறுசருடைய மாணாக்கராகிய இவர் 74 சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர். இவர் திருமலைக்குச் சென்று அங்கு ஓர் ஏரியை வெட்டி அதற்கு '**இராமநுசன் புத்தேரி**' என்ற பெயரை அமைத்தவர். ஒரு நந்த வனத்தை உண்டாக்கி அதிலிருந்து மலர்களைப் பறித்துத் திருவேங்கடமுடையானுக்கு நாடோறும் மலர்க்கைங் கரியம் செய்து கொண்டு வந்தவர். ஒருநாள் மலர் கொய்கையில் நல்ல பாம்பு ஒன்று இவர் கையிலே தீண்ட, அதற்குப் பரிகாரம் ஒன்றும் செய்யாது மீண்டு, நீராடி, பின்னரும் சென்று மலர்களைக் கொய்து மாலை தொடுத்துத் திருவேங்கடமுடையனைச் சேவிக்கச் சென் றார். அப்போது இறைவன் அர்ச்சகர்மீது ஆவேசித்து, 'நஞ்சு தீர்க்க உண்டாதிருந்தென்ன' என்று கேட்டருள், இவரும்? 'கடியுண்ட பாம்பு வலிதாகில் திருக்கோனேரியில் தீர்த்தமாடித் திருவேங்கடமுடையானைச் சேவிக்கின் றேன். கடித்த பாம்பு வலிதாகில் விரஜையிலே தீர்த்தமாடி வைகுண்டநாதனைச் சேவிக்கின்றேன்' என்று பதிலிறுத்த பரமயோகி[10]. இவர் நினைவாக இன்று திருமலையில் இராமநுசபுத்தேரிக்கு அருகில் நவீன வசதிகளுடன் பல குடிசைகள் கட்டப்பெற்று Ananthalvan Tank Cottages (A. T. C.) என்ற பெயரில் வழங்கி வருகின்றன.

10. வைணவ உரைவளம்—பக். 296.

திருக்கோயிலுக்கு மிக அருகில் திருத்தலப் பயணிகள் தங்குவதற்கு இவை மிக வசதியானவை. திருவாய்மொழியில் 'ஏய்ந்த பெருங்கீர்த்தி' என்ற தனியனை அருளிச் செய்தவர் இவர். கூரத்தாழ்வானுக்குப் பின் பிறந்தவர் என்று இவரைக் கருதுவர்.

எம்பெருமானிடத்தில் மேன்மை, நீர்மை என்ற இரண்டு வகையான குணங்கள் உள்ளன. மேன்மை காண்பது பரமபதத்திலே, நீர்மை காண்பது இந்நிலத்திலே. மேன்மையைக் காட்டிலும் நீர்மையே சிறந்ததாகையிலே அங்குள்ள யாரும் இங்கே போதருகின்றனர். 'கானமும் வானரமும் வேடும்' ஆன இவற்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டு நிற்கின்ற சௌசீல்ய குணத்தை அநுசந்தித்து ஈடுபட்டவர்களாய் சேனை முதலியார் தொடக்கமான நித்திய சூரிகள் திருவேங்கடமுடையானைச் சேவிக்க விரும்பி திவ்விய மலர்களை எடுத்துக் கொண்டு இங்கே வருகின்றனர். அந்தச் சீல குணத்தில் தம்மை மறந்து முறைப்படி அருச்சிக்கமாட்டாது தாம் கொணர்ந்த மலர்களைச் சிந்துகின்றனர். கொம்பில் நின்ற மலர்களைக் காட்டிலும் நிலத்திலே விழுந்தபோது, அந்நிலத்தின் மிதியாலே, சிந்தின மலர்கள் செவ்வி குன்றாமல் மலர்ச்சியும் மணமும் மல்கி விளங்குகின்றன. இதனால் திருவேங்கடம் 'சிந்துபூ மகிழும் திருவேங்கடம்' ஆகின்றது. ஆழ்வார் திருவாக்கில் (2) வைகுண்டத்தில் புகழுக்கு எல்லையுண்டு; திருவேங்கடத்தில் அதற்கு முடிவு இல்லை. அப்படிப்பட்ட திருமலையில் அந்தமில் புகழ் பெற்று விளங்கா நிற்கின்றான் எம்பெருமான்.

இந்த எம்பெருமானை 'மாயன்' என்கின்றார் ஆழ்வார்; ஆச்சரியமான வடிவழகு முதலியவற்றையுடையவன் என்றபடி. அவற்றில் ஒன்றை எடுத்துரைக்கின்றார் '**அணிகொள் செந்தாமரைக் கண்ணன்**' என்று.

"இக் கண்ணழகு உடையானுக்கு வேறோர் ஒப்பனை வேண்டா என்னும்படி இருப்பதாய், தனக்குத் தானே ஆபரணமாய், மலர்ச்சி செவ்வி குளிர்ச்சி நாற்றங்களாலே தாமரையை ஒருவகைக்கு ஒப்பாம்படி சொல்லலாம் படியான கண்ணழகுடையவன். இது, முந்துறவு செய்யும் கண்களைச் சொல்லுகின்றது. அடியார்களை முந்துற முன்னம் கடாட்சித்து, பிறகு சோதி வாய்திறந்து வார்த்தை சொல்லுவானாதலால், திருக்கண்ணுக்கு அடுத்தபடியாக '**செங்கனிவாய்**' என்று சொல்லி அதனை அநுபவிக்கின்றார். நோக்குக்குத் தப்பினார்க்கும் தப்ப ஒண்ணாத புன்முறுவல் முறுவலாலேயாயிற்று இவரை எழுதிக்கொண்டது. அந்த முறுவலிலே அகப்பட்டாரை மீளாதபடி ஆழங்காற்படுத்தும் வடிவழகைச் சொல்லுகின்றது — **கருமாணிக்கம்** என்று. இறைவன் வடிவழகான திருமேனியன்றித் திருமலையும் சிரமத்தைப் போக்கக் கூடியதாக இருக்கும்படியைத் தெரிவிக்கும் பாங்கில், '**தெள் நிறை சுனைநீர்த் திருவேங்கடத்து**' என்கின்றார். 'அணிகொள் செந்தாமரைக் கண்ணன்' என்றதோடு, 'செங்கனிவாய்' என்றதனோடு, 'கருமாணிக்கம்' என்றதனோடு 'தெள்நிறை நீர் சுனை' என்றதனோடு வேற்றுமையற்று இருப்பதால் விக்கிரக அநுபவத்தை விட்டுச் சுனையை அநுபவித்ததற்குக் காரணம் ஆயிற்று; அதுவும் (சுனை) அந்நிலத்தில் உள்ளதென்றாகையாலே. எம்பெருமான் சுவாநுபவத்தை நமக்குத் தந்தருள்வான் என்பது பாசுரத்தில் இல்லையே என்று ஐயுற வேண்டா; '**எண்ணில் தொல்புகழ் வானவர் ஈசன்**' என்ற ஈற்றடியில் இக்கருத்து உறைந்து நிற்கும். அவன் நமக்குத் தந்தருளாதொழிந்தானாகில் அவனுக்குந் 'தொல்புகழுடைமை' எங்ஙனம் தேறும்? (3).

'வானவர்க்கு ஈசன்' என்று சொல்லுவது திருவேங்கடத்தானுக்கு ஏற்றமாகாது. 'கானமும் வானரமும்

வேடுமான' இவற்றுக்கு முகங்கொடுத்துக்கொண்டு நிற்கின்றவன் நித்தியசூரிகட்கு முகங்கொடுக்கின்றான் என்பது எங்ஙனம் ஏற்றமாகும்? 'அயர்வறும் அமரர்கள் அதிபதி' என்றால் அது வைகுண்டநாதனுக்கு ஏற்ற மாகலாமேயன்றி திருவேங்கடமுடையானுக்கு ஏற்ற மாகாது. நீசனேன் நிறையொன்றும் இல்லாத என்னிடத்தில் ஆசாபாசம் வைத்து அதனால் புகர் படைத்திருக்கின்ற எம்பெருமானை 'வானவர் ஈசன்' என்பதால் என்ன பெருமை?

ஈட்டிலே காண்பது: நித்திய சூரிகளுக்கு ஈசனா யிருந்தான். என்பக்கலில் பற்றை வைத்தான். அவர்கள் சத்தை உண்டாகைக்காக அவர்களோடே கலந்தான்; தன் சத்தை பெறுகைக்காக என்னோடே வந்து கலந்தான்; பிரதாம்யத்துக்கும் (முதன்மைக்கும்) பழிக்கும் செங்கல் சீரைக்கும் (கல்லாடைக்கும்) ஜீவனம் வைப்பாரைப் போன்று அவர்கள் பக்கம்; நெஞ்சும் உடம்பும் தந்தது எனக்கு. என்னுடன் கலப்பதற்கு முன்னர் 'சுடர் சோதி யாக' (வடிவிற் பிறந்த புகர்) நின்றான்; கலந்த பின்னர் முன்பில்லாத புகரெல்லாம் வடிவிலேயே உண்டானதால் 'பரஞ்சுடர்' என்று அருளிச் செய்கின்றார். பிராட்டி யோடே கலந்தாற்போலே பேரொளிப் பிழம்பாய் இரா நின்றான் என்றபடி (4).

கீழ்ப்பாட்டில் (4) 'நீசனேன் நிறையொன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர் சோதிக்கே' என்று கூறியதில் 'எல்லாவுலகும் தொழும்' (5) என்கின்ற பொருள் சித்தமாகவே உள்ளது என்று காட்டினபடி. இதனைப் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள், ''ஒரு கல்விக் கூடத்தில் மிகவும் மூடனான ஒருவன் தேர்வில் தேறி விட்டான் என்றால் மற்றையோர்கள் தேறினர் என்பது எப்படிச் சித்தமோ அப்படியே ஆழ்வார் தாம் தொழுதமை சொன்ன அளவில் எல்லா

வுலகும் தொழுதமை சொன்னபடி ஆகும்'' என்று விளக்குவார். இப்போது இப்பாசுரத்தில் (5) '**தீதில் சீர்த் திருவேங்கடத்தான்**' என்ற தொடரின் பொருள் காண வேண்டும். 'நீசனேன் நிறைவொன்று மிலேன்' என்ற இவருடைய குற்றத்தைக் குணமாகக் கொண்டு அங்கீகரித்து, இவருக்கு அவ்வருகு குற்றமுடையாரைத் தேடிக் கிடையாமையாலே நிற்கின்றான் என்பது பொருள். இவ்விடத்தில் **தீதில் சீர்** என்பதன் சிறப்பான சுவாரசியத்தை ஆழ்ந்து சிந்தித்து அறிந்து நம்பிள்ளை அருளிச் செய்துள்ள பொருள் சிறப்பு மிகவும் சுவைக்கத் தக்கது. ''சீர்க்குத் தீதில்லாமை எப்போது தேறுமென்னில்: 'நீசனேன் நிறையொன்றுமிலேன்' என்று சொல்லுகின்ற இவரைக் காட்டிலும் மிகவும் நீசனான ஒருவரைத் தேடிப் பிடித்தால்தான் தேறும்; உண்மையில் அப்படிப்பட்ட ஒருவர் உலகத்தில் இல்லாமையாலே எம்பெருமானுக்குக் கிடைத்திலர். கிடைக்காவிடினும் என்றைக்காவது அப்படிப்பட்ட ஒருவர் கிடைக்காமல் போவாரா? என்ற நசையினால் திருமலையில் வீற்றிருத்தல், சயனித்திருத்தல் இவற்றைச் செய்யாமல் நின்று கொண்டே **தேடுகிற படியைக்** காட்டுகின்றானாம் திருவேங்கடமுடையான். அதனை ஆழ்வார் அநுசந்தித்த பாசுரம் இது (5).

திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு 'வணக்கம்' என்று சொல்லுதல் செய்யக் கூடிய காரியம். அதனைச் செய்கின்றவர்கட்கு அநுபவித்தே தீரக்கூடிய கடன்களும் உடல் சம்பந்தமாக வருகின்ற நல்வினை தீவினைகளும் வெந்து அழிந்து விடும்; அடியார்களாகிய தாங்கள் தங்கட்குத் தக்கதான கைங்கரியத்தையே செய்வார்கள் (6). முதல் பாசுரத்தில் திருமந்திரத்தின் பொருளை அருளிச்செய்தார்; அங்கு அருளிச் செய்யாததான 'நம' என்பதத்தின் பொருளை ஈண்டு (பாசுரம்-6). அருளிச் செய்கின்றார்.

வேஎம் கடங்கள் மெய்ம்மேல் வினைமுற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்
வேங்க டத்துறை வார்க்கு நமஎன்னல்
ஆஅங் கடமை அதுசுமந் தார்கட்கே (6)

[கடன்கள் - அநுபவித்தே தீரவேண்டியவை; மெய்-உடல்; மேல் வினை - நல்வினை தீவினை கள்; வேம்-வெந்தொழியும்; நல்லன-கைங்கரியங் கள்; நம-வணக்கம்]

என்பது பாசுரம். நம: என்பது நெஞ்சில் உண்டாக வேண்டா; சொல்லளவே அமையும். என்னலாம் கடமை யது: எளிதான உபாயத்தை என்றபடி. அதுசுமந்தார்கட்கு: பெறுகின்ற பேற்றின் கனத்தையும் இவனுடைய முயற்சி யின் சிறுமையையும் பார்த்து இப்பேற்றுக்கு இவன் இம் மலையைச் சுமவானோ? என்பாரைப் போன்று 'அது சுமந்தார்க்கு' என்கின்றார். பக்தர்களின் கருத்தில் 'நம:' என்ற ஒரு சிறிய சொல் வந்தாலும் அதனை ஒரு மலை யாகவே கனக்க நினைப்பானாம் எம்பெருமான். இதனால் எத்தனையோ பிறப்புகளில் சஞ்சிதங்களாய் மலை மலை யாகக் குவிந்து கிடக்கும் வினைகள் எல்லாம் தன்னடைவே விலகிப்போம். ஆனதால் ''வேம்கடங்கள் மேல் வினை முற்றவும் வேம்; (இது) மெய்'' என்றருளி யிருப்பது மிகப் பொருந்தும் என்பதை அறிகின்றோம். இவ்விடத்தில்,

போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்

—திரு ப 5

என்ற ஆண்டாள் வாக்கு நினைக்கத் தகும்.

நாம் விரும்பும் அடிமைகளை எல்லாம் செய்வதற்குத் திருவேங்கடமுடையானை ஆச்ரயிக்க வேண்டுவதில்லை. அவற்றையெல்லாம் திருமலையே தரும்.

நமன் றெழும்திரு வேங்கடம் தங்கட்குச்
சமன்கொள் வீடு தருந்தடங் குன்றமே (7)

[நமன்று—வணங்கி; எழும்-உய்விக்கும்; சமன் கொள்-ஒத்ததான; வீடு-மோட்சம்]

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறியலாம். திருமலையாழ்வார் தம் திருமுடியிலே திருவேங்கடமுடையானை எழுந்தருளுவித்துக் கொண்டிருப்பதால், இது சாத்தியமாகும். திருமலைக்குச் சிறப்பு பரமபதநாதன் தன்னிடத்தில் வந்து எழுந்தருளியிருத்தல். நமன்று-நம: என்று சொன்ன அளவிலே நமக்கு அந்தத் திருமலையாழ்வாரே வீடுபேற்றினை வழங்கிருள்வார் "துயரறு சுடரடி தொழுதெழு' (திருவாய் 1. 1:1) என்கின்ற தமது வாசனை அவர்கட்கும் உண்டு என்று இருக்கின்றார்.'' என்பது ஈடு. (7).

"எம்பெருமானுக்கு மிகவும் அடையத்தக்கதான திருமலைதான் நமக்கும் மிகவும் அடையத்தக்கதாகும். அது நமக்கு ஒரு பலனை அளிக்க வேண்டும் என்பதில்லை; ஒரு பலனையும் தாராதொழியினும் அதுவே நமக்கு அடையத்தக்கதாக இருக்கட்டும்'' என்கின்றார்.

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே (8)

[ஞாலம்-பூமி; பிரான்-காப்பன்; பரன்-எம்பெருமான்; ஓயும்-தொலைந்திடும்]

என்பது பாசுரம். இதில் விபவாவதாரங்களோடு, கிருஷ்ணாவதாரத்தோடும் (திரிவிக்கிரமாவதாரம்) அர்ச்சாவதாரத்தோடு (திருமலையப்பன்)வேற்றுமையில்லாமல் எஞ்ஞான்றும் மலையே இரட்சகம் என்று சாடூக்தியாக நம் ஆசாரியப் பெருமக்கள் அருளிச் செய்வார்கள்.

'குன்றம் ஏந்தி குளிர்நிலை காத்தவன்' என்ற முதலடி ஓர் ஊருக்கு உதவினமை சொல்லுகின்றது. 'அன்று ஞாலம் அளந்த பிரான்' என்ற இரண்டாம் அடி உலகுக்கு எல்லாம் உதவினமை சொல்லுகின்றது. தாவியன்று உலகமெல்லாம் தலைவிளாக்கொண்ட திரிவிக்கிரமாவதார வரலாறு மிகு புகழ்வாய்ந்தது என்பதை நாம் அறிவோம். இப்படிப் பட்ட பரன் (எம்பெருமான்) சென்று திருவேங்கடமா மலை ஒன்றுமே தொழ நாம் வினைகள் யாவும் தம்மடைவே நசித்தொழியும். ஆகவே, "உள்ளே எழுந்தரு ளியிருக்கின்ற திருமலையப்பன் வேண்டா; திருமலையாழ் வாரே போதும்" என்கின்றார். எம்பெருமான் படைப்பி லுள்ள அசித்தும் வணங்குதற்குரியது; தொழுவதற்கு உரியது என்பது பெறப்படும். "திருமாலிருஞ்சோலை மலை என்றேன்; என்ன, திருமால் வந்து என்நெஞ்சு நிறையப் புகுந்தான்" (திருவாய். 10.8:1) என்ற ஆழ்வா ரின் வாக்கே இக்கருத்தினை அரண் செய்யும். (8).

வீடுபேற்றினைத் தருவதற்குத் திருமலையாழ்வார் பூர்த்தியாக வேண்டும் என்பதில்லை. அதில் 'ஏகதேசம்' அமையாதோ? என்கின்றார். 'ஏகதேசம்' என்ற சொல் லால் நினைப்பது திருமலையப்பனை. திருமங்கை மன்ன னும் "வடமாமலை உச்சியை" (பெரி. திரு. 7.10:3) என்று ஏகதேசமாகவே சீநிவாசனைக் குறிப்பிட்டதைக் காணலாம். பிணி வீயுமாறு செய்யும் திருவேங்கடத்து ஆயனின் நாண் மலராம் அடித்தாமரையை நெஞ்சினால் நினைத்து வாயினால் துதிப்பவர்கட்கு மூப்பு பிறப்பு இறப்பு ஓய்ந்து ஒழியும் (9). இப்பாசுரத்தின் ஆறாயிர படி: "திருவேங்கடமுடையானன்றோ பிராப்பியம், திரு மலையே பிராப்பியம் என்று சொல்லுவது என் என்னில்; திருவேங்கடமுடையானுடைய பிராப்பியத்துவமும் திருமலையோடுள்ள சம்பந்தத்தால் வந்ததாதலால் திருமலையே பிராப்பியம் என்கின்றார்" என்பது.

வியாக்கியான ஆசிரியர்கள் பாசுரங்களில் மிகவும் ஆழ்ந்து பொருள் காணும் திறமையை சொற்களால் வரையறுத்துக் கூறுவதற்கில்லை—வாசாமகோசரம் (9).

எம்பெருமான் சேதநர்கட்கு பொறிபுலன்களை நல்கி ஆயுளையும் அருளுகின்றான். இவை எதற்காக என்னில்; திருமலை முதலான திருப்பதிகளிலே சென்று வழிபாடு செய்வதற்காகவே. ஆயினும், உலகோர் உடலில் வலிவுள்ள காலங்களில் விஷய போகங்களில் மண்டிக் கிடந்து திவ்விய தேச வழிபாடுகளைப்போகப் போகப் பார்த்துக்கொள்ளலாம் என்று பதற்றமற்று ஆறியிருந்து விடுகின்றனர். இந்நிலையிலேயே பல வகைகளிலும் தளர்ச்சி வந்து விடுகின்றது; திவ்வியதேச வழிபாட்டை நெஞ்சாலும் நினைக்க முடிவதில்லை. 'இங்ஙனம் ஆகாமல் திருமலையைப் பணிமின்' என்கின்றார் (10).

**சரணாகதி :** கீழ்த்திருவாய்மொழியில் (6.9:10) ஆழ்வார்,

> கூராழி வெண்சங் கேந்திக் கொடியேன்பால்
> வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே (1)

என்று அளவுக்கு மீறிய ஆர்த்தியுடன் பரமபதத்தளவும் கேட்கும்படிக் கூப்பிட்டார். எம்பெருமான் வந்து முகக் காட்டாமையால் மிகவும் தளர்வெய்துகின்றார். அவன் வைகுந்தத்திலிருந்து நிலவுலகம் வந்து இராம கிருஷ்ணாதியவதாரங்கள் எடுத்து அக்காலத்தில் இல்லாதார்க்கும் உதவும்படித் திருவேங்கடமலையில் நித்திய சூரிகள், நித்திய சம்சாரிகள், விலங்குகள், பறவைகள் முதலான எல்லோருடனும் வேற்றுமையின்றி ஒருமிடறாக வணங்குவதற்கேற்ப நித்திய சந்நிதி பண்ணியிருக்கிற படியை அநுசந்தித்து அத்திருமலையப்பன் திருவடிகளிலே பெரியபிராட்டியார் முன்னிலையாகத் தம்

முடைய வேறு கதி இல்லாமையை (அநந்யகதித்து வத்தை) விண்ணப்பம் செய்து சரணம் புகுகின்றார் இத் திருவாய்மொழியில் (6.10).

தேச நியமம், கால நியமம், அதிகார நியமம் முதலியவை ஒன்றும் இல்லாமல் விஷய நியமம் மட்டிலும் உள்ள சரணகதியை (பிரபத்தியை)க் கையாள நினைக்கின்றார். பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்தனுள்ளும் செளலப்பியம், செளசீல்யம் முதலான குணங்கள் பூர்ணமாக இருக்கப்பெற்ற இடமே அர்ச்சை. எம்பெருமானே சொல்லப் புகுந்தாலும் சொல்லித் தலைக் கட்டமுடியாதபடிக் குணங்கள் நிறைந்திருப்பது இங்குத்தான். ஆகவே, ஆழ்வார் அர்ச்சாவதாரத்தில் தலையான திருமலையிலே சரணாகதியைச் செய்தருளுகின்றார். இந்தத் திருவாய் மொழியில் ஒன்பது பாசுரங்களாலும் சரணியனின் படிகளை கூறிப் பத்தாம் பாசுரத்தில் சரணம் புகுகின்றார். இதனைச் சற்று விரிவாகக் காண்போம்.

உலகம் உண்ட பெருவாயா!
　　உலப்பில் கீர்த்தி அம்மானே!
நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி!
　　நெடியாய்! அடியேன் ஆருயிரே!
திலதம் உலகுக் காய்நின்ற
　　திருவேங் கடத்தெம் பெருமானே!
குலதொல் அடியேன் உனபாதம்
　　கூடு மாறு கூறாயே (1).

[உலப்பு-முடிவு; கீர்த்தி-புகழ்; திலதம்-பொட்டு; குலதொல்-பரம்பரையாக]

என்ற முதற்பாசுரம் சரண்யனின் முதற்படியைக் கூறுகின்றது. "உன்னையொழிய வேறு கதி இன்றி இருக்கின்ற

என்னை உன் திருவடிகளில் சேரும்படி செய்தருள வேண்டும்'' என்கின்றார்.

**'உலகம் உண்ட பெருவாயா'**: ஆபத்து நேர்ந்த காலத்தில் தளராதபடி காப்பதற்காகவன்றே நீ உலகம் உண்டது. அந்த ஆபத்தில் காக்கும் தன்மை மெய்யானால் என்னையும் அந்த ஆபத்தினின்றும் எடுத்தருளித் திருவடிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டாவோ?—என்பது குறிப்பு. **பெறுவாயா**: வாயின் பெருமையைச் சொன்னது அவனது பாரிப்பின் பெருமையைச் சொன்னபடி.

**'அடியேன் ஆருயிரே'** : திருமலையில் நின்று என்னுடைய சேஷத்துவமுறையை அறிவித்து உன்னால் அல்லது செல்லாதபடி பண்ணினவனே! **'குலதொல் அடியேன்'** குலபரம்பரையாக நான் உனக்கு அடிமைப் பட்டவனன்றோ? என்னை நீ நோக்காவிடில் வேறு நோக்குவாருண்டோ? **'கூறாய்'**: அடியேன் உன் திருவடியைச் சேரும் வகைபற்றி ஒரு சொல் அருளிச் செய்ய வேண்டும்.

**சரண்யனின் இரண்டாவது படி**: 'கூடக் கடவீர்; அதற்கு ஒரு குறையும் இல்லை; ஆனாலும் தடைகள் கனத்து இருக்கின்றனவே' என்று எம்பெருமான் கூற, **'நேமி வலவா!'** உன் கையில் திருவாழி இருக்க நீ இப்படிச் சொல்லலாமோ? இரண்டு விபூதியையும் ஆளுவது நின் திருவாழியன்றோ? அழகாலே அங்குள்ளாரை ஆளும்; கூர்மையாலே இங்குள்ளாரை ஆளும். அங்குக் கூர்மை குமர் இருக்கும்; இங்கு அழகு குமர் இருக்கும். **தெய்வக் கோமானே!** 'எல்லாத் தெய்வங்கட்கும் மேம்பட்ட தெய்வம் நானே' என்பதைத் திருமலையில் காட்டிக் கொண்டு நிற்பவனே. **ஆரா அன்பில் அடியேன்**: ஆராக் காதல் குருகூர்ச் சடகோபன் அன்றோ? இப்படிப்பட்ட அடியேன். நின் திருவடிகளில் சேர்ந்து

அடையும்படி என்பக்கலில் அருள் பாலிக்க வேண்டும். நீ திருமலையில் நிற்கும் நிலைக்குப் பயன் பெற வேண்டும்; எனது அன்புக்கும் இரையிட வேண்டும்' என்கின்றார் (2).

**மூன்றாம் படி:** 'உன் அடிசேர் வண்ணம் அருளாய்!' என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான், 'ஆழ்வீர்! நீர் கேட்ட போதே அருள முடியுமோ? அதற்குச் சமயம் இல்லையோ!' என்ன, 'வேறுபட்ட சிற்றின்பங்களில் போகாதபடியான ஞான இலாபத்தைப் பண்ணின உனக்குப் பேற்றினைத் தருதல் பெரிய பணியோ?' என்கின்றார். ''என்னால் வந்த குறை அறுத்த உனக்கு, உன்னால் வந்த குறை அறுத்தல் பெரிய பணியோ? என்பது குறிப்பு.

**'எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே!':** தேவர்களுடைய அமிழ்தத்தைக் காட்டிலும் விலட்சணமான அமிழ்தம் என்கிறது. அந்த அமிழ்தத்தைப் புசிக்க வேண்டுமானால் தேவயோனியில் பிறக்க வேண்டும்; பிறந்தாலும் அமிழ்தத்தைப் புசிக்கும் காலத்தில் ஞான அநுட்டானங்களுக்கு யோக்கியதை உண்டாகும்படி ஆகாய கங்கையில் நீராடி செபம், தியானம் முதலிய நியம அநுட்டானங்கள் முதலியன செய்து வருந்த வேண்டும்; இந்த அமுதத்திற்கு அவை தேவை இல்லை; இன்னார் இனையார் என்கின்ற அதிகாரி நியதி இல்லை; சிந்தித்த மாத்திரத்தில் எண்ணம் புகுந்து ''ஆரா அமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்'' (திருவாய் 5.8:10) என்று தித்திக்கும். ''உளங்கனிந் திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத் தூறியதேன்'' (பெரி. திரு.4.3;9) ஆதலால் உள்ளுந்தோலும் தித்திப்பதற்குத் தட்டில்லை.

**'இமையோர் அதிபதியே!' :** 'மது' தவிர வேறொன்றையும் கண் எடுத்துப் பாராத வண்டுக்கு **'மது விரதம்'**

என்பது திருநாமம். அப்படியே இமைகொட்டாமல் எம்பெருமானையே இடையீடின்றி சேவித்துக் கொண்டிருக்கும் நித்திய சூரிகள், முக்தர்கள் இவர்களை 'இமையோர்' என்று திருநாமம் பெற்றது பொருத்தமேயாகும். "அந்த இமை யோர்கட்குச் சேவை செய்து கொண்டிருக்கின்ற இருப்பு மீனுக்குத் தண்ணீர் வார்க்குமாப் போலே இருப்பது ஒன்று என்று கருதி எம்போலியருக்கும் காட்சி நல்குவதற்கென்றே வந்து நிற்கின்ற இடமன்றோ திருமலை? அவ்வடத்திலுள்ள அருவிகள் மணிகளையும் பொன்களையும் வாரி வழங்குவதைக் காணும் உனக்கு அந்த வள்ளண்மை அருமைப்படவேண்டுமோ? நீயும் அங்ஙனமே வாரி வழங்க வேண்டாவோ? எனக்கு நீ ஒன்றும் தர வேண்டா; திருவுள்ளத்திலே என்னைப்பற்றி 'ஐயோ!' என்று சிறிது இரங்கியருளினால் அதுவே போதும். உபாயமுமாய் உபேயமுமாய் போக்கியமுமாய் நின்திருவடிகளைச் சேரும்படிக் கருணை காட்டுவாய் என்பது குறிப்பு (3).

**நான்காம் படி:** "உன்னை அடைவதற்கு உறுப்பாக நீ கண்டு வைத்த சாதனங்கள் எனக்கு ஒன்றும் உபயோகப் படவில்லை; ஆன பின்பு, தேவரை நான் அடைவதற்கு எனக்கென்று தனியே ஒரு சாதனம் ஆக்கித் தர வேண்டும்" என்கின்றார். **"சூரர்கள் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே! பூவார் கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே"**: "பிரமன், சிவன், இந்திரன், முதலான தேவர்களும் சனகாதி முனிவர்களும் இதுவே நமக்கு அடையத்தக்க இடம் என்று விரும்பி இறைஞ்சி ஏத்தும் இடமான திருமலைக்கு இறைவனே! கிட்டி அநுபவிக்கப் பெறாத பாபத்தைப் பண்ணின நான் உன்னுடைய பூவார் கழல்களைப் பொருந்தும் படியான ஓர் உபாயத்தைக் கற்பித்தருள வேண்டும்" என்கின்றார்.

இவ்விடத்தில் வைணவப் பெரியோர்கள் திருவேங்கடமுடையானின் திருவடியைப் '**பூவார் கழல்கள்**' என்றும், திருவரங்கம் அழகிய மணவாளனின் திருவடியைத் '**திருப் பொலிந்த சேவடி**' என்றும், கச்சிநகர்த் தேவப் பெருமாள் திருவடியைத் '**துயரறு சுடரடி**' என்றும் சம்பிரதாயத் திருநாமங்களாக வழங்குவர் என்பது அறியத் தக்கது. (4)

**ஐந்தாம் படி:** "ஆழ்வீர்! நீர் இங்ஙனே, கிடந்து துடிப்பதேன்? எப்படியும் உம்முடைய விருப்பம் நிறைவேறச் செய்வதாகவே நினைத்திருக்கின்றோம்" என்று திருமலையப்பன் திருவுள்ளமாக, "அஃதை என்றைக்குச் செய்வதாகத் திருவுள்ளம்? ஒரு நாளைக் குறிப்பிட்டுச் சொல்லலாகாதோ?" என்று வினவுகின்றார் ஆழ்வார்.

திணரார் மேகம் எனக்களிறு
சேரும் திருவேங் கடத்தானே!
திணரார் சார்ங்கத் துனபாதம்
சேர்வ தடியேன் எந்நாளே? (5)

[திணரார்-திண்மை பொருந்திய; சாரங்கம்-திருமாலின் வில்லின் பெயர்].

என்பது பாசுரம். யானை போன்ற மேகங்களும் மேகம் போன்ற யானைகளும் திருமலையில் இருப்பது இயல்பு. ஆகவே இரண்டுவிதமாகவும் சொல்லலாம்.

'மதயானை போலெழுந்த மாமுகில்காள்!
வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்

(நாச். திரு. 8:9)

என்ற ஆண்டாள் திருவாக்கையும்,

'தென் ஆனாய்! வட ஆனாய்! குடபால் ஆனாய்!
குணபால மதயானாய்' (திருநெடுந்.10)

என்றும்,

''சோலை மழ களிறே'' (பெரி. திரு. 4. 9:2) என்றும் கூறிய திருமங்கையாழ்வாரின் திருவாக்குகளையும் நினைவு கூரலாம் (5).

**ஆறாம் படி:** ''உனபாதம் சேர்வதடியேன் எந் நாளோ' என்றதற்கு 'உன் திருவடிகளை நான் சேரப் பெறும் நாள் கூட ஒன்று உண்டா? அஃது எது?' என்று ஐயுற்றுச் சொல்வதாகவும் பொருளாகக் கூடுமே; எம் பெருமான் 'ஆழ்வீர்! எந்நாளே என்று நீர் ஐயுறுவது ஏன்? அஃது ஒரு தேச விசேடத்திலேயே உள்ளது ஒன்று அன்றோ? என்றருளிச் செய்ய, ''அங்குள்ளாரும் இங்கே வந்தன்றோ உன்னைப் பெற்று அநுபவிக்கின்றது; அப்படி யிருக்க, எனக்கு மரத்திரம் தேச விசேடமா?'' என் கின்றார்.

மெய்ந்நா மனத்தால் வழிபாடு
செய்யும் திருவேங் கடத்தானே!
மெய்ந்நான் எய்தி எந்நாளஉன்
அடிகள் அடியேன் மேவுவதே? (6)

என்பது பாசுரம்.

**மெய்நா மனத்தால் வழிபாடு:** மெய்யினால் செய்யும் வழிபாடு—திருச்சுற்றில் வலம் வருதல், நெடுஞ் சாணாக நிலத்தில் வீழ்ந்து வணங்குதல்; நாவினால் செய்யும் வழிபாடு தோத்திரம். மனத்தால் செய்யும் வழிபாடு சிந்தித்தல். மெய் என்பதை நாவிலும் மனத்தி லும் கூட்டலாம்; மெய்யான நா மெய்யான மனம் என்றவாறு. இங்கு மெய்ம்மை, பயனை விரும்பாமை,

சரணாகதியில் உலகளந்த திருவடிக்கு ஒரு சிறப்பு உண்டு. இதனை ஆழ்வார் பாசுரங்களில் பல இடங்களில் காண லாம். இக் காரணங்களால் நம்மாழ்வாரின் சரணாகதிக்கு இலக்கான திருவேங்கடமுடையானின் திருவடிகள் உலக மளந்த திருவடிகளே என்பதை இப்பாசுரத்தின் "மண்ணை ளந்த இணைத் தாமரைகள்" என்ற தொடர் குறிப்பிடு கின்றது.

**ஏழாம் படி:** 'ஆழ்வீர்! மெய்ந்நான் எய்தி' என்ற இந்த ஞான இலாபம் உமக்கு உண்டாயிற்று; அது பலத்தோடு கூடியல்லது நில்லாது. இவ்வளவும் ஆனபின்பு நீர் பொறுத்திருக்கலாகாதோ?" என்று எம்பெருமான் சொல்ல, "திருவேங்கடமுடையானாய் இருந்தும் நீ ஆறி யிருந்தாய்; உன்னுடைய இனிமை முதலியவற்றைப் பொறுத்துக் கொண்டு என்னால் தரித்திருக்க முடியாது" என்று தம் பதற்றத்தை அருளிச் செய்கின்றார் ஆழ்வார்.

அடியேன் மேவி அமர்கின்ற
  அமுதே! இமையோர் அதிபதியே!
கொடியார் அடுபுள் உடையானே!
  கோலக் கனிவாய்ப் பெருமானே!
செடியார் வினைகள் தீர்மருந்தே!
  திருவேங் கடத்தெம் பெருமானே!
நொடியார் பொழுதும் உனபாதம
  காண நோலா தாற்றேனே (7)

[மேவி-கிட்டி; அடுபுள்-பகைவரைப் போசுக்க வல்ல கருடன்; செடி-பாவம்; நொடி-சிறிய கால அளவு; நோலாது-அநுட்டிக்க முடியாமல்]

என்பது பாசுரம்.

**அடியேன் மேவி அமர்கின்ற அமுதே:** இஃது எம்பெருமானுக்கு இவர் சாத்தும் ஒரு திருநாமம் போலே

உள்ளது. தேவர்கள் உப்புச்சாற்றைப் பருகிக் களிப்பது போன்றதா இது? இங்குள்ள மற்றையோர்கள் அநுபவிப் பது போன்றதா என் அநுபவம்? அடியேனுடையது அசாதாரணமானதன்றோ? உடனே **இமையோர் அதிபதியே!** என்றது; அங்குத் திருநாட்டில் நித்திய சூரிகள் உன்னை அநுபவிப்பதைப் போலன்றோ அடியேன் இங்கு உன்னை அநுபவிப்பது?

''ஆழ்வீர்! திருமலைக்கு நீர்வந்து சேவித்துப் போக லாகாதா? இங்ஙனே கிடந்து துடிப்பானேன்?'' என்று எம்பெருமான் திருவுள்ளமாக, **'கொடியா அடுபுள் உடை யானே!'** என்கின்றார். ''பெரிய திருவடியை ஒக்கத்தில் இடுக்கிக் கொண்டு விரைந்தோடி அருள் செய்வது சிலருக் குத்தானா? அந்த அருளுக்கு அடியேன் தகுந்தவன் அல்லனோ? அந்தப் புள்ளரையனை என்னளவில் சிறிது செலுத்தக் கூடாதோ'' என்கின்றார்.

**கோலக் கனிவாய்ப் பெருமானே:** ''அழகிய தாய்க் கனிந்துள்ள திருவதரத்தின் பழுப்பைக் கொண்டு என்னை அடிமைக் கொண்டாய்! அந்தத் திருவதரத்தை மீண்டு காட்டுதல் அரிதாயிற்றே!. ''ஆச்ரிதர் இவ்வழகை அநுப விப்பதற்குக் கொடி கட்டிக் கொண்டிருப்பவனே!'' என் பது நம்பிள்ளை ஈடு. **செடியார் வினைகள் தீர்மருந்தே:** நிலத் தில் விளையும் மருந்தைக் காட்டிலும் மலையில் விளையும் மருந்து மிகச் சிறந்ததல்லவா? அதுவும், இது திருமலை மருந்து அன்றோ? ''ஆர் மருந்து இனியாகுவார்' என் கின்ற இந்த ஆழ்வாருக்கு அசேதநமான மருந்து பிடிக் காது. 'எது மருந்து' என்னாமல் 'ஆர்மருந்து' என்பவரா கையாலே இவருடைய மருந்து சேதநமாகவே இருக்க வேண்டும். நோய்களைத் தீர்க்கும் மருந்து உலகில் இருந்தாலும் நோய்கட்கு மூலகாரணமான 'வினை தீர் மருந்து' இல்லையல்லவா? ''இவன் மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணன்'' (பெரியாழ். திரு. 5.3:6) அல்லவா?

"மருந்தும் பொருளும் அமுதம் தானே" (மூன்.திருவந். 4) என்றும், "மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு" (திருவாய் 9. 3:4) என்றும் கூறப்பட்டவன் அன்றோ? 'அடியேன் மேவி அமர்கின்ற அமுதே......... மருந்தே திருவேங்கடத்தெம் பெருமானே!' என்று கொண்டு கூட்டி (அந்வயித்து) "அவ்வமுதம் புசிப்பார்க்கு மலைமேல் மருந்திறே; அவ்வமுதம் புசிப்பார்க்குச் சாய்க்கரகம் போலே (தண்ணீர்ப்பந்தலில் தண்ணீர் வார்க்கின்ற கரகம்) உயரத்திலே அணித்தாக நிற்கிறபடி" என்றருளிச் செய்வர் நம்பிள்ளை.

"இமையோர் அதிபதியாய், கொடியா அடுபுள் உடையானாய், செடியார் வினைகள் தீர்மருந்தாய், திருவேங்கடத்து எம்பெருமானாய், கோலக்கனிவாய்ப் பெருமானாய், அடியேன் மேவி அமர்கின்ற அமுதே" என்று கொண்டு கூட்டிப் பலமுறை சொல்லிச் சொல்லி அநுபவித்து ஆழ்வார் பெற்ற அநுபவத்தைப் பெற முயலவேண்டும். திருவாராதனத்தில் அமுது செய்தருளப் பண்ணும்போது "அடியேன் மேவி அமர்கின்ற அமுதே" என்ற இப்பாசுரத்தையும் "பச்சைமா மலைபோல் மேனி" (திருமாலை-2) என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருமாலைப் பாசுரத்தையும் அநுசந்திக்க வேண்டும் என்பது பட்டர் நியமனம். (7)

**எட்டாம்படி :** "'சாதன அநுட்டானம் என்பக்கலில் ஒன்றுமில்லை' என்று சொல்லிக் கொண்டே ஆசைப் பட்டு நாக்கு நீட்டினால் கிடைக்குமோ?" என்று எம்பெருமான் திருவுள்ளமாக, "பிரானே! ஞானசக்திகளால் குறைவற்றவர்களான நீலகண்டத்தம்மானும் நிறை நான்முகனும் இந்திரனும் தங்களுடைய உபாய தாரித்திரியத்தைச் சொல்லிக் கொண்டன்றோ உன்னைக் காணப்பெறுகின்றது? ஆகவே, நானும் உன்

திருவடிகளைக் காண்பதற்குச் சாதன அநுட்டான மின்றியிருந்தாலும் உன்னையொழிய ஆற்றமாட்டேன். தந்தாமுடைய ஆகிஞ்சந்யத்தை (=கைம்முதல் இல்லா மையை) முன்னே வைத்து ஒருவித சாதனத்தைச் செய்து பெறலாம் படியன்றோ நீ இருப்பது?'' என்கின்றார் ஆழ் வார். இங்கே நம்பிள்ளை ஆச்சரியமாக அருளிச் செய்வது; ''ஒரு வாணாசுரனுடைய போரில் தோற்றுப் போனதால் இங்ஙனம் வந்து விழுவார்கள். இராசத தாமத குணங்கள் தலையெடுத்தபோது 'ஈசுவரோஹம்' என்று இருப்பார் கள். முட்டினவாறே ''கிருஷ்ண கிருஷ்ண! உன்னைப் பிறப்பில்லாதவனாகவும் எல்லார்க்கும் மேலானவனாக வும், புருஷோத்தமனாகவும் அறிவேன் என்று துதி செய் யத் தொடங்குவார்கள்.'' (மூவரும் தனித்தனியாகவே சொல்லுவது). மேலும் இவர்கள் தத்தம் மணாட்டிமார் கழுத்திலும் தங்கள் கழுத்திலும் கப்படம் (=வறுமைக்குச் சூசகமான உடை) கட்டிக் கொண்டு விழத் தொடங்கு வார்கள். இதனால் எம்பெருமானுக்கு இரக்கம் எழும் என்பது இவர்கள் கருத்துப் போலும் (8).

**ஒன்பதாம் படி:** ஆழ்வார் தம்முடைய பிரிவுத் துன் பத்தைக் கனக்க அருளிச் செய்கின்றார். தாம் விரும்பிய போதே காணப்பெறாமையாலே 'இப்போதே உன்னைக் காணாவிடில் தரிக்க மாட்டேன்' என்கின்றார்.

செந்தா மரைக்கண் செங்கனிவாய்
நாற்றோள் அமுதே! எனதுயிரே!
சிந்தா மணிகள் பகரல்லைப்
பகல்செய் திருவேங் கடத்தானே!
அந்தோ அடியேன் உனபாதம்
அகல கில்லேன் இறையுமே (9)

[சிந்தாமணி-ஒருவகை இரத்தினம்; பகர்-ஒளி; அல்-இருட்டு; இறை-சிறிது பொழுது]

என்பது பாசுரப் பகுதி.

**செந்தாமரைக் கண் செங்கனிவாய் நால்தோள் அமுதே:** கண்டாருடைய தாபங்களெல்லாம் ஆறும்படி குளிர்ந்த திருக்கண்களையுடையாய், சிவந்த கனிந்திருந்து இருக்கும் திருப்பவளமுடையாய், கற்பகத் தரு பணைத் தாற்போலே இருக்கின்ற நான்கு தோள்களையுடையாய்! எனக்குப் பரம போக்கியனாக இருப்பவனே! இங்ஙனம் வடிவழகின் மிகுதியைப் பேசியவுடன் '**எனதுயிரே!**' என்றது இந்தவடிவழகை நான் அநுபவிக்கும்படிச் செய்து, பிரிந்த நிலையில் 'நான் உளன்' ஆகாதபடி செய்தவனே! என்றவாறு.

**சிந்தாமணியே திருவேங்கடத்தானே:** நெஞ்சால் நினைத்தவுடனே எதையும் அளிக்கவல்லதற்குச் 'சிந்தா மணி' என்று பெயர். அது போன்ற சிறந்த இரத்தினங் களை இங்குச் 'சிந்தா மணிகள்' என்று சொல்லுகின்றது. திருமலையிலுள்ள இரத்தினங்களைச் சொன்னதாகவும்; திருவேங்கடமுடையானுடைய திருமேனியில் அணிந் துள்ள இரத்தினங்களைச் சொன்னதாகவுமாம். அவற் றினுடைய ஒளி அல்லைப் பகல் செய்ததாயிற்று. எப் போதும் பகலாகவே காண்பதாயிற்று. இவ்விடத்தில்,

> படியிடை மாடத்து அடியிடைத் தூணில்
> பதித்தபல் மணிகளின் ஒளியால்
> விடிபகல் இரவுஎன்று அறிவுஅரிது ஆய
> திருவெள்ளி யங்குடி அதுவே (4.10:8)

என்ற திருவெள்ளியங்குடிபற்றிய திருமங்கையாழ்வா ரின் அருளிச் செயல் நினைவுகூரத் தக்கது.

'பரமபதம் போல் எப்போதும் பகலேயாயிருக்கின்ற திருமலையிலே எழுந்தருளியிருப்பவனே!' என்று சொன்ன வுடனே '**அந்தோ!**' என்றதன் கருத்தை நம்பிள்ளை எடுத்து காட்டுவது அற்புதம்! ''போக்கியமும் குறை

வற்று, அவன் தானும் அண்மையனாய் எனக்கு ஆசையும் மிகுந்திருக்க, கிட்டி அநுபவிக்கப்பெறாது ஒழிவதே!'' என்கின்றார்.

**அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையுமே:** 'திருவடிகளைவிட்டு நீங்காதவன்' என்ற காரணத்தினாலன்றோ 'அடியேன்' என்று பெயர் பெற்றது? ஆகவே, அடியேனாக இந்து கொண்டு நின் திருவடிகளை விட்டு அகல்வேனா நான்!' என்கின்றார்.

**பத்தாவது படி-சரணாகதி:** மேலே ஒன்பது பாசுரங்களாலும் சரண்யனான சர்வேசுவரனுடைய சொரூபத்தையும் தம்முடைய ஆற்றாமையும் சொன்னார். வருகிற இப்பாசுரத்தில் தம்முடைய சொரூபம் சொல்லித் தம்முடைய விருப்பம் சடக்கென நிறைவேறும்பொருட்டுப் பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாக (தகவுரை கூறுபவளாக)க் கொண்டு திருவேங்கடமுடையானின் திருவடிகளிலே சரணம் அடைகின்றார்.

'அகல கில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறை மார்பா!
நிகரில் புகழாய்! உலகம் மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன் [10)

[அலர்-மலர்; நிகர்இல்-ஒப்பு அற்ற; அமரர்-தேவர்கள்; புகல்-கதி]

என்பது பாசுரம். மேல் திருப்பாசுரங்களில் (1,2,3,5,6,7, 8, 9) 'அடியேன்' என்றும், அடுவினையேன் (4) என்றும்

தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும், சேஷத்துவத்தையும் அவனுடைய சரண்யத்துக்கு உறுப்பாகச் சொல்லிக் கொண்டு போந்தார்; இங்கு அதனையே பேற்றுக்கு உடலாகக் கொண்டு சரண்புகுகின்றார்.

**'அகிலகில்லேன் இறையும்'**: எம்பெருமான் திருமார்பிலே நித்தியவாசம் பண்ணா நின்ற பெரிய பிராட்டியார் 'இறையும் அகலகில்லேன்' என்று இதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கின்றாளாம். இதற்குக் காரணம் என்ன? ''போக்கியதையின் கனத்தைப் பார்த்தவாறே 'ஐயோ! அகல நேர்ந்து விடுமே' என்று ஐயம் உண்டாகக் கூடியது; அந்த ஐயத்தைத் தெரிவிப்பதற்காகச் சொல்லுகிறபடி'' என்க.

**அலர்மேல் மங்கை:** மலரின் மணம் ஒரு வடிவு கொண்டாற்போலத் தோன்றியவளான பெரியபிராட்டியார் அந்த மலரில் வசிக்க விரும்பாமல் அதனைத் துறந்து விட்டுத் திருமார்பில் வந்து சேர்ந்ததற்குக் காரணம் என்ன? அந்தப் பூவைவிட மென்மைத் தன்மையுள்ள இடம் என்பதுபற்றி.

**உறை மார்பா:** எம்பெருமானுக்கு உபாயத்துவம், உபயேத்துவம் என்ற இரண்டு தன்மைகள் உண்டானாற் போல, பிராட்டிக்குப் புருஷகாரத்துவம், உபேயத்துவமாகின்ற இரண்டு தன்மைகள் உண்டு. எம்பெருமானை ஆச்ரயிக்கும் போது இவளைப் புருஷகாரமாக முன்னிட வேண்டிய இன்றியாமையாமை என்ன? குளிர்ந்த நீரிலும் கூட நெருப்புக் கிளர்ந்தாற்போல எல்லா உயிர்களையும் காப்பதற்காகத் திருமாலை இட்டிருக்கும் அவனது திருவுள்ளத்திலே சேதநன் அளவு கடந்து பண்ணும் குற்றங்கள் அடியாகச் சீற்றம் பிறப்பதும் உண்டு; அங்ஙனம் சீற்றம் பிறந்தால் அக்குற்றம் பொறுப்பது இப்பிராட்டிற்காக.

தன்னுடைய உபதேசத்தாலே அச்சீற்றத்தைத் தணித்துத் தயையைப் பிறப்பிப்பவள் பிராட்டி. அன்றியும், 'உறை மார்பா' என்பதனால் பிராட்டியும் பெருமாளுடன் எப் போதும் சேர்ந்திருக்கின்றாள் என்பதை அறிவித்துக் கொண்டிருப்பதால், எச்சமயத்திலும் சேதநன் எம்பெரு மானை ஆச்ரயிக்கலாம் என்பது தேறி நிற்கும்.

பிராட்டியின் புருஷகாரம் அவசியம் வேண்டும் என் பதை விபவாவதார காலத்துச் செய்தியால் தெரிந்து கொள்ளலாம். இராமாவதாரத்தில் அளவு கடந்த அபரா தத்தைச் செய்து நான்முகன் கணைக்கு இலக்காய் தலை யறுப்புண்ணவேண்டிய காகம் கருணைக்கு இலக்காய் தலை பெற்றுப் போனது பிராட்டி அருகிருந்தமையாலே யாகும். அவ்வளவு அபராதம் செய்யாத இராவணன் இராமன் கணைக்கு இலக்காய் முடிந்து போனது இவளது சந்நிதி இல்லாமையாலேயாகும்.

**நிகரில் புகழாய் முதலியன:** பிராட்டியின் புருஷகார பலத்தாலே எம்பெருமானுடைய சுதந்திரம் மடிந்து தலை எடுக்கும் குணங்கள் சிலவுண்டு; அந்தக் குணங்கள் 'ஆச்ரயண சௌகர்யா பாதகங்கள்' என்றும், 'ஆச்ரித கார்யா பாதகங்கள்' என்றும் இருவகைப் பட்டிருக்கும். சிறிதும் அச்சமின்றி, கூச்சமுமின்றி நாம் ஆச்ரயிப்பதற்கு அநுகூலப்படுத்துகிற குணங்கள் 'ஆச்ரயண சௌகர்யா பாதகங்கள்' ஆகும். ஆச்ரயித்த பிறகு காரியம் தலைக்கட்டும்படி செய்யும் குணங்கள் 'ஆச்ரித கார்யா பாதகங்கள்' ஆகும். ஆச்ரயிக்கப் புகும் சேதநன் தன் குற்றங்களைப் பார்த்து அஞ்சும்போது தோஷபோக்யத்துவரூபமான வாத்சல்யத்தை நினைத்து அந்த அச்சம் தீரலாம். பாசுரத்தில் 'நிகரில் புகழாய்' என்ற தொடர் வாத்சல்யத்தைக் குறிப்பிடுகின்றது. ஈசுவரன் நம் காரியம் செய்வானோ? செய்யானோ? என் கின்ற ஐயம் தோன்றும்போது இழவுபேறு தன்னதாம்

படியான சுவாமித்துவத்தை நினைத்து அந்த ஐயம் தீர லாம். பாசுரத்தின் 'உலகம் மூன்றுடையாய்' என்ற தொடர் சுவாமித்துவத்தைக் குறிப்பிடுகின்றது. உபய விபூதிக்கும் தலைவனாக இருக்கும் பெருமைக்குப் பிரகாச மான சுவாமித்துவத்தைக் கண்டு, தன்னுடைய கீழ்மை யான தன்மையை அநுசந்தித்து, அகல நினைக்க நேரும் போது தாழ நின்றவர்களுடன் புரையறக் கலக்கும் இயல்பான சௌசீல்யத்தை நினைத்துத் தெளிவு பெற லாம். பாசுரத்தின் 'என்னை ஆள்வானே' என்ற தொடர் சௌசீல்யத்தைக் குறிப்பிடுகின்றது. இந்திரியங்களுக்கு எட்டாதவனான அவனை நாம் எப்படி ஆச்ரயிப்ப தென்று பின்வாங்க நினைக்கும்போது தன் வடிவைக் கண்ணுக்கு இலக்காக்கும்படியான சௌலப்பியத்தை நினைத்துத் தெளியலாம். பாசுரத்தின் 'நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே' என்ற தொடர் சௌலப்பியத்தைக் குறிப்பிடுவதாகும். இந்தப் பொருள் சிறப்புகளும் இன்னும் பலதத்துவக் கருத்துகளும் ஈட்டில் மிக அருமையாக அருளிச் செய்யப் பெற்றுள்ளன.

**புகலொன்றிலா அடியேன்:** ஆகிஞ்சந்யமும் (=கைமுதல் இல்லாமை) அநயகதித்திவமும் (=வேறு கதி இல்லாமை) பிரபத்திக்கு அதிகாரமாகையாலே அவை இரண்டையும் குறிக்கின்றது இது. 'புகல் ஒன்று இல்லா' என்றதனால் பிரபத்திக்கு அங்கமான ஆகிஞ்சக் யமும், ''அடியேன்'' என்றதனால் அநந்யகதித்துவமும் சொரூபப் பிரகாசமான அநந்யார்ஹசேஷத்துவமும் சொல்லுகின்றது. ''அடியேன்'' என்ற சொல்லுக்கு நேர்பொருள், அநந்யார்ஹ சேஷத்துவம். பொரு ளாற்றலால் போந்த பொருள் அநந்யகதிததுவம். ஆகிஞ்சந்யமாவது, வேறு உபாயங்கள் இன்மை.

**உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்:** ஆக இவ் வளவாலும் துவயத்தின் முதல் கண்டம் அநுசந்திக்கப்

பட்டதாயிற்று. பிரபத்தியை வாசிகமாகவும் காயிக மாகவும் மானசீகமாகவும் அநுசந்திக்கலாம். 'என்னை நீ இரட்சிக்க வேண்டும்' என்று வாயினால் வேண்டுதல் வாசிகம். அஞ்சலிசெய்தல், காகாசுரனைப்போல் இரட்ச கப் பொருள் இருக்குமிடத்தே வருதல் காயிகம். திண் ணிய அத்யவசாயம் கொள்ளுதல் மானசீகம். இவற் றுள் மானசீகமே சிறந்தது. அதுவே இங்கு உற்றது. நம் போலியர் உய்வதற்காக ஆழ்வார் பாசுரமிட்டுச் அருளிச் செய்து உள்ளார். இதனால் ஆழ்வாருடைய பிரபத்தி வாசிகம் என்று கொள்ளக் கடவதன்று.

நம்பிள்ளை அருளிச் செய்த ஈட்டு ஸ்ரீசூக்திகள்: இவர் (ஆழ்வார்) செய்த பிரபத்தியே நமக்கும் எல்லாம்; தனித்து வேண்டா...... நற்கன்றுக்கு இரங்கினது தோல் கன்றுக்கும் இரங்குமாப்போலே இவரை நினைத்து இப்பத்தும் கற்றார் பக்கலிலுல் ஈசுவரன் பிரசந்நனாம். விபீஷணாழ்வானோடு வந்த நால்வர்க்கும் அவன் செய்த சரணாகதியே அமைந்ததே அன்றோ?

**பிற பாசுரங்கள்:** இந்த இரண்டு பதிகங்களைத் தவிர பிற பாசுரங்களில் வேங்கடம் எம்பெருமானது இருப்பிடம் என்று குறிப்பிட்டதைத் தவிர வேறு சிறப்பு இல்லை.

இங்ஙனம் சடகோபரின் செந்தமிழை அநுசந்திக்கும் போக்கில் திருமலையப்பனை அநுபவித்து மகிழ்கின் றோம்.

# 13. திவ்விய கவி காட்டும் திருமலைக் காட்சிகள்

புண்ணியத்தின் புகலிதெனப்
புகழும் வெற்பு;
பொன்னுலகிற் போகமெலாம்
புணர்க்கும் வெற்பு;
விண்ணவரும் மண்ணவரும்
விரும்பும் வெற்பு;
வேங்கடவெற் பெனவிளக்கும்
வேத வெற்பே.

—தே.பி. 82

என்று திருமலையின் புகழ் பாடுவர் வேதாந்த தேசிகர். அசித்தும் எம்பெருமான் படைப்பாதலால் அதுவும் வழிபாட்டிற்குரியது.

சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே.

—திருவாய் 3.3:8

---

* திருமலை - திருப்பதி தேவஸ்தானம் வெளியிடும் 'சப்தகிரியில்' (அக்டோபர் 1985) வெளிவந்தது.

என்ற நம்மாழ்வாரின் பாசுரம் இக் கருத்திற்கு அரண் செய்வதாக அமைகின்றது. அழகு கொழிக்கும் இடங்களில்தான் ஆண்டவன் கோயில் கொண்டு எழுந்தருள்வான் என்பதற்குத் திருமலை ஒரு பெரிய சான்றாகும். கார்காலம் நிறைவு பெற்று முன்பனிக் காலத்தில் திருமலையைச் சேவித்தால் இந்த அழகை-இயற்கை எழிலைக் கண்டு களிக்கலாம். நாம் ஊனக் கண்ணால் காணும் காட்சிகளையே கவிஞர்கள் இரசவாதம் செய்து நம் மனக்கண்ணுக்கு அற்புதமாக காட்டுவர். அலாவுத்தீன் என்ற சிறுவனை மந்திரவாதி ஒருவர் மந்திர விளக்கைக் கொண்டு பல அற்புதமான காட்சிகளைக் காணச் செய்ததாகக் கதைகளில் படித்துள்ளோம். 'திவ்விய கவி' என்று போற்றப்பெறும் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் நம்மைத் திருமலைக்கு இட்டுச் சென்று இத்தகைய காட்சிகளைக் காட்டுகின்றார்.

என்கண்ணை மறந்துன் இரு கண்களையே
என்னகத்தில் இசைத்துக் கொண்டு
நின்கண்ணால் புவியெல்லாம் நீயெனவே
நான்கண்டு நிறைவு கொண்டு

—பா. க. கோவிந்தன் பாட்டு-3

என்று பாரதியாருக்குக் கோவிந்தன் பிரபஞ்சத்தைக் காட்டி 'தானே இப்பிரபஞ்சம்' என்று உணர்த்துவது போலவே, பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் தம்முடைய 'கவித்துவம்' என்ற மந்திர ஆற்றலால் நாம் ஊனக் கண்ணால் காணும் காட்சிகளையே நம் மனக்கண்ணுக்கு வேறு விதமாகத் தோன்றச் செய்து நம்மை மகிழ்விக்கின்றார். இனி, அவர் காட்டும் காட்சிகளை ஒவ்வொன்றாகக் காண்போம்.

வேங்கடமலை விண்ணோருக்கும் மண்ணோருக்கும் எளிதில் அடையக் கூடியவாறு அமைந்துள்ளது என்று

அதன் உயர்ச்சியைக் கூறும்போது இக்காட்சிகள் தாமாக எழுகின்றன.

துய்ய செம்பொற் கோயிற்
சுடரெறிப்பக் கண்முகிழ்த்து
வெய்யவன்தேர் மா இடறும்
வேங்கடமே
—திருவே. மாலை. 8

[துய்ய-சுத்தமான; சுடர்-ஒளி; எறிப்ப-வீசுதலால்; மா-குதிரை]

என்பதுடன் காட்சி தொடங்குகின்றது. 'திருக்கோயிலின் விமானம் பொன் மயமானது. அதன் சுடர் எம்மருங்கும் வீசி நிற்பதால் வெய்யோனின் தேரில் கட்டிய குதிரைகளின் கண்கள் கூச்சமடைந்து கண்விழிக்க மாட்டாமல் கால்கள் இடறுகின்றன' என்கின்றார். இதுவே மலையின் உயர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

**இராசிகளின் காட்சிகள்:** பன்னிரண்டு இராசிகளில் மேடம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், தனுசு, மகரம், கும்பம், மீனம் ஆகிய ஒன்பது இராசிகளை மலையின் உயர்வோடு பொருத்திக் காட்டும் கவிஞரின் மந்திர ஆற்றலைக் கண்டு வியக்கின்றோம்.

வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறுக்கும் வேங்கடமே (16)

[வரி உழுவை-வரிப்புலி; வாலாட்டுதல்-சினக் குறிப்பு; மேடம்-ஆடு; உறுக்கும்-கோபிக்கும்]

திருமலைச் சாரலில் பசியுடன் புலியொன்று திரிந்து கொண்டுள்ளது. அது வானத்தில் ஆட்டுக்கிடா வடிவுள்ள மேடராசியைப் பார்த்துச் சீறுகின்றது. 'மேடத்தைப் பார்த்திருக்கும் வேங்கடமே' என்ற பாடத்திற்குப் புலியா

னது தன் உணவிற்கும் வலிமைக்கும் தகுந்ததாகிய எருது வடிவுள்ள இடபராசியை எதிர் நோக்கிக் கொண்டு அவ்வகை வலிமை இல்லாத மேடராசியைக் கண்டு வெறுத்திருக்கின்றது என்றும் பொருள் கொள்ளலாம்.

மலையில் குரங்குகள் குதித்து விளையாடிக் கொண்டுள்ளன. 'மந்திபாய் வடவேங்கடம்' அல்லவா? அவை குளிர்ச்சியான மலை முகட்டில் நண்டு வடிவமான கடக ராசி பொருந்தி வரக் கண்டு அஞ்சியோடுகின்றன. இக் காட்சியைத் திவ்விய கவி,

தாவிவரும் வானரங்கள் தண்குவட்டில் கற்கடகம்
மேவிவரக் கண்டோடும் வேங்கடமே (17)

[குவடு-சிகரம்; மேவி-பொருந்தி]

என்று நமக்குக் காட்டுவர். அடுத்து யானைகளின் ஊடல் காட்சி ஒன்று வருகின்றது. மருத நில உரிப்பொருள் குறிஞ்சி நிலத்துக்கு உரிய கருப் பொருளிடம் காணப்படுகின்றது. பிடி களிற்றினிடத்து ஏதோ ஒரு குற்றத்தைக்கற்பித்துக் கொண்டு அதன் காரணமாக அதனிடம் வெறுப்புக் காட்டி ஊடி நிற்கின்றது. இது வானத்தில் தற்செயலாகச் சிங்க வடிவமான சிம்ம ராசியைக் கண்ணுறுகின்றது. கண்டதும் அஞ்சி அந்த அச்சமிகுதியினால் ஊடலை மறந்து தானே ஓடி ஆண் யானையைப் பற்றுக் கோடாகக் கொண்டு அதனைத் தழுவுகின்றது.

ஒண்சிந்து ரத்தைவெறுத் தூடும் பிடிவேழங்
விண்சிங்கம் கண்டணைக்கும் வேங்கடமே (18)

[சிந்துரம்-ஆண்யானை; ஊடும்-பிணங்கும்; பிடி வேழம்-பெண் யானை].

என்பது கவிஞரின் சொல்லோவியம்.

அடுத்து, 'கழைக் கூத்து' ஒன்றைக் காட்டுகின்றார் திவ்விய கவி. மலையின்மீது ஓங்கி வளர்ந்துள்ள மூங்கிலுக்கு நேராக பெண் வடிவமான கன்னி இராசி வருகின்றது. இக்காட்சி கழைக் கூத்திபோல் தோற்றம் அளிக்கின்றது.

மாதுமடக் கன்னிகழை வந்தணுகிக் கம்பத்தின்
மீதுநடிப் பாளொக்கும் வேங்கடமே (19)

[மாது-அழகு; கன்னி-இளம் பெண்; கழை-மூங்கில்; கம்பம்-நாட்டியக் கழைக்கோல்]

என்பது அய்யங்காரின் சொல்லோவியம். இஃது ஓர் அற்புதமான காட்சி.

மூங்கிலின் வளத்தைக் கொண்டு இன்னொரு அற்புதமான காட்சியை மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றார் திவ்விய கவி. ஒரு மூங்கில் ஓங்கி வளர்ந்து நிற்கின்றது. அதற்கு நேராகச் சுறா மீன் வடிவமான மகர ராசி வந்து தங்கும்போது அது மன்மதனது கொடிமரம் போல் காட்சியளிக்கின்றது.

தேன்ஏறித் தேன்வைக்கும் திண்கழைமேல் விண்மகரம்
மீன்ஏறி வேள்கொடியாம் வேங்கடமே (22)

[தேன்-வண்டுகள்; தேன்-தேன் கூடு; திண்கழை-வலிய மூங்கில்; மகரம்-மகர ராசி]

என்று காட்டுவர்; மன்மதன் சுறாமீன் வடிவத்தைக் கொண்ட கொடியை உடையவன்; அதனால் அவனுக்கு வடமொழியில் 'மகரத்வஜன்' என்றும் தென்மொழியால் 'சுறவக் கொடியோன்' என்றும் பெயர்கள் உண்டு.

மலைக் குறவர்கள் இரத்தின வாணிகம் நடத்துவது அற்புதம். வானத்தில் நிறைகோல் வடிவமான துலாராசி

காணப்படுகின்றது. அதைக்கொண்டு தாம் சேகரித்து வைத்திருக்கும் பிரகாசிக்கின்ற இரத்தினக் கற்களை வைத்து எடை காண்கின்றார்.

மன்னு குடிக்குறவர் வானூர் துலாத்திடையே
மின்னு மணிநிறுக்கும் வேங்கடமே (20)

[மன்னு-நிலை பெற்ற; வான் ஊர்-வானத்தில் செல்லுகின்ற; மணி-இரத்தினம்]

என்பது திவ்வியகவி காட்டும் சொல்லோவியம். இந்தக் குறவர்களைப் பற்றிய இன்னொரு காட்சி: தினைப் புனத்தைக் காக்கின்ற குறவர்கள் தண் மதியில் களங்கத் தோற்றமாக இலங்கும் மான் வடிவத்தைக் காண்கின்றனர். அதனைத் தினைப் புனத்தை மேயவரும் மான் எனக் கருதுகின்றனர். உடனே வானத்தில் வில் வடிவாகக் காணப்பெறும் தனுர் இராசியைக் கை வில்லாகக் கொண்டு அம்பு எய்ய முயலுகின்றனர்.

கொல்லைக் குறவர் குளிர்மதிமா னைக்ககன
வில்லைக் குனித்தெய்யும் வேங்கடமே (21)

[ககனம்-வானம்; வில்-தனுர் இராசி]

என்பது திவ்விய கவியின் சொல்லோவியம். அம்புலியில் வாழும் மான் வேங்கடமலையில் அதிரும் குரலையும் திறந்த வாயையும் கொண்ட வெம்புலியைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றது. இதனை,

அம்புலியின் வாழ்மான் அதிருங் குரற்பகுவாய்,
வெம்புலியைக் கண்டேங்கும் வேங்கடமே (22)

[அம்புலி-சந்திரன்; பகுவாய்-திறந்தவாய்]

என்ற திவ்விய கவியின் சொல்லோவியத்தில் கண்டு மகிழலாம்.

திருவேங்கடமலையில் ஓங்கி வளர்ந்துள்ள மரக் கொம்பொன்றில் தேன் கூடு கட்டப்பெற்றுள்ளது. வானத்தில் செல்லுகின்ற பிறைச் சந்திரனது வளைந்த வடிவமான கொம்பு அத்தேனிறாலில் பட்டு அது உடைகின்றது. அதிலிருந்து ஒழுகும் தேன் வானத்திலுள்ள அதற்கு நேராகக் கீழே வந்து பொருந்தும் குடவடிவமான கும்பராசியில் நிறைகின்றது.

ஒண்கொம்பிற் தேன்இறால்
ஊர்பிறைக் கேட்டாலுடைந்து
விண்கும்பம் வாய்நிறைக்கும்
வேங்கடமே (23)

[கொம்பு-கிளை; இறால்-தேன்கூடு; கோடு-வளைந்த வடிவம்]

கற்பனை அற்புதம். திருவேங்கட மலையிலுள்ள மரக் கொம்பு கும்பராசிக்கு மேலுள்ள தென்றும், அதன்மீது பிறைமதி படப்பெறுவது என்றும் கூறியதனால் மலையின் உயர்வையும் மலைவளத்தையும் காட்டிய படியாகும் இது.

திருமலையில் திருக்கோயிலுக்கு அருகிலுள்ள கோனேரியில் கூனலிள வெண் குருகு ஒன்று 'ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்' காத்திருக்கின்றது. விண்ணில் செல்லும் மீன இராசியின் வடிவம் நீரில் தெரியக் கண்டு அதனை உண்மையான மீன் என்று கருதிக் கொத்துகின்றது; ஏமாந்து போகின்றது.

இங்ஙனம் இராசி மண்டலக் காட்சிகளைக் காட்டியவர் நம்மை விண்மீன் மண்டலத்திற்கு இட்டுச் செல்லுகின்றார்.

**விண்மீன் மண்டலக் காட்சிகள்:** திருமலையில் ஆண் குரங்கு (கடுவன்) பெண் குரங்கு (மந்தி)ன்மாக இரண்டு குரங்குகள். 'மண் மூலம் தா' என்று மந்தி கடுவனைக் கேட்கின்றது; அதாவது மண்ணிலிருக்கும் கிழங்கை உண்ணுவதற்குப் பெயர்த்தெடுத்துத் தருமாறு கேட்கின்றது உடனே வானத்திலுள்ள மூலம் என்ற நட்சத்திரம் (விண் மூலம்) அதனைச் செவி மடுத்து தன்னைப் பிடித்துச் கொடுக்கச் சொன்னதாகக் கருதி அஞ்சி நடுங்குகின்றது.

மண்மூலம் தாஎன்று மந்திகடு வற்குரைப்ப
விண்மூலம் கேட்டேங்கும் வேங்கடமே (25)

[மண்மூலம்-கிழங்கு; விண்மூலம்-மூல நட்சத்திரம்]

என்பது திவ்விய கவியின் சொல்லோவியம். இந்த வருணனையில் அம்மலை நட்சத்திர வீதிக்கு அருகில் உள்ளபடியையும், அம்மலைக் குரங்கு தேவ கணமும் அஞ்சத் தக்க வலிமையுடைய தென்பதும் தெளிவாகும்.

திருவேங்கடமலையில் தொங்கவிடப் பெற்ற பொன்னாலாகிய ஊஞ்சலிலிருந்து கொண்டு மகளிர் உந்தி உந்தித் தள்ளி விளையாடுகின்றனர். அந்த ஊஞ்சல் அவிட்ட நட்சத்திரத்தில் படுங்கால் அங்கு அம்மகளிர் இறங்குகின்றனர்.

நாலவிட்ட பொன்னூசல் நன்னுதலார் உந்துதொறும்
மேலவிட்ட தொட்டிழியும் வேங்கடமே (26)

[நாலவிட்ட-தொங்கவிடப்பட்டுள்ள; நுதல்-நெற்றி; இழியும்-இறங்கும்]

என்பது கவிஞர் காட்டும் காட்சி.

**வேறு சில காட்சிகள்:** வேங்கடமலையின் உயர்ச்சியைக் காட்டும் போக்கில் வேறு சிலவற்றையும் வருணித்துக் காட்டுவர் திவ்விய கவி. வேங்கட மலையில் மண்டிக் கிடக்கும் உயர்ந்த சாதி மூங்கில்கள் முற்றி வெடித்தலால், அவற்றினின்றும் சிதறும் முத்துகள் மேகத்தைத் தொளை செய்து அம்மேகத்தினின்றும் வெளிப்படுகின்ற மழை நீர்க்கட்டிகளுடன் கீழே விழுகின்றன (33). அம்மலையின் மீது வானுற ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில் அவண் காணப் பெறும் இந்திர வில்லில் தொடுத்தற்கு அமைந்த அம்பு போல் காணப்பெறுகின்றது.

> செல்லுக்கு மேற்செல்லும் திண்ணியவேய் வாசவனார்
> வில்லுக்கு வாளியாம் வேங்கடமே (34)
>
> [செல்-மேகம்; வேய்-மூங்கில்: வாசவனார் வில்-இந்திர தனுசு; வாளி-அம்பு]

என்பர் அய்யங்கார். அந்த மூங்கிலின் உச்சியில் கட்டப் பெற்ற தேன் இறால் உம்பருலகத்து நிலைக்கண்ணாடி போல் திகழ்கின்றது (36). உம்பருலகின் ஐவகைக் கற்ப கத்தருக்களில் கட்டப் பெற்ற செவ்விய தேன்இறால் மலையின்மீது வரையாடு தாவிப் பாய்வதால் கிழிந்து தேனைச் சொட்டுகின்றது (40). இதனால் திருமலையின் உயர்ச்சியும் ஆட்டின் கொழுமையும் தெளியப்படுகின்றன. பாக்கு மரங்களைப் பற்றிய வருணனை பாங்குற அமைந்து படிப்போரின் கவனத்தை ஈர்ப்பதை எடுத்துக் காட்டுவர் திவ்விய கவி.

> பொன்கமழும் கற்பகத்தின் பூங்காவணத்துக்கு
> மென்கமுகம் காலாகும் வேங்கடமே (35)
>
> [பூ காவணம்-கற்பகச் சோலையாகிய பந்தல்; கமுகம்-பாக்கு]

என்பது கவிஞரின் சொல்லோவியம்

விண்ணை முத்தமிடும்படி வளர்ந்துள்ள பாக்கு மரங்கள் உம்பருலகத்துக் கற்பகச் சோலையாகிய பந்த லுக்கு நாட்டப்பெற்ற அழகிய கால்கள்போல் காட்சிய ளிக்கின்றன. அப் பாக்கு மரத்தில் வெடித்த நிலையிலுள்ள வெண்ணிறப் பாளைகள் வெங்கதிரோனுக்கு அசைக்கப் பெறும் வெண்கவரிபோல் காட்சி அளிக்கின்றன.

தண்கமுகின் பாளை தடங்கதிரின் செல்வனுக்கு
வெண்கவரி போலசையும் வேங்கடமே (37)

[கதிரின் செல்வன்-சூரியன்]

என்பர் திவ்வியகவி. முழுமதியம் வானத்தில் இறுமாந்து உலவுகின்றது. அப்பொழுது அருகில் செல்லும் மத யானையொன்று அத்திங்களை இனிய பாலில் கலந்த உணவுத் திரளை - தீம்பாற்கவளம் - என்று கருதி துதிக்கையை நீட்டிய வண்ணம் உள்ளது (31).

**மேலும் சில காட்சிகள் :** திவ்விய கவி மேலும் பல இடங்கட்கு இட்டுச் சென்று பல்வேறு காட்சிகளைக் காட்டுவார். திருமலையிலுள்ள தென்னை மரத்தில் வெண்மையான பாளை மலர்ந்து கிடக்கின்றது சுனை நீரிலுள்ள மீன் கூட்டங்கள் அதனைக் கொக்கு என்று கருதி நீரினுள் அஞ்சி மறைகின்றன (27). தென்னை மரத்தினின்று இளநீர்க் காய்கள் கீழே வீழ்தலால் அம்மலையிலுள்ள இரத்தினங்கள் சிதறுகின்றன. செந் நிறமுள்ள அவற்றை நெருப்பென்று கருதி யானைகள் விலகிச் செல்லுகின்றன (29). வேங்கடகிரியில் மேகங்கள் இடி முழக்கம் செய்கின்றன. அம்முழக்கத்தை மத யானை யின் பிளிறல்கள் என்று கருதி அவ்யானைகளை விழுங்கு வதற்கு மலைப் பாம்புகள் வாயைத் திறந்த வண்ணம் காத்திருக்கின்றன

அங்கயலின் மேகம் அதிரப் பெரும்பாந்தள்
வெங்கயம் என்று அங்காக்கும் வேங்கடமே (30)

[அயல்-அருகில்; பாந்தள்-மலைப் பாம்பு; வெங் கயம்-வெவ்விய மத யானைகள்! அங்காத்தல்-வாய் திறத்தல்]

என்ற அடிகளில் இக்காட்சியினைக் காட்டுவார் கவிஞர்.

தேவர்களும் குறிஞ்சி நிலத்துக் குறத்தியரும் அமிர்தத்தையும், குறிஞ்சித் தேனையும் பண்டமாற்றுதல் செய்து கொள்ளுகின்றனர்.

வன்குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு
மென்குறிஞ்சித் தேன்மாறும் வேங்கடமே (41)

[வன்குறிஞ்சிமாதர்—குறத்தியர்; வானோர் மருந்து-தேவாமிருதம்]

என்பதில் இக்காட்சியினைக் காணலாம். இதனால் உம்பருலகத்துக்கருதில் திருமலை உள்ளதென்பதும், தேவர்களின் நடமாட்டம் இம்மலையில் நிகழ்கின்றது என்பதும் உம்பர் உலக அமிர்தத்தினும் வேங்கடமலைத்தேன் இனிது என்பதும் அறியக் கிடக்கின்றன.

இன்னோர் இனிய அழகிய காட்சி: திருமலையில் பெண் குரங் கொன்று மாமரத்தில் பழுத்துத் தொங்கும் தேமாங்கனி யொன்றினைக் கையில் கொண்டு தாவிச் செல்கின்றது. இதனை உம்பருலகில் கற்பகத் தருவில் அமர்ந்திருக்கும் ஆண் குரங்கு அக்கனியைத் தனக்குத் தருமாறு கையை நீட்டுகின்றது.

வாவுகவின் மந்திநுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்
மேவுகவி கைநீட்டும் வேங்கடமே (42)

[வாவு-தாவிச்செல்லும்; கவின்-அழகிய; மேவு-பொருந்திய; கவி-ஆண் குரங்கு]

என்ற அடிகளில் இக்காட்சியைக் காட்டுவார் கவிஞர். இதனால் கற்பகக் காவில் கிடைக்கும் கனிகளிலும் திருமலையில் காணப்படும் கனி சுவையில் இனியது என்ற கருத்து தோன்றுகின்றது.

திருமலையில் மலர்களைக் கொண்டு காட்டப்பெறும் காட்சி மனத்தினை மாண்புறுத்துகின்றது. கொன்றை மரங்கள் சொரியும் பொன்மலர்கள் காந்தள் மலர்களின் மீது விழுகின்றன. இக்காட்சி ஈகைக்குணமுடைய வேந்தன் இரவலர் கையில் பொன்னைச் சொரிவதுபோல் உள்ளது என்று கூறுவார் கவிஞர் (45). செந்நிறமான பதுமராகக் கல்லைச் சுற்றிக் கொண்டு இருக்கும் மலைப் பாம்பு பகலவனைச் சுற்றிக் காணப்பெறும் ஊர்கோள் வட்டம் போல் காட்சியளிப்பதைக் காட்டுவார் (47). குறவர்கள் யானையின்மீது மாணிக்கக் கற்களை வீசி எறிகின்றனர். அவைமுகிலினிடையில் காணப்பெறும் மின்வெட்டுப்போல திகழ்கின்றன (46). மாணிக்கப் பாறையின்மீது தாவிப் பாயும் குரங்குகள் செங்கதிரோன் மண்டலத்தின் மீது பாயும் மாருதிபோல் தோன்றுகின்றன (48). திருமலையின் மீதுள்ள வெண்ணிறமான பளிங்குப்பாறையில் உறங்கும் மான் திங்கள் மண்டிலத்தின் நடுவில் காணப்பெறும் மானை ஒத்துள்ளது.

கொம்பின் இறால் வாங்கநிமிர்
குஞ்சரக்கை அம்புலிமேல்
வெம்பியெழும் கோள்அரவாம்
வேங்கடமே (49)

[கொம்பு-கிளை; இறால்-தேனடை; குஞ்சரம்-யானை; வெம்பி-சினந்து; கோளரவு-இராகு]

என்ற அடிகளில் காட்டப் பெறும் காட்சி நம் சிந்தையைக் கவர்வதாகவே உள்ளது. மரக்கொம்பில் தொங்கும் தேனிறாலைக் கவர்வதற்குக் கை நீட்டுகின்றது கானில் திரியும் வேழம். அக்காட்சி திங்களைப் பற்றுவதற்கு அதன்மீது கறுக்கொண்டு எழும் இராகு என்னும் கரும் பாம்புபோல் தோன்றுகின்றது. இங்ஙனம் காட்சிகளைத் தலைக்கட்டுகின்றார் திவ்வியகவி.

இயற்கைப் பொருள்கள் இன்பமயமான சமாதியில் அடங்கிக் கிடக்கின்றன. அவற்றின் சமாதியைக் கலைக்கா மலிருப்பதே அறம். அந்தச் சமாதியில் நாம் கலந்து கொள்ள முயலவேண்டும். கலந்து கொள்ளும் இயல்புடை யவனே கவிஞன். அவன் இயற்கையோடு பழகுவதில் திறன் வாய்ந்தவன். கவிஞன் இயற்கையை அதன் இன்ப சமாதி கலையாமல் தழுவுகின்றான். அவன் அநுபவித்த இன்பப் பெருக்கில் ஒன்றிரண்டு திவலைகள் அவன் பாடிய பாடல்களில் சொட்டும். அதைப் பார்த்தே நாம் 'கலை கள், கலைகள்' என்று கொண்டாடுகின்றோம். திவ்விய கவியின் இன்பப் பெருக்கின் ஒன்றிரண்டு திவலைகளே அப்பெருமகன் காட்டும் திருமலைக் காட்சிகள்.

# 14. திவ்விய கவியின் கருத்தில் வேங்கடவாணன்

வைணவ தத்துவப்படி எம்பெருமானின் திருமேனி **'திவ்விய மங்கள விக்கிரகம்'** என்று வழங்கப்படும். அந்தத் திருமேனியில் சேதநம், அசேதநம் என்ற தத்துவங்கள் அனைத்தும் எம்பெருமானின் ஆபரணங்களாகவும் ஆயுதங்களாகவும் இருக்கும். இதனை வைணவதத்துவம் **சரீர-சரீரி பாவனை** என்று பேசும். தத்துவங்கள் எம்பெருமானின் திருமேனியில் நிற்கும் நிலையை,

> புருடன்மணி வரமாகப் பொன்றா மூலப்
> பிரகிருதி மறுவாக மான்தண் டாகத்
> தெருள்மருள்வாள் உறையாக ஆங்கா ரங்கள்
> சார்ங்கம்சங் காகமனம் திகிரி யாக
> இருடிகங்கள் ஈரைந்தும் சரங்க ளாக
> இருபூத மாலைவன மாலை யாகக்
> கருடனுரு வாம்மறையின் பொருளாய் கண்ணன்[1]

என்று வேதாந்த தேசிகர் விளக்குவர். வேதம் கருடனுடைய உடலாய் உள்ளது. அந்த வேதத்தின் பொருளாய் விளங்குபவன் எம்பெருமான். இவனுடைய திரு

1. தே.பி.80

மேனியில் சீவான்மா இரத்தினங்களுள் சிறந்த கௌத்துவ மாகவும், அழியாத மூலப்பிரகிருதி ஸ்ரீவத்சம் என்னும் மறுவாகவும், மான் என்னும் தத்துவம் கௌமோதகி என்னும் கதையாகவும், ஞானம் என்னும் தத்துவம் நாந்தகம் என்னும் வாளாகவும், தாமச அகங்காரம், சாத்துவிக அகங்காரம் முறையே சார்ங்கம் என்னும் வில்லாகவும், பாஞ்சசந்யம் என்னும், திருச்சங்காகவும், மனம் சுதர்சனம் என்னும் திருவாழியாகவும், ஞானேந்திரி யங்கள் ஐந்தும் கருமேந்திரியங்கள் ஐந்தும் ஆகிய இந்திரி யங்கள் பத்தும் அம்புகளாகவும், தந்மாத்திரங்கள் ஐந்தும் பூதங்கள் ஐந்தும் வனமாலையாகவும் இங்ஙனம் எல்லாத் தத்துவங்களும் எம்பெருமானுக்கு ஆபரணமாக வும் ஆயுதங்களாகவும் திகழும் என்பர் வேதாந்த தேசிகர்.

**திருவடியின் சிறப்பு :** திருவள்ளுவர் முதலாக ஆழ்வார்கள் வரை அனைவரும் எம்பெருமானின் இணை யடிகளைச் சிறப்பித்துப் பேசுவர்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார் (10)

என்பர் வள்ளுவப் பெருந்தகை. இந்தக் கூற்றுக்கொப்பச் சரணம் அடைகின்ற உயிர்கட் கெல்லாம் உய்யத் துணையாயிருப்பது எம்பெருமானின் திருவடியாகும்.

''சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந்
துறை ப்ரஜை முலையிலே வாய்
வைக்குமாப் போலே''

[சேஷி - இறைவன்; சேஷபூதன் - சீவான்மா; ப்ரஜை-குழந்தை]

என்ற முமுட்சுப்படி வாக்கியமும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. பாலுண்ணும் பச்சைக் குழவி எங்ஙனம் அன்னையின் உறுப்புகள் யாவையும் விட்டு, தான் உயிர் வாழ்வதற்கு இடனாய் உள்ள அவள் கொங்கையிலே வாய் வைக்கின்றதோ, அங்ஙனமே சேஷியாகின்ற ஈசுவரனைப் பற்றப் புகும் சேஷபூதனும் எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டுத் தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான் என்பது இவண் குறிப்பிட்ட வாக்கியத்தின் பொருளாகும். குழந்தை தாயின் முலையில் வாய் வைப்பது குழந்தையின் இயல்பாக இருப்பதைப் போலவே, இறைவன் திருவடிகளில் இழிவது சேதநனின் தன்மைக்கு இயல்பாக அமைந்திருக்கும் என்பது சிந்திக்கத் தக்கது. இக்கருத்தை உள்ளத்தில் அமைத்துக் கொண்டு,

தாயின் மெய்யின் உறுப்புக்கள்
தனியாய் பலவும் இருக்கையிலே
பாயும் குழவி மார்பகத்தில்
பாலினை மகிழ்ந்து பருகுதல்போல்
மாயன் உன்றன் நீள்கழலை
மகிழ்ந்து வணங்கும் சமதர்மன்
நேயத் திருவடி மாலைதனை
நிதம்கற் போர்நின் அருள்பெறுவர்[2] (101)

என்று பாடலை உருவாக்கி மகிழ்வார் சமதர்மன் என்னும் கவிஞர். இந்தக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அந்தாதியின் உறுப்பாக 'பாதவகுப்பு'

2. கவிஞர் சமதர்மன்: **திருவேங்கடவன் திருவடி மாலை** [ஸ்ரீ வித்யாலட்சுமி பதிப்பகம், 564, பெரியார் ஈ. வெ. ரா. நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை - 600 106.]

எழுந்திருக்க வேண்டும் என்று கருதுவதற்கு இடம் உண்டு திவ்விய கவி **'திருவேங்கடத் தந்தாதி'** என்ற தமது நூலில் இந்த உறுப்பாக,

> திருவேங் கடத்து நிலைபெற்று
> நின்றன சிற்றன்னையால்
> திருவேங் கடத்துத் தரைமேல்
> நடந்தன தாழ்பிறப்பின்
> உருவேங் கடத்துக் குளத்தே
> யிருந்தன; வுற்றழைக்க
> வருவேங்கடத்தும் பியலஞ்சலென்
> றோடினம் மால்கழலே (1)

[சிற்றன்னை-கைகேயி; தரு வேம்-மரங்கள் வேகப் பெறும்; கடத்து-கடுஞ் சுரத்திலுள்ள; தாழ் பிறப்பு-இழிந்த பிறப்பு; உருவேங்கள்-வடிவங் தையுடைய எங்களது; தத்துக்கு-ஆபத்தை நீக்கு தற் பொருட்டு; உற்று-துன்பமுற்று; கடம்-மதத் தையுடைய; தும்பி-யானை; மால்-திருமால்; கழல்-திருவடிகள்]

என்ற பாடலில் அமைத்துத் திருவடியின் ஏற்றத்தை எடுத்துக் கூறினர்.

இதில் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித் துவம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளில் நான்கு நிலைகள் கூறப்பெற்றிருத்தல் கண்டு மகிழத் தக்கது. திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன என்றதில் **அர்ச்சாவதாரம்** கூறப்பெற்றிருத்தலைக் காணலாம்; எம்பெருமான் விக்கிரகத்தில் ஆவிர்ப்பவித்திருத்தலையும் உணர்த்து கின்றது. 'தருவேங்கடத்துத் தரைமேல் நடந்தன' என்றது **விபவத்தை:** அஃதாவது அவதாரத்தை; இமைகிருஷ்ணாதி அவதாரங்களை. 'தாழ் பிறப்பின் உருவேங்கள் தத்துக்கு உளத்தே இருந்தன' என்றது **அந்தர்யாமித்துவத்தை;** அது

நிலைத்திணை இயங்குதிணைப் பொருள்கள் எல்லாவற்றி னுள்ளும் எள்ளினுள் எண்ணெய்போல் மறைந்து இருத்த லையும், அடியார்கள் உள்ளத்தில் வீற்றிருத்தலையும் குறிக் கின்றது. 'உற்று அழைக்க வரும் வேங்கடத்தும்பி அஞ்சல் என்றோடினம் மால் கழல்' என்பது **பரத்துவத்துடன்** சௌலப்பியத்தையும் காட்டும். பரமபதத்தில் எழுந்தருளி யிருக்கும் நிலையே பரத்துவம் என்பது; அந்த நிலையி லுள்ள எம்பெருமானையே யானை அரசு 'ஆதிமூலமே' என்று ஓலமிட்டழைத்தது. எம்பெருமானும் தனது பரத்துவ நிலையை மறந்து தனது பேரருளினால் அரை குலையத் தலைகுலைய யானை இருந்த மடுக்கரைக்கே வந்து உதவினன். இந்த சௌலப்பிய மகாகுணத்தில் ஈடுபட்டே மேற்கூறியவாறு உணர்த்தினார் அய்யங்கார்.

மற்றொரு பாடலின்,

பொருதரங் கத்தும் வடத்தும் அனந்தபுரத் தும்அன்பர்
கருதரங் கத்தும்துயில் வேங்கடவ! (9)

> [தரங்கம்-அலை; பொருதரங்கம்-திருப்பாற்கடல்; வடம்-ஆலிலை; அன்பர் கருதும் அரங்கம்-திரு அரங்கம்]!

என்ற பகுதியில் திருப்பாற்கடலில் இறைவனின் நிலையைக் கூறியிருப்பது **வியூக நிலையாகும்.**

பல பாடல்களில் திருவேங்கடமுடையானின் பெருமை நுவலப் பெறுகின்றது.

சித்திக்குவித் ததுவோ இதுவோஎன்று
  தேடிப் பொய்ந்நூல்
கத்திக்குவித்பல் புத்த கத்தீர்!
  கட்டுரைக்க வம்மின்
அத்திக்குவித்தனையும் உண்ட

வேங்கடத் தச்சுதனே
முக்திக்கு வித்தகன் என்றே
சுருதி முறையிடுமே (33).

[சித்திக்கு-வீடுபேற்றுக்கு; வித்து-மூலம்; பொய்ந் நூல்-பரசமய நூல்; கத்தி-கதறிப் படித்து; கட்டுரைக்க-உறுதியாகச் சொல்ல; அத்தி-நீர்; சூ-சூழ்ந்த; சுருதி-வேதம்]

வீடுபேற்றினை அளிக்க வல்லவன் திருமலையில் எழுந்தருளியிருக்கும் திருமாலே என்று திருமறைகள் வற்புறுத்திக் கூறும் என்பதை உறுதியாகக் கூறுவர் திவ்விய கவி.

பரந்த தெய்வமும் பல்லுலகும்
படைத்தன்று உடனேவிழுங்கி
கரந்து உமிழ்ந்து கடந்துஇடந்த(து)
கண்டும் தெளியகில்லீர்;
சிரங்களால் அமரர் வணங்கும்
திருக்குரு கூர தனுள்
பரன்திறம் அன்றிப்பல் உலகீர்!தெய்வம்
மற்றில்லை பேசுமினே[3]

[கரந்து-மறைத்து; பரன்-மேலானவன்]

என்றாற் போன்ற ஆழ்வார் பாசுரங்களின் வாய்பாட்டைக் கொண்டது இத்திருப் பாடல். இங்ஙனம் ஆழ்வார்களின் பாசுரங்கள் திவ்வியகவியின் வாக்கில் செல்வாக்குப் பெற்றுத் திகழும் இடங்கள் எண்ணற்றவை.

வீடுபேற்றை விரும்புவோரைத் திருவேங்கடமுடையானின் திருவடிகளைத் தரிசிக்க வேண்டும் என்று மக்களைக் கூவி அழைக்கின்றார் திவ்விய கவி.

3. திருவாய் 4.10:3

உடுக்கும் உடைக்கும் உணவுக்கு
    மேயுழல்வீர்! இனநீர்
எடுக்கும் முடைக்கு ரம்பைக்
    கென்செய்வீர்? இழிமும்மதமும்
மிடுக்கும்உடைக்குஞ்சரம் தொட்டவேங்
    கடவெற்பர் அண்ட
அடுக்கும் உடைக்கும் அவரடி
    காண்மின் அனைவருமே (35)

[உழல்வீர்-அலைகின்றவர்களே; முடைக்கு ரம்பை-நாற்ற உடம்பு; இழி-ஒழுகுகின்ற; மிடுக்கு-வலிமை; குஞ்சரம்-யானை; அண்ட அடுக்கு-அண்டகோளங்களின் வரிசைகள்]

மூன்று வகை மதநீர்களையும் மிடுக்கையுமுடைய கசேந்திர அபயம் அளித்தவரும், சங்ககாலத்தில் அண்டகோளவரிசைகளையெல்லாம் அழிக்கவல்லவருமான வேங்கடவெற்பரின் திருவடிகளை தரிசித்தால் முக்தி பெறுவது உறுதி என்கின்றார். பிறிதொரு பாடலில் (94) திருவேங்கடமுடையானைத் துதிக்க வல்லார்க்கு எவ்விதத் துன்பங்களும் உளவாகா என்று கூறுவர். திருவேங்கடமுடையானை வணங்கியவர்கள் அடையும் பயன்களை நிரல்படப் பேசும் அய்யங்கார்,

ஏறுக டாவுவர்; அன்னங்க
    டாவுவர்; ஈரிருகோட(டு)
ஊறுக டாம்மழை ஓங்கல்
    கடாவுவர் (68)

[ஏறு-காளை; ஈர் இருகோடு-நான்கு தந்தங்கள்; கடாம் - மத நீர்; ஓங்கல் - மலைபோன்ற ஐராவதம்]

என்று உருத்திர பதவி, பிரம்ம பதவி, இந்திர பதவிகள் பெறலாம் என்கின்றார். திருவேங்கடமுடையானின் திருநாமங்கள் என்னென்ன தரும் என்பதனை,

துன்பம் களையும்; சனனம்
களையும்; தொலைவறும்பேர்
இன்பம் களையும் கதிகளையும்
தரும் (95)

[துன்பம்-கிலேசம்; சனனம்-பிறப்பு; களையும்-அழிக்கும்; தொலைவுஅறு-முடிவு இல்லாத; கதிகள்-பதவிகள்]

என்று பட்டியலிட்டுப் பரக்கப்பேசுகின்றார் அய்யங்கார். இதுகாறும் '**திருவேங்கட தந்தாதி**' என்ற நூலின்மூலம் சில கருத்துகள் தெரிவிக்கப்பெற்றன. இனி, '**திருவேங்கட மாலை**' என்ற நூலில் வரும் சில கருத்துகளைக் காண்போம்.

**திருவேங்கடமுடையானின் பெருமை:** 'திருவேங்கடமாலை' என்ற நூலிலுள்ள பாடல்களின் பின்னிரண்டடிகளில் திருவேங்கடமுடையானின் பெருமை பேசப்பெறுகின்றது. இதனைப் பல பகுதிகளாகப் பிரித்து விளக்குவோம்.

**எம்பெருமானின் இருப்பு:** எம்பெருமான் திருவுள்ளம் உவந்து தங்கியிருக்கும் இடம் நான்முகன் வாழ்கின்ற அண்டங்களுக்கும் மேலதாகவுள்ள பரமபதமாகும்.

—ஆணிநிறப்
பீதாம் பரனார் பிரமர்வாழ் அண்டங்கள்
மீதாம் பரனார் விருப்பு (5)

[ஆணிப் பொன்-மாற்றுக் குறைவற்ற பொன்; அம்பரம்-ஆடை; பரனார்-திருமால்; விருப்பு-உவந்து தங்கும் இடம்]

என்ற பாடலடிகளால் பரத்துவ நிலையிலுள்ள எம்பெருமானின் இருப்பிடம் தெரிகின்றது. இவ்விடத்தில் அண்டங்

கள் எண்ணற்றவை என்பதும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பரமன் உளன் என்பதும் அவ்வண்டங்கட்கெல்லாம் மேலுள்ளதுதான் 'பரமபதம்' என்பதும் அறியத்தக்கவை. அடுத்த பாடலிலும் (6) பரமபதம் 'அந்தரத்தான் சார்பு' என்று வலியுறுத்தப் பெறுகின்றது. இன்னொரு பாடலில்,

—வானேறித்
தீமுகனா கத்திருப்பார் சேவடிக்கா ளானவரைக்
காமுகனா கத்திருப்பார் காப்பு (22)

[வான்-பரமபதம்; நாகம்-ஆதிசேடன்; ஆள் ஆனவர்-அடிமைப்பட்டிருப்பவர்; திருப்பார்-செல்லவிடாதவர்; காப்பு-பாதுகாக்கும் இடம்].

என்ற அடிகளால் வைகுந்தத்தை இருப்பிடமாகவுள்ள எம்பெருமான் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கின்றான் என்பதைப் புலப்படுத்துகின்றார் அய்யங்கார்

**எம்பெருமானின் திருமேனி:** வைணவ தத்துவப்படி எம்பெருமானுக்கு உருவம் உண்டு என்பதும், அது 'திவ்விய மங்கள விக்கிரகம்' என்று வழங்கப்பெறும் என்பதும் நாம் அறிந்தவை. அவன் நீலமேகத்தின் நிறத்தையுடையவன் (12, 33). அவன் காயாம்பூவண்ணத்தனாகவும் சொல்லப் பெறுவான் —" புதுப் பூவை வண்ணத் தான்" (56). நான்முகன், சிவபெருமான் என்னும் இரு தேவர்களையும் தன் திருமேனியில் வைத்திருப்பவன்— ' போதன் சிவன் என்னும் மற்றிருவர் அங்கத்தான்" (17). தன் கையில் கதை, வாள், அம்புகள் பொருந்திய வில், திருச்சங்கு, திருவாழி ஆகிய ஆயுதங்களைத் தாங்கியிருப்பவன் (72). 'அகலகில்லேன் இறையும்' என்று கூறும் அலர்மேல் மங்கையைத்—பெரிய பிராட்டியாரைத் — திருமார்பில் கொண்டிருப்பவன (39).

எம்பெருமானின் வியூகநிலை ஒரு பாடலில் காட்டப் பெறுகின்றது.

வண்டுவரை நாட்டினான் மத்தாக வாரிதியுள்
பண்டுவரை நாட்டினான்...(37)

[வண்துவரை-வளப்பமுள்ள துவாரகை; வாரிதி-கடல்; பண்டு-முற்காலம்; வரை-மலை]

தேவர்களின் பொருட்டு மந்தர மலையைத் திருப்பாற்கடலில் மத்தாக இட்டுக் கடைந்து அமிர்தம் கொணர்ந்த செயல் இந்த அடிகளில் காட்டப் பெறுகின்றது. அன்னமாய் நின்று நான்முகனுக்கு அருமறைப் பொருளின் சாரத்தை விளக்கியருளினான் (21). இச்செயல்கள் வியூக நிலையிலிருந்து கொண்டு நடத்தியவை. அன்னமாக நின்று அருமறை உணர்த்திய செயல் ஆழ்வார் பெருமக்களாலும் உணர்த்தப் பெறுகின்றது (பெரி திரு. 11. 4:8). கண்ணனாகத் தேர்த்தட்டிலிருந்துகொண்டு காண்டீபனுக்குத் தத்துவ நூலை வெளியிட்டது விபவத்தில்(44).

எம்பெருமானின் விபவாவதாரச் செயல்கள் பல பாடல்களில் குறிப்பிடப்பெறுகின்றன. கண்ணனாக இருந்து வேய்ங்குழலூதி ஆநிரைகளைக் காத்தமை (9), குடமாடியமை (48) போன்ற செயல்களும்; இராமனாக வந்து அகலிகையின் சாபந்தீர்த்தமை (14), அநுமனை வாகனமாகக் கொண்டமை (33), சீதையுடன் பொருந்தியமை (38), அரக்கர்களை அழித்து வீடணனுக்குப் பட்டம் கட்டினமை (42) ஆகிய செயல்களும்; வாமன உருவத்தில் வந்து மூவடி மண்ணை இரந்தமை (40), சுக்கிரனது கண்ணைக் கெடுத்தமை (43) போன்ற செயல்களும் இந்த நூலாசிரியர் காட்டுபவை; இவை அவருக்கு இறையநுபவம் பெற ஊன்றுகோலாக துணை புரிபவை.

ஆழ்வார்களின் பாசுரங்களனைத்தும் எம்பெருமானால் அர்ச்சை வடிவிலிருந்து ஏற்றுக்கொள்ளப் பெற்றவை என்பதை நாம் அறிவோம். இதனைத் திவ்விய கவி "ஞான முதலாழ்வார்கள், வெண்பாவை ஆதரித்தான்" (31) என்ற சொற்றொடரால் குறிப்பிடுவார். மேலும் அர்ச்சை, விபவம், பரம் என்ற மூன்று நிலைகள் ஒரு பாடலிலும் (35), வியூகம், விபவம் பரம் என்ற மூன்று நிலைகள் மற்றொரு பாடலிலும் (46) குறிப்பிடப் பெறுகின்றன. இங்ஙனம் ஒரே பாடலில் பல நிலைகளில் கலந்து வருதலையும் இந்நூலில் காண்கின்றோம். எம்பெருமான் அன்பர் உள்ளத்தில் நிலைபெற்றிருக்கும் அந்தர்யாமித்துவத்தை 'உள் நிலைக்கும் சோதி" (36) என்று குறிப்பிடுவார் ஆசிரியர். இதனைத் திருமங்கையாழ்வார்,

> உளங்கனிந் திருக்கும் அடியவர் தங்கள்
> உள்ளத்தில் ஊறிய தேன்[4]

என்று கூறி இனியரானவர். பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும்,

> "மனத்துள்ளான்"[5]

என்று கூறுவர்.

**உலகைப் புரக்கும் செயல் :** எம்பெருமான் இந்த உலகைப் புரக்கும் செயல் பல பாடல்களில் நுவலப் பெறுகின்றது. எம்பெருமான் பாலனாய் ஏழுலகுண்டு ஆல் இலையில் துயின்றதாக ஆழ்வார் பெருமக்கள் கூறியதை நினைவில் கொண்டு நமது திவ்வியகவியும் தம் பாடலில் (13) குறிப்பிடுவர். பிரளய வெள்ளத்தில் தான்

4. பெரி. திரு. 4.3:9
5. இரண். திருவந். 28; மூன். திருவந். 3

ஓர் ஆல் இலையில் துயின்றமை இரண்டு பாடல்களில் (27, 47) குறிப்பிடப் பெறுகின்றது. இராசத, தாமத குணங்களால் மிக்கவர் தம் பக்கல் வாராது கரும கதியால் வெவ்வேறு துணிவு கொள்ளும்படித் தனது அம்சத்தால் பலபலத் தெய்வங்களையும், பலபலச் சமயக் கோட்பாடு களையும், பல்வேறு வழிபாட்டு முறைகளையும் அமைத்து வைத்த எம்பெருமானின் அற்புத ஆற்றலை ஆழ்வார் பெருமக்கள் சிறப்பித்துப் பேசுவர்.

பிணக்குற அருவகைச் சமயமும்
நெறியுள்ளி உரைத்த
கணக்குஅறு நயத்தனன்[6]

என்றும்,

வணங்கும் துறைகள் பலபல
வாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல
வாக்கி அவையவை தொறும்
அணங்கும் பலபல வாக்கிநின்
மூர்த்தி பரப்பி வைத்தாய்.[7]

என்றும் நம்மாழ்வார் குறிப்பிட்டதை,

—பொய்நூலால்
அச்ச மயக்கத்தினார் ஆதரிக்கத் தெய்வங்கள்
வச்ச மயக்கத்தினார் வாழ்வு (59)

[சத்தினார்-பிதற்றுபவர்கள்; வச்சி-உண்டாக்கி வைத்த; மயக்கத்தினார்-மாயையை உடையவர்]

6. திருவாய். 1.3;5
7. திருவிருத். 96

என்று பேசுவர். எனவே, உலகினைப் புரத்தற் பொருட்டு, பக்தி நெறியால் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் எல்லாச் சமய நெறிகளும் எம்பெருமானாலே வெளியிடப் பெற்றவையாகும்.

**அருமையும் எளிமையும் :** எம்பெருமானின் எளிமைக் குணத்தை,

> பத்துடை அடியவர்க் கெளியவர்
> பிறர்களுக் கரிய
> வித்தகன்[8]
>
> [பத்து-பக்தி]

என்று பேசுவர் ஆழ்வார். திவ்விய கவி "தூயசனகாதி யாரும், ஓதி வணங்கற்கரியார்" (36) என்றும், அவனது அருமைக் குணத்தைக் கூறுவர். அவர் "மேகன் அயன் அம் கொண்டார் வேணியரன் காண்பரியர்" (67) என்றும்,

> —எண்சிந்தைக்கு
> ஓரா இருந்தான் ஒருநாள் விதுரனுக்கு
> வாரா விருந்தான் வரை (18)
>
> [எண் சிந்தை-எண்ணுகின்ற மனம்; ஓரா-அறியப் பெறாமல்; வாரா-வருத்தற்கரிய; விருந்தான்-விருந்தினன்]

என்று எம்பெருமானின் எளிமைக் குணத்தையும் சிறப்பாக விதந்து ஓதுவர். கண்ணன் எளியவனாக வீட்டிற்கு எழுந்தருளியமையை நினைந்து

"என்ன மாதவம் செய்தது இச்சிறுகுடில்?"[9]

8. திருவாய் 1.3:1
9. வில்லிபார-உத்தி-கிருட்டிணன் தூது-80

என்றுகூறிய விதுரன் வாக்கினை இன்றும் வைணவப் பெருமக்கள் அடிக்கடிச் சொல்லி மகிழ்வதை நாம் காண லாம். எம்பெருமான் திருவேங்கடமலையில் எழுந்தருளி யிருப்பதே அவனது சௌலப்பிய (எளிமைக்) குணத்தைக் காட்டுவதாகும்.

**பக்தர்களைக் காத்தல் :** தனக்கு அடிமைப்பட்டவர் கள் பிழை செய்தால் அதனைப் பொறுத்தலும், குற்ற மாகப் பாராட்டாது விடுதலே யன்றிக் குணமாகக் கொள்ளுதலும் எம்பெருமானது இயல்பு என்று நம்புப வர்கள் வைணவப் பெருமக்கள்.

தன்அடியார் திறத்தகத்துத் தாமரையாள்
ஆகிலும் சிதடு உரைக்குமேல்
என் அடியார் அது செய்யார் செய்தாரேல்
நன்று செய்தார் என்பர் போலும்[10]

[சிதடு-குற்றங்கள்]

இதில் பரிந்துரை செய்யும் எம்பெருமாட்டி. கூட குற்றங் களைக் கணக்கிட்டுக் கூறத் தொடங்கினாலும் எம்பெரு மான், 'என் அடியார் அது செய்யார்' என்று கூறி மறுப் பர் என்பதாகப் பெரியாழ்வார் பேசுவதைக் காணலாம். இதனைக் கருத்தில் கொண்டே திவ்விய கவியும்,

—பொங்கமரில்
ஆர்த்த வலம்புரியார் ஆட்பட்டார் செய்தபிழை
பார்த்த வலம்புரியார் (31)

[அமர்-போர்; ஆர்த்த-முழங்கின; ஆட்பட்டார்-அடியார்; அலம்-துன்பம்; புரியார்-செய்யார்]

10. பெரியாழ். திரு. 4.9:2

என்று கூறுவர். இந்த அடிகளில் 'திரிபு' என்ற சொல்லணி அமைந்திருத்தலும் கண்டு மகிழத் தக்கது. இன்னொரு பாடலின் "பத்தரைத் தம்உள் நினைந்து காப்பார்" என்று தெளிவாகக் கூறியுள்ளார். இதனை வற்புறுத்துவான் வேண்டிப் பின்னொரு பாடலில் ஓர் எடுத்துக் காட்டும் தருவர்.

—பைங்கழையின்

மாண்டாரைப் பண்டழைத்தார்
மாமறையோன் பால்தோன்றி
மாண்டாரைப் பண்டழைத்தார் (29)

[கழை-வேய்ங்குழல்; மண்தாரைப்பண்-மாட்சிமைப்பட்ட ஒழுங்கான இசை; தழைத்தார்-செழிக்க ஊதினவர்; மாண்டார்-இறந்த மக்கள்]

என்பதிலுள்ள வரலாறு கருதத் தக்கது. இதனையே திருவரங்கத்து மாலையிலும் "மீளாப் பதம் புக்க பாலரை நீயன்று மீட்டது"[11] என்று குறிப்பிட்டுள்ளார். பெரியாழ்வார்,

பிறப்பகத்தே மாண்டொழிந்த
பிள்ளைகளை நால்வரையும்
இறைபொழுதில் கொணர்ந்துகொடுத்
தொருப்படுத்த உறைப்பனூர்.[12]

என்ற பாசுரப் பகுதியில் குறிப்பிட்ட வரலாற்றையே நினைந்து கூறுவர் இந்த ஆசிரியர். இதனைத் தவிர, கிருட்டிணாவதாரத்தில் கூனியின் வளைந்த முதுகை நிமிர்த்தியமை (58), பாஞ்சாலியின் ஆடையை வளர்த்து

---

11. திருவரங். மாலை-72
12. பெரியாழ்.திரு 4.8:2. ஒப்பிடுக: பெரி.திரு.5.8:8

மானம் காத்தமை (65), குன்றமேந்திக் குளிர்மழை காத்தமை (66) போன்ற நிகழ்ச்சிகளையும் காட்டி அடியார்களைக் காக்கும் உண்மையை மேலும் அரண் செய்வர்; சரண் அடைந்தவர்க்கு வைகுந்தமும் ஈவர் என்று வலியுறுத்துவர் (55). இத்தன்மையுடைய எம் பெருமானே திருவேங்கடத்தில் எழுந்தருளியிருப்பதாகப் பாடல்கள்தோறும் பகர்வர்.

**வீரச் செயல்களும் வெற்றிச் சிறப்புகளும் :** எம் பெருமானுடைய வீரச் செயல்களையும் வெற்றிச் சிறப்புகளையும் பேசி இறையநுபவம் பெறுவது ஆழ்வார் பெருமக்களின் இயல்பு. "ஆழியெழ சங்கும்"[13] எனத் தொடங்கும் திருவாய்மொழியில் இதனை அறியலாம். ஆழ்வார்கள் தோற்றுவித்த மரபினைப் பின்பற்றியே நம் திவ்விய கவியும் இறையநுபவம் பெறுகின்றார். திவ்விய கவி கிருட்டிணாவதார நிகழ்ச்சிகளில் அதிகமாக ஈடுபடுகின்றார்.

—கூடத்துக்

*கம்பவள மாவென்றான்*
*காசினிக்கும் வெண்ணெய்க்கும்*
*செம்பவளம் ஆவென்றான்*
*சேர்வு (16)*

*[கூடம் - யானைச் சாலை; கம்பம் - கட்டுத்தறி; வளம்மா-மதக்கொழுமையான யானை; காசினி - உலகம்; செம்பவளம்-வாய்; ஆஎன்றான்-அங் காத்தான்; சேர்வு-சேர்ந்திருக்கும் இடம்]*

குவலயாபீட மதயானையைக் கொன்றொழித்தவனும், பிரளய காலத்தில் உண்ணுவதற்காகவும் கிருட்டிணாவதாரத்தில் வெண்ணெயை உண்பதற்காகவும் சிவந்த

13. திருவாய் 7. 4.

பவளம் போன்ற தனது திருவாய் மலரை 'ஆ' என்று திறந்தவனுமாகிய திருமால் சேர்ந்திருக்கும் இடம் திருமலையாகும். இங்ஙனமே கிருட்டிணாவதாரத்தில் குழலூதி ஆநிரைகள் தன்னைச் சுற்றி வரச் செய்தல் (9), காளிங்கன்மீது நடனமாடி அதன் கொடுமையை அடக்குதல் (70), பூதனையிடம் பாலமுது செய்து அவள் உயிரையும் உண்ணல் (41), வன்கஞ்சன் என்னும் சின மாமனைக் கொன்றமை (54), அதற்கு முன்பதாக மல்லர்களை வதைத்தமை, பாரதப் போரில் பஞ்சவர்க்காக நூற்றுவரைக் காலன்பாலாக்குவித்தமை (19, 52), அதற்கு முன்னர் அப்போரில் திருவாழியால் பகலவனை மறைத்து இரவு தோன்றச் செய்தமை (34), பதினாயிரம் கோபியர்களை மணந்தமை (51), சத்தியபாமையின்பொருட்டு உம்பருலகினின்றும் பாரிசாத மரத்தை இம்பருலகிற்குக் கொணர்ந்தமை (28), தேர்த்தட்டினின்றும் பார்த்தனுக்குக் கீதையை உபதேசித்தமை (44), தன் பேரன் அநிருத்தன் பொருட்டு வாணனின் ஆயிரங் கைகளை அறுத்தமை (26) ஆகிய வீரச் செயல்கள் அநுசந்திக்கப் பெறுகின்றன.

அடுத்து, இராமாவதாரச் செயல்களைப் பேசி இனியராகின்றார் அய்யங்கார். அந்த அவதார காலத்தில் நிகழ்த்திய கல்வடிவாக இருந்த அகலிகையை அழகிய அரிவையாக்கியமை (21), மாரீசனை இரண்டாவது முறை வெருட்டியமை (61), அவனைக் காலன் உலகிற்கு அனுப்பியமை (24), கலை வணங்கு நோக்கு அரக்கி மூக்கை நீக்கிக் கரனோடு தூடணன் தன் (முத்தலையார் உட்பட, உயிரை வாங்கியமை (49, 64), வரி நெடுவேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன் இன்னுயிர் கொண்டு அவன் தம்பிக்கு அரசு ஈந்தமை (42), அதற்கு முன்னர் சேது கட்டுவித்தமை ஆகிய அருஞ்செயல்களை அநுசந்தானம் செய்து அகமகிழ்கின்றார் அய்யங்கார்.

இவற்றை அடுத்துப் பிரகலாதன் பொருட்டுத் தூணி னின்றும் நரசிங்கம் தோன்றினமையும் (8), அன்னமாய் நின்று நான்முகனுக்கு அருமறைகளை உபதேசித்தமையும் (21, 17), கசேந்திரனுக்கு அபயமளித்தமையும் (21), கடல் கடைந்து தேவருக்கு அமுதையும் சிவபெருமானுக்கு நஞ்சையும் அளித்தமையும். (41) ஆகிய நிகழ்ச்சிகளைத் தமது பாடல்களில் எடுத்துக் கூறிப் பரவசப்படுகின்றார் திவ்விய கவி.

அர்ச்சாவதாரத்தில் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியின் மாலையை ஏற்றமை (40), திருமங்கையாழ்வாரின் திருப் பாசுரங்களை ஏற்றருளியமை (70), முதலாழ்வார்களின் திருவந்தாதிகளை ஆதரித்தமை (11) ஆகிய செயல்களும் எடுத்தியம்பப்பெறுகின்றன. இத்தகைய வெற்றிச் செயல்களை நிகழ்த்தியவனே திருவேங்கடமுடையானாகச் சேவை சாதிக்கின்றான் என்பது திவ்விய கவியின் திருவுள்ளமாகும்.

# 15. முத்தமிழ்க் கவியின் சிந்தனையில் திருவேங்கடம்*

முத்தமிழ்க்கவி அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் மகள் வயிற்றுப் பேரர். செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள பொன்விளைந்த களத்தூர் இவர் ஊராகும். இவர் சற்றேறக்குறைய 450 ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர். இவர் **'திருவேங்கடக்கலம்பகம்'** என்ற ஒரு சிற்றிலக்கியத்தை இயற்றியுள்ளார். இது திருவேங்கடமலைமீதும், அம்மலையின்மீது திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமுடையான் மீதும் காதல் கொண்ட ஆசிரியரின் உள்ளத்தினின்றும் உருக்கொண்டதாகும். ஒரு திருப்பாடலில் தான் திருவேங்கடமுடையானைப் பாடுவதற்குக் காரணம் கூறுவதுபோல் அமைந்துள்ளது. ஆழ்வார் பெருமக்கள் அனைவரும் 'நாக்கொண்டு மானிடம்பாடாத' புண்ணிய சீலர்கள். இக்காலத்துப் புலவர்கள் போலவே இப்புலவர் பெருமானும் சில்வாழ் பல்பிணிச் சிற்றுயிர்களை ஒரொரு கால் பாடியிருக்கலாம். அந்த அழுக்கு நாக்கினின்றும் நீங்குவதற்காகவே திருவேங்கடமுடையானின் திருநாமத்தைப் பாடித் துதிப்பதாகக் கூறுவர்.

---

* சப்தகிரி (சனவரி-1991)யில் வெளிவந்தது.

ஆனாத கீர்த்தித் திருவேங்
கடத்துஉறை அச்சுத! நீ
தான்ஆதரிக்கத் துதித்தேன் அல்லேன்
இந்தத் தாரணியின்
மேனாளின் மானிடம் பாடிய
நாச்சுத்தம் மேவுதற்கு
நான்ஆசை யால்துதி செய்தேன்உன்
புண்ணிய நாமத்தையே

—திருவேங். கலம். 99

[ஆனாத-நீங்காத; கீர்த்தி-புகழ்; ஆதரிக்க-அன்பு வைக்க; தாரணி பூமி; மேல்நாள்-அனாதிகாலம்; மானிடம்-மனிதர்கள்; நா-நாக்கு; சுத்தம்மேவுதல்-தூய்மை அடைதல்; ஆசையால்-விருப்பத்தால்]

என்ற பாடலில் இதனைக் காணலாம். இதனால்தான் இவர் பாடிய 'கலம்பக மாலை' "பக்தியின் துதி பாடின மாலை" ஆகின்றது.

இந்த நூலின் இறுதிப் பாடலில் தன்னைத் தொண்டருக்கும் தொண்டராகக் கூறி வைணவ மரபினராகப் புலப்படுத்திக் கொள்ளுகின்றார்.

கண்ணா யிரம்பெற்ற கோன்உல
கோங்கிய கற்பகக்காத்
தண்ணாரும் பூவையும் வேண்டிலம்
வேண்டித் தலைக்கணிபூ
எண்ணார்க் கிருளன்ன வேங்கடத்
தான்தொண்டர் ஏவற்றொழில்
பண்ணாசைத் தொண்டரவர் தொண்டர்
தொண்டர் பதமலரே (100)

[தண் ஆரும்-குளிர்ச்சி நிறைந்த; வேண்டி-விரும்பி; எண்ணார்க்கு-தியானிக்காதவர்களுக்கு; இருள்-அஞ்ஞானம்; தொண்டர்-அடியார்கள்: ஏவல்தொழில்-ஏவிய சிறுதொழில்; பண்-செய்கின்ற; ஆசை-அன்பு; தொண்டரவர்-அடியார்களின்; பதமலர்-திருவடித் தாமரை]

உம்பர் உலகத்துக் கற்பக மலரையும் தான் விரும்பவில்லையென்றும், திருவேங்கடமுடையானின் தொண்டர்களின் திருப்பாத மலரே தாம் விரும்பும் மலர் என்றும் கூறித் தமது ஆழ்ந்த வைணவப் பற்றைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றார். இப்பாடலில், 'கண்ணாயிரம்... வேண்டிலம்' என்ற பகுதி,

ஆனாத செல்வத்து
    அரம்பையர்கள் தற்சூழ
வான்ஆளும் செல்வமும்
    மண்ணரசும் யான்வேண்டேன்

—பெரு. திரு. 4:2

என் குலசேகரப் பெருமானின் திருவாக்கையும்,

பச்சைமா மலைபோல் மேனி
    பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா, அமரர் ஏறே!
    ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
    இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
    அரங்கமா நகருள் ளானே.

—திருமாலை-2

என்ற தொண்டரடிப் பொடிகளின் பாசுரத்தையும் நினைக்கச் செய்கின்றது.

மேலும் இப்பாடலின் 'வேங்கடத்தான் தொண்டர்... பதமலரே' என்ற பகுதி அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபனின்,

> நேர்பட்ட நிறைமூ உலகுக்கும்
> நாயகன் தன் அடிமை
> நேர்பட்ட தொண்டர்தொண்டர்; தொண்டர்
> தொண்டன் சடகோபன்
>
> —திருவாய் 8.9:11

> புண்ட ரீகக்கொப் பூழ்ப்புனல்
> பள்ளி அப்பனுக்கே
> தொண்டர் தொண்டர் தொண்டர்
> தொண்டன் சடகோபன்
>
> —திருவாய் 7-1:11

> எந்தைபி ரான் தனக்கு
> அடியார் அடியார் தம்அடி
> யார்அடி யார்தமக்(கு)
> அடியார் அடியார் தம்அடி
> யாரடி யோங்களே.
>
> —திருவாய் 3.7:10

என்ற திருவாய்மொழிப் பாசுரப் பகுதிகளை நினைவு கூரச் செய்கின்றது. பெரும்பாலும் முத்தமிழ்க் கவிஞர் தம் பாடலாகிய 'குலோப் ஜாமுனை' ஆழ்வார் பாசுரங்களாகிய 'ஜீராவில்' தோய்த்துத் தோய்த்தே தருகின்றார் என்பதைக் காணலாம்.

**திருவேங்கடத்தின் பெருமை :** திருவேங்கடக் கலம்பகத்தில் திருவேங்கட மலையின் பெருமை பல பாசுரங்களில் பேசப்பெறுகின்றது. திருவேங்கடத்தில் பிறத்தலும்

இருத்தலும் தனக்குப் போதும் என்று கூறியவர் குலசேகரப் பெருமாள்.

செம்பவள வாயான்
திருவேங் கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல்
ஏதேனும் ஆவேனே.

—பெரு. திரு. 4:10

மாடாக நிழற்றுசெழு மரனாகத் தவச்சிறிய
பூடாகக் குழைத்கநறும் புதலாக வழிபடுமோர்
ஓடாகப் பெறுவமெனில் உயிர்காள்! நற் கதி பெறலாம்
வீடாகத் திருநெடுமால் வீற்றிருக்கும்
வேங்கடத்தே(72)

[மாடு-விலங்கு; நிழற்று-நிழல் தரும், பூடு-பூண்டு; புதல்-புதர்; வழிபடும்-வழியில் கிடக்கும்]

என்று பாடுவர். "திருநெடுமால் தனது இருப்பிடமாக உகந்து கொண்டிருக்கும் திருவேங்கடத்தில் விலங்காகவாயினும், நிழலைத் தரும் செழுமரமாகவாயினும், மிகச் சிறிய புல் பூண்டுகளாகவாயினும், தளிர்த்த நல்ல புதராகவாயினும், வழியில் கிடப்பதொரு ஓடாகவாயினும் இருக்கப் பெறுவோமென்றால் நாம் சிறந்தநற் கதி பெறலாம்" என்று சீவர்களை நோக்கிக் கூறுகின்றார் கவிஞர் பெருமான்.

இன்னொரு பாடலில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் சில இடங்களைக் குறிப்பிடும் ஆசிரியர் திருவேங்கடம் என்னும் அழகிய திருமலையையும் அவற்றுள் ஒன்றாகக் குறிப்பிடுவர்

மாதவத்தோர் சிந்தையுமாம்
 மாமறையின் உச்சியுமாம்
கோதகற்று வேங்கடப்பொற்
 குன்றமுமாம்; சீதமலர்
எட்டக் கரத்தான்
 இடம் செழ்சங்கோன்குருந்தை
எட்டக் கரத்தான்
 இடம் (63)

[மறை-வேதம்; உச்சி-உபநிடதம்; கோது-குற்றம்; சீதம்-குளிர்ச்சி மிக்க; அக்கரம்- அட்சரம், எழுத்து; குருந்தை-குருந்த மரத்தை; எட்டு அக ரத்தான்-அழகிய கைகளையுடையவன்].

என்ற பாடலில் இதனைக் கண்டு மகிழலாம்.

பிறிதொரு பாடலில் வேங்கடத்தை வியந்து கூறும் பாங்கில்,

ஆலத்து அரங்கத்து ஐவாய்ப்பொறிப்
 பாம்பினில் அக்கயிலை
போலத் தரங்கத்தைவீசு
 ஆழியில்துயில் புங்கவர்பைங்
கோல்அத்தர் அங்குஅத்தைநன் மகற்கே
 பண்டு கூறும்முத்தி
நூல் அத்தர் அங்கத்தை ஏந்தஎன்
 வேங்கடம்நோற் றதுவே (29)

[ஆலத்து-ஆலிலையில்; அரங்கம்-திருவரங்கம்; ஐவாய்-ஐந்துவாய்கள்; பொறி-புள்ளி; தரங்கம்-அலை; ஆழி-கடல்; புங்கவர்-இளஎருது போன்றவர்; பைங்கோல் அத்தர்-பசுமையாக உள்ள கோலைக் கையிலுடையவர்; அத்தை-குந்தி; மகன்-பார்த்தன்; முத்தி நூல்- கீதை; அத்தர்-தலைவர்; அங்கம்-திருமேனி; ஏந்த-தரித்தற்கு]

என்று விளக்குவர். ''ஆலிலையிலும் திருவரங்கத்திலும் ஆதிசேடனிடத்தும், திருப்பாற்கடலிலும், அறிதுயில் கொண்டிருக்கின்றவரும், பசுமையான பசுக்களை மேய்க்கும் கோலையுடையவரும், அத்தை மகனான பார்த்தனுக்கு முற்காலத்தில் உபதேசித்தருளிய வீடுபேற்றைத் தர வல்ல கீதையையுடைய தலைவருமாகிய எம்பிரானது திருமேனியைத் தரித்தற்குத் திருவேங்கடமலை என்ன தவம் செய்ததோ?'' என்கின்றார்.

கலம்பகக உறுப்புகளில் ஒன்று ஊர் என்பது. இது பாட்டுடைத் தலைவன் வாழும் ஊர் இன்ன சிறப்பினையுடையது என்று பாடுவது. இங்குப் பாட்டுடைத் தலைவனாகிய வேங்கடவாணனின் ஊராகிய திருவேங்கடமலையைச் சிறப்பித்துப் பாடும் முகத்தான்,

புவனம் முழுதும் பணியும் இருசரண
　　புண்டரிகர் பொறியளிகள் கிண்டுதுளவார்
அவனிமகள் செங்கமலமகள் கணவர் தங்குகிரி
　　அழகு திகழுங் குழையில்வீழ்
குவளை விழியின் குறவர் மடமகளிர்
　　செங்கைவிரல் கொளுவிய கவண்கல் படவே
நவமணம் வழங்குசுர தருமலர் உதிர்ந்துவிழு
　　நலமலி புயங்க கிரியே. (22)

[புவனம்-உலகம்; பணியும்-வணங்குகின்ற; சரணம்-திருவடி; புண்டரிகம்-தாமரை; பொறி-புள்ளி; அளி-வண்டு; கிண்டு-நெருங்கி; துளவார்-மொய்க்கின்ற; அவனிமகள்-பூமிப்பிராட்டி; செங்கமலமகள்-பெரியபிராட்டியார்; குழை-காதணி; குவளை-நீலோற்பலம்; கொளுவிய-விளையாட்டாக எடுத்து எறிந்த; நவமணம்-புதிய வாசனை; புயங்ககிரி-பாம்பு மலை]

என்று கூறுவர். "எல்லா உலகங்களும் வணங்குகின்ற, இரண்டு திருவடித் தாமரைகளையும், வண்டுகள் மொய்க்கின்ற திருத்துழாய் மாலையையும்கொண்டு பூமிப்பிராட்டியார் பெரிய பிராட்டியார் ஆகிய இருவர்களுடனும் தங்கியிருக்கும் மலையாதெனில்: அழகு தவழுகின்ற காதணிகளை எட்டுகின்ற குவளை மலர் போன்ற கண்களையும் இளமையையும் உடைய குறமகளிர் தம் சிவந்த விரல்களினால் கவண்கற்களை விளையாட்டாக எடுத்தெறியவே, நவமணம் கமழும் கற்பக மலர்கள் உதிர்ந்து விழப்பெற்று அழகுமிக்க சேடகிரி (பாம்பு மலை)யேயாகும்" என்கின்றார். வைணவத்தில் திருமலையைத் திருமலையாழ்வார் என்று வழங்குவர்.

எம்பெருமானின் உடலாகத் திகழும் 'அசித்தும்' வழிபடுவதற்கு உரியது என்ற கொள்கையையுடையவர்கள் ஆழ்வார் பெருமக்கள் என்பதனை நாம் அறிவோம்.

மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலை
பதியது ஏத்தி எழுவது பயனே.

—திருவாய் 2-10:2

என்றும்,

பரன், சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே.

—திருவாய். 3-3:8

என்றும் வரும் நம்மாழ்வார் திருவாக்குகளைக் காண்க. இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் முத்தமிழ்க் கவிஞரும் திருமலையின் பெருமையினை ஆங்காங்குக் கூறிச் செல்வர்.

**திருவேங்கடத்து அப்பனின் சீர்மை:** வேங்கடத்தின் பெருமையை எடுத்தோதிய ஆசிரியர் அம்மலையில்

எழுந்தருளியுள்ள வேங்கடவாணனின் சீர்மையையும் விதந்து கூறுகின்றார்.

> மொழிமறை முடிமேல் எழுமுதல் அதுவே
> செழுவட மலைவாழ் விழுமிய பொருளே (76)

[மறைமுடி-உபநிடதம்; முதல்-முதற்பொருள்; விழுமியபொருள்-பரம்பொருள்]

இந்தப் பாடலால் வேதவிழுப் பொருளே வேங்கடமலையில் எழுந்தருளியிருப்பதாகக் கூறுகின்றார். வடமலைவாழ் தேவருக்கு ஆட்பட்டால் ஏற்படும் பெருமையையும் காண்போம்.

> யாவருக் கிந்தப் பெருமையுண்
> டோதுக இன்உயிர்காள்!
> மாவருக் கைந்திரள் பொற்குடந்
> தூங்கும் வடமலைவாழ்
> தேவருக் காட்பட்டு வைகுந்த
> மேவித் தினமிருப்போர்
> பூவருக் கம்பொரு தாள்கீழ்ப்
> படும்எப் புவனமுமே (21)

[மா-பெரிய; வருக்கை-பலாப்பழம்; பொன் குடம்-பொன்குடம் போல்; தூங்கும்-தொங்கும்; ஆள்பட்டு-அடிமைப்பட்டு; மேவி-அடைந்து; பூவருக்கம்-தாமரைப்பூவின் இனம். பொருதாள்-ஒக்கின்றதிருவடி; படும்-அடையும்]

''ஏழுமலையானுக்கு ஆட்படுபவர்கள் வைகுந்தத்தில் இருப்பார்கள்; எவ்வுலகங்களும் அவர்கள் திருவடிக்குக் கீழ்ப்படும். வேறு எந்தக் கடவுளுக்குத்தான் இந்தப் பெருமை உண்டு?'' என்கின்றார் இந்தப் பாடலில்.

அடுத்து, திருவேங்கடமுடையானின் திருவடிப் பெருமையைக் கூறுகின்றார்.

புயங்கமலை மேல்தொழுத புண்ணியர்க்கும்
உண்டோ
புயங்கமலை மேவும் பரமன்—வியங்கமல
நேருநாட் டத்தன் நிலமேல் அமருலகத்
தாருநாட்டத்தன் சரண் (8)

[புயங்கமலை-சேஷகிரி; பயம்-அச்சம்; கமலை-இலக்குமி; பரமன்-சிறந்தவன், மேவும்-பொருந்தியிருக்கும்; வியம்-பெருமையுடைய; கமலம்-தாமரை; நேரும்-ஒத்திருக்கின்ற; நாட்டம்-கண்கள்; நிலம்-பூமி; அமர் உலகம்-தேவர் உலகம்; தாரு-மரம்; அத்தன்-தலைவன்: சரண்-திருவடிகள்]

அரவக்கிரியில் பொருந்தி வாழும் அச்சுதன் திருவடிகளைத் தொழுது வணங்கின் நல்வினைப் பேறு உடையவர்கட்குப் பிறவித்துன்பங்களாலுண்டாகும் அச்சம் உள்ளதோ?'' என்கின்றார் முத்தமிழ்க் கவிஞர்

நம்மாழ்வார் போன்ற ஞானச் செல்வர்கள் சரண் அடைந்தவை திருவேங்கடமுடையானின் திருவடிகள் அவற்றை மக்கள்குலம் சரணமாக அடையப்பெற்றால் ஏற்படும் பலனையும் எடுத்துரைக்கின்றார் கவிஞர் பெருமான்.

சரண் மெனத்தன் சரணே
அடைந்த சனர்சனன
மரண மடுத்துவருஞ் தாதுதன்பதம்
வாழ வைக்கும்
கிரணம் விரிக்குமதி தீண்டும்
சேட கிரியிலம்பொன்
அரணம் உடுத்த திருக்கோயில்
மேவிய அற்புதனே (9)

[சரணம்-அடைக்கலம்; சரண்-திருவடிகள்; சனர் மக்கள்; சனனம்- பிறப்பு; மரணம்-இறப்பு; அடுத்து-அடைந்து; தன்பதம்-தனது பரமபதம்; கிரணம்-ஒளி; விரிக்கும்-வீசும்; மதி-சந்திரன்; அம்பொன் - அழகியபொன்; அரணம்-மதில்; உடுத்த-சூழ்ந்துள்ள]

வானவர்களும் ஒருவரை ஒருவர் சந்தித்து, எல்லோரு மாகச் சேர்ந்து எம்பெருமானை வழிபடுகிறார்களாம்.

அடுத்தபடியாக, திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில், "தண்ணருவி வேங்கடமே வானோர்க் கும் மண்ணோர்க்கும் வைப்பு" என சுரர்களும், நம் போன்று இவ்வுலகத்தில் உள்ள எல்லோரும் சேர்ந்து போற்றும் திருவேங்கடமே என்று அவன் எழுந்தருளி யிருக்குமிடத்தைச் சிறப்பித்து அருளிச் செய்கிறார். குலசேகரப்பெருமாள் அருளிச் செய்த பெருமாள் திரு மொழியில் "ஊனேறு செல்வத்து" (4) என்ற பதிகத்தில்

"செடியாய் வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா, நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையருங் கிடந்தியங்கும்
படியாய் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே"(9)

என்ற பாசுரத்தில், நம் போன்ற அடியவர்களும், நான் முகன் தொடக்கமான சகல தேவர்களும் கூடித் தொழும் திருமலையில் ஒரு படியாகக் கிடந்து, அந்த ஆபரணங் களுக்கு அழகு செய்யும் எம்பெருமானின் திருப்பவள வாயைச் சதா அநுபவித்துக் கொண்டிருக்க வேண்டுமென திருவேங்கடவனிடத்தில் பிரார்த்திக்கின்றார்

நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில்,

"கண்ணாவான் என்றும்
மண்ணோர் விண்ணோர்க்குத்
தண்ணார் வேங்கட
விண்ணோர் வெற்பனே

என்று மற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்தபடி, வேங்கடத் தெம்பெருமான் நித்தியசூரிகளும் தேவர்களும், நம் போன்ற சம்சாரிகளும் ஒன்றாகச் சேர்ந்து தொழும்படி, சேவை சாதிக்கின்றான் என்று அறுதியிடுகின்றார்.

ஆக, ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ஸூக்திகள் மூலம் நமக்கு, மற்ற எந்த எம்பெருமானுக்கும் இல்லாத சிறப்பு, வானோர்களும், மண்ணோர்களும் சந்தி செய்து அவனை சேவிக்கிறோம் என நிரூபணமாகின்றது.

நித்தியசூரிகளும், சுரர்களும், முனிக்கணங்களும் சதா விரும்பும் அந்த திருவேங்கடத்தெம்பெருமானான உபய விபூதி நாயகனை, நாம் சேவிக்கச், சேவிக்கத் தெவிட்டாமல் ஆராவமுதமாக நமக்குச் சேவை சாதிக்கிறான். இந்த எம்பெருமான் சேவைக்கு, பரமபதநாதன் சேவை ஈடாகுமா என நமக்கு,அவனைச் சேவிக்கும்போது தோன்றுகிறது. அந்த எம்பெருமானை வழிபடும்போது, நாம் வைகுந்தத்தில் இருப்பது போன்ற உணர்வு நமக்கு ஏற்படுகின்றது. அப்படி அந்த திருவேங்கடத்தெம்பெருமானை உள்ளன்புடன் சேவித்தால் நமக்கு, இவ்வுலகில் சகல பாக்கியங்கள் கிடைப்பதுடன், நிச்சயமாக பரமபதத்தில் நமக்கு இடம் உண்டு என்பதை நம் சடகோபன் திருவாய்மொழியில், திருவேங்கடமுடையானைச் சரணாகதி அடைந்து போற்றும் ''உலகமுண்ட பெருவாயா'' என்ற பதிகத்தில் (திருவாய் 6.10) கடைசி பலச்சுருதி பாசுரமாக அருளிச்செய்ததை நாமும் அநுசந்தித்து ஸ்ரீ திருவேங்கடத்தெம் பெருமானின் நிர்ஹேதுக கிருபைக்கு பாத்திரமாவோம்.

அடிக்கீழமர்ந்து புகுந்து, அடியீர்
வாழ்மினென்றென் றருள்கொடுக்கும்
படிக்கேழில்லாப் பெருமானைப்
பழனக் குருகூர்ச் சடகோபன்,

முடிப்பான் சொன்ன வாயிரத்துத்
திருவேங்கடத்துக் கிவை பத்தும்,
பிடித்தார் பிடித்தார் வீற்றிருது
பெரிய வானுள் நிலாவுவரே.
—பெரியவான்-பரமபதம்

திருவேங்கடமுடையான் தன்னைச் சரணம் அடைந்தவர்களின் பிறப்பு இறப்புத் துன்பங்களை நீக்கித் திருநாடு அடையும் பேற்றினையும் அருளுவான் என்று கூறுவர் ஆசிரியர் இப்பாசுரத்தில்.

இன்னொரு சிறிய பாட்டிலும் திருவேங்கடமுடையானின் திருப்பாதத்தின் பெருமை பேசப்படுகின்றது.

வேத னைத்தரும் விமலன்என
நாதன் வேங்கட நாயகன்
பாதம் அல்லது மற்றுமே
ஏதம் அற்றவர் இதயமே (87)

[வேதன்-நான்முகன்; விமலன்-குற்றம் நீங்கியவன்; ஏதம் அற்றவர்-குற்றம் நீங்கியவர்]

குற்றமற்றவர்கள் சீநிவாசனது திருப்பாதத்தைத் தவிர வேறொன்றையும் சரணமாக அடையார். இதில் 'வேதனைத் தரும் விமலன்' என்பதால் பரத்துவமும் 'என் நாதன்' என்பதால் சௌலப்பியமும் (விபவம்) 'வேங்கட நாயகன்' என்பதால் அர்ச்சையும் கூறப்பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம்.

மற்றும் ஓர் பாடலில் திருவேங்கடமுடையானின் திருவடிப் பெருமை நுவலப்பெறுகின்றது.

சிந்திப் பனவும் துதிசெய் வனவும்
தெரிசிப் பனவும் துரிசற் றிடவே
வந்திப் பனவும் பூசிப் பனவும்
வாஞ்சிப் பனவும் யாம்செப் புவமால்;

தந்திக் கிமையோர் பந்திக் களையின்
தாழிக் கருள்கூர் ஆழிக் கடவுள்
கந்தித் தெழுபூ வுந்தித் திருவேங்
கடமால் சரணம் தடமா மலரே (65)

[சிந்திப்பது - தியானிப்பது; துதி - தோத்திரம்; தெரிசிப்பது-காண்பது; துரிசு-குற்றம்; வந்திப்பது - வணங்குவது; பூசிப்பது - ஆராதிப்பது; வாஞ்சிப்பது-விரும்புவது; தந்தி-யானை; பந்தி-வரிசை; அளையின் தாழி-தயிர்ப்பானை; ஆழி-சக்கரம்; கந்தித்து - வாளினை வீசி; உந்தி-கொப்பூழ்; சரணம்-திருவடி]

இதில் திருவேங்கடமுடையானின் திருவடித் தாமரைகள் தியானிக்கத் தக்கவை என்றும், தோத்திரம் செய்யத் தக்கவை என்றும், கண்டுகளிக்கக்கூடியவை என்றும், குற்றங்கள் ஒழியும் பொருட்டு வணங்கத் தக்கவை என்றும், பூசிக்கத்தக்கவை என்றும், விரும்பத்தக்கவை என்றும் பல்வேறு விதமாகச் செப்பி இனியராகின்றார் ஆசிரியர். மூன்றாவது அடியில் குறிப்பிட்ட அளையின் தாழிக்கு வீடளித்த வரலாறு செவிவழிச் செய்தியாகக் கண்ணனைப்பற்றித் தமிழ் நாட்டில் வழங்கி வரும் கதையை யொட்டியது. வெண்ணெயைக் களவு செய்து உண்ட கண்ணன் தாயின் பிடிக்குத் தப்பியோடியபோது ததிபாண்டன் அகத்தில் புக்கு ஒளிந்தான் என்றும், அவனைத் ததிபாண்டன் தாழியில் மறைத்துக் காப்பாற்றினான் என்றும், இதற்குச் செய்த நன்றியாகக் கண்ணன் அந்த இடையனுக்கும் அவனது தாழிக்கும் வீடுபேறு அளித்தனன் என்றும் வழங்குவது இக்கதை. இக்கதையைப் பிள்ளைப் பெருமாள் அய்யங்காரும் தமது நூலில் (திருவரங்கத்து மாலை-53) குறிப்பிட்டுள்ளார்.

இத்தனைப் பெருமையினையும் சீர்மையினையும் உடைய அரவக்கிரியோனுக்கு ஆட்பட்ட கவிஞர் பெருமான் தம் பெருமிதம் தோன்றப் பேசுகின்றார் தமது 'மறந்தும் புறந்தொழா' நிலையைக் குறிப்பிட்டு.

அன்றுலகம் உண்டுமிழ்ந்த
அகிலசெகற் காரணன் நீ;
என்றுனக்கே யாளானோம்;
இமிழருவி வடமலைவாழ்
மன்றல்கமழ் துளவோய்உன்
வயிற்றுள் எங்களோடுகடை நாட்
சென்றுறைந்து மீளவரும்
தேவரையாம் மதியோமே (11)

[அன்று-பிரளய காலத்தில்; அகிலம்-உலகம்; செகத்காரணன்-உலக முழுவதற்கும் நீயே காரணன்; ஆள் ஆனோம்-அடிமையானோம்; கடைநாள்-யுகாந்த காலத்தில்; சென்று-பிரவேசித்து, உறைந்து-வசித்து; மீளவரும்-பின்பு வெளியில் வருகின்ற; மதியோம்-ஒருபொருளாக இலட்சியம் செய்யோம்]

"தேவதாந்தரங்களைத் துதியாமல் பரதேவதையாகிய நினக்கே தொண்டு பூண்டு ஒழுகுகின்ற எங்களைக் காத்தருளல் வேண்டும்" என்கின்றார். இந்தப் பாடல், உலகத்தைப் பிரளயத்திலிருந்து எம்பெருமான் உய்வித்தமையைக் கூறி உலகிற்கு உபதேசிக்கும் திருமங்கையாழ்வாரின் திருமொழியையும் (11.6), நம்மாழ்வாரின்,

நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்
தளிர்ஒளி இமையவர் தலைவனும் முதலா
யாவகை உலகமும் யாவரும் அகப்பட;
நிலம்நீர் தீகால் சுடர்இரு விசும்பும்
மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க

ஒருபொருள் புறப்பாடு இன்றி முழுவதும்
அகப்படக் கரந்துஓர் ஆல்இலைச் சேர்ந்தவெம்
பெருமா மாயனை அல்லது
ஒருமா தெய்வம்மற்று உடையமோ யாமே?

—திருவாசிரியம்-7

*[நளிர்-குளிர்ந்த சடையன்-சிவன்; தளிர் ஒளி-தழைத்த ஒளி; இமையவர் தலைவன்-இந்திரன்; விசும்பு-ஆகாயம்; மலர்சுடர் பிறவும்-சந்திரன் சூரியன் முதலிய ஒளியுடைய பொருள்களும்; புறப்பாடு இன்றி-வெளிப்படாதபடி; கரந்து-மறைத்து; மாயன்-ஆச்சரியன்]*

என்ற திருவாசிரியப் பாசுரத்தையும் நினைக்கச் செய்கின்றது. இங்ஙனம் முத்தமிழ்க் கவிஞர் 'வண்டமிழ் நூற்க நோற்றேன அடியார்க்கு இன்ப மாரியே' (திருவாய் 10-4-5) என்று நம்மாழ்வார் கூறியவாறு திருவேங்கடமுடையான் மீது 'செவிநுகர் கனிகளைச்' சொல்மாலைகளாக அழகு பெறச் சூட்டி மகிழ்ந்தார். நாமும் நாளும் அக்கனிகளை நுகர்ந்து இன்புறுவோமாக.

# 16. கம்பன் கருத்தில் திருவேங்கடம்*

ஒரு பெருங்காப்பியத்தில் 'மலை கடல் நாடு வள நகர் பருவம்' முதலிய பல பொருள்கள்பற்றி ஆங்காங்குச் சுட்டிச் செல்லுதல் காப்பிய மரபாக இருந்து வருவதை நாம் அறிவோம். இக்கால ஆராய்ச்சி முறையில் நோக்கினால் கவிஞன் 'புவி இயல்' பற்றிய குறிப்புகளைத் தருகின்றான் என்று சொல்ல வேண்டும். கிட்கிந்தா காண்டத்தில் **'நாட விட்ட படலத்தில்'** இத்தகைய குறிப்புகளைக் காண்கிறோம். இராமபிரானது கட்டளைப்படி சுக்கிரீவன் சீதாப்பிராட்டியைத் தேடும்படி நாற்றிசையிலும் திசைக்கு இரண்டு வெள்ளம் சேனையுடன் வானரப் படைத் தலைவர்களை அனுப்புகின்றான். மேற்குத் திசையில் **இடபனும்,** வடதிசையில் **சதவலியும்,** கிழக்குத் திக்கில் **வினதனும்,** தென்திசையில் **அங்கதனும்** செல்லுகின்றனர். அங்கதனுடன் அநுமன் சாம்பவான் முதலிய முக்கிய வீரர்களும் செல்லுகின்றனர்.

பலர் மூலம் அறிந்த செய்திகளால் சீதாப்பிராட்டி தென்திசையில்தான் இருக்க வேண்டும் என்ற ஐயம் ஏற்படுகின்றது சுக்கிரீவனுக்கு. தென்திசையில் செல்லுபவர்கட்கு விந்திய மலை, நருமதை நதி, ஏமகூடமலை, பெண்ணையாறு, விதர்ப்ப நாடு, தண்டகவனம், முண்டகத்துறை,

* சப்தகிரி (அக்டோபர்-1991) இதழில் வெளிவந்தது.

பாண்டுவின் மலை, கோதாவரி, சுவணை நதி, கொங்கண தேசம், அருந்ததிமலை, மரகதப்பொருப்பு ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளையெல்லாம் தந்து திருவேங்கடமலை பற்றிச் சற்று விரிவான குறிப்புகளைத் தருகின்றான். இந்த இடங்களையெல்லாம் கடந்து வேங்கடத்தை அடையுமாறு பணிக்கின்றான் வானரவேந்தன்.

வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்றாய்
நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்
நல்லறத்துக் கீறாய் வேறு
புடைசுற்றும் துணையின்றிப் புகழ்பொதிந்த
மெய்யேபோல் பூத்து நின்ற
அடைசுற்றும் தண்சாரல் ஓங்கியவேங்
கடத்திற்சென் றடைதிர் மாதோ.

—நாடவிட்ட 26

[வரம்பு-எல்லை; எல்லையதாய் - முடிவான பொருளையுடையதாய்; ஈறு-வரம்பு; புடை-பக்கம்; மெய்-சரீரம்; அடை-தேன் கூடு; சாரல்-தாழ்வரை]

என்ற பாடல் காண்க. ‘வேங்கடத்திற் சென்றடைதிர்’ என்ற தொடர் திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியில் (பெரி. திரு. 1.8) ‘திருவேங்கடம் அடைநெஞ்சமே’ என்று ஒரு முறைக்கு ஒன்பது முறை தம் நெஞ்சை நோக்கிக் கூறுவதை நினைக்க வைக்கின்றது. இன்னொரு திருமொழியில் (பெரி. திரு. 1.9) ‘அண்ணா! வந்தடைந்தேன்; அடியேனை ஆட்கொண்டருளே’ என்று பலமுறை வேண்டுவதையும் நினைக்கின்றோம்.

ஈண்டுக்குறிப்பிட்ட கம்பன் பாடலில் பல நுட்பமான செய்திகள் பெறவைத்திருப்பதைச் சிந்திக்கின்றோம்

சமஸ்கிருதம் ஆதியில் திருவேங்கடமலைக்கு வடபுறத்தி லுள்ள பல பகுதிகளில் மிகுதியாக வழங்கி வந்ததாதலின் அது 'வடமொழி' என்று வழங்கப்பெறுகின்றது. அங்ஙனமே, அம்மலைக்குத் தென்புறத்தில்-தமிழகத்தில்-வழங்கி வரும் தமிழ்மொழி 'தென்மொழி' எனப்படுகின்றது. இந்த இரண்டு மொழிகளும் மிகுதியாக வழங்கும் நிலங்களுக்கு இடையே நின்று எல்லை குறிப்பதனால் திருவேங்கடமலையை 'வட சொற்கும் தென்சொற்கும் வரம்பிற்று' என்கின்றான் கவிஞன். 'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் நூறு நல்லுலகம்' என்ற தொல்காப்பியச் சொற்றொடரில் திருவேங்கட மலையைத் தமிழ் உலகத்திற்கு வட எல்லையாகக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.[1] பிற்காலத்தார் திருவேங்கடத்தையே வடவேங்கடமாகக் கொண்டு பாடல்களை இயற்றியுள்ளனர். நான்கு வேதங்களிலும் அவ்வேதங்கட்கு உபபிருமணமாகிய இதிகாசம், புராணம் முதலிய மற்றைய நூல்களிலும் எடுத்துக் கூறப்படும் பொருள்களாகிய கடவுளர் யாவரினும் சிறந்த முழுமுதற் கடவுளான திருமாலைத் தன்னிடத்தில் கொண்டுள்ளது இது என்பது 'நான்மறையும் மற்றை நூலும் இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையது' என்பதன் கருத்து என்பது அறியத் தக்கது. இந்த மலையின்கண் அறங்களெல்லாம் குறைவின்றி நிறைந்துள்ளன என்பதை 'நல்லறத்தின் ஈறு' என்ற சொற்றொடரால் குறிக்கின்றான் கவிஞன். இதற்குச் சமானமாக உடன் எடுத்துச் சொல்லத்தக்க மலை வேறொன்றும் இல்லையென்ற கருத்தை 'வேறு புடைசுற்றும் துணையின்றி' என்ற தொடர் விளக்குகின்றது. இவ்வுலகில் ஒருவரது பூத உடம்பு அழிந்தாலும் புகழ் உடம்பு அழியாது நிற்கும் என்று அறிஞர்களால் கொண்டாடப்பெற்

1. வடவேங்கடம் வேறு, இன்றைய திருவேங்கடம் வேறு என்பதை இந்நூலில் பிறிதோரிடத்தில் (கட்டுரை—2) விளக்கப்பெற்றுள்ளது.

றுத் திகழ்தல் போலத் திருவேங்கட மலையும் பிரளயத்தி லும் அழியாது நின்று உலகிலுள்ளோர் பலராலும் துதி செய்யப்பெற்றுத் திகழ்தலால் அம்மலைக்குப் புகழ் பொதிந்தமெய்யை-அதாவது புகழுடம்பை-உவமையாகக் கூறினான்.

இவ்விடத்தில் சடகோபரின்

'பரன், சென்று சேர்திரு வேங்கடமாமலை
ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே'

—திருவாய் 3.3:8

என்ற திருவாக்கால் மாலவன் கோயில் கொண்டிருக்கும் மலையைத் தொழுதாலே நாம் செய்யும் வினைகள் எல் லாம் 'தீயினில் தூசாகும்' என்பது தெளிவாகின்றது. அங் ஙனமே,

திருமா லிருஞ்சோலை மலைஎன்றேன்; என்ன
திருமால்வந்து, என்நெஞ்சு நிறையப் புகுந்தான்

—திருவாய் 10.8.1

என்று மற்றோர் திருவாய்மொழியிலும் குறிபிடுவர் ஆழ்வார். "திருமால் கோயில் கொண்டிருக்கும் 'திருமாலிருஞ்சோலை மலை' என்று உச்சரித்தாலே போதும் அத்திருமால் வந்து காட்சி தருவதற்கு" என்பது இதன் கருத்து. எம்பெருமான் படைப்பிலுள்ள 'அசித்தும்' வணங்கத்தக்கது என்பது இதனால் பெறப் படுகின்றது.

திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்றெட்டனுள் திருமலையும் ஒன்று; வடநாட்டுத் திருப்பதிகள் பன்னி ரண்டனுள் இது முதலாவது. நம்மாழ்வார் தமது முதல் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் மங்களாசாசனம் செய்

துள்ள திருவரங்கம் (திருவிருத். 28), திருவெஃகா (திரு விருத். 26), திருவேங்கடம் (திருவிருத். 31) என்ற மூன்று திருத்தலங்களும் **'கோயில், திருமலை, பெருமாள் கோயில்'** என்று வைணவர்களால் சிறப்பித்துக் கூறப்பெறும் சொற்றொடரில் நடுநாயகமாக அமைந்து திகழ்வது இத் திருத்தலம். இந்த மூன்று பாசுரங்களுள் திருவேங் கடத்தைக் குறிப்பிடும் பாசுரத்திற்குப் (31) பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீசூக்திகள் மிக்க சுவையுடன் அநுசந்திக்க வேண்டியவை. "கீழ் நீல முண்ட மின்னன்ன மேனிப் பெருமானுலகு" (பாசுரம் 29) என்று பரமபதத்தே தூதுவிட்டாள் (ஆழ்வார் நாயகி). அது **பரபக்தி, பரஞானம், பரமபக்தி** யுக்தரானார்க்கல்லது புகவொண்ணா தேசமாகையாலே அவதாரங்களிலே தூது விடப்பார்த்தாள்; அதுவும் சமகாலத்திலுள்ளார்க்காய்ப் பின்னையில்லையாகையாலே பிற்பட்டாருக்கும் அநுப விக்கும்படிச் சுலபமான திருமலையிலே திருவேங்கட முடையான் திருவடிகளிலே தூதுவிடுகின்றாள். 'திருமலை நோக்கிப் போகின்ற மேகங்களே! என்னுடைய தூது வாக்கியங்களைக் கொண்டு போய்ச் சொல்லுங்கோள் என்றால் சொல்லுகிறில்கோள்; திருமலைக்குப் போகிற பராக்கிலே பேசாதே போகிறவற்றைக் கண்டு, சொல்ல மாட்டிகோளாகில் உங்கள் திருவடிகளை என் தலை மேலேவையுங்கோள் என்றால் வைப்புதிகோளோ? திரு மலைக்குப் போவாருடைய திருவடிகள் உத்தேச்யமாயிறே யிருப்பது? திருமலைக்குப் போகிறவர்களைத் தலையிலே வைக்கக் கிடைக்குமோ? திருவடியை (அநுமனை)ப் பிராட்டி 'இங்கு ஓரிராத் தங்கிப் போகவேணு' மென்று அருளிச்செய்ய, 'ஒண்ணாது' என்று அவனும் மறுத்துப் போனாப் போலே போகா நின்றன" என்று.

இச்சூக்திகளின் பொருளைத் தெளிவுபடுத்துவோம். இரத்தினங்கள் ஒளி வீசுகின்ற திருவேங்கடமலைக்குப்

போவதாகப் புறப்பட்ட இம்மேகங்கள் 'நீங்கள் எனக்கா கத் திருமலையப்பன் பக்கல் தூது செல்ல வேண்டும்' என்று நான் வாய் வார்த்தை மாத்திரத்தால் வேண்டிய தற்கு உடன் படுகின்றனவில்லை; அவற்றின் கால் என் தலையில் படும்படி சரணாகதி செய்தால் அதற்கு இசைந்து ஒருகால் உடன்பட்டுச் செல்லுமோ என்பது கருத்து. வானத்திற் பறந்து செல்லுகின்ற அன்னம் முத லிய பறவைகளைப் பரமபதநாதனிடம் செல்வனவாக நினைத்தது போலவே, மேலே ஊர்கின்ற மேகங்களையும் திருவேங்கடமுடையான பக்கல் செல்வனவாக ஆழ்வார் நாயகி நினைத்தமை உணரத்தக்கது. யாரேனும் எங்கே னும் வழிநடந்து சென்றாலும் திவ்விய தேசங்களுக்கு யாத்திரை செல்வதாகவே நினைப்பது ஆழ்வாரது தொழிலாகும்.

வருவார், செல்வார் வண்பரி
சாரத்து இருந்தஎன்
திருவாழ் மார்வற்கு என்திறம்
சொல்லார் செய்வதுஎன்?

—திருவாய் 8.3.7

என்று இவர் திருவாய்மொழியிலும் சொல்வர். வழி யில் சொந்த வேலையாகச் செல்பவர்கள் எல்லாரும் திரு வண்பரிசாரம் என்னும் திருப்பதிக்குச் செல்வதாக வன்றோ பாவனை நிகழ்கின்றது? தூது விடுதற்கு உரிய தைத் தன் தலைமேல் அடிவைத்துச் செல்லுமாறு வேண்டு தலை,

எம்கானல் அகம்கழிவாய்
இரைதேர்ந்து இங்கு இனிதமரும்
செங்கால மடநாராய்!
திருமூழிக் களத்துஉறையும்

கொங்குஆர் பூந்துழாய்முடிஎம்
　குடக்கூத்தர்க்கு என்தூதாய்
நும்கால்கள் என்தலைமேல்
　கெழுமீரோ நுமரோடே

—திருவாய். 9.7.1

என்ற திருமூழிக்களத்து எம்பெருமானிடம் பறவைகளைத் தூதுவிடுவதாக அமைந்த திருவாய்மொழியில் காணலாம்

கம்பன் திருவேங்கடத்தைப்பற்றிப் பேசும் பாடல்களைக் காட்டும் பாங்கில் உள்ள நம்மைத் திருவேங்கடம் பற்றிப் பேசும் ஆழ்வார் பாசுரத்திற்கும் அதற்குப் பெரியவாச்சான் பிள்ளை வரைந்துள்ள உரை வளத்திற்கும் நம்மை இழுத்துச் சென்றுவிட்டன. எனினும் திருவேங்கடத்தை விட்டு விலகிப் போகவில்லை!

அடுத்து, தென்திசை நோக்கிச் செல்லும் வானரவீரர்கட்குத் திருமலையில் வதியும் மாமுனிவர்களின் பெருமையைப் பேசுகின்றான் அருக்கன் மைந்தன்.

இருவினையும் இடைவிடா எவ்வினையும்
　இயற்றாதே இமையோர் ஏத்தும்
திருவினையும் இடுபதந்தோர் சிறுமையை
　முறையொப்பத் தெளிந்து நோக்கிக்
கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்தங்
　கதுகளையும் கடையின் ஞானத்து
அருவினையின் பெரும்பகைஞர் ஆண்டுளரீண்
　டிருந்தும்அடி வணங்கற் பாலார்.

—நாடவிட்ட-27

[இருவினை-நல்வினை, தீவினை; இமையோர்-தேவர்கள்; ஏத்தும்-புகழும்; இடுபதம்-பிச்சையாக இடும் சோறு; கரு-மூலகாரணம்; களையும்-நீக்குதற்கு உரிய; கடை-எல்லை]

என்ற பாடலில் இதனைக் காணலாம். இந்தப் பாடலில் பொதிந்துள்ள கருத்துகளைத் தெளிவுபடுத்துதல் இன்றியமையாதது.

அம்மலையில் வாழும் மாமுனிவர்கள் வினைகள் விளைவதற்குக் காரணமான எச்செயல்களையும் செய்யார். மனிதர்கள் எத்தொழில்களைச் செய்தாலும் அவை புண்ணிய பாவங்கட்குச் சம்பந்தப்பட்டு அவற்றிற்குரிய வினைப்பயனை ஊட்டும் என்பது வினைபற்றிய உண்மை 'தீவினை இரும்பு விலங்கு போன்றது', நல்வினை பொன்விலங்கு போன்றது' என்ற உண்மையை அறிந்தவர்கள் இம்முனிவர்கள்; 'ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும் பெற்றியர்' இவர்கள் இந்த இரு வினைகளும் வீடுபேறு அடைவதற்குத் தடையாக நின்று பந்தப் படுத்தும் என்ற உண்மையைத் தெளிந்தவர்கள். வினை என்பது மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் (மனம் வாக்கு காயங்களாலும்) செய்யப்பெறும் புண்ணிய பாவங்கள். இந்த வினை பழவினை (சஞ்சிதம்) நுகர்வினை (பிராரப்தம்),எதிர்வினை(ஆகாமியம்)என மூன்று வகைப் படும் பழவினையானது, பிறப்பு அனாதியாய் வருதலின் உயிர்களால் அளவின்றி ஈட்டப்பெறும் வினைத்தொகுதிகள்; நுகர்வினையாவது அவ்வினைத் தொகுதிகளுள் இறந்த உடம்புகளால் பயன் நுகர்ந்தன போகப் பிறந்த உடப்பால் அநுபவிக்கத் தொடங்கியவை; எதிர்வினையாவது, எடுத்த இப்பிறப்பில் செய்யப் பெறுபவை இவ்வினைகள் பிறப்புக்குக் காரணமாதல் தெளியப்படும். இந்த தத்துவ உண்மைகளையெல்லாம் தெரிந்து தெளிந்த திருமலையில் வாழும் முனிவர்கள் தாம் இருந்த இடத்தி

விருந்தே திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பிப்பதற்கு உரிய பெருமையையுடையவர்கள் என்று பேசுவான் வானர வேந்தன்.

மேலும் கூறுவான்: "திருமலையில் உடல் தூய்மையும் மனத்தூய்மையும் உடைய அந்தணர்கள் இறங்கி மூழ்கி நீராடும் துறைகளும் ஆறுகளும் உள்ளன. முனிவர்கள் வசிக்கின்ற ஆசிரமங்கள் உள்ளன. மேகங்கள் தவழும் தாழ்வரைகள் அம்மலையைச் சூழ்ந்துள்ளன. தேவமாதர்கள் தங்கள் இசைப்பாட்டுக்கு ஒத்து வருமாறு கின்னரம் என்னும் இசைக்கருவிகளின் நரம்புகளை வருடுந்தோறும் உண்டாகும் ஓசையினால் யானைகளின் இளங்கன்றுகளும் புலியின் குட்டிகளும் தம்முள் பகையின்றி உறங்கும் இடங்கள் அம்மலையில் உள்ளன. இவற்றையெல்லாம் எடுத்துக்கூறும் முகத்தான் கம்பநாடன் வானரவேந்தன் வாய்மொழியாக,

> தோதவத்தித் தூய்மறையோர் துறையாடு
> நிறையாறும் சுருதித் தொன்னூல்
> மாதவத்தோர் உறைவிடனும் மழையுறங்கும்
> மணித்தடனும் வான மாதர்
> கீதம்ஒத்த கின்னரங்கள் இன்னரம்பு
> வருடுதோறும் கிளக்கும் ஓதை
> போதகத்தின் மழக்கன்றும் புலிப்பறழும்
> உறங்கிடனும் பொருந்திற் றம்மா"

—நாடவிட்ட-28

[தோதவத்தி-தூய்மையான ஆடை; துறை - துறைகள்; நூல்-சாத்திரம்; மழை-மேகங்கள்; தடன்-தாழ்வரைகள்; கின்னரம்-ஓர் இசைக் கருவி; வருடுதல்-தடவுதல்; ஓதை-ஓசை; போதகம்-யானை]

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமலைக்குச் செல்லாது ஒதுங்கிச் செல்லுமாறு அடுத்து அறிவுறுத்துகின்றான் அக்கோமகன்.

கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரேல்
உம்நெடிய கொடுமை நீங்கி
வீடுறுதிர் ஆதலினால் விலங்குதிர்

—நாடவிட்ட. 29

[கோடு - சிகரங்கள்; மால்வரை - பெரியமலை; கொடுமை - கொடும் பாவங்கள்; வீடுஉறுதிர் - மோட்சமடைவீர்; விலங்குதிர்-விலகிச் செல்லுங்கள்]

என்றது காண்க.

திருவேங்கடமலையை நெருங்கியவுடனே அப்புனிதத் தலத்தின் மகிமையால் கொடும் பாவங்கள் யாவும் மறைந்து வீடுபேறு கிடைத்துவிடுமாதலாலும், இதனால் இராம காரியத்திற்குக் குந்தகம் விளையுமாதலாலும் அம் மலையை வணங்கின நிலையில் விலகிச் செல்லுமாறு அறிவுறுத்துகின்றான். அம்மலை மிக்க தூய்மையுள்ளதாதல் பற்றி இராவணன் அங்குச் சென்றிருக்க மாட்டான் என்பது திண்ணம் என்பதையும் குறிப்பாற் புலப்படுத்துகின்றான்.

தெற்குத் திசை நோக்கிச் சென்ற வானர வீரர்கள் பல இடங்களில் சீதாப்பிராட்டியைத் தேடிப் பார்த்துக் கொண்டு அருந்ததி, மரகத மலைகளைக் கடந்து திருமலைக்கு வருகின்றனர். இந்த நிலையிலும் கம்பநாடன் திருமலையின் தன்மையைக் கூறுகின்றான் தன் கூற்றாக.

முனிவரும் மறைவல்லோரும்
முந்தைநாட் சிந்தை மூண்ட
வினைவரு நெறியை மாற்றும்
மெய்யுணர் வோரும் விண்ணோர்

எனைவரும் அமரர் மாதர்
யாவரும் சித்தர் என்போர்
அனைவரும் அருவி நன்னீர்
நாளும்வந் நாடு கின்றார்

—ஆறுசெல். 34

[முனிவர்-இருடிகள்; மறைவல்லோர்-வேதம் அறிந்த அந்தணர்கள்; முந்தைநாள்-முற்பிறப்பு; சிந்தைமூண்ட-மனப்பூர்வமாகச் செய்த; நெறி-நரகநெறி; மாறறும்-ஒழிக்கவல்ல; மெய்யுணர்வோர்-தத்துவ ஞானிகள்; விண்ணோர்-தேவர்கள்; அமரர் மாதர்-தெய்வ மகளிர்]

முனிவர் முதலிய இம்பர் உலகத்தவரும், தேவகணங்களாகிய உம்பர் உலகத்தவரும் முற்பிறப்பில் செய்த தீவினைகளால் நேரிடக்கூடிய நரக நெறியை ஒழிக்கவல்ல தத்துவ ஞானிகளும், தேவர்களும், தெய்வ மகளிரும், சித்தர்களும் அருவி நீரில் எப்போதும் நீராடுகின்றனர். கோனேரி, ஆகாச கங்கை, பாபவிநாசம் (பாதாள கங்கை), பாண்டவ தீர்த்தம், குமாரதாரை, தும்புருதீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம் (கபில தீர்த்தம்) முதலிய தீர்த்தங்களை மனதில் கொண்டு கவிஞன் நீராடுதுறைகளாகக் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

அம்மலையில் தேவர்களும் வந்து தவம் இயற்றுதலையும் குறிப்பிடுகின்றான் கவிஞன்.

பெய்த ஐம்பொறி யும் பெருங்காமமும்
வைத வெஞ்சொலும் மங்கையர் வாட்கணின்
எய்த வஞ்சக வாளியும் வென்றுநற்
செய்த வம்பல செய்குநர் தேவரால்

—ஆறுசெல். 35

[பெய்த-தம் உடம்பிற் பொருந்திய; வைத-திட்டிய; வெம்சொல்-கொடியசொல்; வாள்கண்-வாள்போன்ற கண்; வென்று-சயித்து; செய்குநர்-செய்கின்றனர்]

தேவர்கள் திருவேங்கடமலைக்குப் போந்து ஐம்பொறிகளை அடக்கி, காமவேதனையின்றி, பிறர் தம்மை வைதாலும் அதனைப் பொருட்படுத்தாது மகளிரை மனத்தினாலும் கருதாது பல தவங்களைச் செய்கின்றனர் என்று குறிப்பிடுகின்றான்.

திருவேங்கடமலை தன்னை வந்து அடைநந்தாருக்கு வீடுபேற்றையும் நல்கும் என்பதையும் காட்டுவான் கவிஞன்.

வலங்கொள் நேமி மழைநின்ற வானவன்
அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை
விலங்கும் வீடுறு கின்றன மெய்ந்நெறிப்
புலன்கொல் வார்கட்(கு) அனையது பொய்க்குமோ?

—ஆறுசெல்-36.

[வலம்-வெற்றி; நேமி-திருவாழி; மழை நிறம் வானவன்- சீநிவாசன்; அலங்கு-விளங்குகின்ற; தாள் இணை-இரண்டு திருவடிகள்; வீடு-மோட்சம்; மெய்ந்நெறி-உண்மையான மார்க்கம்; பொய்க்குமோ தவறுமோ]

சீநிவாசன் எழுந்தருளியிருக்கும் பெருஞ்சிறப்பு வாய்ந்த திருவேங்கட மலையில் வாழ்கின்ற விலங்குகளும் வீட்டுலகத்தை அடையும் என்றால் சன்மார்க்கத்தில் ஒழுகுகின்ற தத்துவஞானமுடையவர்கட்கு வீட்டுலகம் கிடைப்பது தவறுமோ? என்கின்றான் கவிஞன்

வாசமாமலர் நாறு வார்பொழில்
　　சூழ்தரும் உலகுக் கெல்லாம்
தேசமாய்த் திகழும் மறைத்திரு
　　வேங்க டம்அடை நெஞ்சமே

—பெரி. திரு. 1.8.9

என்று திருமங்கையாழ்வாரால் சிறப்பிக்கப்பெற்ற அம் மலையை அடைகின்றனர் வானர வீரர்கள்.

ஆய குன்றினை எய்தி அருந்தவம்
மேய செல்வரை மேவினர் மெய்ந்நெறி
நாய கன்றனை நாளும் வணங்கிய
தூய நற்றவர் பாதங்கள் சூடினார்

—ஆறுசெல். 37

[மெய்ந்நெறி– வீட்டுலகநெறி; மேவினர்- கிட்டினர்]

அம்மலையில் வாழும் பாக்கியவான்கள் அழியாத வீட்டுலகப்பேற்றினை அளிக்கும் திருவேங்கடமுடையானை எப்போதும் வணங்கப்பெற்ற பரிசுத்தமான சிறந்த தவத்தை மேற்கொண்டிருப்பவர்கள். அவர்களின் திருவடிகளை வானர வீரர்கள் தம் தலைமேல் கொண்டு வணங்கினர் என்கின்றான் கவிஞன். சுக்கிரீவன் மலைக்குச் செல்லாது வணங்கி ஒதுங்கிப் போகுமாறு பணித்திருந்தும் அக்கட்டளையை மீறி மலைக்குச் சென்று பெரியோர்களை தரிசித்த புண்ணியத்தின் பயனாலேனும் ஒருகால் பிராட்டியைக் காண முடியுமோ? என்ற எண்ணத்தினால் சென்றனர் போலும். இங்ஙனம் கம்பன் வாக்கில்–காவியப் போக்கில்—மாலவன் குன்றத்தின் பெருமை பேசப் பெறுகின்றது.

# 17. கம்பராமன் கருத்தில் திருவேங்கடம்

**'திருவேங்கடமுடையான் திருவாயிரம்'**[1] என்பது பல சிற்றிலக்கியங்களின் திரட்டு நூல். இதில் பல சிற்றிலக்கியங்கள் அடங்கியுள்ளன. அவை யாவும் திருவேங்கடமுடையான்மீது எழுந்தவை. அவை. 1. திருப்பல்லாண்டு, 2. திருப்பள்ளி எழுச்சி, 3. திருப்பாவை, 4. கலிவெண்பா, 5. பிள்ளைத்தமிழ், 6. கலம்பகம், 7. பதிகங்கள், 8. அலங்காரம், 9. ஒருபா ஒருபஃது 10. இரட்டைமணி மாலை, 11. மும்மணிக்கோவை, 12. நான்மணி மாலை முதலியவை. இத்தொகுப்பு நூலின் ஆசிரியர் **எஸ். கே. 'இராமராசனைப்'**[2] பத்து வயதுப் பாலகனாக இருந்த பொழுதிருந்து இன்று வரை நன்கு அறிவேன். வித்துவான் நுழை

---

1. இது திருவேங்கடமுடையான் திருவருளால் விரைவில் வெளிவருதல் வேண்டும்.

2. இவர் 'கம்பராமன்' என்ற சாட்டுப் பெயரினர். பழுதர ஓதிப் பகவதநுபவம் பெற்றவர். வேலூர் கண்டர் உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றி ஓய்வு பெற்றபின் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுமார் ஆறு ஆண்டுகள் அகராதித் துறையில் பணியாற்றிய பின் சீவன் முக்தராக வாழ்ந்து வருபவர்.

வுத்தேர்வு எழுதும் பொழுதே கவிபாடுந் திறன் இயல்பா கவே இவரிடம் அமைந்திருந்தது. வழிவழியாக வைணவ மரபின்வழி வந்தவராகையால் திருமால் பக்தியும் துளசி மணம்போல் இவரிடம் இயல்பாக அமைந்திருந்தது என்று சொல்வதுமிகை.

மேற்குறிப்பிட்ட நூல்களின் தொகுப்பை யான் பார்த்ததுண்டு. சிலவற்றில் சில பாடல்களைப் படித்து நுகர்ந்ததுமுண்டு. அவற்றைமட்டிலும் ஈண்டுக் காட்டுவேன். அவை மட்டிலுமே ஆசிரியர் கருத்தில் திரு வேங்கடம் இடம் பெற்றிருக்கும் பாங்கினைக் காட்டும். முதலாவதாகத் 'திருப்பல்லாண்டில்' இரண்டு பாடல் களைப் பார்ப்போம்

பல்லாண்டு! பல்லாண்டு! வேங்கடக் குன்றின்
　　பயின்றோங்கு நில முகிலே!
பல்லாண்டு பல்லாண்டு நின்கொற்ற மார்பின்
　　படிந்தோங்கு கருணை வடிவே.

இஃது இச் சிறுநூலில் முதற்பாடல். வேங்கடவர்க் கும் அவன் திருமார்பில் 'அகலகில்லேன் இறையும்' என்று அகலாதிருக்கும் அலர்மேல் மங்கைக்கும் பல் லாண்டு பாடுகின்றார் ஆசிரியர்.

அடுத்த பாடலிலும் ஏழுமலையான் மார்பில் இருக் கும் பெரியபிராட்டியார்க்கும் பல்லாண்டு பாடுவதைக் காண்கின்றோம்.

சீலம் இன்றி நோன்பின்றிச்
　　செறிவும் இன்றி உயிர்க்கூட்டம்
ஞாலம் வருந்தப் புரிகின்ற
　　நலிவை நினைந்து நின்னுள்ளத்துச்

சால முளைக்கும் சீற்றமெனும்
தழலை யவிக்க நின்மார்பில்
கோலம் பொலிய வீற்றிருப்பாள்
கொற்றம் வளர்க பல்லாண்டு.

இதில் எம்பெருமாட்டியின் 'புருஷகாரம்' (தகவுரை) குறிப்பிடப் பெற்றிருப்பதைக் காணலாம்.

'நீரிலே நெருப்புக் கிளருமாப்போலே குளிர்ந்த திருவுள்ளத்தில் அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பது இவளுக்காக[3]

என்ற முமுட்சுப்படியின் வாக்கியத்தை நினைந்தவாறு இப்பாடல் கவிஞரின் உள்ளத்தில் அரும்பியிருக்க வேண்டும்.

**திருப்பாவை :** ஆண்டாள் திருப்பாவையின் பாணியில் எழுந்த '**திருப்பாவை**'யில் இந்த ஆசிரியரின் இரண்டு பாசுரங்களைக் காண்போம்.

'வேங்கடத்து மேவும் விமலன்; அருச்சுனர்க்குப்
பாங்குடைய கீதை பகரும் பரஞ்சோதி;
தேங்கமழுந் தண்டுளவத் தேவன் வடிவாகி
ஓங்குபுகழ்க் கோதை யுவர்க்கும் தமிழ்புனைந்து
தீங்கவிஞர் நெஞ்சில் சிறக்கும் நலம் வழங்கி
வாங்கருஞ்சீர் மார்கழி வந்ததுகாண்! நேரிழையீர்!
தீங்ககல ஞாலத் திருமலையின் பேர்பாடி
ஈங்குயர்த்தும் நோன்பை யியற்றுவோம்;எம்பாவாய்'

ஆண்டாள் திருப்பாவையில் பாவை நோன்பு இயற்றுவதற்காக 'நீராடப் போதுவீர்' என்று குறிப்பாக

3. முமுட்சுப்படி-127

அழைக்கின்றனர் ஆய மங்கையர். இந்த ஆசிரியரின் பாடலில் 'நோன்பை இயற்றுவோம்' என்று வெளிப்படையாகவே கூறி அழைக்கின்றனர் ஆயர்குலத்துச் சிறுமியர். இந்த நூலின் இன்னொரு பாடல் இது;

'சிந்தை இருளைத் தினமும் அகற்றுவதற்கா
வந்த விளக்கே! வளமார் தவக்கொடியே!
நந்தலிலா மாறன் நவிற்றுதிரு வாய்மொழிபோல்
முந்தையவா னந்தம் முகிழ்க்கும் நிலையத்துச்
சுந்தரனைப் போற்றித் துயர்க்கு விடைவழங்கி
அந்தமிலா இன்பம் அடையா துறங்குதியோ?
சந்தமுறு நோன்பில் தகவார் சுவையேற்றப்
பைந்தோடியே! மெல்லப் பரிந்தொழுவாய்;
எம்பாவாய்!'

இப்பாடலில் குறிப்பிடப் பெறுகிறவள் அடியார்கள் மரபில் தோன்றிய வளமார் தவக்கொடி. நாடோறும் சிந்தையில் திரளும் அறியாமை என்ற இருளைப் போக்குவதற்கென்றே தோன்றிய விளக்குப் போன்றவள். இவளைக் குழுவாக வந்து எழுப்புகின்றனர் ஆயமங்கையர்.

**திருப்பள்ளி எழுச்சி:** தொண்டரடிப் பொடியாழ்வார், மணிவாசகப் பெருமான் ஆகிய இருவரும் அவரவர் போற்றும் எம்பெருமான்களை எழுப்புவதாகப் பாடியுள்ளதை நாம் அறிவோம். அந்நிய ஆட்சியின்கீழ் அடிமைப்பட்டு அந்த அடிமையை அறியாது உறங்கிய நிலையில் கிடந்த நம் நாட்டு மக்களை எழுப்புவதுபோல் அமைந்த பாரதியாரின் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியும் நாம் அறிந்த ஒன்றே. அதே பாணியில் திருவேங்கடவனைத் துயிலெழச் செய்கின்றார் நம் இராமராசன். ஒரு பாடலைக் காட்டுவேன்.

'திங்களின் வெண்கதிர் அடைந்தவீட் டகத்தே
சேர்தரும் இருள்தனிற சார்தரு சுரும்பர்
மங்கலச் சுடரவன் திருவரு ளாலே
மகிழ்வொடு விடுதலை பெற்றுநின் துளபம்
தங்கிய தேனினை நுகர்தர வந்து
தகவொடு செவ்வழி பாடிடும்; அரசே!
துங்கநன் னலமருள் வேங்கடச் செல்வா!
சுந்தர னே! பள்ளி யெழுந்தரு ளாயே

[சுரும்பர்-வண்டுகள்]

இப்பாடலில் தொண்டரடிப் பொடியாழ்வாரின் 'திருப் பள்ளி எழுச்சி'யிலுள்ள முதற்பாடலின் சாயல் தென்படு கின்றது.

**அலங்காரம்** : 'அலங்காரம்' என்பது ஒருவகைச் சிற் றிலக்கியம். 'தொண்ணூற்றாறு' என்ற தொகையில் இதனையும் அடக்கலாம். கால வெள்ளத்தில் இத்தொகை தொண்ணூற்றாறையும் கடந்து போக வாய்ப்புண்டு. இங்ஙனம் தோன்றும் சிற்றிலக்கியங்களை,

விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேறறே.[4]

என்று தொல்காப்பியர் கூறும் '**விருந்து**' என்ற வகையில் அடக்கலாம் என்பது தமிழ் இலக்கிய வரலாறு கற்றார் அறிந்த செய்தியாகும். **அருணகிரியார்** இயற்றிய 'கந்த ரலங்காரம்' இவ்வகை நூலைச் சார்ந்தது. இராம ராசனின் அலங்காரத்தில் ஒருபாடல்:

'உள்ளத்தி லுள்ளும் தொறுங்களிப்
போங்கி யுறுதுயர்செய்

4. தொல். பொருள். செய்யு. 239

கள்ளத்தை நீக்கிடும் தேன்கூடு
  கண்டனம்; காதலொரு
தெள்ளத் தெளிந்த நலமரு
  ளாழ்வார் செழுந்தமிழில்
மெல்லச் செழித்துப் பொலிவுறு
  வேங்கட வெற்பிடத்தே'

திருவேங்கட மலையில் ஒரு தேன்கூடு தென்படுகின்றது. அது பக்தர்கள் பாடும் நம்மாழ்வாரின் செழுந்தமிழால் மெல்லச் செழித்துச் சுவையும் பெற்றுத் திகழ்கின்றது. அத்தேனிறால் நம் உள்ளத்தில் எழும் களிப்பின் காரணமாக விளையும் துயராகிய கள்ளத்தையும் போக்கும் என்கின்றார் ஆசிரியர்.

இந்த அலங்காரத்தில் மற்றொரு பாடல்:

'உனக்கும் எனக்கும் இடையே
  மறைக்கும் உளத்திரையைக்
கனக்கும் கருணைக் கரத்தால்
  விலக்கிக் கனிந்தருள்க;
சினக்கும் இரணியன் மார்பைப்
  பிளந்து, தெளிந்தமறை
தனக்கும் புவிக்கும் உயிர்ப்பருள்
  வேங்கடத் தற்பரனே.'

இதில் எம்பெருமானுக்கும் உயிருக்கும் இடையில் வினை வயத்தால் தோன்றி மறைக்கும் மனத்திரையை கனக்கும் கருணைக் கரத்தால் (அபய கரம்) கனிந்து நீக்கியருளுமாறு வேண்டுகின்றார் ஆசிரியர். இரணியன் மார்பைப் பிளந்து நான்மறைக்கும் புவியிலுள்ளோருக்கும் உயிர்ப்பை அருளிய திருவேங்கடமுடையானுக்கு இஃது ஒரு பெரிய செயலன்று என்பதையும் குறிப்பிடுகின்றார்.

இந்தச் சிற்றிலக்கியத்தில் இன்னொரு பாடலில் ஆழங்கால் படுவோம்.

'மன்னிய வேங்கடக் குன்றினில்
மேவும் மழைமுகிலே!
நின்னருள் யாண்டும் ததும்பிக்
கிடந்தும் நெறியறியேன்;
பன்னருந் துன்பினிற் சாலவும்
நொந்தேன்; படர்தடத்துத்
துன்னிய மீனின் சிறுநா
வறண்டு துவள்வுறுமே'

மேகம் எங்கும் பரவிக் கிடப்பதுபோல் திருவேங்கடமுடையானின் கருணை வெள்ளம் கோத்து யாண்டும் நிரம்பிக் கிடக்கின்றது. இந்நிலையிலும் உய்யும் நெறியறியாது துன்பத்தில் உழலும் தன் நிலையை நினைந்து நைகின்றார் ஆசிரியர். நீரினின்று வெளிப் பட்டுத் தரையிற் கிடக்கும் சிறுமீனின் சிறுநா வறண்டு கிடந்து துவள்வுறும் நிலையுடன் தம் நிலையை ஒப்பிட்டுக் கிலேசப் படுகின்றார் ஆசிரியர்.

அருணகிரியாரின் வாக்கில் காணப்பெறும் செந்தமிழின் குழைவும், சிந்தைக்கினிய கனிந்த அன்பும், செவிக்கினிய ஓசை நயமும், உள்ளத்தைக் கவர்ந்து தேக்கிடும் திருவருட்டன்மையும் போன்ற பற்பல நலங்களும் இந்த ஆசிரியரின் பாடலில் மிக்குத் தோன்றித் திகழ்வதைக் காணலாம். திருவேங்கடத்துக் கோயில் காவலராகத் தோன்றா நிலையில் திகழும் முருகப் பெருமானைப் பாடும் பணியினையே பணியாகக் கொண்ட அருணகிரியார் கந்தன்மீது பல நூல்களைப் பாடிப் பரவசப் பட்டார். அங்ஙனமே சிறந்த திருமாலடியாராகிய நம் கம்பராமனும் திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கும் சீநிவாசன்மீது ஆயிரம் பாடல்களைப் பாடிக் களிப்பெய்து கின்றார்.

பகம்', 'திருவரங்கத்துமாலை', 'திருவரங்கத் தந்தாதி' என்ற மூன்று நூல்களைப் பாடினார். திருவேங்கடத்தின் மீது திருக்கலம்பகம் பாடவில்லை. ஆயின் 'திருவேங்கடத் தந்தாதி' 'திருவேங்கடமாலை' என்ற இரண்டு நூல்களை மட்டிலும் பாடியுள்ளார். முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார் 'திருவேங்கடக் கலம்பகம்' பாடி இக் குறையை நீக்கினார். நம் கம்பராமன் ஏழுமலையான் மீது **'திருக் கலம்பகம்'** பாடி இக்குறையை மேலும் நிவர்த்தி செய்துள்ளார். இதில் ஒரு பாடல் :

திருமகளும் நிலமகளும்
　　சிறந்திருபால் பொலிந்திருப்பப்
பெருமை தரும் அருள்மந்தை
　　பிறங்குமுளத் திடையொளிர
வண்ணமுறும் அடை யாகி
　　வளங்குலவு கொடையாகிப்
புண்ணியங்கொள் தெய்வ நலப்
　　புயங்கவர சின்பமுற
வயங்குபெருங், கருணைநிறை
　　மலர்க்கண்கள் அமுதூற்ற
நலங்குலவு மணிமகுடம்
　　நற்றலைமைப் பொருள்பகரப்
புறவிருளும் அகவிருளும்
　　புகாப்புனித! நிலையத்தே
அருளுருவாய்ப் பொலிந்தோங்கும்
　　அற்புதனார் பரஞ்சோதி.

[புயங்க அரசு-பாம்பு அரசு, ஆதிசேடனன்]

என்பது திருவேங்கடமுடையானை வருணிக்கும் கொச்சகம் தலைவியின் கூற்றாக வந்தது. திருவேங்கடமுடையானின் பெருமையைத் தலைவி எடுத்துக் கூறுகின்றாள்.

இனி, இந்நூலில் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வரும் தாழிசைகளைக் காண்போம்.

குளவுபுகழ் அண்டமெலாம்
 கோவேநின் சந்நிதியில்
இலகுதனிச் சிற்றணுவா?
 இலைகோணின் கோணையா.

அறிவென்னும் செருக்குடையார்
 அகிலமெலாம் திரிந்திடினும்
செறிவுறுநின் றனைக்காணார்;
 திகைத்தயர்வார் பிறபகர்வார்.

குன்றாத பேரன்பிற்
 குழைவார்தம் இதயத்து
நின்றாயை அரியையென
 நிகழ்த்துவரோ அந்தணர்கள்

[கோண்-அணுவின்சதகூறு]

இம்மூன்று தாழிசைகளும் படிப்போரை மனோன்மணீய நாடகத்தில் தமிழ்த்தாய் வணக்கமாக வரும் தாழிசைகளை நினைக்கச் செய்கின்றன. எம்பெருமானின் செருக்கையும் மிடுக்கையும் மிடுக்கான நடையிலமைந்த தாழிசைகள் நினைப்பூட்டுவதையும் கண்டு மகிழலாம்.

கலம்பகத்தின் உறுப்புகளில் ஒன்று 'அம்மானை' என்பது. மூன்று மங்கையர் பந்துகளைக் கொண்டு ஆடும் விளையாட்டு இஃது என்பதை அறிதல் வேண்டும். அங்ஙனம் ஆடுங்கால் பாட்டுடைத் தலைவனது இயல்பினைச் சொல்லிக் கொண்டே ஆடுவார்கள் இந்த மங்கைமார்.

சேரலர்கோன் போற்றும் திருவேங்கட முடையான்
பாரினிடை யாண்டும் பரந்துள்ளான் அம்மானை
பாரினிடை யாண்டும் பரந்துளளா னாமாயின்
நாரியே எவ்விடத்தும் நான்காணேன் அம்மானை
நான்போனாற் காணலாம் நங்கையே அம்மானை.

என்ற பாடல் மிக அருமையாக அமைந்துள்ளது. இறைவன் எங்கும் பரந்துள்ளான் (omnipresence) என்ற கருத்து இதில் மிக நுட்பமாக அமைந்துள்ளமை நோக்கத் தக்கது.

பொதுவாக இந்த ஆசிரியரின் பாடல்களில் ஆழ்வார் பாசுரங்களின் சாயலும், கம்பனின் சொல்வளமும் மிளிர்வதைக் காணலாம். எங்கோ சென்று அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டிய அடியேனைத் தமிழ்த் துறைக்கு ஈர்த்த வரும், தமிழ்ப் புலமைக்கு ஒரு கலங்கரை விளக்கம் போல் நின்று வழிகாட்டியவருமான பன்மொழிக்குரிசில் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் ஒரு சமயம் அடியேனிடம் "பெயர் குறிப்பிடாமல் நம் இராமராசன் பாடல்களை நோக்கினால் அவற்றில் சிந்தாமணி ஆசிரியரின் கற்பனையும் சொல்வளமும் தென்படுகின்றன" என்றும், பிறிதொருசமயம் 'திருத்தக்க தேவரையும் கம்பநாடனையும் ஒருசேர உருக்கி வார்த்தமை போன்றவன் நம் இராமராசன்' என்றும் கூறியதை நினைவு கூர்கின்றேன்.

# 18. திருவேங்கடவன் மாலையில் வேங்கடேசன்

**வை**ண தத்துவப்படி 'உறங்குவான்போல் யோகு செய்வான்'[1] எம்பெருமான். உலகத்தை உய்விக்கும் பொருட்டுப் பரமபதத்தை விட்டுத் திருப்பாற்கடலில் கண் வளர்வதுபோல் பாவனை செய்து கொண்டு வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்ற நான்கு நிலைகளில் நின்று இந்த லீலா விபூதியின் செயல்களைக் கவனிப்பதாக வைணவதத்துவம் பேசும்[2]. இங்ஙனம் உறங்கும் எம்பெருமானை எழுப்புவதாகத் தொண்டரடிப் பொடியாழ்வாரும் ஆண்டாளும் ஒரு கவி மரபினை ஏற்படுத்தினர். சைவ சமய குரவர்களுள் ஒருவரான மணிவாசகப் பெருமானும் இந்தமரபினை மேற்கொண்டு. திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை அமைத்துள்ளார். இத் தமிழ்மரபினை யொட்டியே சற்றேறக் குறைய 600 யாண்டுகட்கு முன்னர் வாழ்ந்த மணவாள மாமுனிகளின் காலத்திலோ அல்லது அவர் காலத்திற்குச் சற்றுப் பின்னரோ வாழ்ந்த ஒரு வைணவ பக்தரால் திருவேங்கடவன்மீது பாடப் பெற்றவை ஸ்ரீவேங்கட ஸுப்ரபாதம், ஸ்ரீவேங்கடேச

1. திருவாய் 5.4;11
2. தத்துவத்திரயம்—ஈசு. பிரகர. 44, 45, 46, 47.

ஸ்தோத்திரம், ஸ்ரீவேங்கடேச பிரபத்தி, ஸ்ரீவேங்கடேசமங்களா சாஸனம் என்ற நான்கு வடமொழி நூல்கள். இவற்றை அடியொற்றித் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றது **திருவேங்கடவன் மாலை** என்ற தொகுப்பு நூல். ஆகவே, இது வழி நூல் வகையைச் சார்கின்றது. இவற்றுள் முதல்நூல் தமிழ் 'திருப்பள்ளி எழுச்சி' மரபினைத் தழுவியதாகும். நம் நாடு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் வாழ்ந்த பாரதியாரும் 'பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி' என்ற தலைப்பில் ஐந்து பாடல்களை இயற்றி உறங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்களிடம் தேசபக்திக் கனலை எழுப்பினார் என்பதை நாம் அறிவோம். இவர்களுள் தொண்டரடிப் பொடியாழ்வாரும் மணிவாசகப் பெருமானும் பதிக முறையில் பத்துப் பாடல்களை அருளினர். பாரதியார் ஐந்து பாடல்களையே அமைத்தார். ஸுப்ரபாதம் ஆக்கியவர் இருபத்து மூன்று பாடல்களை இயற்றினார். ஸுப்ரபாத ஆசிரியர் ஒரு கவி மரபினையும் பின்பற்றாது பக்தி மரபினையே பற்றாசாகக் கொண்டு பாடல்களை அமைத்துக் கொண்டார்.

மேற்குறிப்பிட்ட நான்கு வடமொழி நூல்களை முறையே தழுவி அமைக்கப்பெற்றவை திருவேங்கட மாலையில் அடங்கியுள்ள **'திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி, திருவேங்கடவன் துதி, திருவேங்கடவன் திருவடித் துதி,' 'திருவேங்கடவன் மங்கள வாழ்த்து'** என்ற நான்கு நூல்களும். வடமொழியிலுள்ள நான்கு நூல்களையும் தமிழ்க் கவிதைகளாக வடித்தெடுத்தவர் என் அரிய நண்பர் திரு **இரா. பதுமநாபன்** அவர்கள். இவர் நான் காரைக் குடியில் பணியாற்றிய காலத்திலும் (1950-60) அதற்குப்பின்னரும் காரைக்குடி அழகப்பர் பொறியியற் கல்லூரி அலுவலகத்தில் முதல்வரின் தனி அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுப் பம்பாயில் தம் மகனுடன்

வாழ்பவர். காரைக்குடியில் வாழ்ந்தபோது அடியேனைப்போல் இப்பெருமகனாரும் ராய. சொக்கலிங்கம் என்ற சைவப் பெரும்புலவருடன் மிக்க ஈடுபாட்டுடன் பழகியவர்.

திருவேங்கடவன்பால் எல்லையற்ற பக்தியும் தமிழின்பால் மிக்க ஈடுபாடும் கொண்டவர் என்பதை இருபதாண்டுகட்குமேல் இவருடன் கொண்ட நெருங்கிய தொடர்பால் நான் நன்கு அறிவேன். அடக்கமான பண்பும், குழந்தையின் நெஞ்சுபோல் குழைவான நெஞ்சத்தையும் உடையவர். இவருடைய பக்தியினையும் தமிழ் மரபினைப் போற்றும் பாங்கினையும் நூலெங்கும் காணலாம்.

இத்தொகுப்பு நூலைப் பத்மவிபூஷண மகா வித்துவான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளின் ஆசியுரை அணி செய்கின்றது.

> ''இன்றெனக்கு நல்விடிவு. 'திருவேங்கடமாலை' என் முடி மீதேறிற்று. உவந்தேன். உவப்பை விட வியப்பே அதிகம். அநாயாசமான கவிதை. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கவிதை. ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன். பேரின்பம் எய்தினேன். தமிழ்ப் பா நிபந்தனைகட்குக் கட்டுப் பட்டுச் சுவைக்கேடு ஆகாமல் ஆக்கியிருக்கும் அழகு தனிச் சிறப்பு வாய்ந்தது''.

என்ற சுவாமிகளின் திருவாக்கால் நூலின் சிறப்பினை நன்கு அறியலாம்.

'மொழிபெயர்ப்பு' என்பது ஓர் அரிய கலை, இலக்கியப் படைப்புகளுள் மொழி பெயர்ப்பு நூலும் ஒருவகை. வழி நூல்களைக் குறிப்பிடுமிடத்துத் தொல்காப்பியர்

மொழிபெயர்ப்பினை 'அதர்ப்படயாத்தல்'[3] என்று கூறுவர். மொழிபெயர்ப்பு நூலைப் படிப்போருக்கு 'இஃது ஒரு மொழிபெயர்ப்பு' என்று தோன்றா வண்ணம் அமைதல் வேண்டும். இந்த அரிய பண்பினை 'திருவேங்கடவன் மாலை' என்ற தமிழ்க் கவியாக்க நூலில் கண்டு மகிழலாம்.

**1. திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி :** தமிழகக் குயில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இன்னோசையின் மூலம் வடமொழி ஸ்ரீவேங்கடேச ஸுப்ரபாதத்தை வானொலி மூலம் செவிமடுக்காத தமிழர்களே இரார் எனலாம்.[4] தொண்டரடிப் பொடியாழ்வாரின 'திருப்பள்ளி எழுச்சி', மணிவாசகப் பெருமானின் 'திருப்பள்ளி எழுச்சி' பாரதியாரின் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி'ப் பாடல்களை அறிந்தவர்கள் நாம்; இறைவனைத் துயில் எழுப்புவதாகப் பாடும் மரபினை நாம் அறிவோம். அந்த மரபினையொட்டியே வடமொழி சுப்ரபாத மரபும். வடமொழிப் பாசுரங்களை உள்ளம் உருக ஓதியும் பிறர் ஓதுங்கால், நெஞ்சு குழைந்து ஈடுபட்டும் திளைக்கும் திரு. பதுபநாபன் அவர்களை நான் நேரில் பலமுறைப் பார்த்தவன். சுமார் முப்பது ஆண்டுகட்கு முன்னர் அவரும் அடியேனும் (நான் திருப்பதியில் பணியாற்றிய காலத்தில்) சில நண்பர்களுடன் அதிகாலையில் ஏழுமலையானை வழிபட்டது இன்னும் என் உள்ளத்தில் பசுமையாகவே உள்ளது. இனி, மொழிபெயர்ப்பின் நேர்த்தியைக் கண்டு மகிழ்வோம்.

---

3. தொல்-பொருள்-மரபியல்-99.

4. இப்போது திரு பார்த்தசாரதி அவர்களால் தமிழில் அமைக்கப்பெற்ற பாடல்களை எம்.எஸ். சுப்புலட்சுமி பாடியுள்ளார். இசைச் சுருள் மூலம் இதனைக் கேட்டு மகிழலாம்.

ஏழுமலையானை எழுப்புவதாக அமைந்த பாடல்;

''பத்மே சமித்ர சதபத்ர சுதாலிவர்கா:
ஹர்த்தும் ச்ரியம் குவலயஸ்ய நிஜாங்கலக்ஷ்மியா
பேரீ நாதமிய பிப்ரதி திவ்ர நாதம்
சேஷாத்ரி சேகரவபோ தவ ஸுப்ரபாதம்[5]

இதன் தமிழ்க் கவிதையின் வடிவம் இது:

'கதிரவன் தோழியாம் கமல மலரினில்
வதியும் வண்டுகள் வண்கு வளைதன்
கருநிற எழிலைக் காணப் பெறா அது
அரவணைத் துயிலும் அரியின் அழகிய
கருமை எமக்கே உரிமைஎனக் கழறி
உரக்க முரலும் ஓவா முழக்கால்;
திருவேங் கடவா! திருக்கண் மலர்க!.

ஸுப்ரபாதத்தில் இன்னொரு பாடல்:

ஸ்ரீபத்மநாப புருஷோத்தம வாஸுதேவ
வைகுண்ட மாதவ ஜநார்த்தன சக்ரபாணே
ஸ்ரீ வத்ஸசிஹ்ந சரணாகத பாரிஜாத
ஸ்ரீவேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம்[6]

இதன் தமிழ்க் கவிதை வடிவம் இது:

'பற்ப நாபா! பர புரு டோத்தமா!
பொற்புடை வாசு தேவனாம் புகழுடை
மாதவர் மேவிடும் வைகுந்த பதியே!
மாதவ! சனார்த்தன! மலர்க்கை ஆழியாய்!
திருமறு மார்பா! சரணவான் தருவே
திருவேங் கடவா! திருக்கண் மலர்க!'

5. ஸுப்ரபாதம்—12.
6. ௸ —22

தொண்டரடிப் பொடியாழ்வார் 'திருப்பள்ளி எழுச்சியில்' பாடல் தோறும் 'அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே!' என்று முடிவது போலும், மாணிக்க வாசகரின் 'திருப்பள்ளி எழுச்சி'யில் பாடல்கள் 'எம்பெருமான் பள்ளி எழுந் தருளாயே!,' என்று இறுவது போலவும், பாரதியாரின் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி'யில் ஐந்து பாடல்களும் 'பள்ளி எழுந்தருளாயே!' என்று முடிவது போலவும் 'திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சிப்' பாடல்களும்; 'திருவேங்கடவா! திருக்கண் மலர்க!' என்றே இறுகின்றன.

இந்நூலில் இரண்டு பாடல்கள் புருஷகார பூதையான பெரியபிராட்டியாரை எழுப்புவதாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்றினைக் காண்போம்.

"மாதஸ் ஸமஸ்த ஜகதாம் மதுகைடபாமே;
வக்ஷோ விஹாரிணி மனோகர திவ்ய மூர்த்தே
ஸ்ரீஸ்வாமிநி சரிதஜன ப்ரியதான சீலே
ஸ்ரீவேங்கடேச தயதே தவ ஸுப்ரபாதம்"[7]

இப்பாடல்,

எல்லா உலகும் ஈன்ற என்அன்னாய்!
பொல்லா மதுகை டவரைப் போக்கிய
மாயோன் மார்பமர் திருவே! தேவீ!
ஆயே மனங்கவர் ஆர்எழில் உருவோய்!
அண்டினோர் வேட்பதை அருளிடும் சீலமே!
நல்திரு வேங்கட நாயகி கண்விழி!

என்று தமிழ்க் கவிதை வடிவம் பெறுகின்றது. இதன் அடுத்த பாடல் 'திருமலை நாயகி திருக்கண் மலர்க!' என்று முடிகின்றது. அப்பனை எழுப்பும் பாடல்

7. ஸுப்ரபாதம்—3

களில் அன்னையை எழுப்பும் பாடல்களும் கலந்து வருவது ஆண்டாள் திருப்பாவையில் கையாண்ட மரபினைத் தழுவியதாகும்.[8] வைணவ தத்துவப்படி புருஷ காரமாயிருப்பவள் பெரிய பிராட்டியார். இத்தத்து வத்தை மேற்கொண்டே ஆண்டாளின் பாடல் நப்பின் னைப் பிராட்டியை எழுப்புவதாக அமைந்தது. ஸுப்ர பாத ஆசிரியரும் திருமலை நாயகியை எழுப்புவதாகப் பாடல்கள் அமைத்தார் என்பது ஈண்டு அறியத் தக்கது. இந்நூலில் இருபத்தொன்பது பாடல்கள் உள்ளன.

2. **திருவேங்கடவன் துதி:** இதுவும் ஓர் அருமை யான மொழிபெயர்ப்பு நூலாகும். வடமொழிச் செல்வாக்கால் தமிழில் தோத்திரப் பாக்கள் ஏராளமாக எழுந்துள்ளன என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றால் அறிவோம். அந்தப் பக்திச் செல்வத்துடன் இந்நூலும் சேர்கின்றது. சான்றாக இரண்டு பாடல்களைக் காண்போம்.

'கமலா குச சூசுக குங்குமதோ
நியதாருணி தாதுல நீலதநோ
கமலாய சுலோசன லோகபதே
விஜயீபவ வேங்கட சைலபதே[9]'

என்பது முதற்பாடல், இதன் தமிழ் மொழி பெயர்ப்பு;

'கமலக் குயமுனைக் குங்குமக் கலப்பால்
நிமலா நின்கரு நிறமும் சிவக்கும்;
கமலக் கண்ணா! கார்நிற வண்ணா!
உலகின் இறையே! உத்தம தேவே!
விமலா! வேங்கட நாதா! வெல்க!'

---

8. திருப்பாவை—18 ('உந்துமதகளிற்றன்')
9. ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்திரம்—10

வடமொழிப் பாடல் பெற்று வரும் மெட்டமைப்பி லேயே இதனையும் பாடலாம். இன்னொரு பாடலையும் காண்போம்.

'அஹம் தூரதஸ்தே பதாம் போஜ யுக்ம
பரணாமேச் சயாகத்ய ஸேவம் கரோமி
லக்ருத் ஸேவயா நித்ய ஸேவா பலம்த்வம்
ப்ரயச்ச ப்ரயச்ச ப்ரபோ வேங்கடேச'

இதன் தமிழ் மொழி பெயர்ப்பு அருமையாக அமைந் துள்ளது. அதனையும் காண்போம்.

'விருப்பாய் சேய்மை வியன்வழி வந்தே
திருவடித் தாமரை சேவித்து நின்றேன்;
ஒருமுறை உன்தன் காட்சி காணின்
திருவடி தன்னைத் தினமும் காணும்
அரிதினும் அரிதாம் ஆக்கம் கூடும்
அருளினை ஈந்தே, ஆட்கொள்! ஆட்கொள்!'

பாடல் பன்முறை படித்து மகிழத் தக்கது.தேவார மர பினையொட்டி வடமொழியில் பதினொரு பாடல்களால் அமைந்துள்ளது. ஆனால் தேவாரத்தில் திருக்கடைக் காப்புச் செய்யுளில் பாடினவர் பெயர்களைப் பாடுவது போல் இப்பதிகத்தில் பாடினவர் பெயர் காணப்பெற வில்லை.

**3. திருவேங்கடவன் திருவடித் துதி:** 'ஸ்ரீவேங்க டேச பிரபத்தி' என்ற வடமொழி நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு இது. **'பிரபத்தி'** என்ற வடசொல் தமிழில் 'அடைக்கலம்' என்று பொருள்படும்; வடமொழியில் இது 'சரணாகதி' என்றும் வழங்கப்பெறும். திருமங்கை யாழ்வாரின் 'திருவெழுக் கூற்றிருக்கை' சரணாகதி தத் துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்த மர

பிணைப் பரப்பும் ஆசாரியப் பெருந்தகை மணவாள மாமுனிகளின் சீடர்களில் ஒருவர் பாடிய 'ஸ்ரீவேங்கடேச பிரபத்தி' சரணாகதி தத்துவத்தைக் கொண்டிருப்பதில் வியப்பொன்றும் இல்லை. இந்நூல் பதினாறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் 'திருவேங்கடவா! திருவடி சரணம்' என்று இறுகின்றது. முதற் பாடல் வைணவ தத்துவப்படி 'அகல்கில்லேன் இறையும்' என்று அன்பால் இறைவன் திருமார்பில் உறையும் அலர் மேல் மங்கையின் மூலம் எம்பெருமானைச் சரண் புகும் நிலையில் அமைந்துள்ளது. அது,

'அன்பார் பகவதீ! அவனியின் அணையாய்
உன்பதம் தொழுதேன் உயர்நலத் திருவே!'[10]

என்ற அடிகளால் முடிகின்றது.

'திருவே! உன்தன் திருடிவச் சிலம்பை
மருவார் மலரால் மறைத் திட்டாலும்
திருவடி மணமே திறமதில் விஞ்சும்[11]

என்ற அடிகள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

'விட்ணுவே பரம்பதப் பொருளென வேதம்
இட்டமாய் ஏத்தும்உன் இணை ஆர் அடிகளை
மறைமுடி, அதனையே மாந்தி மகிழும்;
அறைதற்கு அரியஉன் அறைகழல்; அவைதாம்
அன்புடன் மீண்டும் அடியேன் காண,
அன்புடன் வாக்கை அழகாய்ச் சுட்டிட
திருவேங் கடம்தனில் திருநிலை கொள்ளும்,
திருவேங் கடவா! திருவடி சரணம்!

10. திருவேங்கடவன் திருவடித்துதி-3
11. டி-10

என்ற பாடல் திருவடிகளின் பெருமையைப் பேசுகின்றது. அடுத்த பாடல் சரம சுலோகத்தின் கருத்தை,

'என்னையே நம்புவாய்! ஏதமே வாரா!
என்னையே சரண் அடை! ஏக்கம் கொள்ளேல்!'

என்று எடுத்தியம்பும் நேர்த்தி நம் உள்ளத்தைத் தொடுகின்றது. இங்ஙனம் பாடல்களின் அருமையையும் பெருமையையும் சொல்லிக் கொண்டே போகலாம்.

**4. திருவேங்கடவன் மங்கள வாழ்த்து:** இந்த நூல் பதினான்கு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் 'திருவேங்கடவா! தேவனே! மங்களம்' என்று இறுகின்றது. வடமொழிப் பாடலின் இறுதியடி மட்டிலும் பிராட்டியாரின் சேர்த்தியோடு 'ஸ்ரீநிவாஸாய மங்களம்' என்று இறுவதற்கேற்பத் தமிழ்ப் பாடலும் அதற்கேற்ற வடிவம் பெறுகின்றது. இந்நூலில்,

'ஸ்ரீய; காந்தாய கல்யாண
நித்தே நிதயேர்த்திநாம்
ஸ்ரீவேங்கட நிவாஸாய
ஸ்ரீநிவாஸாய மங்களம்'

என்ற வடமொழி முதற்பாடல்,

மலராள் மணாள! மங்கள வைப்பே!
நல்மருள் நாயக! நாடுவோர் நிதியே!
திருவேங் கடம்தனில் திருப்பதி கொண்டோய்!
திருமகள் நிலைய! தேவனே மங்களம்[12]

என்று தமிழ்க் கவிதை வடிவம் கொள்ளுகின்றது.

12. திருவேங்கடவன் மங்கள வாழ்த்து—9

எம்பெருமான் பரமபதத்தை விட்டு நாம் உய்யும் பொருட்டுத் திருமலையில் கோயில் கொண்டுள்ளான் என்ற கருத்தை ஒரு பாடல் தெரிவிக்கின்றது.

'பரமாம் பதத்தின் பற்றையும் துறந்தோர்
பரமாம் இறையுட் கரணியின் பாங்கா
திருமகள் தன்னொடும் திளைத்து மகிழ்வோய்!
திருமலை தன்னில் திருப்பதி கொள்வோய்!
திருவேங் கடவா! தேவனே! மங்களம்!'

என்ற பாடலில் இதனைக் காணலாம். பொதுவாக இந்த நான்கு வடமொழி நூல்களிலும் ஆழ்வார் பாசுரங்களின் செல்வாக்கு நிழலிடுகின்றது. வடமொழிப் பயிற்சி இல்லாதவர்கள் தமிழ்க் கவிதை வடிவத்தில் திகழும் '**திருவேங்கடவன் மாலை**' என்ற நூலை பக்தியுடன் படித்து அநுபவிக்குங்கால் இந்த உண்மை அவர்கள் உள்ளத்தில் பளிச் சென்று தோன்றுவதை அறிவார்கள். இந்தத் தமிழ்ப் பாடல்களின் அருமையை,

சீர்தோறும் தெய்வத்
திருமணக்கும் பாமாலை
யார் வாயும் தேன்பாய்ச்சும்
யாழிசையாய்—பாற்போற்றும்
செந்தமிழைப் போலச்
சிறந்தோங்கிப் பாடியவர்
சந்ததமும் வாழ்க
தழைத்து[13]

என்ற இனிய வெண்பாவால் அறிந்து மகிழலாம்.

---

13. என் அருமை மணாக்கர் டாக்டர் ரெ. சிங்கார வடிவேலன் (தேவகோட்டை சேவுகன் செட்டியார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுபவர்) இயற்றியது

# பின்னிணைப்பு-1

## பயன்பட்ட நூல்கள்

### அ - தமிழ் நூல்கள்


அகநானூறு : நாவலர் ந. மு. வே. உரை (கழகம்)

அண்ணங்கராசாரிய சுவாமிகள், பி. ப : **திவ்வியார்த்த தீபிகை** (கிரந்தமாலா ஆபீஸ்,காஞ்சிபுரம்-2)

அழகிய மாணவப் பெருமாள் நாயனார் : **ஆசாரிய ஹிருதயம் - மணவாச மாமுனிகள் வியாக்கியானம் - தமிழாக்கம்** (1965) சென்னைப் பல்கலைக் கழகம்.

ஆழ்வார்கள் : **நாலாயிரத்திவ்வியபிரபந்தம்** கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு (திருவேங்கடத்தான் திருமன்றம், 19-,பெருமாள் முதலி தெரு, இராயப் பேட்டை, சென்னை-600 014)

ஆழ்வார்கள் : **நாலாயிரத்திவ்விய பிரபந்தம்** (மர்பே கம்பெனி, ராஜம் பதிப்பு)

இராகவையங்கார், மு. **ஆராய்ச்சித் தொகுதி**

இராமராசன், எஸ். கே. : **திருவேங்கடமுடையான் திருவாயிரம்** (கையெழுத்துப் படி)

இளங்கோ அடிகள் : **சிலப்பதிகாரம்** நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை (கழக வெளியீடு - 1950)

கம்பர் : **சடகோபர் அந்தாதி** வை. மு. சடகோபராமாநுசாச்சாரியார் உரை

கம்பர் : **கம்பராமாயணம்** வை. மு. கோலி உரை.

கலித்தொகை : நச்சினார்க்கினியர் உரை (கழக வெளியீடு)

கிருஷ்ணவேணி அம்மையார், எஸ் : செம்பொருள்' (திருமலை, திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி-1)

குறுந்தொகை உரை : உ. வே. சா உரை.

சஞ்சீவி (பதிப்பு) : தெய்வத்தமிழ் (சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு)

சமதர்மன் : திருவேங்கடவன் திருவடி மாலை ஸ்ரீ வித்யா லட்சுமி பதிப்பகம், அரும்பாக்கம், சென்னை -106

சீராம தேசிகாச்சாரியார்: தேசிகப் பிரபந்தம் உரை ஒப்பிலியப்பன் சந்நிதி, கும்பகோணம்)

சுந்தர ராமாநுச சுவாமிகள்: தத்துவத்திரயம் விளக்கவுரை (வேலூர் வைணவ சித்தாந்த மகா சங்கம் வேலூர் (1951)

சுப்புரெட்டியார் ந. : திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் (பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600108)

சுப்புரெட்டியார் ந : மலைநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், பாண்டிநாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், சோழ நாட்டுத் திருப்பதிகள் (பகுதி 1,2) (பாரி நிலையம். சென்னை-108)

சுப்புரெட்டியார் ந. : தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை (பழநியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை இராயப்பேட்டை, சென்னை-600 014)

நம்மாழ்வார் : திருவிருத்தம் கி. வேங்கடசாமி ரெட்டியார் உரை. வெளியீடு: ஸ்ரீரங்கம் ஸ்ரீமந் ஆண்டவன் ஆச்ரமம் (பெரியாச்ரமம்)

நற்றிணை : பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் உரை.

பதும நாபன், இரா : திருவேங்கடவன் மாலை

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் : அஷ்டப் பிரபந்தம் வை. மு. கோ. உரை. (17, தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005)

பிள்ளை லோகாசார்யர்: ஸ்ரீவசன பூஷணம் மணவாள மாமுனிகள் வியாக்கியானத் தமிழாக்கம். (புருஷோத்தம நாயுடு பதிப்பு) தி கி. நாராயணசாமி நாயுடு, 2, சீதாராம நகர், கடலூர்—1.

முத்தமிழ்கவி வீரராக முதலியார்: திருவேங்கடக் கலம்பகம் (வை. மு. கோ. உரை)

### (ஆ) ஆங்கில நூல்கள்)

Krishnaswami Ayyengar, S : The History of Tirupati Parts-I and II (T.T.D. Publication)

Srinivasachari, P. N : Philosophy of Vishtadvida The Adyar Library, (1943)

Subbu Reddiar, N : Religion and Philosophy of Nalayira Divya Prapandham with Speciai Reference to Nammalvar (S.V. Univarsity, Tirupati-2 (1978)

Subbu Reddiar, N : Collected Rapers (1985) (Paari Nilayam, 184, Prakasam Salai, Madras-600 108)

## பின்னிணைப்பு-2

## பொருட்குறிப்பு அடைவு


அ

அகநானூறு : 1, 2, 3, 5, 6, 13, 20, 22, 23, 26, 30, 32, 33, 35, 37, 38, 43, 44.
அங்கதன் . 248
அங்கிரசு : 108
அசித்து : 79, 97, 239, 251
அண்ணங்கராசாரிய சுவாமிகள், பி ப. 275
அதிகாரி நியமம் : 185
ஆதர்ப்படயாத்தல் : 276
அத்திகிரி : 46, 108
அநந்ய கதித்துவம் : 199
அநுமன் : 248
அயிரி : 26
அயிரியாறு : 23, 30
அயோத்தி : 146
அரவக்கிரி : 208, 241
அரி-அர வடிவம் : 62, 94
அருணகிரியார் : 93, 265, 267
அருந்ததி : 248, 257
அலங்காரம் : 255
அலாவுத்தீன் : 202
அழகர் கலம்பக ஆசிரியர் : 85
அழகர் திருமலை : 167
அனந்தாண் பிள்ளை : 176
அனந்தாழ்வான் : 100

ஆ

ஆசிரியமாலையுடையார் : 92
ஆச்ரயண செளகர்யா பாதகங்கள் : 198
ஆண்டாள் : 133
ஆண்டாள் வாக்கு : 181, 189
ஆச்ரிதகார்யாபாதகங்கள் : 198
ஆகாசகங்கை : 258
ஆகிஞ்சந்யம் : 199
ஆதநுங்கன் : 31, 40, 41, 42
ஆத்திரையனார் : 41
ஆலிநாடு : 143
ஆயர்பாடி : 146
ஆழ்வார்கள் : 48
ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் : 172
ஆழ்வார் பெருமக்கள் : 60
ஆறாயிரப்படிகுருபரம்பரை : 61, 62, 63

இ

இமையோர் : 188
இரணியன் : 266
இராகவய்யங்கார், மு. 82, 88
இராமராசன், எஸ்.கே : 262, 272
இராமாநுசர் : 57, 60, 64, 89
இராவணன் : 115, 257
இராசிகள் : 203
  இடபம் : 203, 204
  கடகம் : 203, 204
  கன்னி : 203, 205
  சிம்மம் : 203, 204
  தனுசு : 203, 206
  துலாம் : 203, 205
  மகரம் : 203, 205
  மேடம் : 203
இராசி மண்டலம் : 207
இராமாநுச நூற்றந்தாதி : 73, 76
இராமாநுசன் புத்தேரி : 176

இளங்கிரி : 65, 66, 68
இளங்கோயில் : 67, 70
இளங்கோ அடிகள் : 41, 59 60, 83
இளந்திரையனார் : 37
இளந்திரையன் : 38, 43

ஈ

ஈசுவரன் : 79, 97
ஈட்டாசிரியர் : 172
ஈட்டுச்சூக்தி : 174
ஈரத்தமிழ் : 147

உ

உருத்திரங்கண்ணனார் : 37
உறையூர் : 52, 55

எ

எதிராசர் : 64
எருமை நாடு : 28
எருமை குடநாடு : 29
எருமை வெளியனார் : 30

ஏ

ஏழுமலை : 46
ஏழுமலையான் : 262

க

கடலனார் : 30
கணுபார்த்தி : 43
கண்ணகி : 52, 59
கண்ணனார் : 2, 23
கபிலர் : 103
கம்பநாடர் : 92
கம்பநாடன் : 111, 272
கம்பராமாயணம் : 103
கருமாணிக்கம் : 178
கர்நாடகம் : 29
கர்நூல் : 17
கலம்பகமாலை : 233
கலித்தொகை : 16
கலியுக வரதன : 48
கல்லாடனார் : 30
கவுந்தியடிகள் : 52
கள்ளிலை : 41

கா

காகாசுரன் : 200
காஞ்சி : 43
காமம் மிக்க கழிபடர்கிளவிகள் : 132
காலநியமம் : 185
காளத்தி : 17

கி

எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் : 8, 9
கிருஷ்ணை நதி : 17, 18

கு

குமுதவல்லி : 143
குருகைப்பிரான் : 88
குலசேகரன் படி : 129
குலசேகரப் பெருமாள் : 68
குலசேகராழ்வார் : 120, 242
குறுந்தொகை : 1, 9, 12, 13 15

கூ

கூடல் இழைத்தல் :111, 112

கை

கைங்கரியம் : 171

கோ

கோதண்டபாணி பிள்ளை : 55
கோவர்த்தனம் : 146
கோவலன் : 53
கோனேரி : 258

ச

சடகோபர் : 87, 200
சடகோபர் அந்தாதி : 88
சமதர்மன் : 216
சம்சாரிகள் : 243
சரணாகதி : 184
சரம சுலோகம் : 142
சரீர-சரீரி பாவனை : 79
சனகாதி முனிவர்கள் : 243

சா

சாடூக்தி : 182

சாம்பவான் : 248

சி

சிங்கவேள்குன்றம் : 147
சிங்கார வடிவேலன், ரெ. 283
சித்திரகூட மலை : 100
சித்து : 79, 97
சிந்தாமணிகள் : 195
சிந்தாமணி ஆசிரியர் : 272
சிலப்பதிகாரம் : 2, 15, 63, 85
சிறுகூழக்கைப் பாடினியார் : 81
சிறுபாணாற்றுப்படை : 1
சிறுமலை : 65
சிறுமலைகள் : 68
சிவப்பிரகாச அடிகள் : 93

சீ

சீகாளத்திப் புராணம் : 93
சீநிவாசன் : 244, 259, 267
சீராமப் பிள்ளை : 166

சு

சுக்கிரீவன் : 248
சுப்புலட்சுமி, எம்.எஸ்: 276
சுவாமித்துவம் : 80
சுறவக் கொடியோன் : 205

சே

சேஷாசல மலைகள் : 17

சொ

சொற்கேளாப் பிரஜைகள்: 136

சௌ

சௌசீல்யம் : 80
சௌலப்பியம் 80
தட்சசிலம் : 43
ததியாராதனை : 144
தத்துவத்திரயம் - 79, 87

தி

திருக்கச்சி நம்பிகள் : 109
திருக்கலம்பகம் : 232
திருக்கோவலூர் : 96
திருத்தக்க தேவர் : 272
திருப்பதி : 17, 46, 56
திருப்பல்லாண்டு : 262
திருப்பள்ளி எழுச்சி : 264
திருப்பாவை : 263
திருப்பாணாழ்வார் : 55
திருப்பொலிந்த சேவடி : 189
திருமங்கையாழ்வார் : 145, 190, 195, 224, 246, 260
திருமங்கை மன்னன் : 90, 94
திருமந்திரம் : 50
திருமலை : 71, 254, 255
திருமலையப்பன் : 151, 159 162, 183
திருமழிசை : 108
திருமழிசையாழ்வார் : 109, 242
திருமாலிருஞ்சோலை மலை : 251
திருமூழிக்களம் : 254
திருவதரப் பழுப்பு : 192
திருவரங்கம் : 53, 58, 59, 77
திருவள்ளுவர் : 215
திருவாசிரியம் : 247
திருவிருத்தம் : 151
திருவெஃகா : 77
திருவெள்ளக்குளம் : 143
திருவேங்கடக் கலம்பகம் : 130, 268
திருவேங்கடத்தந்தாதி : 217
திருவேங்கடபுராணம் : 84
திருவேங்கடம் : 51, 53, 57, 58, 59 71, 77, 250, 252, 254, 259,
திருவேங்கடமலை : 147, 157, 242, 249 265
திருவேங்கடமுடையான் : 61, 83, 113, 133, 155, 163, 180, 243, 247, 253, 254, 259, 266, 270

திருவேங்கடவன் திருவடித் துதி : 274, 270
திருவேங்கடவன் திருப்பள்ளி எழுச்சி : 274, 276
திருவேங்கடவன் துதி : 274, 279
திருவேங்கடவன் மங்கள வாழ்த்து : 274, 282
திரையன் : 31, 36
திவ்விய கவி : 209, 119
திவ்விய சூரி சரிதம் : 57, 61
திவ்விய மங்கள விக்கிரகம் : 214, 222

து

துங்கபத்திரை நதி : 18, 27
துரைசாமி பிள்ளை, ஔவை: 28, 43
துயரறு சேவடி : 189

தெ

தென் குமரி : 1
தென் மொழி : 250

தொ

தொண்டரடிப் பொடிகள் : 234
தொண்டரடிப் பொடியாழ்வார் : 265
தொண்டைமான் சக்கரவர்த்தி ; 63
தொல்காப்பியம் : 28, 45, 133
தொல்காப்பியர் : 166, 265, 275

ந

நக்கீரர் : 3, 95
நச்சினார்க்கினியர் : 1, 87, 92
நடலைநோய் : 101, 137
நப்பின்னைப் பிராட்டி : 159
நம்பிள்ளை : 193, 194, 200 247
நம்மாழ்வார் : 90, 97, 119, 148, 162, 165, 170, 191, 225, 241, 242
நல்லமலைகள் : 17
நற்றிணை : 16, 34
நன்னூல் : 101

நா

நாச்சியார் திருமொழி : 134, 135, 136, 136, 137, 139, 141
நாதமுனிகள் : 74
நாலாந்தா : 43
நாலாயிரம் : 72

நீ

நீலன் : 143
நீலாழி சோதி : 173

நு

நுங்கதேவ மகாராயர் : 42
நுங்கராயர் : 42
நுங்கன் : 42

நூ

நூலாட்டி : 118
நூலாட்டி கேள்வனார் : 118
நூலாளன் : 118

நெ

நெஞ்சைப் போற்றுதல்: 161
நெடியோன் குன்றம் : 83

நை

நைச்சியாநுசந்தானம்: 152
நைமிசாரணியம் : 146

ப

பகவத் கீதை : 142
பக்தி சாரர் : 109
பட்டர் : 165, 167
பட்டர் நியமனம் : 193
பட்டினப்பாலை : 1, 13, 14
பதரிகாச்சிரமம் : 145
பதின்மர் : 73
பதின்மர் செந்தமிழ் : 73
பதுமநாபன், இரா. : 274
பத்துப்பாட்டு : 1

பரமஞானம் : 97, 252
பரபக்தி : 96, 252
பரமபக்தி : 97, 252
பரமபதம் : 221
பராசரபட்டர் : 166
பரிபாடல் : 11, 148
பவத்திரி : 36, 43
பவிஷ்யோத்திர புராணம் : 117
பனம்பாரனார் : 1, 13, 14

பா

பாவநாசம் : 258
பாரதியார் : 8, 45, 71
பார்க்கவமுனிவர் : 108
பார்த்தசாரதி : 276

பி

பிரம்மாண்ட புராணம்: 117
பிருகு : 108
பிருந்தாவனம் : 146
பிள்ளைக்கவி : 268
பிள்ளைத்தமிழ் : 268
பிள்ளைப் பாட்டு : 267
பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் : 202, 209, 245

பீ

பீலி வளை : 37
புருஷகாரம் : 80, 196, 196
புலத்தியர் : 108
புல்லி : 5, 31, 32, 34, 41, 43, 111
புறநானூறு : 1, 11, 14, 23 30, 37, 40, 42
புறப்பொருள் வெண்பா மாலை : 1, 71

பூ

பூதத்தார் : 99
பூவார்கழல் : 189
பூவிருந்தவல்லி : 109

பெ

பெரிய திருவடி : 192
பெரிய பிராட்டியார் : 199
பெரியாழ்வார் : 10,92,227
பெரியவாச்சான்பிள்ளை:262
பெருங்கதை : 87
பெருந்தேவனார் : 92
பெருமாள் : 121
பெருமாள் திருமொழி : 121, 124, 126, 242
பெரும்பாணாற்றுப் படை : 36, 37, 38

பே

பேயாழ்வார் : 94, 103, 107

ம

மகிஷா சுரனூர் : 28
மகிஷாசுரன் : 28
மங்கைநாடு : 143
மணக்கால் நம்பிகள் : 123
மதுரைக்காஞ்சி : 87
மதுவிரதம் : 187
மயிலைநாதர் : 39
மரகதமலை : 257
மஹீஸார் க்ஷேத்திரம் : 108

மா

மாங்காட்டு மறையோன் : 52, 55, 58, 90
மாதவன் : 117
மாமூலனார் : 4, 5, 32,,35 110
மாலவன் குன்றம் : 260
மாலவன் கோயில் : 251
மாலினி : 117

மி

மிருகண்டு 162

மு

முதலாழ்வார்கள் : 25
முத்தமிழ்க்கவி : 129, 241
முமுட்சுப்படி : 81, 173
முருகக்கடவுள் மாலை : 84

முருகன் மலை -83
மூ
மூலநட்சத்திரம் : 208
மெ
மெற்கு நாடு : 29
மொ
மொழிபெயர்தேஎம் : 9
மொழிபெயர்ப்பு : 275
வ
வசிட்டர் : 108
வடக்குத் திருமலை : 109
வடமதுரை : 146
வடமொழி : 250
வடவேங்கடம் : 1, 8, 24, 30
45, 46, 56, 113
வண துவராபதி : 147
வதரி-நாராயணன் : 146
வழுவிலா அடிமை : 172
வள்ளுவப் பெருந்தகை : 214
வா
வாத்சல்யம் : 80
வானோர்சோதி : 173
வி
விசாகப்பட்டினம் : 18
விசுவகர்மா : 108
வித்யாநகர்க் கல்லூரி : 21
விரஜாநதி : 108
விருந்து : 265
வெ
வெள்வேற்கிள்ளி : 37
வே
வேங்கடம் : 9, 10, 19, 25
26, 30, 37, 40, 47, 48, 49
50, 51, 52, 66
வேங்கடப்பகுதி : 23, 30
வேங்கடமலை : 3, 39
வேங்கடாசலம் : 117
வேங்கடநாதன் : 50
வேங்கடத்தின் சூழ்நிலை :
147
வேங்கடராஜுலு ரெட்டி
யார், வே. : 272
வேங்கடவாணன் : 149
வேங்கடவெற்பர் : 220
வேதாந்த தேசிகர் : 76, 78,
214
வை
வைணவசிகாமணிகள் : 122
வைணவத்தலம் : 57
வடமொழி
ஸ்ரீ வசன பூஷணம் : 19, 269
ஹேகரி : 27

## பேராசிரியர்
## டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியர் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ; அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்.
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியத்தில்—அறம், நீதி, முறைமை
18. புதுவை(மை)க்கவிஞர் (சுப்பிரமணிய பாரதியார் ஒரு கண்ணோட்டம்)
19. பாவேந்தர்-பாரதிதாசன் ஒரு கண்ணோட்டம்
20. திருக்குறள் தெளிவு

**சமயம், தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

21. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
22. சிலநோக்கில் நாலாயிரம்
23. வைணவமும் தமிழும்
24. சைவ சமய விளக்கு
25. ஆன்மிகமும் அறிவியலும்
26. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
27. கலியன் குரல்
28. கீதைக் குறள் (பதிப்பு)
29. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
30. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
31. கீதைப் பொழிவுகள்
32. கண்ணன் துதி
33. இராமர் தோத்திரம்
34. முருகன் துதியமுது

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :**

35. மலைநாட்டுத் திப்பதிகள்
36. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
37. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
38. வடநாட்டுத் திரும்பதிகள்
39. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற் பகுதி (த. அ. ப. பெற்றது)
40. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (ஷை)
41. தம்பிரான் தோழர்
42. நாவுக்கரசர்
43. ஞானசம்பந்தர்
44. மாணிக்கவாசகர்

**திறனாய்வு :**

45. பாட்டுத் திறன்
46. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
47. அகத்திணைக் கொள்கைகள்
48. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
49. கண்ணன் பாட்டுத் திறன்
50. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
51. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
52. குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு
53. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
54. ஆழ்வார்கள் ஆரா அமுது
55. விட்டு சித்தன் விரித்த தமிழ்
56. பரகாலன் பைந்தமிழ்
57. சடகோபன் செந்தமிழ்
58. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை.
59. பாவேந்தரின் பாட்டுத்திறன்
60. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு.

**வரலாறு, தன் வரலாறு :**

61. நினைவுக் குமிழிகள் - முதற் பகுதி
62. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
63. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
64. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
65. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
66. வேமனர்
67. குரஜாட
68. சி. ஆர். ரெட்டி
69. தாயுமான அடிகள்
70. பட்டினத்தடிகள்
71. வடலூர் வள்ளல்
72. பிரதிவாதி பயங்காம்
73. மலரும் நினைவுகள்


**அறிவியல் :**

74. மானிட உடல்
75. அணுவின் ஆக்கம்
76. இளைஞர் வானொலி
77. இளைஞர் தொலைக்காட்சி
78. அதிசய மின்னணு
79. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
80. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
81. அம்புலிப் பயணம்
82. தொலை உலகச் செலவு
83. அணுக்கரு பெளதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
84. இல்லற நெறி
85. வாழையடி வாழை
86. அறிவியல் விருந்து (தமிழ் வள. கழ. பரிசு)
87. தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும்
88. வானமண்டலக காட்சி

**ஆராய்ச்சி :**

89. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி
90. வைணவச் செல்வம் (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)
91. வடவேங்கடமும் திருவேங்கடமும்
92. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
93. Studies in Arts and Sciences : (61st Birth Day Commemoration : Volume)
94. Collacted Papers.

## இந்நூலாசிரியரைப் பற்றி....



பிறப்பு : 27-8-1916

76-அகவையைக் கடக்கும் இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல். டி., வித்துவான், பி.ஏ., எம் ஏ., பி.எச்.டி., பட்டங்கள் பெற்றவர். துறையூர் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பது ஆண்டுகள் தலைமையாசிரியராகவும், (1941-1950 - பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் (1960—77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 - பிப்ரவரி - 1979 - ஜுன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகவும் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல்வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர ஆசிரியம்(5), இலக்கியம் (15), சமயம் (24), திறனாய்வு (16), அறிவியல் (15), ஆராய்ச்சி (6), வாழ்க்கை வரலாறு (13)- என்று 94 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசும் - ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் பண்ணுருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதையும், தமிழக அரசு திரு. வி. க. விருதையும் மதுரை - காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.